# மனஓசை

5

கலை - இலக்கிய இதழ்

சிறப்பிதழ் 1994-95



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு புதிய களத்தையும், புதிய வாழ்க்கை முறையையும் அறிமுகப்படுத்துவனால் மட்டும் ஒரு நாவல் முக்கியத்துவம் பெற்றுவிடுவதில்லை. ஒரு படைப்பைப் பொறுத்தவரை உண்மையில் இவை இரண்டாம் பட்சமானவைதான். ஒரு படைப்பின் அடிப்படையான வெற்றி அது வாழ்க்கையை அணுகும் முறையிலும் அது காட்டும் வாழ்க்கைத் தரிசனத்திலும் தங்கியுள்ளது. இத்தரிசனம் குறிப்பாக அப்படைப்பு சித்தரிக்கும் வாழ்க்கை பற்றியதாக மட்டுமன்றி பொதுவாக மனித வாழ்க்கை முழுமையையும் தழுவி அமைகிறது. அவ்வகையில் ஒவ்வொரு சிறந்த படைப்புக்கும் ஓர் இரட்டைத்தன்மை இருக்கிறது எனலாம். ஒன்று குறிப்பான **தன்மை** (particularity) அதாவது அப்படைப்பு சித்தரிக்கும் சூழலின் ஒரு உண்மையான படிமத்தைத் தருவது. மற்றது **பொதுவான தன்மை** (genarality) அதாவது முழு மனித வாழ்வுக்கும் ஒரு பொதுக் குறியீடாக அமைவது. ஒவ்வொரு சிறந்த நாவலாசிரியனுக்கும் அவனது படைப்பு ஒரு ஜன்னலாக அமைகின்றது. அவன் தன் படைப்பில் சித்தரிக்கும் அவனது காலம், சமூகம் என்னும் ஜன்னலூடாக வெளியுலகம் முழுவதையும் பார்க்கிறான். முழு வாழ்க்கையையும் தரிசிக்கிறான். ஒரு பண்பட்ட வாசகனுக்கும் அப்படைப்பு ஒரு ஜன்னலாகவே அமைகிறது. அதனூடே அவன் முழு வாழ்க்கையையும் காண்கிறான். வாழ்வு பற்றிய ஒரு தரிசனத்தைப் பெறுகிறான். இவ்வாறு தான் ஒரு படைப்பு கால, தேச, வர்த்தமானங்களைக்கடந்து செல்கிறது. ஒரு குறிப்பிட்ட காலத்தில், இடத்தில், சமூகத்தில் தோன்றினாலும் உலகப் பொதுமையாகிறது. இவ்விரட்டைத் தன்மையில்லாட்டால் ரஷ்ய நாவல்- ரஷ்ய நாவலாகவும்; ஆபிரிக்க நாவல்- ஆபிரிக்க நாவலாகவும்; இந்திய நாவல்- இந்திய நாவலாகவும் மட்டுமே இருக்கும். தன் வட்டார எல்லைகளைக் கடந்து செல்லாது. ஆனால் டால்ஸ்டாயும், ஹெமிங்வேயும், மஹ்ஃபூசும், சிவராம கரந்தும் நமது உணர்வோடு கலக்க முடிகின்றது என்றால் இந்த இரட்டைத் தன்மைதான் காரணம். ஒவ்வொரு உண்மையான கலைஞனும் பிரக்ஞை பூர்வமாக அல்லது பிரக்ஞைபூர்வமற்ற இவ்விரட்டைத் தன்மைக்கு தன் படைப்பில் இடம் கொடுத்து விடுகின்றான்.

*— எம். ஏ. நுஃமான்*



வாழ்வுக்கான பயணம் (முன்னொரு பொழுது ஆபிரிக்காவில்) நன்றி- ஒளிப்படம்: சிமோன்

www.tamilarangam.net

1.
தடங்கலுக்கு வருந்துகிறோம். தடங்கல் தாண்ட ஒரு வருடமாகிவிட்டது.
இடைவெளியும்– காலதாமதமும் மிக நீண்டதற்குக் காரணங்கள் பல. நாங்கள் ஒன்று நினைத்திருந்தோம்– திட்டமிட்டிருந்தோம். ஆனால் வாழ்வும்–சூழலும் அவற்றைத் தலைகீழாகக் கிழித்துப்போட்டுவிட்டுத் தன் பாட்டில் போய்க்கொண்டிருக்கின்றன. எங்களது நிர்வாக ஒருங்கமைப்பே குலைந்து போனது. கடன் வெள்ளம் தலைக்கு மேல்......... சாண் ஏறி– முழம் சறுக்கி......... நிதி ஆதார ஊற்றுக் கண்களும் அடைத்துக் கொண்டன. எங்களது முகத்திற்கு எதிரேயே எங்கள் கையறு நிலையைச் சுட்டிக் காட்டி எள்ளி நகையாடியது இந்த அகதி வாழ்வு.
எதிர்– எதிர் கொண்டெழு– வெல் என்றே எப்போதும் சவாலுக்கு அழைத்தது அது.
தனித்தவர்– நலிந்தவர் அதற்குப் பணிந்து போக– தோற்று– அமுங்கிப் போக நிர்ப்பந்தித்தது அது.
நாங்களும் அப்படித்தான் ஆகியிருக்க வேண்டும்! ஆனால் வெளிவந்த நான்கு இதழ்களும் உறவின் கூட்டை விரிவுபடுத்தி– கெட்டிப்படுத்தி விட்டிருந்தது!
இந்த மௌனம் பேசும்– உயிர்ப்பினை உறைக்கும் ஆற்றலைப் பெற நட்புகள் உதவின.
ஒத்துழைத்தோர், உற்சாகமூட்டியோர், அக்கறை கொண்டோர் அனைவருக்கும் நன்றிகள்.

□□

2.

'வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதலின்று'
'செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு'

எனக் குறளில் அறம் சொன்ன வள்ளுவரும் வெட்கத்தால் தலை குனிந்துகொண்டார்.

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு'–இன்று வானளாவிய அதிகாரம் கொண்டவர்கள் கைகளில் சிக்குண்டு போனதால், நாகரிகம்– பண்பாடு என்பவற்றையும் இழந்து நிற்கும் நிலைக்கு ஆளாகியுள்ளது.
தஞ்சாவூரில் நடைபெற்ற எட்டாவது தமிழாராட்சி மாநாட்டிற்கு அழைக்கப்பட்டவர்களும், விருந்தினர்களும், அதன் உறுப்பினர்களும் நடாத்தப்பட்ட முறைமையையும்– நாட்டை விட்டே வெளியேற்றப்பட்டமையையும்– கண்டித்து எழுத தமிழில் வார்த்தைகள்தான் ஏது?
தேச நலன், அதன் பாதுகாப்பு, அதற்கான அரசியல் முடிவுகள் அவரவருக்குரியது. ஆனால், தேசங்களின் அரசியல் எல்லைகளுக்கு அப்பாலும் பேசும்- புழங்கும் மொழி தொடர்பான முடிவுகள்- செயல்கள் அத்தகையனவல்ல.இதனைக் கருத்தில் கொண்டே அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றம் நிறுவப்பட்டது. மாநாடுகள் கூட்டப்பட வகை செய்யப்பட்டது.. தமிழை வளப்படுத்துவதில்- பழமையான அம்மொழியைப் பேணுவதில்– பொது முடிவுகளை எட்ட வேண்டுமென்பதே அதனை நிறுவினவர்களின் எண்ணமாய் இருந்தது.
இந்நோக்கம் மெல்ல, மெல்ல மீறப்பட்டு இன்று நேரெதிர் நிலையை எய்தியுள்ளது.
தமிழ் நாட்டிற்கு வெளியே வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு- குறிப்பாக ஈழத் தமிழ் மக்களுக்கு- இது இரண்டாம் தடவையான அவமானப்படுத்தலாகும்.
முன்னர், திரு எம். ஜி. ஆர் -முதலமைச்சராய் இருந்தபோது எவரது கருத்தும் கோரப்படாமலேயே, முன்னறிவிப்பு செய்யப்படாமலேயே, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
தற்போது, எம். ஜி. ஆரின் வாரிசெனக் கூறிக்கொள்ளும் செல்வி ஜெயலலிதா அவர்களால் ஈழத்துத் தமிழ் அறிஞர்களது முகத்தில் கரி பூசப்பட்டு இரசிக்கப்பட்டுள்ளது.
தமிழ் நாட்டிற்கு வெளியே தமிழ் வாழ்கின்றது, உயிர்ப்புடன் வளர்கின்றது பற்றி அரசியலாளர்களுக்கு குறிப்பாக முதலமைச்சர்களுக்குத் தெரியாமல் போனதில் வியப்பொன்றுமில்லை! ஆனால் தமிழ் வளர்ச்சிக் கழகங்களும், தமிழ் ஆராய்ச்சி நிறுவனங்களும் அறியாமல் போனதுதான் வேதனை.

□□


# மௌனம்

கலை இலக்கிய இதழ்

**5**

சிறப்பிதழ் 1994-95
வள்ளுவர் ஆண்டு 2026

தொகுப்பாளர்: கி. பி. அரவிந்தன்
இணை தொகுப்பாளர்: க. முகுந்தன்

-நண்பர்களுக்கு மட்டும்-

துணைவர்கள்:
படங்கள் சேகரிப்பு: தே. பரணீதரன்
நிர்வாகம்: ந. சுந்தரலிங்கம்

கணணி பதிவு: பொ. இரவிச்சந்திரன்
வடிவமைப்பு: ஆத்மன் & அநாமிகன்

வெளியீடு: A.F.T.C. சார்பாக பு. விக்கினேஸ்வரன்



✉:
MOUNAM
6, Square du Roule
92200 NEUILLY S / SEINE
FRANCE


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

3.

அரசியலில், போராட்டத்தில், பேச்சு வார்த்தைகளும் - உடன்பாடுகளும் எட்டப்படக் கூடியவைதான். இலங்கை அரசியலில் பேச்சு வார்த்தைக்கென்றே ஒரு நெடிய வரலாறுண்டு.

பேச்சு வார்த்தைகள் - உடன்பாடுகளுக்கென்றில்லாமல் கிழித்தெறியவும், திணிக்க முயல்வதாகவுமே அமைந்த பாடத்தை ஈழத் தமிழர்கள் பட்டறிந்தவர்கள்.

1994-ல் இலங்கையின் புதிய அரசு பதவியேற்ற உடனேயே பேச்சு வார்த்தை அரசியல் நிகழ்ச்சி நிரலில் முன்னுக்குக் கொண்டு வரப்பட்டது. இலங்கைத் தீவுக்குள்ளும் - தீவுக்கு வெளியிலும் அமைதிக்கான அளவில் மகிழ்ச்சி கொப்பளித்தது.

ஆனால் பேச்சு வார்த்தையின் நீட்சிப் வேளையில், தமிழர்களது கோரிக்கை "வெறுமனே சலுகைகள் பற்றியதுதான்......" என்ற முன்னைய அரசுகளின் பார்வையையே இந்த அரசும் கொண்டிருந்தது புலப்படுத்தி விட்டது. ஆக புதிய மொந்தையில் பழைய கள்ளு......


மிக நீண்ட காலமாக இழப்புகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழர்களது அபிலாசை, வெறுமனே சலுகைகள் பற்றியதல்ல...... தம் மொழி, கலை, கலாச்சாரத்துடன் தமது பிரதேசத்தில் மானிடராக வாழ்தல் -சுயநிர்ணய உரிமை- பற்றியது.

தவிர முன்னைய அரசுகளால் அவ்வப்போது கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தங்களே உருப்படியான சட்ட வரைவுகளற்று அலங்கோலங்களாக இருப்பது பற்றி பல்வேறு அரசியல் அறிஞர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதனைக் கூட புதிய அரசியல்வாதிகள் கணக்கில் எடுக்காமல் மேலெழுந்தவாரியாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் பயன்தான் ஏது?

இவ்வுண்மை நிலையை ஏற்க மறுக்கும் அரசுகளால் எப்படித்தான் தீர்வினை எட்டிட முடியும்?

□□

# மௌனம் 5



## அகத்தில்


| | |
|---|---|
| கவிதைகள் | 03, 29, 41, 49, 55 |
| ஒரு திறந்த மடல் | 04 |
| ஜெயமோகன் கவிதைகள் | 07 |
| பெல்வீல்: உலக மையம் | 08 |
| நிதி சால சுகமா? | 10 |
| லஜ்ஜா நாவலும் தஸ்லிமா நஸ்ரீனும் | 15 |
| கவிதைக் கலை | 19 |
| வெறி நகரம் | 20 |
| ஜீவாவின் பக்கம் | 30 |
| எங்கள் பக்கம் | 32 |
| இந்து இந்தி இந்தியா | 34 |
| முளைப்பு | 39 |
| நவீன உலக சினிமாவில் பெண்களின் எதிர்ப்புணர்வு | 42 |
| பாரிஸில் தமிழ் பயாஸ்கோப் | 46 |
| தப்பித்தல் | 48 |
| தூவானம் | 50 |
| சில படங்கள் துணுக்குகள் கவிதைகள் | 52 |
| அல்ஜீரியா | 56 |
| கி. பி அரவிந்தன் கவிதைகள் | 64 |



**அட்டைப்படங்கள் நன்றி :**
- UNICEF
- GILLEES Murat (Nouvelles Images S.A).



**சகல தொடர்புகளுக்கும்:**

Charles Vignes
6, Square du Roule,
92200 Neuilly S/ Seine,
FRANCE.


○ ○

www.tamilarangam.net

## பசுமைப் பசி

அம்மா,
எனது அன்னை நிலமே
மனிதப் பாதங்களை மடியில் சுமப்பவளே
மலை எனும் முலைதனை
மார்பினில் தாங்க
கொடைதான் இலையே உனக்கு
ஏதம்மா இயற்கையின் ஓரவஞ்சனை!
அருவிப்பால் அருந்த வகையற்றுனது
வயற்குழந்தைகள் வாடிவதங்குது
ஏதம்மா கொடுமை –
ஊட்டமற்று நோஞ்சானாகுது
ஏதம்மா நீதி !
ஆனாலும்,
முன்பொரு காலம் அழகிதான் –
பசுமைப் புடவையில் கண்களைக் கௌவும்
எழிலும் செழிப்பும்
அடடா !
பார்த்தான் பார் இயற்கை
பரிசு பரிசாய் குளிர்மைப் பெரும் கொடையை
வாரி வாரித் தந்தான் –
பாரி பாரிதான் அப்போதவன்.
ஆனால் ஐயய்யோ,
எமதூதராகினர்
உன் மனிதக் குழந்தைகள் –
கோடரி தூக்கினர் !
தறித்துக் குவித்தவை மரங்களா ?
மனிதரும் சேர்ந்த உன் குழந்தைகளை எண்ணி
வான்மகள் நோக்கி ஏந்திய
உன் கைகளம்மா !
அறுத்து எறிந்தது பசுமையையா ?
வான்மகள் மார்பினில் திரண்டு செழித்த
முகில் முலையல்லோ !

அருமை அம்மா,
எனது அன்னை நிலமே,
இன்னும் எதைத்தான் கதைக்க !

–செ.பொ.சிவனேசு

## சுயரூபங்கள்

எல்லாம் முதிர்ந்த விசித்திரங்கள்
சுய தரிசனங்கள்.........
மிகக் கொடியவை அவை!

ஒவ்வொரு முகத்தின் பின்னும்
எத்தனை வித மிருகங்கள்.........
தினம் தினம்
எத்தனை வித பிராண்டல்கள்.........
நகக்கீறல்கள்........ காயங்கள்..........
சீழ்வடிந்து பொருக்குத்தட்டிப்போன
காயங்கள்!

இரைதேடல் கவனத்துடனேயே
ஒவ்வொரு மிருகமும்
ஒவ்வொரு கணமும்........!
எந்த நேரத்திலும்
எந்த மிருகமும்
தாக்கலாம்
வார்த்தைப் பற்களால் குதறலாம்
குரல்வளையை இறுக்கிப் பிடித்து
நார் நாராய்க் கிழிக்கலாம்
இது போல எதுவும் நடக்கலாம்.

அப்பாவி முகங்களின் பின்
முட்டும் எருமை,
படமெடுக்கும் ஸர்ப்பம்,
அட்டகாசமான முகங்களின் பின்
சாதுவாய் அசைபோடும் பசு,
கொஞ்சும் புறா,
இருக்கலாம்.......
இல்லாமலும்
இருக்கலாம்!

எனின்,
எந்த முகமூடியுள்
எந்த மிருகமோ..........?

–மைதிலி அருளையா

□ நன்றி: 'கவிதை' சித் வை 1994 இதழ் – ஈழம் □

## அறிதல்

—கிபி அரவிந்தன்.

காற்றில் அள்ளுண்டு
வருகின்றனவே
மரத்தில் சேத்ததும்
வாடி உதிர்ந்ததுமான
சருகுகள்.
கூடவே
ஒத்தியறித்த

பச்சை இலைகள்.
தளிர்கள்..
கொழுந்துகள்...
எது
எந்த மரத்தினது?

வீசும் திசைக்கு
எற்றிச்சென்றும்
சில பல வேளையில்
மகிழ்ந்தும் காலி

இலைச்சேர்க்கைக்கு
உதவியும்
திசைமாறி எதிராய்
எதனையும் கொணர்ந்தும்
பேதம் கடந்த
காற்று.
ஏதுமது அறியாது
ஆயின்
அள்ளுண்டவைதான்
அறியுமோ.
காற்றில் எற்றுண்ட
தம் நிலை பற்றி...!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு திறந்த மடல்......

# அன்புள்ள நண்பனுக்கு!

பிரான்சு.

*1995. 05. 01*




*அன்பு நண்பா!*

*உன் கடிதம் கண்டு ஆச்சரியமடைந்தோம். ஒன்றுமறியாதவன் போல் நீ எழுதியவை எம்மை வேதனையுறச் செய்தன. இதனால் மீட்கப்பட்ட நம் நினைவுகளை இந்த திறந்த மடலில் எழுத விழைகிறோம்.*

*86-ம் ஆண்டளவில் நீ எம்மை விட்டு சென்றபின் உன் வதிவிடம், சுகநலம் எதுவும் அறிய முடியாதவர்களாய் இருந்தோம். தொடர்பு கொள்வாய் என ஆவலுடன் எதிர்பார்க்கையில், விட்டது தொல்லை என நீ தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டது பற்றிப் புரிந்து கொள்ள சிறிது காலம் பிடித்தது. இந்த எட்டு ஆண்டுகளின் பின்னாவது எம் நினைவு உனக்கு வந்தது மகிழ்ச்சிதான்! கூடவே ஆச்சரியம்தான். இதற்கு தொ.கா.5 (T.V.5) ஒளிபரப்பு அலைவரிசைக்குத்தானே நன்றி சொல்ல வேண்டும். அது ஒளிபரப்பிய விபரணச் சித்திரம்தானே எம் நிழல்களை உன் நினைவரங்கில் விழச்செய்தது. கடிதம் எழுதத் தூண்டியது.*

*இலங்கைத் தமிழர்கள் பற்றியும், அவர்தம் வாழ்நிலை பற்றியும் 'சுவிஸ் தொலைக் காட்சி' நேரடியாகப் பேட்டி கண்டு ஒளிபரப்பியதை தொ.கா.5 கடந்த தை மாதத்தில் மறு ஒளிபரப்புச் செய்திருந்தது. நாங்களும் அதைப் பார்த்தோம். இந்த தொ.கா.5 அலைவரிசை பிரஞ்சு மொழி பேசும் நாடுகளுக்கான (Franco phonic) கலாச்சார மொழி பரிவர்த்தனை செய்யும் சர்வதேச அலைவரிசை என்பதை நீ அறிவாய்.*

*இந்த விபரணச் சித்திரத்தில் எமது சமூக முடங்கல், தாழ்வுச் சிக்கல், எமது பழக்க வழக்கங்கள், சமூக உறவுகள், தொழிற்துறை....... எனப் பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றிருந்தன. எங்களுக்கு பிடித்திருந்தன. இதன் தயாரிப்பிற்கு சுவிஸில் பிரஞ்சு மொழி பேசும் பகுதில் வாழும் நம் தமிழர்கள் பயன்படுத்தப்பட்டிருந்தனர். அவர்கள் நன்றாக பிரஞ்சு மொழி பேசினார்கள். இவ்வொளிபரப்பு மறந்துவிட்ட எம் நட்பை, நினைவு இடைவெளியை புதுப்பித்து நிரவும் என நாம் கனவிலும் கருதியிருக்கவில்லை.*

*நீ எழுதியிருக்கும் கடிதத்தில் எழுப்பியிருக்கும் கேள்விகள், உன் மறதியை உணர்த்துவதுடன் ஆச்சரியப்பட வைக்கிறது. பிரான்சில் எம்முடன் மூன்றாண்டுகளாய் ஒன்றாய் இருந்து எல்லாவற்றையும் பட்டு அனுபவித்திருந்த உன்னால், இவையெல்லாம் மறந்து போனது எப்படி? நடிப்பில்லையே......!*

*நண்பா!*

*உனக்கு ஞாபகம் இல்லையா, செக்கோசுலவாக்கியாவில் இருந்து ஜேர்மனிக்கும், பின்பு சார்புறூக்கன் (ஜேர்மனி) ஊடாக பிரான்சுக்கும் வரும் வழியில் சவக்காலைகளில் ஒளிந்து ஒளிந்து நாம் பயணம் செய்ததை. அந்த இரவுகள்.....! இந்த கள்ள வழிப்பயணம்தானே வந்த அத்தனை பேருள்ளும் நம்மூவருக்குமிடையில் நட்பை ஊன்றி இறுகச்செய்தது. பாரிசுக்குள் கால் பதித்தபோது யார் நமக்குத் தெரிந்திருந்தார்கள்? என் மனப்பாடத்தில் தெரிந்திருந்த அந்த ஒரேயொரு தொலைபேசி இலக்கத்தைத் தவிர வேறு எந்த நம்பிக்கை எமக்கு இருந்தது? தொலைபேசி இலக்கத்திற்கு உரியவரைத் தேடி அலுத்து, இறுதியான முயற்சியில் அந்தக் குரல் கிட்டிய போது, வந்து அழைத்துச் செல்கிறேன் என நம்பிக்கை அளித்தபோது எத்தனை மகிழ்ச்சியில், கற்பனையில் மூழ்கினோம்......! பயணக் களைப்புத் தீர குளித்து நல்ல நித்திரை அடிக்கலாம் என்றெல்லாம் யோசித்திருக்கையில்......, வந்தவன் திடுக்கிட்டதும், சங்கடப்பட்டதும், "நீங்கள் மூவரா" என முகம் சுழித்ததும் நாம் பட்ட தவிப்பு மறக்கக் கூடியதா என்ன?*

*ஏதோ கருணையினால் தன் இடத்திற்கு அழைத்துச் சென்றபோது 30 சதுர மீட்டர் அறைக்குள் அவனுடன் ஐவர் தங்கியிருப்பதையும், அன்று இரவு எமக்காக அவர்களில் மூவர் இடம் விட்டுத்தர அந்த இடத்தில் நாம் உறங்கியதையும், எம்மை அழைக்க வந்தபோது 'நீங்கள் மூவரா' எனக் கேட்டதின் காரணத்தை உணர்ந்து அவனை மனதால் வாழ்த்திக் கொண்டதையும் எப்படி மறந்து போக முடியும்?*

*அசதியில் தூங்கிக் கொண்டிருந்த எம்மை அவன் தட்டி எழுப்பியபோது நாம் பஞ்சிப்பட, "இன்று விட்டால் இனி இரண்டு நாட்களின் பின்தான் குளிக்கலாம்" என எச்சரிக்க, ஒன்றும் புரியாமல் அவன் பின்னால் சென்றபோது- நம்ம ஊர் கூப்பன் கார்ட் மாதிரி ஒன்றைக் காட்டி "இதுதான் குளிக்கும் கார்ட் இதைக் காட்டினால்தான் உள்ளே விடுவார்கள். கிழமையில் மூன்று நாட்கள் மட்டுமே குளிக்கலாம். இன்று குளிக்கும் நாள்" என அவன் விளக்கமளித்தபோது, 'இதுதான் வெளிநாடு' என நாம் முணுமுணுக்க, அவன் 'நாம் செய்த பாவம்' எனக் கூறியதும் கூடவா மறந்து போயிற்று?*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

“இன்றிலிருந்து புரட்டாதிச் சனியன் பிடித்துவிட்டது என நினையுங்கள். இங்கு மானம், மரியாதை, கௌரவம் என்பவை ஏதேனும் உங்களுக்கிருந்தால் அவற்றை உடனடியாக மூட்டைகட்டி வைத்துவிடுங்கள். என்று வெளிநாடு என இலங்கையை விட்டு காலடி எடுத்து வைத்தீர்களோ அன்றே உங்களை நீங்கள் இழந்து விட்டீர்கள் எனக் கருதவேண்டும்'' என அவன் உபதேசங்கள் செய்து சமூக சேவை நிறுவனத்திற்கு சென்று உதவி கோரியபோது 'நீங்கள் ஆங்கிலக் காலனியில் இருந்து வந்துள்ளீர்கள். ஏன் அங்கு செல்லாமல் இங்கு வந்துள்ளீர்கள்' எனக் கேட்டபோது, நாம் மௌனமாகத் தலை குனிந்து நின்றதும் கூடவா உனக்கு ஞாபகத்தில் இல்லை?

நாம் வந்த காலத்தில், பிரஞ்சு மொழி அறிந்த நம்மவர்கள் மிக மிக அரிதாகத்தான் இருந்தார்கள். அந்த 84, 85-ம் ஆண்டில் அகதிக்கான அங்கீகாரப் பத்திரம் எம்மவரில் மிகச் சிலருக்கே எட்டியிருந்தது. அகதி கோரும் விண்ணப்பம், அகதிக்கான உதவி, வழி வகைகள், அணுகுமுறை என்பனவெல்லாம் தமது உடமையாக்கிக் கொண்ட இவர்கள் கர்ப்பக்கிரகத்தை மறைக்கும் நந்திகளானார்கள். தெரிந்தவை எல்லாம் தம் குடும்ப வட்டத்துக்குள் அமுக்கிக் கொண்டார்கள். இவர்களே கையில் வேலையும், வீடுமாக வாழ்ந்தார்கள். இவர்களிடம் தானே நாம் அகதியாகும் விண்ணப்பம் எழுதித் தருமாறும், அதன் வழி முறைகளைத் தெரிவிக்கும்படியும் எத்தனை தடவைகள் அலைந்து திரிந்தோம். திருப்பி அனுப்பப்பட்டோம். சந்திக்கவே மறுத்தவர்கள் எத்தனை பேர்! ஆனால் இவர்கள் தம்மை ஈழத்து அரசியலில் ஈடுபட்டவர் என்றும் அதனால் பாதிக்கப்பட்டவர் என்றும் பொய்களின் அடிப்படையிலேயே அகதித் தகுதியைப் பெற்றிருந்தனர் என்பதை நாம் அறிந்திருந்தோம் அல்லவா? மொழிப் புரோக்கர்களான இவர்கள் இந்த முகவரியில் போய் இதைச் செய்யும் என்று சொன்ன ஆலோசனைக்குக் கூட பணம் கறந்து கொண்டார்கள் அல்லவா! ஊரில் கள்ளப் 'புரோக்கர்மார்' ஊரை ஏய்த்து உலையில் போட்டுவிட்டு கோயில் திருப்பணி செய்வது போல், இந்த மொழிப் புரோக்கர்மார் தமிழிலக்கியம் பேசி தமக்கான சமூக அந்தஸ்தைத் தேடிக் கொள்ளவில்லையா? வீடு வாங்கினர்; வீட்டில் பார்ட்டி நடத்தினர்; இவர்களில் ஒருசிலர் பொலிசாரின் இரகசியப் பிரிவின் ஒரு பகுதியான Renseignements généraux க்குத் தகவல் கொடுப்போராய் தாம் செய்வது பற்றி புரிந்தோ, புரியாமலோ பெருமையுடன் பீற்றிக் கொள்ளவில்லையா?

இந்தக் கதை எழுதும் விண்ணர்களிடம் நமது விண்ணப்பத்திற்காக ஆளாளுக்கு மூவாயிரம் பிராங்குகளை அல்லவா அழுதிருந்தோம்! அப்பப்பா! இந்த மூவாயிரத்தைத் திரட்ட நாம் என்னவெல்லாம் செய்தோம். சும்மாவா? நம்மைப் போல் எத்தனை பேர்! இவற்றையெல்லாம் கூடவா நீ மறந்து போனாய்?

இந்த நிலையில் வந்த நாட்டின் மொழியைப் படிப்போமா? ஏறிக் கொண்டிருக்கும் கடன் சுமையைக் குறைக்க வழி தேடுவோமா? இங்குதான் நீ எழுப்பிய கேள்வி பற்றி ஆச்சரியமும் வேதனையும் ஏற்பட்டது.

எவ்வளவு சாதாரணமாய்க் கேட்டுவிட்டாய்! சுவிஸிலிருக்கும் நம்மவர்கள் பிரஞ்சு மொழி நன்றாய்க் கதைக்கிறார்கள். ஏன்தான் பிரான்சிலுள்ள நம்மவர்கள் மொழியறிவில்- கதைப்பதில் பின் நிற்கிறார்கள்? எப்படிப்பட்ட கேள்வி இது! அதுவும் உன்னிடம் இருந்து!

உன் மூக்கு வலி மாறிவிட்டதா? உன் முகத்தின் 'அந்தக் காயம்' சொல்லுமே நம் கதையை.

நமக்கு வழங்கும் தற்காலிக விசா மூன்று மாதங்களுக்கு மட்டுமானதே. முடிய முடிய புதுப்பிக்க வேண்டும். இந்த வேளையில் நம்மைப் போன்றவர்களுக்கெல்லாம் கிலிபிடிக்கும். நெஞ்சு பட படக்கும். பொலிஸ் நிலையம் நம்மைப் போன்றவர்களால் நிரம்பி வழியும். இப்படித்தான் அன்றொரு நாள், எங்கே நிரம்பி வழியும் கூட்டத்தால் விசாவை புதுப்பிக்க முடியாமல் போய்விடுமோ என்ற அச்சத்தால், முதல் நாள் கடைசி மெத்ரோவைப் பிடித்து பொலிஸ் நிலைய வாசலில் அந்தக் குளிரிலும் படுத்து எழும்பி நிரை கட்டி நிற்கையில், உடல் வலிமை மிக்க வேற்று நாட்டார் எம்மை இடித்துத் தள்ளி விட்டு முன்னேற- நீ அவனைத் தாக்க அவனின் எதிர்த் தாக்குதலால் உன் மூக்குடைந்து இரத்தம் வழிந்து காயமானதே! இது ஆறிப்போகவும், மறக்கக் கூடியதுமானதா?

ஒவ்வொரு முறை விசா புதுப்பிக்கும்போதும் நாம் பட்ட அனுபவங்கள் கொஞ்சநெஞ்சமா?

காலை எழுந்ததும் வேலை தேடும் படலம் தொடங்கும். கூட்டமாக அலைவோம். மொழி பேசத் தெரியாமல் பேந்தப் பேந்த முழித்தபடி அலைந்து களைத்து மெத்ரோவிலேயே தூங்கிப்போவோம். உறவினர், ஊர்க்காரர் யாராவது வேலை செய்தால் அங்கே காலியாகும் இடத்திற்கு சேர்த்துக் கொள்வார். நமக்கு உறவும் இருக்கவில்லை; ஊர்க்காரரும் இருக்கவில்லை. இந்நிலையில் வெளிநாட்டாரைக் கூலிப்படையாகக் கொண்டியங்கும் (LEIGION ETRANGERE) இராணுவப் படைப் பிரிவில் சேர்ந்து கொள்ள 'ஃபொந்தனி சூ புவா' எனுமிடத்திலுள்ள முகாமுக்கு இரு தடவைகள் சென்றிருந்தும் சந்தர்ப்பம் நமக்கு வாய்க்கவில்லை. இவ்வாய்ப்புக் கிட்டிய நம் நண்பர்கள் இன்றும் வேலையில் இருக்கிறார்கள். இவை கூடவா உனக்கு மறந்து போயிற்று! இப்படியாக அன்றாடப் பிரச்சனைகளாலேயே நாம் அலைக்கழிக்கப்பட்டபோது, எப்படியடா மொழி படித்து நிபுணத்துவம் பெறமுடியும்?

நாம் மொழி படிக்கப் போன கதையும் உனக்குத் தெரியாததா? 'சேர்வ் பபிலோன்' மெத்ரோ நிலையத்திற்கு அருகில் இருக்கும் தேவாலயம் ஒன்றின் பாதிரியார் 'ஓடித்' (பாதிரியின் பெயர்) பாண்டிச்சேரியில் நீண்ட காலம் பணி புரிந்தமையால் நன்றாகத் தமிழ் தெரிந்திருந்தார். இவர் எம்மீது கொண்டிருந்த அனுதாபத்தினால் வாரத்தில் இரு நாட்கள் இரு மணித்தியாலப்படி மொழி கற்பிக்க ஏற்பாடு செய்து தந்திருந்தார். ஆனால் பிரஞ்சு மொழியின் அகர வரிசையை அறியும் முன்னரே நம்மவர்களின் 'நன்நடத்தைகளால்' இழுத்து மூடப்பட்டது. இதையடுத்து 'ஜுலே ஜொஃபிறின்' மெத்ரோவுக்கு அருகாமையில் அமைந்த கத்தோலிக்க மத நிறுவனம் மொழி கற்பிக்க முன்வந்ததுடன் நம் வயிற்றுக்குக் கஞ்சியும் (பாண், தயிர், முட்டை) வார்த்தது. இடிபட்டு உணவருந்த வேண்டி வந்ததால் எப்படி முன்வரிசையில் இடம் கிடைக்க வழி தேடுவதென மூளைப் புலனைச் செலுத்தியதால் மொழி மண்டையில் ஏறமறுத்தது. என்ன செய்வது, அன்றைய நிலை அப்படி! அது போகட்டும். எப்படி மறந்திட முடியும் அந்த உருப்படியான ஒரு வேளை உணவை?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்னும் ஏன், நமக்கு முதலில் பாதுகாப்பு அளித்த நண்பனின் கதையுமா மறந்து போயிற்று? 80-ல் வந்திருந்த அவன் எவ்வளவோ கஷ்டங்களுக்குமிடையில் பிரஞ்சு மொழியின் முதலாவது டிக்கிரியை முடித்திருந்தான். ஆனால் அவனது அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதால் படிப்பைத் தொடரவோ, வேலை செய்யவோ முடியாது போனதுடன் தலைமறைவு வாழ்வையும் வாழவேண்டியவனானான். பின்பு ஏதேதோ முயற்சிகளுக்குப் பின்னால் 1990-ல் தான் அவனுக்கு அகதிப் பத்திரம் வழங்கப்பட்டது. இந்த உதாரணம் மட்டும் போதாதா நீ கேட்ட கேள்வியின் பதிலுக்கு.

இன்னுமொரு பிரஞ்சு இளைஞனால் மொழி கற்பிக்கப்படுவதை அறிந்து சென்றபோது, அங்கே சிறிலங்கா தூதுவராலயத்தில் கடமையாற்றும் சிங்கள இளைஞர்களும் கற்பதைக் கண்டு தயங்கினோம். ஆனால் 'இந்நாட்டில் அவர்களால் என்ன செய்ய முடியும்?'- என்ற துணிச்சல் ஏற்பட படிப்பைத் தொடர்ந்தோம். அந்தப் பிரஞ்சு இளைஞனுக்கு இலங்கை மீது நாட்டமிருப்பதையும், சிங்கள மொழியை அறிந்திருந்தார் எனபதையும், தமிழ் மொழியுடன் பரிச்சியம் கொள்ள விரும்புகிறார் என்பதையும் புரிந்து கொண்டோம். அவர் எம்முடன் பழகுவதில் காட்டிய ஆர்வம் நாம் அறிந்ததே. அவ்விளைஞனுடன் போலியோ நோயால் பாதித்த பெண் ஒருவரும் கூடவே சேர்ந்து நமக்குப் படிப்பித்தாரல்லவா? இந்த படிப்புக் காலம் எவ்வளவு சுவையானது. இந்த வேளையில்தானே பிரஞ்சு மொழியின் அகரவரிசையையும், கொஞ்சச் சொற்களையும் நாம் தெரிந்து கொண்டோம். அந்த இருவருக்கும் என்றென்றும் நாம் நன்றிக்கடன் பட்டவர்களல்லவா? இங்கும் நம் படிப்பைத் தொடருவதற்கு 'சனியன்' வழிவிட்டுத் தரவில்லை. அப் பிரஞ்சு இளைஞனும், யுவதியும் இந்நாட்டுக் கலாச்சாரத்தை எமக்கு அறிமுகம் செய்யும் நோக்குடன் சனி, ஞாயிறுகளில் வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வது வழக்கம். இப்படியாக ஒருமுறை அந்தோனி எனும் இடத்திலுள்ள தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றிருந்த போது, கூடவே வந்திருந்த சிங்கள இளைஞர்கள் போதைப் பொருள் பாவிப்பதைக் கண்டு திகைத்துப் போனோம். நம்மை அழைத்துச் சென்றிருந்த பிரஞ்சு இளைஞனும், யுவதியும் இது பற்றி அலட்டிக் கொள்ளாதது எமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இக்கால கட்டத்தில்தான் நம் நாட்டவர்களில் சிலர் பணம் சம்பாதிக்க பாகிஸ்தானிலிருந்து கடிதங்கள் மூலம் 'தூள்' எடுத்து வியாபாரம் செய்து பொலிஸில் பிடிபட்டிருந்தனர். இந்நிலையில் இவற்றை விரும்பாத நாம் பிரஞ்சு இளைஞனிடம் படிக்கச் செல்வதை நிறுத்திக் கொண்டோம். இப்படியாக நம் படிப்பு மீண்டும் அறுபட்டது.

இதற்கு மேலும் உன் கேள்விக்கு என்ன பதில் கூறமுடியும். இவையே உன் மரத்துப் போன நினைவுகளை உசுப்பி இன்னும் பலவற்றை உணர்த்தும் என நம்புகிறோம். இப்போதாவது உன் கேள்வியின் தவறு புரியுமென நினைக்கிறோம்.

நண்பா! நீ நண்பன் இராஜலியை விசாரித்திருந்தாய். அவனைச் சந்தித்து பல நாட்களாகி விட்டன. தற்செயலாக லிவலுவா மெத்ரோ அருகில் சந்தித்ததுதான் கடைசி. தேநீர்ச் சாலை ஒன்றினுள் அமர்ந்து காப்பி அருந்தியபடி நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தோம். உன்னைப் பற்றி வினவினான். அப்போது உன்னைப் பற்றி என்னால் எதுவும் கூறமுடியவில்லை. மொழி படிப்பித்த பிரஞ்சு இளைஞன், யுவதி பற்றி உரையாடல் வந்த போதுதான் அவன் தனக்குத் தெரிந்தவற்றைச் சொன்னான். 'அவர் தன்னுடன் தங்கியிருந்தது- உடன்பாடின்மையால் விலகிச் சென்றது- பின் வேறொரு தமிழருடன் தங்கி வாழ்ந்தது- பின் அங்கிருந்தும் விலகிக் கொண்டது- அவருக்கு ஏற்கனவே சிங்கள மொழியில் தேர்ச்சி இருந்தது; தமிழ் கற்றுக் கொள்ளும் ஆர்வத்தால் எங்களுடன் தங்கி பேச்சுத் தமிழை பயின்றது' பற்றி எல்லாம் விளக்கமாகச் சொன்னான். இராஜலியின் கூற்றில் உண்மை இருக்கக் கூடும். அந்த பிரஞ்சு இளைஞர் இலங்கைத் தமிழர் பற்றிய ஆய்வுக் கட்டுரை ஒன்றினை எழுதியதாக காற்று வாக்கில் வந்த செய்தி மூலம் அறிகிறோம். எதைப் பற்றி, ஏன் எழுதினார் என நாம் அறியோம்.

இன்று இந்நாட்டு வாசிகள் பலர் எம் மொழியில் தேர்ச்சி பெற்று நம்மவர் வாழ்நிலை பற்றி பல அறிக்கைகளை அரச நிர்வாக மட்டங்களுக்கு சமர்ப்பித்து வருகின்றார்கள். இச் சமூகவியல் பார்வையானது பக்க சார்பானதாய், தவறுகள் கொண்டதாய் அமைந்து விட நிறைய வாய்ப்பிருக்கிறது.

இன்றைக்கும் கூட எம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொது அமைப்போ, தனிநபர்களோ இல்லை. முன்னர் அவ்வப்போது சிலர் தலை நிமிர்ந்த போதும் சுயலாபப் போக்கில் சுருங்கிப் போயினர். எம்மில் அக்கறை கொண்ட இந்நாட்டுவாசிகள் எம்மவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொது அமைப்பைக் கட்டி எழுப்பும்படி தூண்டினார்கள். ஆனால் யாருமே முன்வரவில்லை. இது எம்மை சமூகப்பழக்க வழக்கம் தெரியாத, சமூகக் கட்டமைப்பற்ற பரதேசி மக்கள் கூட்டமாகவே கணிக்க இடமளிக்கிறது. சரி போனவை போகட்டும். நீண்ட கால இடைவெளியின் பின் நீ கேட்ட கேள்விகளால் உந்தப்பட்டு ஏதேதோவெல்லாம் எழுதி விட்டோம். உன்னைச் சந்தித்து பேச ஆசை, இது கிடைக்காமல் போக பலவற்றை எழுத்தில் கொட்டிவிட்டோம். உன்னால் கூட எம்மைப் புரியாமல் போய்விட்டதே என்ற ஆதங்கம்தான் இப்போதும் நெஞ்சை அடைக்கிறது.

தற்போது நம்மவரில் பலரும் மொழித் தேர்ச்சி பெற்றுவிட்டனர். நம்மவர்களில் பலர் மொழி கற்பிக்கவும் செய்கின்றனர். ஏன் சிலர் கவிதை எழுதவும் செய்கின்றனர். கவிதை நூலொன்று கூட வெளிவந்து விட்டது. நாம் வந்த காலம் போலல்லாது இப்போது வருபவர்கள் எல்லாம் வேகமாகவே முன்னேற்றம் காண்கிறார்கள். ஆனால் முன்னேறி எங்கு செல்லப்போகிறோம்? இக்கேள்வி எம்மது.

வணக்கம்.

இப்படிக்கு

உன் நண்பர்கள்,

சந்திரன், ராஜா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# அவ்வெண்ணிலவில்...

வெண்ணிலவு கண்டு அழுபவர்களின் துக்கம் நமக்குப் பழக்கமில்லை,
காவியங்களில் தவிர.
நாம் அவர்களை பிச்சைக்காரர்கள் என்கிறோம்.
அல்லது குற்றவாளிகள் என்கிறோம்.
வெண்ணிலவு கண்டு அழுபவர்களை நாம் ஒருபோதும் புரிந்து கொள்ளுவதில்லை.
நாம் வெண்ணிலவைச் சந்தித்ததே இல்லை.
அது மண்ணிறங்கும் போது நாம் படுக்கையறையில், போர்வைக் கதகதப்பில், தூங்க விரும்புகிறோம்.
இழந்தவர்கள் மட்டுமே அறிவார்கள் போலும் வெண்ணிலவின் உக்கிரம்.
ஒவ்வொரு இலை நுனியும் அதன் ஒளியில் சவரத் தகட்டு நுனியாக மாறும் பயங்கரம்.
வெண்ணிலவு கண்டு அழுபவர்கள் நமக்கு அன்னியர்கள்.
நமது திண்ணைகளில் அவர்கள் விம்மும்போது நாம் அமைதியிழக்கிறோம்.
ஒவ்வொரு ஜன்னலாக மூடிய பிறகு
சலிப்புடன் அவர்களை
பிச்சைக்காரர்கள் அல்லது குற்றவாளிகள் என்கிறோம்.
அவர்களது கண்ணீர் இப்படி
காற்று வழியாக வந்திருக்க வேண்டாம்.
கவிதை வழியாக வந்திருக்கலாம்,
இரண்டாயிரம் வருடப் புதைமண் பூச்சுடன்.
□ *-1989*

***-ஜெயமோகன் கவிதைகள்-***

# ஆயுதம்



மனிதர்களைக் கொன்ற பின்பு
ஒரு துப்பாக்கி எப்படி இருக்கும்?
குரைத்து முடித்த நாயின் கண்கள் போல
அதில் குரோதம் மிச்சமிருக்குமா?
அல்லது மெல்லிய புகை எழ
ஓய்வறைச் சுருட்டுப்போல் அமைதி காட்டுமா?

ஒரு மனிதனைக் கொன்றபின் துப்பாக்கி பெருமிதம் கொள்ளுமா?
அல்லது
தன் உள் நெருப்பை இழந்து விட்டதை அறிந்து விம்முமா?
பூகம்பம் முடிந்த நிம்மதியா?
அல்லது
புதைமணலின் மவுனமா அதற்கு?

ஒரு மனிதனைக் கொன்ற துப்பாக்கியிடம் கேட்க ஆசை.
கொல்வதற்காக மட்டும் அதன் உடல்
வடிக்கப்பட்டிருப்பதை அது அறியுமா?
மரணத்தைத் தவிர வேறெதையும் நினைவுறுத்தாத
அப்பொருளை நான் இதுவரையில் பார்த்ததில்லை.

ஒரு மனிதனைக் கொன்ற துப்பாக்கியை
நான் சந்திக்கும்போது
மெல்ல அதைத் தொட்டு கேட்பேன்,
ஒரு துப்பாக்கியாக இருப்பது பற்றி
அது என்ன எண்ணுகிறது என்று.
ஒரு மனிதனின் இதயத்திற்குள்
அது செலுத்திய தோட்டாவை
மீண்டும் சந்தித்தது உண்டா என்று.
□ *– 1993.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெல்வீல்:உலகமையம்
## [BELLEVILLE]

பாரீஸ் நகரத்தில் இருப்பிடத்திண்டாட்டம் பல வருட காலமாய் இருந்து வருகிறது. முக்கியமாக 20ம் வட்டாரம்(arrondissement) பெல்வீலில் இப்பிரச்சினை மிகவும் தீவிரமாகியுள்ளது. நகரின் மேயர் பரியாணி(Bariani) P.R(*) கட்சியைச் சேர்ந்தவர். 20ம் வட்டாரம் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களை வரவேற்று ஒன்றுபடுத்துவதால், பாரீஸின் மற்ற வட்டாரங்களைக்காட்டிலும் இவ்வட்டாரம் ஏழ்மையாய் இருப்பது பொதுவாகவே இவரது கட்சிக்கு உறுத்துவதாகவே இருக்கிறது. எனவே நகரை முன்னேற்றம் செய்கிறேன் என்கிற கண்துடைப்புத்திட்டத்தை உருவாக்கி, பல கட்டிடங்களை நகராட்சியே விலைக்கு வாங்கி அவற்றை உபயோகிக்காமல் செய்துவருகிறது;அதில் இருந்தவர்களை வெளியேற்றுவதுதான்(EXPULSION) இத்திட்டத்தின் பிரதான நோக்கம். இவ்வாறு வெளியேற்றுபவர்களை புறநகர்ப் பகுதியில் மாற்றுக் குடியேற்றம் செய்வதால், அவர்கள் தாம் முன்பிருந்த இடத்துடன் வைத்திருந்த தொடர்பற்றுப்போகிறார்கள். ஆனால் பெல்வீல் தனக்கென்று குறித்துக் காட்டும் வகையில் ஒரு மனப்பான்மையை (spirit) உருவாக்கியுள்ளது. மற்றவர்களை வரவேற்பதும், வித்தியாசம் பாராட்டாமல் அவர்களிடம் இன்முகமாகப் பேசுவதும், விருந்தோம்புவதும் இவற்றைச் சேர்ந்தவை. இந்த மனப்பான்மையை பாரீஸைச் சேர்ந்த 15ம் வட்டாரத்தில் வாழும் கனவான்களிடம்(bourgeois) காண முடியாது.

குடியகற்றப்படும் இவ்வகையான பழைய கட்டிடங்களில் குடியிருந்தவர்கள் மிகக் குறைந்த வாடகையே கொடுத்து வந்தனர். இங்கு புதிதாக எழுப்பப்படும் கட்டிடங்களில் வீடுகள் வாங்குவதோ, வாடகைக்கு எடுப்பதோ அவர்கள் சக்திக்கப்பாற்பட்டவை.

ஆனால் பெல்வீல் நகரமக்கள் மேயரின் முயற்சிகளை வாயை மூடிக்கொண்டு ஏற்றுக் கொள்ளவில்லை. சங்கங்கள் ஆரம்பித்து எதிர்த்துப்போராடுகின்றனர். ஆனால் அவர்களுடைய போராட்டம் முழு வெற்றியைப் பெறுவது சந்தேகமே! ஏனெனில் உண்மையாகவே பல கட்டிடங்கள் சிதிலமான நிலையிலுள்ளன- இவற்றில் வசிப்பது ஆபத்திற்குரியது. நகராட்சியால் இவ்விடங்களுக்கு தண்ணீர், மின்சாரம் அளிப்பது சில சமயங்களில் இயலாததாய் உள்ளது. எனவே இவ்வட்டார மக்கள் வேறு வழியின்றி மன வருத்தத்துடன் இம்மாற்றத்தை ஏற்றுக் கொள்ளவேண்டியவராகின்றனர். இங்கே, நம்நாட்டுத் தமிழ்க் கதைகளில் வரும் 'தற்காலத்தில் பழைய காலத்து வீடுகளை இடித்துவிட்டு புதிய பாணியிலமைந்த அடுக்குமாடிகளைக்(புறாக்கூடு) கட்டுவதைப் பற்றிய புலம்பலை' வாசகர்கள் நினைவுகூரலாம்.

திருமதி பஸ்கால் நுவாஸே(Pascale Noizet)யும், திரு ஜில் கெஸ்தியோ(Gilles Questiaux)வும் பெல்வீலைச் சேர்ந்தவர்கள். *'எங்கள் நகருக்கு ஒரு ஆன்மா இருக்கிறது; அதற்கும் ஒரு குரல் இருக்கிறது'* என்பதை எடுத்துக்காட்ட பலரின் உதவியுடன் ஒரு பன்னாட்டுக் கலாச்சார வீடியோப்படக் கலை விழாவினை முதல் முறையாக கிளாவெல் தியேட்டரில் நடாத்த முடிவு செய்தனர். இப் படவிழா 1994 நவம்பர் 17 முதல் 20 வரை நடைபெற்றது. பல நாட்டுக் கலாச்சாரங்களை மற்றவருக்கு அறிமுகப்படுத்தல்; இவற்றை மேன்மைப் படுத்த வகைகாணல்; நம் அடையாளம் என்பதென்ன? நம் சுய அடையாளம் எவ்வாறு இழக்கப்படுகிறது?; வேற்றான் என்பவர் யார்? என்பவை பற்றிய அலசலே இப் படவிழாவின் நோக்கமாக இருந்தது.

இவ்விழாவின அறிவிப்புப் படமாக பஸ்கால் நுவாஸே இயக்கிய 'Bande d'annonce' அமைந்தது. இஸ்ரேல் நாட்டு வீடியோ கலைஞரான செல்வி இரிட் பட்ஸ்ரி(IRIT BATSRY) இப்படவிழாவின் சிறப்பு விருந்தாளி. "கனவுலகை நோக்கிய பாதை" **(PASSAGE TO UTOPIA)** என்ற தொடரில் இவரது மூன்று படங்களான,

*1)பழைய சிதிலங்களின் கதைகள் (Stories from the Old Ruins)*

*2)பழைய சிதிலங்களை விட்டுப் பிரிதல் (Leaving the Old Ruins)*

*3)வரப்போகும் நிகழ்காலத்தின் அடையாளங்கள் (Traces of Presence to Come)*

இவ்விழாவில் காட்டப்பட்டன. இவர் தற்போது பாரிஸில் வசிக்கிறார். இப்படங்கள், இவர் இஸ்ரேலை விட்டு நியூயோர்க் சென்றிருந்தபோது சந்திக்க நேர்ந்த உள்மனப்போராட்டங்களைச் சித்தரிக்கின்றன. பல மொழிகளும், குரல்களும், கவிதைகளும் கொண்ட இப்படங்கள் உருவாக்கப்பட்ட விதமும், கருத்தும் பார்வையாளர்களை



திருமதி பஸ்கால் நுவாஸே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெகுவாகக் கவர்ந்தன. உண்மையான வெளியுலகத்தின் தோற்றங்களைக் கொண்டு இவர் உள்மனதை வரைகிறார். அடையாளம் என்பது தனிமனிதனின் (individual) கோட்பாடல்ல; பல உள்ளங்களின் (intersubjective) நிரந்தரப் பரிமாறல்(dialogue) என்ற கருத்துரு அவரது படங்களில் வெளிப்படுகிறது. புலம் பெயர்ந்தோர் காட்சிக்கு நல்விருந்து.

அர்நோ மந்தாகரனின்(Arnauld Mandagaran) **'இந்திய வரலாறு'(Histoire de l'Inde)** 2ம் பகுதி இந்தியாவின் வரலாற்றை (1977 முதல் இன்று வரையிலான) சுருக்கிக் காட்டும் ஒரு முயற்சி; இந்தியா, பாகிஸ்தான், ஸ்ரீலங்கா -வில் எடுக்கப்பட்ட படங்களின் தொகுப்பு. முதல் முறையாகத் தமிழ் மக்களின் போராட்டத்தைப் பற்றிப் பேசும் இப்படம், Point du Jour, FR3 (**) இன் கூட்டு முயற்சி. பிரஞ்சுத் தொலைக் காட்சியில் விரைவில் காட்டப் படவிருக்கும் படம். இப்படக்காட்சியின் பின் நிகழ்ந்த கருத்தரங்கில் திரு மந்தாகரனும், திருமதி கீதா கணபதி தொரேயும் பங்கேற்றினர். திருமதி கீதா கணபதி தொரே *"தமிழ் பண்பாட்டின் முக்கிய அம்சங்களுக்கும்(தன்மானம், விசுவாசம், விருந்தோம்புதல், கொடை போன்றவை) பிரஞ்சுக் கலாச்சாரத்தின் தீரமான பாரம்பரியத்திற்கும்(chivalrous tradition) இடையில் வெகுதூரம் இல்லை"* என்ற கருத்தை முன்வைத்ததுடன், தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி பேசும்போது தூய்மை(purity) இக்காலத்தில் எப்படிப் பட்ட விபரீதகரமான எண்ணமாய் உள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார். பிரஞ்சுச்சிந்தனையாளர் பெர்னார் ஆன்றி லெவி(Bernard Henri Levi) இக்கருத்தைப் பற்றி ஒரு புதிய புத்தகம் வெளியிட்டுள்ளார்.

இப்பட விழாவில், பல்வேறு ஆபிரிக்க நாடுகள், சீனா, அல்ஜீரியா போன்ற இடங்களில் நடக்கும் மத, இனப் போராட்டங்கள் பற்றியும்; பிரான்சின் புறநகர்ப் பகுதியில் வாழும் இளைஞர்களின் வாழ்க்கைப் பிரச்சனைகள் பற்றியும்; பெல்வீல் நகரத்தின் மாற்றத்தைப் பற்றியும் பல்வேறு படங்கள் காட்டப்பட்டன - விவாதங்கள் நிழ்ந்தன.

பிலிப் பரோனின்(Philippe Baron) **'பாபெல்வீல்' (Babelville),** மரி கிறிஸ்தீன் கார்லினின்(Marie Christine Carle) **'மம்மா தத்தா'(L' arche de noé de Maman Tata)**- அம்மா மாமா- ஆகியவை குறிப்பிடவேண்டியவை. 'பாபெல்வீல்' பெல்வீலின் மாற்றத்தைச் சித்தரிக்கிறது. நடுங்கும் குளிரில் மக்கள் வீட்டில் இல்லாத வேளையில், கட்டிட ஏஜெண்டுகள் அவர்களது உடமைகளை நடுத்தெருவில் விட்டெறிந்து விட்டு புதிய கட்டிடங்களைக் கட்ட ஏற்பாடு செய்கின்றனர். ஒருபக்கம் புதிய வீடு தேடும் நிர்ப்பந்தம்; மறுபக்கம் நினைவுகள் நொறுக்கப்படுவதால் ஏற்பட்ட சோகம்! கண்ணீருடன் முகங்கள்...... குடிநீர், மின்சாரம் இல்லாது இடிந்துகொண்டிருக்கும் ஒரு கட்டிடத்தில் வசிக்கும் தொழிலாளியின் முகபாவம் மனித குலத்தின் பெருந்தன்மைக்கு (dignity) ஒரு அடையாளம்.



இரீட் பட்ஸ்ரி நன்றி:Photo -Sahar Batsry

'மம்மா தத்தா', ஒரு பிரஞ்சுப் பெண்மணி மற்றக்குலத்தைச் சேர்ந்த மூன்று குழந்தைகளைப் பேணி வளர்ப்பதைச் சித்தரிக்கிறது. மம்மாதத்தா பணக்காரர் அல்ல மிகப் படித்தவருமல்ல; அவரது உள்ளம் உலகைப் போல் விரிவானது. தான் வளர்க்கும் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதிலும் சரி, அவர்களுக்குக் கட்டுப்பாடு சொல்லிக் கொடுப்பதிலும் சரி அவர் காட்டும் உண்மையான அக்கறையானது தன் சொந்தப் பிள்ளைகளை தொலைக் காட்சிப் பெட்டிக்கு முன் இருத்தி விட்டு வம்பளக்கும் அம்மாமார்களுக்கு அவமானத்தைத் தரும்! தான் வளர்க்கும் பிள்ளைகளுக்கு ஒரு முழுமையான குடும்பமில்லை என்ற குறையைப் போக்க சுற்று வட்டாரத்தில் உள்ள வயதானவர்களை தாத்தா பாட்டியாகத் தத்தெடுக்கிறார் மம்மாதத்தா. இவருடைய எளிமையான செயல் கண்டு அறிவுஜீவிகள் சிரிக்கலாம். ஆனால் தன்னலமற்ற இவரது சேவையைவிட அழகானதொன்றை அவர்களால் காட்டிட முடியுமா?

மேலாதிக்கச் சக்திகளின் காரணமாய் நாம் அனைவரும் முக்கிய இடங்களாய்க் கருதுவது ஒரு நாட்டின் தலை நகர் அல்லது உலகப் புகழ் பெற்ற மாநகரங்கள்.( பாரீஸ், லண்டன், நியூ யோர்க், ரோக்கியோ........) ஆனால் பூமியிலுள்ள ஒவ்வொரு இடமும் மனித குலத்திற்கு மையமாக இருக்க வேண்டியதே நியாயம். இப் படவிழாவின் தலைப்பு ***பெல் வீல்: உலக மையம்.*** இதன் நிகழ்ச்சிநிரலின் வடிவமைப்பு சிந்தையைத் தூண்டி நிற்பதைச் சுட்டாமல் விட முடியுமா?

நிகழ்ச்சி நிரலில் தமிழ் மொழியில் வரவேற்பு வாழ்த்து ஒன்று காணப்பட்டதானது ஸ்ரீலங்காத் தமிழ் மக்களுக்கு பெல் வீலின் பிரஞ்சு மக்கள் காட்டும் நட்பின் அடையாளமாகும். இடமிருந்து வலமாய் மட்டும் படிக்கும் நம் கண்ணோட்டத்தை மாற்றும் வகையில் நிகழ்ச்சி நிரல் நான்கு கோணங்களில் அச்சிடப்பட்டிருந்தது. இது சிலருக்கு எரிச்சலை ஊட்டியிருந்திருக்கலாம்! *கண்ணோட்டத்தை மாற்றுவதென்பது சுலபமான காரியமா என்ன?*

***-கீ. கணபதி***




அழைப்பிதழ் (மாதிரி)

**(*) P.R-*பிரான்சில் அரசியல் கட்சி* (Parti Radical)**

**(**)Point du Jour- *தொலைக்காட்சி நிகழ்ச்சி***

**/F 3- *பிரஞ்சுத் தொலைக் காட்சியில் 3வது அலைவரிசை***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏது சால சுகமா?

பொ. கருணாகரமூர்த்தி

சுன்னாகம் பஸ்நிலையத்திலிருந்து கிழக்குநோக்கிச் சாவகச்சேரிக்குப் புறப்படும்வீதி புத்தூர் கிராமத்துள் நுழைந்து வெளியேறி நீண்டவயல் வெளிகளைத் தாண்டி 'நாவாங்களி' 'தனது' எனப்படும் இரண்டு கடலேரிகளை இணைக்கும் ஊறணிக்கண்மாய் மேல் சென்று 'ஏழெட்டுக்குடியிருப்புகளும்' அடர்த்தியான தென்னைமரங்களும்' கொண்டு தனித்த ஒரு தீவைப்போலிருக்கும் ஆசாரித் திடலையும் தாண்டி தொடர்கிறது.

ஊறணிக்கண்மாயிலிருந்து வடக்கே பார்க்கும்போது வயல்வெளிகளுக்குப் பின்னால் 'தனது' கடலேரி ஆரம்பிக்கும் இடத்தில் தெரியும் ஓடுவேய்ந்த சுடலைமடத்தையும், ஆசாரித்திடலிலுள்ள சில ஓட்டுவீடுகளையும் தவிர சாவகச்சேரிநோக்கிப்போகும் ஒருவர் மட்டுவில் அம்மன்கோயில் வரையில் வேறொரு குடியிருப்புகளையும் காணமுடியாது.

ஆசாரித்திடலில் இரண்டுபரப்புக்காணியில் சிறிய ஒரு தென்னந்தோட்டத்தின்முகப்பில் சாவகச்சேரிவீதியின் வடக்குப்பக்கமாக எமது மண் வீடும் கம்மாலையும் இருந்தன. எமது வளவுக்கு முன்னாலும் பெரிய தென்னந்தோப்பு, இருநூறுமரங்களுக்குமதிகமிருக்கும். ஆனால் அவையெல்லாம் காய்த்துக்கொட்டிக்கொண்டிருந்தன என்றில்லை. முன்பெல்லாம் ஒருதோட்டக்காட்டுக்குடும்பம் தோப்புக்குள்ளேயே குடிசைபோட்டிருந்து தோப்பை அச்சறுக்கையாகப்பேணிப்பராமரித்தது. பின் அது ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி நாட்டைவிட்டே வெளியேறியபின்னால், புதியதென்னம்பிள்ளைகளை நாட்டுதல், அடிக்கொத்துதல் எல்லாம் நின்றுபோனது. எல்லாத்திக்கிலும் வேலியில் கண்டாயங்கள் தோப்புவளவின் ஒருமூலையில் வண்டியாக ஊமல், சிரட்டை பறிப்பித்து ஐயா கரிசுடுவார். தோப்பின் சொந்தக்காரர் மாட்டுவடம்மாதிரித் தங்கச் சங்கிலி அணிந்துகொண்டு பழைய மொடல் ஒஸ்ரின் கேம்பிரிட்ஜ் காரில் 'தஸ்புஸ்' என்று இங்கிலிஷ் கதைத்தும் பேரப்பிள்ளைகளுடன் 'பிக்னிக்' வருவது போல் வந்து நாரிக்குக் கைகொடுத்துக்கொண்டுநின்று மரங்களை அண்ணாந்து பார்ப்பார். தோப்புப்பார்க்கவே முழங்கால்வரை நீண்டவெள்ளைக்கால்மேசில் கலர்கலராய் வளையங்கள் இருக்க சப்பாத்தும் அணிந்துவரும் குழந்தைகளை நானும் தம்பிமாரும் போய்வேடிக்கை பார்ப்போம். வீடு திரும்புமுன் கள் இறக்குவோரைக்கூப்பிட்டு நல்லபதமான இளநீர்க்குலைகள் இறக்குவிப்பார். எங்களுக்கும் ஒன்றோ இரண்டோ இளநீர் கிடைக்கும்.

எங்கள் குடும்பம் மிகவும் பெரிது. 14 வயதில் நான் ஒன்பதாவது வாசிக்கும் போது கடைசித்தங்கைக்கு ஒருவயது முடிந்து நடைபயின்று கொண்டிருந்தாள். அவளுக்கும் எனக்கும் இடையில் அம்மா சந்தானலக்சுமியாக ஐந்துதம்பிகளைப்பெற்றிருந்தாள்!

மாரிகாலங்களில் கடுமையான ஆஸ்துமாவினால் கஸ்டப்பட்டதினாலும், டாக்டர்களின் கடுமையான எச்சரிக்கையாலும் அம்மா பிறகுபெற்றுக் கொள்ளவில்லை.

ஐயாவின் முதல் உலகம் கம்மாலை. சளையாத உழைப்பாளி, நாளில் 12 மணித்தியாலங்கள் அதனுள்ளேயே முடங்கிக்கிடப்பார். இரண்டாவது அவர் தெரிந்துகொண்ட ஒரு உலகம் உண்டென்றால் அது கர்நாடக சங்கீதம். தனக்குத்தானே பாடிமகிழ்ந்து கொள்ளும் ரகம். உலையில் வைத்தஇரும்பு பழுக்க எடுக்கும் நேரத்திற்குத்தகுந்தவாறு பாட்டு சிறிய உருப்படிகளாகவோ, முழு ஆலாபனையுடன் கூடிய பல்லவி, அனுபல்லவி சரணமாகவோ அமையும்.

மோசமான குடிப்பழக்கமோ அல்லது வேறுஎந்த வீண்செலவுகளையும் உண்டுபண்ணும் பழக்கவழக்கங்களுமோ இல்லாதிருந்தும், எதிர்காலம் பற்றியதிட்டமிடுதல், சேமிக்கும்பழக்கம் இல்லாத வாழ்க்கைமுறையால் எங்களைப்பட்டினிபோடாது வளர்க்கவும், ஓரளவு படிக்கவைக்கவும் முடிந்ததேதவிர தன் இறுதிவரை ஒரு சாமானியகம்மாளனாகத்தான் வாழமுடிந்தது.

மாதிகாலத்தில் புல்லும் பசுந்தளைகளும் விளைந்த வேளாண்மையுமாக ஆசாரித்திடல் பச்சைப்பசேல் என்று இருக்கும். கடலேரிகளின் மட்டம் உயர்ந்து 'நாவாங்காளியும்' 'தனது'ம் தொடுக்கும் ஊறணிக்கண்மாயில் நீர் ஓட்டமுள்ள இடத்தில் அலம்பலினால் செய்த 'கெம்மின்கூடு'களை நாட்டித்தண்ணியோடு தெறித்துச்செல்லும் முரல்மீன்களையும், இருலையும் பாட்டுவாளிக்கிழவனும், சோமனும், (அரியனக்குடியானவர்கள்) போட்டிபோட்டுக்கொண்டு பிடிப்பதை பள்ளிக்கூடம் விட்டு வரும்போது பார்த்துக்குதூகலிப்போம். மாரிமழை அதிகமானால் 'நாவாங்காளி' செம்மணிக்கடலுடனும், 'தனது' தொண்டமானாறுகடலுடன் தொடுத்துவிடும். இதனால் யாழ்ப்பாணத்தீபகற்பத்தின் தொண்டைபோல் அமைந்த இக்கடலேரியினுள் பெருங்கடல்மீன்களான விளை, கொய், வாளை என்பனவும் வந்துவிடும் சாத்தியம். வடகீழ் பருவப்பெயர்ச்சிக்காற்றுக்கு கடலின் அலைகள் வீதியோரம் கட்டப்பட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டுள்ள 'கலிங்குச்சுவர்களில்' மோதும் போது வெண்ணுரைகள் எழும்பிப்பந்துகள்போல் வீதியில் உருளும். எம்மையும் நனைப்பதுண்டு. தனது சித்திரைவருஷம் பிறந்தபின்னுல் கடுங்கோடைபிறக்க கடலேரிகளின் பெரும்பகுதி வற்றிப்பசும்புல்முளைக்க 'மேய்ச்சல்தரவையாக' மாறிவிடும். கைதடி நாவற்குளிப்பகுதியிலிருந்து கிராமவாசிகள் புத்தூர் அச்சுவேலிக்குக் கால்நடையாகவோ வண்டியை ஓட்டிக்கொண்டோ இத்தரவையாலேயே பணயம் செய்வர். மட்டுவில் சாவகச்சேரியிலிருந்து தொண்டமாஞறு செல்வச்சந்நிதிக்குச்செல்லும் பக்தர்கள், பண்டாரிகள், பரதேசிகளுக்கும் 'தனது' தரவையே குறுக்கு வழி.

'நாவாங்களி'க்கடலில் ஆவணிமாதத்தில்கூட வற்றுத நாலேந்தடி ஆழத்திற்கு நீர்கொண்ட நடுப்பகுதியில் 'வறவெட்டிகள்' எனப்படும் பெருந்துரவுகள் உண்டு. அதைச்சுற்றிவர குடியானவர்கள் அலம்பலால் வேலிஅடைத்திருப்பார்கள். அப்பகுதியில் இறங்கி கரப்புக்கூட்டிஞல் குத்திகுத்தி சிறுதிரளி, சள்ளே, முரல், கெழுத்தி, சுவாரை, மீன்களேப் பொறுக்கி பொறுக்கிப் பறிகளே நிரப்புவர். 'அத்தாங்கு' எனப்படும் , 'வலேவடி'யாலும் வாரிவாரிச்சிறுமீன் பிடிப்பர்.

இவர்களுடன் போட்டியாக கொக்குகளும், உள்ளூர் நாரைகளும், உண்ணிக்கொக்குகளும், வங்காளத்திலிருந்து விசாப்பிரச்சினே எதுவுமில்லாமல் வந்திறங்கும். கூழைக்கடாவும் நீர்க்காகங்களும் மீன் குளிக்கும்.

வறவெட்டிகளின்மேல் இலட்சக்கணக்கில் கலேந்த தேனீக்கூட்டம் போல் பறக்கும் அத்தனே மீன்கொத்திப்பறவைகளின் மேல் இலக்கொன்றுமணேயாமல் சும்மா ஒரு பண்டார வெடி வைத்தாலே ஐம்பது அறுபது பறவைகள் 'பொலு பொலு'வென்று விழச்சாத்தியம்.

'நாவாங்கண்ணி' கடலேரிக்கும் அப்பால் தெரியும் பனங்வடலேத்தாண்டித்தெற்காகப்போஞல் நாவற்குழி. விடியப்புறங்களில் யாழ் மெயில் வண்டி நாவற்குளி ரயில்ஸ்டேசனில் நின்று கூவுவது கடலேரியைத்தாண்டி ஆசாரித்திடலுக்கு சத்தமாய்க்கேட்கும்.

சாவகச்சேரி சந்தைகூடும் செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் மணிக்கு ஒருபஸ்வீதமும், மறுநாட்க

# நீதி சால சுகமா?

ளில் இரண்டுமணிக்கு ஒருபஸ்வீதமும் சுன்ஞகம் சாவகச்சேரிபஸ் சேவையுண்டு. இரவு கடைசிபஸ்ஸில் ஏறநேர்ந்தால் கண்டக்டர் சில்லறையே தரமாட்டார். சில்லறையை வாங்கி பாக்கட்டில் போட்டுவிடுவார்.

"பாழ்பட்ட மழை வந்து இரண்டுரூபாய்க்கு ஏத்தினதை முறிச்சுப்போட்டுது... சய்க். அண்ணே மட்டுவிலுக்கு ஒரு ரிக்கட் தாங்கோ.."

'ஏத்தினது' மாத்திரம் நின்று பிடித்திருந்தால் காலிலேயே போயிருக்கக்கூடிய கிராமவாசி மழைத்தூறலேயும் முனிருட்டையுமிட்டு இன்னும் முப்பது சதம் செலவுசெய்யத்துணிந்து பஸ்ஸில் எறிஞர்.

"டேய்.. யார்றா அவன் பறப்பயல் அண்ணே மச்சான் உறவு கொண்டார்றது.... எட்டி உதைஞ்சனேண்டால் கையைப்பரத்திக்கொண்டு போய்விழுவாய்... டிக்கட்டாம் டிக்கெட்டு!"

கெட்ட கோபம் வரும்.

பஸ்ஸில் பயணிக்கிற ஜனங்கள் அனேவரினதும் குலம் கோத்திரம் எல்லாம் தெரிந்து வைத்துக்கொண்டு கண்டக்டர் பணிபுரியும் அம்மாமனிதரை இலங்கைப்போக்குவரத்துச் சபை மூளே நஷ்டம்போகாது சேர்மஞகவே நியமித்திருக்கலாம்!

இப்பஸ் சேவைகள் தவிர வலிகாமம் கிழக்குப்பகுதியிலிருந்து இருண்டபின்ஞல் கொம்புக்குப்புறப்படும் வெங்காயம், மிளகாய், கிழங்கு எற்றிய லொறிகள், கிழக்கு ஊர்களிலிருந்து கிடுகு தென்னமட்டை, கோம்பை தேங்காய்மட்டை என்பன ஏற்றிவந்து மேற்கு ஊர்களில் விற்றபின்ஞல் லாம்புபூட்டிக்கொண்டு இரவில் திரும்பும் வடக்கன்மாடு பூட்டிய வண்டிகள் எழுப்பக்கூடிய ஓசைகளுடன் அங்குள்ள பட்டறைகளில் எழக்கூடிய ஓசைகளுத்தவிர ஏதோ தபஸில் இருப்பதுபோல் ஆசாரித்திடல் நிசப்தமாகவே இருக்கும். ஆசாரத்திடலை வடக்கில் சூழ்ந்திருந்த தாழை, தில்லைக்காடுகளும் கலட்டியும், கிழக்கில் சூழ்ந்திருந்தமண்டிப்புதர்களும், காரை, ஈச்சம்பற்றையும், வெட்டுக்குளமும் பொதுக் கழிப்பறைத் தேவையை அங்கு வாழுபவர்களுக்கு நிவர்த்தி செய்தன.

என் இரண்டாவது தம்பி பத்து வயது, சைக்கிள் பாரில் இருந்து ஓட்டக்கூட கால்கள் நீளம் போதாது, ஐயாவின் சைக்கிளை எடுத்து, தரவைக் காடு மேடெல்லாம் சதா உருட்டித் திரிவான். ஒருமுறை நீர்வேலியில் ஒரு புதுமனை புகுதலுக்கு தங்கையைக் கூட்டிக்கொண்டு ஐயாவும் அம்மாவும் மாத்திரம் போயிருந்தார்கள். "தம்பிமாரைக் கவனமாய்ப் பார்த்துக்கொள். தம்பியைச் சைக்கிளைத் தொடவே விடப்படாது." ஐயாவின் தலை மறைய முன்னரே தம்பி நச்சரிக்கத் தொடங்கிவிட்டான். "அண்ணே சைக்கிள் ......அண்ணே சைக்கிள்...." நச்சரிப்புத் தாளாமல் "சைக்கிளை வீதிக்கு மட்டும் எடுத்துச் செல்லப்படாது" என்று எச்சரித்துவிட்டுக் கொடுத்தேன். எமது வளவு முழுவதும் உருட்டிக்கொண்டே இருந்தான். புதுமனை புகுதலால் ஐயா அம்மா திரும்பும் நேரம். பார்த்தால் வளவு முழுவதும் சைக்கிள் டயர் பூவின் தடயங்கள்!ஐயா கண்டால் தோலை உரித்துவிடப் போகிறாரே ?திடீரென்று எனக்கு 'ஐடியா' ஒன்று உதித்தது. (உலைக்கான கரி வரும்) "வெற்றுக்கயிற்றுச் சாக்கைப்போட்டு வளவு முழுவதும் இழுடா" என்றேன். இழுத்தான். இப்போ டயர் தடயம் மறைந்து தரை முழுவதும் கயிற்றுச் சாக்கின் கீற்றல்கள். ஐயாவுக்குப் பார்த்தவுடன் எல்லாம் விளங்கிவிட்டது. தம்பியைத் தனி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாக அழைத்துக் கேட்டார். "கயிற்றுச் சாக்கைப் போட்டுத் தரையில் இழுத்தால் 'வடிவாக இருக்குமென்று' உனக்கு யார் சொன்னது ?" "பெரிய அண்ணாதான்"! என்றானே பார்க்கலாம்! ஐடியா

தரவைக்கு மாடுமேய்க்கவரும் பையன்களைச் சேர்த்துக்கொண்டு கிரிக்கெட் விளையாடுவோம். டென்னிஸ் பந்தும், தென்னமட்டை பாற்றும்தான் விளையாட்டுச் சாதனங்கள்! How's that ?, over போன்ற இங்கிலிஷ் வார்த்தைகள் பாவிபோம். என்னை விட 2 வயது மூத்த சிவராசா மாமாவும் சிலவேளைகளில் விளையாடவருவார். அவர் விளையாடும் போது 'I way ' என்ற சொல்லை அடிக்கடி பாவிப்பார். இவை ஒன்றுக்கும் அர்த்தம் என்னவென்று எமக்குத் தெரியாது. மாரியில் சோடைத் தேங்காயில் 'வலந்தைகள்' கட்டிக்கொண்டு திருட்டுத்தனமாய் போய் கடலேரியில் நீந்துவோம். பின்தலை, களிசான் ஈரம் உலருமட்டும் தோப்பினுள் வந்து 'வார் ஓட்டம்' ஓடுவோம். கடலில் குளித்தவிசயம் அம்மா அறிந்துவிட்டாலோ வேலிப்பூவரசில் கம்புபிடுங்கி ஓடஓட அடிப்பார். என் நேர் இளையதம்பியும் சரியான வால். வெய்யிலில் கஷ்டப்பட்டுச்சைக்கிள் மிதித்துக்கொணடு போகும் ஐஸ்கிரீம் காரரை 100யார் கடந்து போகவிட்டுப்பின்னல் கைதட்டிக்கூப்பிட்டு "ஐஸ்பழம் விற்பதற்கா?" என்று கேட்பான்.

வெளியில் தமக்குள் பேசிக்கொள்ளும்போது இளக்காரமாக 'முருகேசன்' என்றும், நேரிலே காரியமாக ஆசாரியார் என்று படுவவ்வியமாக அழைத்துக்கொண்டுவரும் ஐயாவின் வாடிக்கைகாரர்களில் அண்ணுமலை வாத்தியார் வித்தியாசமானவர். தொழிலில் எப்போதோ இளைப்பாறியவர். சட்டைபோட்டுக்கொள்ளவே மாட்டார். சால்வைதான் போர்த்தியிருப்பார். சாயலில் ஆர். கே. லட்சுமணனின் கேலிச்சித்திரத்தில் வரும் 'திருவாளர். பொதஜனம் போல இருப்பார். தலையில் வழுக்கைப்பரப்பு போக மீதமிருக்கும் 14 மயிரில் புளியங்கொட்டையில் ஒருகுடுமி. சரசாலை சொந்த ஊர். மேற்கே மனைவியின்ஊரில்(சீதனமாக வாங்கினரோ தெரியவில்லை) பெரிய காய்கறித்தோட்டச்செய்கைக்காரர். குறைந்தது வாரம் ஒருதடவையாவது எங்கள் வீட்டைக்கடந்து போவார். ஒவ்வோருதடவையும் ஏதாவது கூராம்பையோ, சத்தகமோ, திருத்

# நீ சால சுகமா?

தத்திற்கு கொண்டுவருவார். கடைசி "இந்தச் சைக்கிள் காறியரைப்பாரும், இந்த ஆட்டம் ஆடுது, ஒருக்கால் பார்த்துத்தறைஞ்சு தந்தீர்என்றல் இருட்டுக்கட்டமுதல் புறப்படச்செளகரியம்". சிறுபிள்ளைகளாகிய எம்முடன் பேசும்போது கூட நீர், நாம் என்று மரியாதையாகப்பேசுவார். செய்வித்தவேலைக்கு ஸ்ரீமான் தப்பித்தவறி ஒருநாளாவது மடிஅவிழ்த்து ஒருரூபா எடுத்துநீட்டி ஐயா அறிய மாட்டார். தோட்டத்திலிருந்து விளைந்த மரவள்ளிக்கிழங்கு, பயற்றங்காய், கீரை எல்லாம் எப்போதும் சைக்கிள் கரியரில் கட்டப்பட்டிருக்கும். சந்தையில் விலை போகாது திரும்பிய கீரைப்பிடியைத் தரக்கூட மனம் பிடியாது. "ஆசாரியாருக்கு கொஞ்சம் மரவள்ளிக்கிழங்கும் இரண்டு கீரைப்பிடியும் தரவந்தான், கொஞ்சம் சிக்காராய்க் கட்டிப்போட்டன் பாரும் ஆய்ங்... !" "அதைவிடச் சிக்காராய் நான் திருப்பிக் கட்டிவிடுகிறேனே!" என்று சொல்ல ஐயாவுக்குத் தெரியாது. வரும் போதே ஒரு இதிகாசச் சிக்கலைக் கொண்டு வருவார். தனது வேலை

முடியுமட்டும் நன்கு விவரிப்பார். வேலை முடிந்தாலும் ஐயா பிரச்சனையுடன் தலையைக் குடைந்து கொண்டிருப்பார். அப்போதோ-அல்லது அந்தத் திருப்புகழைப் பாடும் , இந்தப் பாசுரத்தைப் பாடும் என்று கேட்டு ஐயா பாடிவிட்டுஇசையின் பாவம் விடுபடாமல் மயங்கி இருக்கையிலோ "இருட்டுக்கட்ட தொடங்குது".

என்று மெல்ல வாத்தியார் மாறுவார்.

அம்மாதான் கறுவுவாள்.

"இவ்வளவு வேலை செய்வித்தும் ஒரு சதங்கூடத் தராமல் போறானே....

கஞ்சப்பயல்.......கஞ்சப்பயல்.......!"

ஐயா தடுப்பார்.

"அப்பிடி எல்லாம் ஏசாதடி ஒரு படிச்ச மனிசனை....!"

"ங்......ங்.....ங்.....எப்பிடிக் காசை இடுக்கிறதென்றதிலதான் அவருக்கு வித்துவான் பட்டமெல்லாம் கொடுத்தாங்களாக்கும் ?"

"சரி... விடு.....!"

மறுமுறை வாத்தியார் செருமிக் கொண்டே படலையை மெதுவாய்த் திறந்து உள்ளே பார்த்துவிட்டு பவ்யமாய் "ஆசாரியார்....!"என்று அன்பொழுக அழைத்துக்கொண்டுவரும் போது ஐயா முகம் மலர்ந்து வரவேற்பார்.

என்ன வசியமோ!

'வெளுத்ததெல்லாம் . கள்' என்றிருக்கும் 'சுந்தரன்' என்ற குடியான வனும் மறக்கமுடியாதவன். கள்ளுக்கு ஏதும் வழியில்லாது போனால் கம்மாலைக்கு வந்துவிடுவான். சற்றுநேரம் துருத்தியை ஊதிவிட்டோ, இல்லை பொருட்களை ஒழுங்குபடுத்திச் சுத்தம் பண்ணிவிட்டோ மேல் கண்ணால் பார்த்துக்கொண்டு தலையைச் சொறிந்துகொண்டு நின்றால் ஐயா இரண்டு ரூபா கொடுப்பார். பணம் கொடுத்தபின்னால் சுந்தரன் மாயமாய் மறைந்துவிடுவான்!

ஒருமுறை கிழக்கு ஊர் வண்டியொன்றுக்கு தோடு (கோசுதான்) போட்டு அவசரம் அனுப்பவேண்டியிருந்தது. தேவையான இரும்புத் தாடோ இல்லை. அந்நேரம் பார்த்துச் சுந்தரனும் வந்தான். ஐயா 30 ரூபா காசும் கடைக்காரருக்குத் தேவையான குறியீடும் எழுதிக்கொடுத்து அவனை யாழ்ப்பாணம் அனுப்பினார். அன்று போனவன் தான், ஆளைப்பின்னால் காணவேயில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு மாதங்கழித்துப் படு கசுவ லாக ஒருநாள் வந்தான்.
"என்னவும் பிளாவுக்குள் (கள்ளு மொந்தை) மிதக்கிற 'ஈ'க்குள்ள 'கொடுப்பனவு' கூட எமக்கில்லையே ?" என்றபடி.
"அது கிடக்கட்டும். யாழ்ப்பாணத் திற்குத் தோட்டுத்தகடு வாங்க அனுப் பினோமே எங்கு தொலைந்தாய் ?" என்றார் ஐயா.
நெற்றியைச் சுருக்கி வெகு சீரிய ஸாய் ஞாபகம் செய்வதுபோலப் பாவனைபண்ணிவிட்டுச் சொன் னான், "ஒரு அதுவா....?அந்த இரும்பும் யாழ்ப்பாணத்தில இல் லையும்!"
ஐயா கேலியாகச் சிரித்தார். "கண் ணாணையும்.... இல்லையும்!"
கம்மாலை எல்லாம் கூட்டிச் சுத் தம் பண்ணித் தண்ணீர் தெளித் தான். கரிச்சாக்குகளை உதறி மடித்து வைத்தான். நீர்க்கொட்டுள் தண்ணீர் ஊற்றி நிரப்பிவிட்டுத் தலையைச் சொறிந்துகொண்டு நிற் கையில் ஐயா கேட்டார்.
"அந்த ஈ அப்படி என்னதான் பாக்யம் செய்தது ?"
சாக முதலாவது மூக்கு முட்டக் குடிக்குதே !"

நான் பிறந்தது குடும்பத்திற்கு ரொம்பவும் அதிஷ்டமாம். கிழக்கு ஊரில் எழும்பிக் கொண்டிருந்த அம் மன் கோவில் ஒன்றின் கிராதிகள், கேற்றுகள் அமைக்கும் வேலைக்கான ஒப்பந்தம் கிடைத்து நல்ல பணப்பு ழக்கமாம். அப்போதே கல்வீடு கட் டுவதற்கு ஐயா தளம் போட்டுவிட் டார். மேற்கொண்டு வீட்டு வேலை களைச் செய்ய இரண்டாயிரம், மூவாயிரம் ரூபாய் தொகையில் சீட் டுகள் கட்டுவார். ஒவ்வொருமுறை சீட்டு எடுக்கும்போதும் கல்பறிப் போம், மண்பறிப்போம், சீமேந்து வாங்குவோம் என்பார்கள். பின்னல் அடைவிலிருந்த அம்மாவின் தாலிக் கொடி மீளும், ஒன்றோ இரண்டோ சேலையும், எங்களுக்கான உடுப்புக ளும், ஆட்டிறைச்சியும், சிறிய (மில்க் வைற்) சாக்குத்துணிப்பையில் அடி யில் ஒளித்து வைத்து ஒருசாராயப் போத்தலும் வரும். அவ்வளவுதான். சுவர் அரையடிகூட எழும்பாது.
மறுநாள் "ஸிம்ஹேந்திர மத்தியமத் தை"ச் சலிக்காமல் பிருகாவோடு ஆலாபனை பண்ணிக்கொண்டு புத்து ணர்ச்சியுடன் கம்மாலையுள் நுழைவர் ஐயா! நண்டும் குஞ்சுமாய் நாங்கள் ஏழுகுழந்தைகளையும் பத்துக்குபதி

# நிதி சால சுகமா?

னைந்து அடியிருந்த சிறிய வீட்டி னுள்ளே விட்டு விட்டு வெளித்திண் ணையில் 'சாக்குக்கேட்டினை'இறக்கி விட்டு ஐயாவும் அம்மாவும் படுத்துக் கொள்வார்கள்.

சரியான மாரிகாலத்தில் அடைம ழைகளின்போது வீடு கசியும். தரை யில் மரஅரிவுதூளை நிறையக்கொட்டி அதற்குமேல் கரிவரும் கயிற்றுச் சாக்கை பல அடுக்கில் பரவி அதன் மேல் பாய்விரித்தே படுப்போம். நுளம்பு வந்து (கொசு) கொஞ்சிக்கு தூகலிக்கும் இரவுகளில் சாக்குகளி னுள் காலை நுழைத்துக்கொள்வோம். மண்சட்டியில் உமிகொண்டு புகை மூட்டுவோம்.
குளிர் என்றால் அம்மாவுக்கு ஆஸ்த் துமா வந்துவிடும். மூச்சுவிட ரொம் பவும் அவதிப்படுவாள். டாக்டர், ஊசி, மருந்து, கார் என்று ஏகச்செ லவு உண்டாகும். அம்மா எழுந்தி ருக்கவே கஷ்டப்படும் நாட்களில் ஐயாவே சமைப்பார். குடியானவர் கள் வாழும்பகுதியில் தெய்விக்கிழவி வீட்டில்போய் நான் கருவாடு ஐம்பது சதத்திற்கு வாங்கிவருவேன். அனே கம் நாட்களில் இருட்டியபின்னல் குப்பிவிளக்கில் ஐயா குளம்புவைப் பார். காரல் கருவாடு என்றலும் தலைக்கு மூன்றே தேறும். சற்றே பசியேறியபின்னல் கிடைக்கும் சாப் பாடு தேவாமிர்தமாக இருக்கும்.

காலையில் அநேகமாக பாண்தான்(-ரொட்டி) ஆகாரம். பழையகுழம்பில் தொட்டுக்கொண்டோ, தேங்காய் சம்பலுடனே, தேனீருடனே சாப் பிட்டு விட்டு பள்ளிக்கூடம் ஓடு வோம். புத்தூரில் பள்ளிக்கூடம். இரண்டுமைல் தொலைவில். வெறுங் காலுடன் பொடிநடைதான். கடைக் குட்டிப்பெண் ஆர்த்தியும், கடைசித் தம்பியும் வீட்டிலிருக்க மீதி ஐவரும் அமர்க்களமாகப்போவோம். பஸ் ஸையெல்லாம் பயன்படுத்தும் பொருளாதாரம் கிடையாது.

மதியம் கழிந்து மூன்றரைமணிக்கு பள்ளிக்கூடம் விடுவார்கள். சூரியன் பிடரியில் காய தார்ரோடு காலை வறுவல் பண்ண வியாபாரம் முடிந்து கிழக்கு ஊர்திரும்பும் மாட்டுவண்டி கள் ஏதாவது வரும்வரை புத்தூர் சந்தியில் மற்றும் ஆசாரித்திடல் தோழர்களுடனும் தம்பிமாருடனும் காத்திருப்பேன். வண்டியின் நிழல் ஒதுக்கில் நடந்து போகலாம். வண் டிக்காரர் ஐயாவின் கஸ்ரமராக இருந் தாலோ, கொஞ்சம் இரக்கசுபாவம் கொண்டவராய் இருந்தாலோ. .. "-ஏ... பையா.. மித. "(தொற்றிக்கொள்" என்பார்கள், தொற்றிக்கொள் வோம்.
ஒருமுறை இப்படி ஒருவண்டியில் தொற்றிக்கொண்டதும் -பெரியஒளி வட்டத்துடன் சுருட்டுப்புகைத்தபடி நெடுக்காக வைக்கோல் சாக்கில் சொகுசாகப்படுத்திருந்த ஒருவர் எனது புத்தகங்களில் ஒன்றை என்னைக் கேள்ாமலேயே உரிமையுடன் உருவி கண்ணுக்கு கிட்டவும் தூரவும் பிடித்து பெரிய எழுத்திலிருந்ததை வெகுசிரமப்பட்டு வாசித்தார்.
அது உறவினர் ஒருவர் முதலாண்டு படித்துவிட்டுக்கொடுத்த 9ம் படிவம் சைவநெறி, முன் அட்டையும் ஐந் தாறுதாள்களும் இல்லாது இருந்தது. முதல் அத்தியாயங்களில் திருக்குறள்.
"பு.... த. ல்.. வ.. ரை..... ப்.....-பெ.... று... த.... ல்!
ஓஹோ...... உங்களுக்கு உதுவுஞ் சொல்லித்தருகினமோ...?"
"ஓம்..... சொல்லித்தருகினம்!"
"கலிகாலமப்பா......... பொம்பிளை ரீச்சவரையும்....."
இப்போது என்னுள் கோபம் பிரவ கித்தது. அவரை மறித்து
'நீங்க நினைக்கிற விஷயமல்ல அது..... இது திருக்குறள்.... சான் றோரைப்பெறுதல்" என்று ஆரம் பித்து சாட்டையடிகொடுத்தாப்போல குட்டி லெக்சர் ஒன்று அடித்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"பெடியன் கடுகு மாதிரியிருந்தாலும் படிப்புக்குத்தக்கின துடிப்பிருக்கு" என்றார் நான் வண்டியால குதிக்கவும்.

மாலை 4மணிக்கு மேலே வீடுதிரும்பி யபின்னால் அம்மா தரும் எதையாவது வாயில் போட்டுக்கொண்டு 'பிஸி'யா கிவிடுவேன். தென்னந்தோப்பினுள் தோழர் எல்லாம் கூடிவிடுவோம். எதாவது அவசரவேலையிருந்தால் சிலவேளைகளில் ஐயா மாத்திரம் கம் மாலைக்கு கூப்பிடுவார். எரிச்சல், எரிச்சலாய் வரும். வண்டிச்சக்கரத் துக்கு வளையம் போட பொச்சு(தேங் காய்) மட்டைகளை (எரித்து சூடு பண்ண) அடுக்குவேன், துறப்பணம் இழுப்பேன். துருத்தி ஊதுவேன். வேலை ஏதுமில்லாத பூரணசுதந்திர நாட்கள் அனுபவிப்பதற்கு உரியன. வறவெட்டியில் மீன்பிடித்தார்களா யின் அம்மா சிலநாட்களில் காசுதந்து மீன்வாங்கிவரும்படி அனுப்புவார். இல்லாவிட்டாலும் சும்மாபோய் வேடிக்கை பார்ப்போம். ஒரூரூ பாய்க்கு மீன்வேண்டிய நாட்களில் குழம்புக்கும், பொரியலுக்கும் ஒதுக் கியது போக மீதியில் ஒடியல் மாவு டன் சேர்த்து ஒரு கூழ்காச்சுவார். ஆசாரித்திடல் முழவதும் மணக்கும். அதன்சுவை சொல்லிமாளாது. இன் னும் முழுவதும் ஞாபகம் செய்ய லாம்.

மாரிகாலத்தில் கிராமத்துப்பட்டறை களுக்கு வருமானம் குறைவு. ஐயா கதவு பூட்டுக்கள் செய்துகொண்டு போய் யாழ்ப்பாணம் இரும்புக்கடை யில் கொடுத்துவிட்டு பணம் வாங் கிவருவார். மழைநாட்களில் பூட்டு களுக்கு பூசும் மையும் லேசில் காயாது. கடுங்குளிரில் மை பாலா டைபோலச்சுருங்கி பூட்டு விற்கமு டியாமல் போய்விடும். அந்தமாரியில் அடுத்து ஆறுஏழு நாட்களாக மழைபெய்துகொண்டிருந்தது. பட் டறை உலையில் இரும்பு பற்றவைக் கும்போதும், நீரில் ஆயுதங்களைத் தோயும் போதும் உண்டாகும் உலோக மணம் இல்லாது இருந்தது. ஒரு பன்னச்சத்தகம் வேண்டு மென்றோ இல்லை உலையில் சும்மா குளிர்காயத்தானும் எவருமே வர வில்லை.

மழைநாளுக்காகச் சேமிக்கும் பழக் கம் இல்லாத ஐயா மேற்கில் பரிச்ச யமான நண்பர் ஒருவரிடம் கொஞ் சம் பணம் புரட்டலாம் என்று சைக் கிளில் புறப்பட்டவர் மாலையில் ஒரு உரப்பையில் பாதியளவு நிரப்பிக்கட் டப்பட்ட குரக்கனுடன் வந்து இறங் கினார். ஐயாவின் மணிபர்ஸிலிருந்த சில்லறையுடன், றங்கினுள் அம்மா நகைகள் ஏதும் அடைவிலில்லாத காலங்களில் வைக்கும் பூச்சிஉருண் டை(நப்தலின்) மணக்கும்(இங்கிலிஷ் சொக்கலேற் வந்த) தகரப்பெட்டி, திருநீற்றுச்செப்பு எல்லாம் கிளறிப் பொறுக்கிய ஒருரூபாய் சில்லறையு டன், குரக்கன் அரைப்பிக்க சைக்கி ளில் மில்லுக்கு கிளம்பினேன்.

தம்பியர் அனைவரும் தோப்புக்கு விளையாடக் கிளம்பினர். நேர் இளை யதம்பி கம்மாலையிலிருந்து ஒரு குல் லானையும்(வெங்காயம் கிளப்பப்பயன் படுத்துவது) எடுத்துச்சென்றதைக்க ண்டேன். ஆசாரித்திடல் முழவதுமே சற்று மணற்பாங்கான மண். தோப்பு முழுவதும் மிதமான ஈரமிருக்க, தம்பி, ஐயா கரிச்சுடும் கிடங்கினுள் இறங்கி குல்லானால் இன்னும் ஆழ மாகக்கிண்டி விளையாடியிருக்கிறான்.

அரவை மில்லால் திரும்பிவரும் போது இருந்த மீதிப்பணத்திற்கு அம் மாசொல்லிவிட்டபடியே தெய்விக் கிழவியிடம் மங்குச்சூடைக்கருவாடும் வாங்கிக்கொண்டு அந்திக்கருக்கலில் நானும் வந்து இறங்கையில் கிணற்றுப் பள்ளத்தில் இருந்த செம்புக்கொப் பறையில் ஐயா தண்ணீர் இறைத்துக் கொண்டிருக்க, அம்மா விளையாடி விட்டு வந்திருந்த தம்பிமாரை வரி சையில் விட்டுக்குளிக்கவார்த்துக்கொ ண்டிருந்தாள். எல்லோரும் ஈரம் துவட்டியபின்னால் சாமிகும்பிட்டு விட்டு குப்பிவிளக்கைத் திண்ணையில் வைத்துச்சத்தமாகப் படித்துக்கொண் டிருக்க அம்மா அடுப்பங்கரையில் பிட்டு அவிக்கப்போனாள்.

தம்பிகளில் ஒருவன் கோலிக் கொண்டு, மணிக்கூட்டு ஸ்பிரிங், லாச்சிக்குமிழ்(செரமிக்) இவற்றுடன் பழைய ஐம்பதுசத நாணயமொன்றை வைத்து விளையாடினான். பொதுவாக எமது பகுதிகளில் V. O. C. எழுத்துக் கள் பதித்த பழைய டச்சு நாணயங் களின் புழக்கம் அதிகம். அத்திவாரம் தோண்டும்போதே மண்ணிலிருந்து வெளிப்படும். அவன் வைத்திருந்தது டச்சுநாணயத்தைப்போல V. O. C. முத்திரை இல்லாமலும், சோழர்கா லத்து நாணயத்தைப்போல சித்திரங் களும் குறியீடுகளும் இல்லாதிருக்க அவனிடம் பிடுங்கிப்பார்த்தேன்.

'அவன் வாலை மிதித்துவிட்டது மாதிரி வைகுந்தம் கேட்க அலறி னான்'. "பார்த்திட்டு உன்னிடமே தர் றேன்... அலறாதே குரங்கே."

"தோ....... இதுபோல காசு என்னட் டும் இருக்குதே" என்றபடி இன் னொருதம்பி தன்களிசான் பாக்கட் டில் கைவிட்டுக்குடைந்து குடைந்து தேடிவிட்டு எடுத்துக்காட்டினான். அதையும் வாங்கிப்பார்த்தேன். அதேமாதிரிக்காசு. பித்தளைச்செ ழும்பு மாதிரி மெல்லிய பச்சைப்ப டையொன்று படர்ந்திருக்க மிகவும் கனதியாக இருந்தது. சந்தேகமாயிருந் தது. ஐயாவிடம் காண்பித்தேன். தீற்றுக்கல்லை எடுத்துவரச்சொன்னார். தீற்றிப்பார்த்தால் சொக்கத்தங்கத்தின் வெளிர்மஞ்சள் பளீரிட்டது! "ஏதடா உனக்கு?" என்றோம் இருகுரலில்.

"இப்புடி நிறைய்ய்ய காசு இருந் துதே..." என்றான் ஒருவன்.

"எங்கடா இருந்துது?"

"அந்தச்சொம்புக்கதான்....!"

"எந்தச்சொம்படா... விபரமாய் சொல்லித்தொலையுங்கோவன்....."

"கரிசுடுற கிடங்கைக் குல்லானால கிண்டக்க வந்துதே.... அந்தச்சொம் புக்க.."

சந்தோஷத்தால் எனக்கு குரலே நடுங்கியது.

"இப்ப எங்கடா அந்தச்செம்பு?" (ஒரு தாமிரக்குவளையாய் இருந்திருக்கலாம்)

"அதுதான் தண்டல்சாமி.... அந்தப் பண்டாரியள் சால்வையில சுத்திக் கொண்டு போட்டாரே...!"

"எந்தப் பண்டாரியள்டா?"

"அவர்தான் வாயைச்சுத்தி மீசையும் தாடியும் வைச்சிருந்தாரே?"

"அட தங்கக்காசடா... ஏன்டா கொடுத்தியள் முட்டாள் வானரங் களா?"

"நாம என்ன சும்மாவா கொடுத் தம்..... நம்ம எல்லாருக்கும் கொழுக்கட்டை தந்திட்டல்லே வாங் கிக்கொண்டு போனார் அவர்!

நான் தாங்கமுடியாத ஆதங்கத்திலும் ஆயாசத்திலும் தவித்துக்கொண்டி ருக்க இதை ஏதும் அறியாத அம்மா பிட்டுக்கொத்திக்கொண்டிருந்தாள் அடுப்பங்கரையில்.

மிக இறுக்கமாகக்கழிந்து கொண்டி ருந்த மௌனத்தை உடைத்து ஒரு ஞானிக்கேகூடிய அலட்சியத்துடனும் ஐயா சுத்தமாக கல்யாணியை ஆலாபனை பண்ணிவிட்டுப்பாடினார்.

"நிதி சால சுகமா....?"

- பொ. கருணாகரமூர்த்தி
6. 9. 1994



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# லஜ்ஜா நாவலும் தஸ்லிமா நஸ்ரினும்

-மு. புஸ்பராஜன்

சிறு வயதில் கடற்கரை மணலில் வீடு கட்டி விளையாடுதல் இளமைப் பருவத்தின் மகிழ்ச்சியான காலம். இம் மகிழ்ச்சியில் திளைத்த ஒரு பத்து வயதுப் பெண்ணிடம் அவளது பெற்றோர் கூறினர் 'வீட்டை விட்டு வெளியே போகாதே' என்று. ஆனால் அவளது இரு சகோதரர்கள் சுதந்திரமாக வெளியில் உலவித் திரிந்தனர். இது அப்பிஞ்சு மனதை துயர்படுத்தியது. அவள் அழுதாள். அழுது கொண்டே கூறினாள் "நான் வெளியே போக வேண்டும். நதிக் கரையில் விளையாட வேண்டும். நான் வீதிகளில் திரிய வேண்டும்." ஆயினும் அச்சுதந்திரம் அவளுக்கு மறுக்கப்பட்டது. அவள் தாய் "நீ ஒரு பெண் ஒரு பெண் பிள்ளை வீட்டை விட்டு வெளியே செல்ல உனக்கு அனுமதியில்லை. நீ எழுதலாம், வாசிக்கலாம், பள்ளி சென்று வரலாம் அது போதும்" என்றார். அப்போதும் அவள் மனம் கூறியது. 'அவர்கள் தவறு செய்கிறார்கள் இவைகள் எனக்கு போதுமானது அல்ல' என்று. 'லஜ்ஜா' என்ற நாவல் மூலம் சர்வ தேச அளவில் சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் தஸ்லிமா நஸ்ரின் தான் அந்தப்பெண்.

இவற்றைக் குறிப்பிடுவது பலர் இன்று கூறுவதைப்போல் தஸ்லிமாவின் புகழுக்கோ பெருமைக்கோ பெண்ணியல் வாதக் கருத்துக் களைக் கொண்டவர் என்பதற்கோ அல்ல. அவர் இளம் பருவத்தில் இருந்தே சமூகம் அங்கீகரித்த ஆண்களுக்கான சலுகைகளால் பாதிப்புற்றுக் கொதித்துக் கொண்டிருந்தார் என்பதை அழுத்துவதற்காகவே. இவை பற்றி பின்னர் பார்ப்போம்.

'லஜ்ஜா' நாவல்: அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதன் எதிர் விளைவாக பங்களா தேசில் வாழும் இந்தியர்கள் மத வெறி கொண்ட சில முஸ்லீம்களால் எவ்வாறு நடத்தப்பட்டார்கள் என்ற துயரத்தை கூறுகிறது. பங்களாதேஷை தமது தாயகமாகக் கருதி வாழ்ந்த சுதோமாய் குடும்பம் குறிப்பாக அவர் மகன் சுரஞ்சன் தொடர்ச்சியாக இந்துக்கள் மீது ஏற்படும் பாதிப்புக்கள், தங்கை மாயா சில முஸ்லிம்களால் கடத்திச் செல்லப்பட்டு கண்டு பிடிக்க முடியாமல் போனது, இவற்றிற்கு எதிராக எந்த எதிர்ப்பையும் காட்ட முடியாத நிலையை உருவாக்கிய இன அரசின் பாதுகாப்பு நீதி முறைகள். இவைகளினால் மனம் கசந்து பங்களாதேஷ் தமது தாயகம் என்ற உணர்வை இழந்து ஏனைய இந்துக்களைப் போல் இந்தியா செல்லத் தீர்மானிக்கின்றனர்.

நாவல் என்ற வகையில் ஒரு கலைப்படைப்பாக 'லஜ்ஜா' உருவாகி வரவில்லை என்பது தான் என் அபிப்பிராயம். பல பாத்திரங்கள் அதன்தன் வாழ்வு சார்ந்த யதார்த்தத் தளத்தில் இருந்து விலகி அவசரத்தில் அப்பிய உருவங்களாய் உருவாகி உள்ளன. அதனால் மணலாய் உதிர்ந்து போகின்றன. ஒரு கலை அனுபவமாகி மனதை விகாசிக்கவில்லை.

இந்நாவலில் முஸ்லிம் மத வெறியர்களால் நடாத்தப்பட்ட கோவில்கள் உடைப்புக்கள், கொள்ளையிடல்கள், தீயிடல்கள், கற்பழித்தல்கள் என்பனவும், அரச நிர்வாகப் பதவிகளில், பதவி உயர்வுகளில், படைப் பிரிவுகளில் எவ்வாறு இந்துக்கள் ஒதுக் கப்பட்டு வருகிறார்கள். குடிசன மதிப்பீடுகளில் இந்துக்களின் தொகை ஆண்டுக்கு ஆண்டு குறைந்து வருகிறது என்பவைகள் ஆவணங்களின் அடிப்படையில் முன் வைக்கப்படுகின்றன. இவை பாபர் மசூதித் தகர்ப்பின் பின்னர் ஏற்பட்டவை அல்ல. அதற்கு முன்பே காலத்திற்குக் காலம் இந்துக்கள் மீது இவை நிகழ்த் தப்பட்டுள்ளன. அந்த ஆவணங் கள் நமக்கு உணர்த்துகின்றன.

இன. மத. மொழி

'தனது கருத்துகளுக்காக சித்திரவதைக்குள்ளாவது, மௌனமாக இருக்கப் பணிப்பது, நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திப்பது உலக அளவில் நியதியாகி வருகின்றதா?'
-தஸ்லிமா



'லஜ்ஜா' நாவல் அரசியல் சாக்கடையில் இலாபம் தேடுபவர்களுக்காக எழுதப்படவில்லை. ஆனால், அரசியல்வாதிகள் தங்கள் நோக்கத்திற்காகப் பாவிக்கின்றனர். ஏகாதிபத்தியம் தனக்கெதிராக உருவாகி வரும் அகண்ட இஸ்லாமியக் கோட்பாட்டை எதிர்ப்பதற்குப் பாவிக்கிறது.
-மு. புஸ்பராஜன்

## ஒரு நூல்..



## சில பகிர்வுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிப்படையில் அமைந்த அரசு தம் இன, மத, மொழி சாராதவர்களை எவ்விதம் நடத்துவார்கள்? அரச பதவிகளில் எவ்விதம் ஒதுக்கப்படுவார்கள்? வாழும் நிலங்களில் இருந்து எவ்வாறு துரத்தியடிக்கப்படுவார்கள்? இவைகளின் மொத்த விளைவாக தமது தாயகம் தமக்கு எவ்வாறு அந்நியமாகிப் போகிறது என்பது இலங்கைத் தமிழருக்கு அனுபவமாகிப் போனதொன்று. "நாங்கள் காட்டுமிராண்டிகள் அல்ல. எமது பாராளுமன்ற, நீதி மன்ற முறைகளில் பெருமை கொள்கிறோம்." என்ற லண்டனிலுள்ள பங்களாதேஷ் உயர் ஸ்தானிகரதும், "தஸ்லிமா ஒரு முட்டாள் தனமான பெண். ஒன்றுமில்லாததை மிகவும் பெரிது படுத்தி உள்ளார்." என்ற டெல்கியிலுள்ள பங்களாதேஷ் உயர் ஸ்தானிகரது கூற்றையும் எமது அனுபவங்களின் அடிப்படையில் ஒதுக்கி விடவேண்டியதுதான். தமது நாட்டின் அபகீர்த்தியை மறைப்பதையே கடமையாகக் கொண்டவர்கள் அவர்கள்.

மனச்சாட்சியுள்ள படைப்பாளி என்ற அடிப் படையில் தஸ்லிமாவின் கோபம் நியாயமானது. அக்கோபம் முஸ்லிம் மத வெறியர்களிடம் மாத்திரம் அல்ல பாபர் மசூதியை இடித்த இந்து மத வெறியர்களிடமும் தான். அவர் அனுதாபம் பங்களா தேஷில் பாதிக்கப்பட்ட இந்துக்களிடம் மாத்திரமல்ல, அயோத்தியில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களிடமும் தான். ஆனந்த் பட்டவர்த்தனது « FATHER SON AND HOLY WAR » செய்திப் படமும் ஒரு கோணத்தில் பாபர் மசூதித் தகர்ப்பை மையம் கொண்டதுதான். அதில் அவர் கோபம் இந்து, முஸ்லிம் மத வாதிகளிடம் இருந்ததைப் போல் அனுதாபமும் பாதிக்கப்பட்ட இரு தரப்பினர்மீதும் கவிந்ததைக் காணலாம். நல்ல கலைஞனின், மனச்சாட்சியுள்ள கலைஞனின் அனுதாபம் துயரப்படுபவர்கள் பக்கமே சாய்ந்திருக்கும். அந்த மனச் சாட்சியுள்ள கலைஞன்தான் தன் நாட்டின் அபகீர்த்தியைக் கண்டு கோபப்படுபவனும் வெட்கப்படுபவனும். இந்தக் கோபமும், வெட்கமும் பலரிடம் வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும் மனதுள் புழுங்கியும் குமுறிக் கொண்டும் இருக்கும். இந்த உணர்வுதான் தஸ்லிமாவை 'லஜ்ஜா'வை எழுதத் தூண்டியது. நாவல் முன்னுரையில் மற்றையோருக்குத் தீங்கு விளைவிக்கும் இந்த அடிப்படை வாதத்திற்கு எதிராக, மத உணர்வுகளைத் தாண்டி ஒன்று திரள வேண்டுகோள் விடுக்கிறார். "நான் தனியாக இருந்தாலும் மௌனமாக இருக்க மாட்டேன்" என்கிறார்.

அடிப்படைவாதிகளுக்கும், இனவாதிகளுக்கும் எதிராகத் திரள அவர் வேண்டுகோள் விடுக்க இனவாதிகளும், அடிப்படைவாதிகளும் அவருக்கு எதிராகக் கிளர்ந்து டாக்கா வீதிகளில் ஆர்ப்பாட்டங்களில் இறங்கியுள்ளனர். தமது செயலுக்குச் சற்றும் வெட்கப்படாத அவர்கள் தஸ்லிமா மீது கூறிய குற்றச் சாட்டுக்கள்:

" தஸ்லிமா ஒழுக்கங் கெட்டவள்; மும்முறை திருமணம் செய்து கொண்டவள்; போதை வஸ்துப் பழக்கம் உள்ளவள்; ஆணினத்தை அடியோடு வெறுக்கிறவள்; 'குர்ரான் கருத்துக்கள் காலத்திற்கு ஒவ்வாதது, அது திருத்தி எழுதப்பட வேண்டும்' என்று கூறியதனால் (அதை அவர் மறுத்திருந்த போதிலும்) இஸ்லாத்தை இழிவுபடுத்தி விட்டாள்; இந்திய உளவுத் துறையின் கைக் கூலி; பா. ஜ. கட்சியின் கையாள்."

இவ்வாறான குற்றச்சாட்டுக்களின் இறுதி வடிவமாக தஸ்லிமாவைக் கொல்பவர்களுக்கு 50 000 - ராக்காஸ் (TAKAS) பரிசாக அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தக் குற்றச் சாட்டுகளுக்கும் 'லஜ்ஜா' நாவலுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. தஸ்லிமா பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறிய, எழுதிய கருத்துக்களின் அடிப்படையிலேயே இவை எழுந்துள்ளன. ஏற்கனவே உள்ளே கனன்று கொண்டிருந்த ஒரு வெறுப்பு, இந்த நாவல் மூலம் பூகம்பமாகியிருக்கிறது என்றுதான் கருதவேண்டி உள்ளது. தமது அநீதிகள், கொடூரங்கள் சார்ந்த செயற்பாடுகள் எழுத்திலோ, திரைப் படத்திலோ, நாடகத்திலோ சமூகத்தின் முன் எதிரொலிக்கும்போது அவற்றைப் பரிசீலித்துத் தாங்கிக் கொள்ளும் பக்குவம் அவர்களிடம் இருக்கவில்லை. தமது செயற்பாடுகளை வெளிச்சப்படுத்துபவர்களை துன் புறுத்துவதிலும், கொலை செய்வதிலும், நாட்டை விட்டுத் துரத்துவதிலும் அவர்களது கோபம் முடிந்திருக்கிறது. உலக நாட்டுப் படைப்பாளிகள் சிலருக்கு நேர்ந்த கதி இவற்றைத்தான் நம்முன் திறந்து வைத்துள்ளது. அது ஏற்படுத்தும் உணர்வின் வெளிப்பாட்டை, 'நாங்கள் காட்டுமிராண்டிகளல்ல' என்ற லண்டன் ஸ்தானிகரது கூற்று துல்லியமாக்கு கின்றது.

"மதத்தைப் பின்பற்றுவதால் மனித குலத்திற்கு நன்மை உண்டாகிறது என்று என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. பெண்கள் தங்கள் கைகளை வீசிக் கொண்டு உலகின் எந்தப் பகுதிக்கும் சென்று வரவேண்டும். மசூதி, கோவில், சர்ச், புத்தவிகாரம், ஆகியன மானிட நலத்தின் குறியீடுகளல்ல. ஆனாலும் அவை உலகில் இருப்பதால் அவற்றில் ஆட்சி செலுத்த பெண்களுக்கும் உரிமை வேண்டும். இப்போது ஆண்கள் மட்டும் இதில் ஏகபோக உரிமை கொண்டுள்ளார்கள்."

"பெண்களின் இயல்பான வளர்ச்சிக்கு மதம்தான் இப்போது தடையாகவுள்ளது. மதம் மனிதனைப் பின்னுக்குத் தள்ளுகிறது. விஞ்ஞானத்திற்கும், முன்னேற்றத்திற்கும் எதிராகப் பிரச்சாரம் செய்கிறது. மதம் மனிதர்களை இனம் தெரியாத பயத்தில் ஆழ்த்துகிறது. மதம் மனிதனைச் சிந்திக்க அனுமதிப்பதில்லை. மதம் பெண்களை ஆண்களின் அடிமையாக்குகிறது."

தஸ்லிமாவின் இந்தக் கருத்துக்களை சுயமாகச் சிந்தித்து முடிவெடுக்கும் எவர்தான் மறுக்க முடியும்?

**நல்ல கலைஞனின், மனச்சாட்சியுள்ள கலைஞனின் அனுதாபம் துயரப்படுபவர்கள் பக்கமே சாய்ந்திருக்கும். அந்த மனச் சாட்சியுள்ள கலைஞன்தான் தன் நாட்டின் அபகீர்த்தியைக் கண்டு கோபப்படுபவனும் வெட்கப்படுபவனும்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"மக்கள் என்னை ஆணினத்தை வெறுப்பவள் எனக் கருதுகிறார்கள். நான் மீண்டும் சொல்கிறேன். நான் அப்படி அல்ல. ஆண்கள் உருவாக்கிய இந்தச் சமூக அமைப்பை எதிர்க்கிறேன். சமூகம் சொல்கிறது, பெண்கள் ஆண்களின் அடிமை என்று. ஆண்கள் தாங்களே உயர்ந்தவர்கள் என்றும்; பெண்கள் தாழ்ந்தவர்கள் என்றும் நம்புகிறார்கள்."

இக் கருத்துக்கள் தஸ்லிமாவின் வாழ்வு சார்ந்து சமூகம் சார்ந்து உருவாகியவை. ஆணாதிக்க மனோபாவங்களுக்கு எதிரான கருத்துக்கள் சிறு வயதில் அவரிடம் வேர் விட்டிருந்தது என்பதை ஆரம்பத்தில் குறிப்பிட்ட அவரது பத்து வயதுச் சம்பவம் உறுதிப்படுத்தும். அது பின்னர் கல்லூரி வாழ்க்கை, வைத்திய அனுபவங்கள் மூலம் மேலும் ஆழமாகியது.

இன்று பலர் சொல்ல விரும்பியும், சமூக மதிப்பீடுகள் சார்ந்து சொல்ல முடியாமல் போனவைகளைத்தான் தஸ்லிமாவும் அவர் போன்ற வேறு சிலரும் துணிந்து சொல்லுகிறார்கள். "என்னைப் போன்ற ஆயிரமாயிரம் அல்ஜீரியப் பெண்கள் பர்தாவைக் கிழித்தெறியத் துடிக்கிறார்கள். நான் அவர்களுக்காகப் போராடுகின்றேன். இந்த முல்லாக்களிடம் நான் தோற்றுவிட்டால் அவர்கள் அத்தனை பேருடைய நம்பிக்கையும் கருகிவிடும்", என்கிறார் பார்சலோனா ஒலிம்பிக் ஓட்டப் பந்தயத்தில் தங்கப்பதக்கம் பெற்ற அல்ஜீரியப் பெண் ஹசிபா. "பெண்கள் சம உரிமையும், சம நீதியும் பெறக் கடுமையாக உழைப்போம். பெண்களைப் பாதுகாக்கும் வகையில் இஸ்லாமியச் சட்டங்களை ஒழுங்கு முறைப்படுத்துவோம்". என்கிறார் பாலஸ்தீன அமைச்சரவையின் பெண் உறுப்பினரான இன்டிசார் அல்வாசிஸ். இவர்களது கூற்றுக்கள் மௌனமாய் தம்முள் குமையும் ஆயிரமாயிரம் பெண்களின் குமுறல்களைத்தான் எதிரொலிக்கிறது.

தஸ்லிமா மூன்று முறை திருமணம் செய்தவர் என்று கூறுபவர்கள், சல்மான் ருஷ்டியின் 'SATANIC VERSES' விவகாரத்தின் போது, ருஷ்டி இரு முறை திருமணம் செய்தவர் என்று கூறியதில்லை. இது ஆணாதிக்க மனோபாவம் அன்றி வேறு என்ன?

தஸ்லிமாவின் எல்லாக் கருத்துக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடியவை அல்ல. "திருமணத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் நான் ஒருவனைச் சந்தித்து அவனோடு வாழ விரும்பினால் அவ்வாறு செய்வேன்", "எனது சுதந்திரத்தை அங்கீகரிப்பவராக இருக்க வேண்டும்" என்ற கூற்றுக்ககளை பரிசீலிக்கலாம். இங்கு அவர் குறிப்பிடும் சுதந்திரத்தின் எல்லை எது? மனைவியின் எல்லா விருப்பு- வெறுப்புக்கும் கணவனும்; கணவனின் எல்லா விருப்பு- வெறுப்புக்கும் மனைவியும் விட்டு கொடுத்தல் சாத்தியமானதா? இந்த பரஸ்பர விட்டுக் கொடுப்புகளை எதன் அடிப்படையில் தீர்மானிப்பது? சமூகத்தின் நியாயமான மதிப்பீடுகள் சார்ந்தும், குடும்ப வாழ்வின் நன்மைகள் கருதியுமே இவ்விட்டுக் கொடுப்புகள் அமைய முடியும். இவற்றை கணவனும், மனைவியும் சேர்ந்தே தீர்மானிக்க வேண்டும். அல்லாவிடில் அது வாழ்க்கையும் அல்ல, குடும்பமும் அல்ல.

"பெண்ணை ஆண் கற்பழித்தால் அதற்குரிய தீர்வு பெண் ஆணைக் கற்பழிப்பதுதான்" என்பதும்; தன்னைத் திருமணம் புரிய வேண்டுகோள் விடுத்த முல்லாவிற்கு அவர் விதித்த 25 நிபந்தனைகளுள் சிலவற்றையும் கவனிக்கலாம். « 1.) மண விழா சடங்கின் முன் அவர் எயிட்ஸ் போன்ற நோய்கள் இல்லை என்ற மருத்துவ சான்றிதழைத் தரவேண்டும். 2.) திருமணத்தின் முன் அவரது அசையும், அசையாச் சொத்துக்கள் அனைத்தையும் புது மனைவியின் பெயருக்கு மாற்றிவிட வேண்டும். 3.) திருமணத்தின் பின் பர்தா அணிந்து டாக்காவில் அவர் வசிக்க வேண்டும். 4.) மௌலானா தஸ்லிமாவின் பாதத்தில்தான் தலை வைத்துத் தூங்க வேண்டும். 5.) சமைத்தல், துணிகளைத் துவைத்தல், வீடு- பாத்திரங்களைச் சுத்தப்படுத்தல் மற்றும் மனைவிக்குத் தேவைப்படும் பணிவிடைகள் (Cleaning of sanitary, Napkins, Massaging etc) அனைத்தையும் செய்ய வேண்டும். 6.) மனைவிக்கு வேறு இரண்டு ஆண்களை வைத்துக் கொள்ளவும், அவர்களுடன் உடலுறவு கொள்ளவும் உரிமையுண்டு. 7.) எதிர் காலத்தில் ஆண்கள் பிள்ளை பெற முடியும் என்று விஞ்ஞான வளர்ச்சியில் நிரூபிக்கப்பட்டால் அந்த ஆய்வுக்கு உட்படவும், அதன்படி பிள்ளை பெற்றுக் கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும். 8.) தஸ்லிமா எப்போது கூப்பிட்டாலும் அழைத்த நொடியில் உடனே வருவதற்கு எந்த நிலையிலும் ஆயத்தமாக இருக்க வேண்டும். 9.) இருவரில் விவாக ரத்துச் செய்யும் உரிமை மனைவிக்கு (தஸ்லிமாவுக்கு) மட்டுமே உண்டு. »

ஆண்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளும் பெண்களுக்கும் என்ற அடிப்படையில் இந் நிபந்தனைகள் எழுந்ததாயினும் இவற்றில் சில நடைமுறைச் சாத்தியம் அற்றவை. நடைமுறைச் சாத்தியமற்ற எந்தத் தீர்மானங்களும் வலுவும், மதிப்பும் இழந்து போய்விடும். அதனால்தான் பெண்கள் உரிமைகள் பேசும் பலர் தஸ்லிமாவின் கருத்துக்களினால் ஆடிப்போயுள்ளார்கள்.

தஸ்லிமாவின் பிரச்சினையை அரசியல்வாதிகளும் தங்கள் தங்கள் நோக்கத்திற்காகப் பாவிக்கின்றனர். பங்களாதேஷ் எதிர்க் கட்சியான அவாமி லீக், "அரசு தனது தோல்விகளிலிருந்து மக்கள் கவனத்தைத் திருப்புவதற்காக தஸ்லிமாவைப் பயன்படுத்துகிறது" எனக் குற்றம் சாட்டியுள்ளது. இந்தியாவில் பா. ஜ. கட்சியினர், "லஜ்ஜா -வை வாசியுங்கள். எப்படி இந்துக்கள் பங்களாதேஷில் கொடுமைப் படுத்தப்பட்டார்கள் என்பதை வாசியுங்கள்" என்று கூறுகிறது. அது மாத்திரமல்ல, லஜ்ஜா -வை மலிவுப் பதிப்பாக வெளியிட்டு, கல்கத்தாவின் மூலை முடக்கெல்லாம் விற்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. உலக அளவில் ஏகாதிபத்தியம் தனக்கு எதிராக உருவாகி வரும் அகண்ட இஸ்லாமியக் கோட்பாட்டை எதிர்ப்பதற்கு தஸ்லிமா

**ஆண்கள் உருவாக்கிய இந்தச் சமூக அமைப்பை எதிர்க்கிறேன். சமூகம் சொல்கிறது, பெண்கள் ஆண்களின் அடிமை என்று. ஆண்கள் தாங்களே உயர்ந்தவர்கள் என்றும் பெண்கள் தாழ்ந்தவர்கள் என்றும் நம்புகிறார்கள்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வின் பிரச்சினையைப் பாவிக்கிறது. தஸ்லிமாவின் பாதுகாப்புக்காக அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும் பங்களாதேஷுக்கு அளிக்க இருந்த 2.2 மில்லியன் யு. எஸ். டொலரைப் பேரம் பேசுகின்றன.

'லஜ்ஜா' நாவல் அரசியல் சாக்கடையில் இலாபம் தேடுபவர்களுக்காக எழுதப்படவில்லை தான். தன் நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் நியாயமானது என நம்பிய கருத்துகளுக்காக அல்லது ஒரு படைப்பாளி என்ற வகையில் தன்னைச் சூழ்ந்துள்ள சமூகப் பிரச்சனைகளைப் பதிவு செய்தவர் என்ற வகையில், சமூகம் அவருக்கு அளித்ததென்ன? அவரது தலைக்கு விலை. இந்த அச்சுறுத்தலால் தான் அவரது தலை மறைவு வாழ்க்கை. ஒவ்வாத கருத்துக்களை நியாமான கருத்துக்கள் மூலம் எதிர் கொள்ளவேண்டுமே தவிர இப்படி உயிருக்கு விலை வைத்தல்ல. தன் தலை மறைவு வாழ்க்கை பற்றிக் கூறுகையில், "பகல் வெளிச்சத்தை இரு மாதங்களாக காண முடியாமல், இரவுக்கும் - பகலுக்குமான வேறுபாட்டை அறிய முடியாமல் இருந்தேன். ஒழுங்கான உணவில்லை, தூக்கமில்லை".

'தனது கருத்துகளுக்காக சித்திரவதைக்கு உள்ளாவது, மௌனமாக இருக்கப் பணிப்பது, நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திப்பது உலக அளவில் நியதியாகி வருகின்றதா?' என இடி முழக்கத்தைப் போல் எதிரொலித்த தஸ்லிமாவிடம், "தலை மறைவு வாழ்வின் போது நீங்கள் இழந்தது எது?" எனக் கேட்கப்பட்ட போது, "நான் எழுதாமல் இருந்தது தான்" எனப் பதில் வந்தது. இத் துயரத்தை எந்தவொரு நாட்டு அடிப்படைவாதிகளாலும், இன- மத வெறியர்களாலும் புரிந்து கொள்ள முடியாது.

தஸ்லிமா இன்று சுவீடனில் அடைக்கலமாகி இருக்கலாம். ஆனால் இப் பிரச்சனை தஸ்லிமாவுடன் மட்டும் நின்று விடப்போவதில்லை. ஏனென்றால் இப் பிரச்சனை தஸ்லிமாவிலிருந்துதான் ஆரம்பமாக வில்லையே. இந்த நியாயத்திற்கும்- அநியாயத் திற்குமான போராட்டத்தில் சக்தி வாய்ந்ததாகத் தோன்றுவது எது? நியாயங்கள் தலை குனிய, அநியாயங்கள் ஆர்ப்பரித்துக் கொண்டு இரவிலும்- பகலிலும், வீடுகளிலும் வீதிகளிலும் வலிமையுடன் வலம் வருகின்றனவே! இந்நிலையில் ஒரு கேள்வி: எதிர் கால உலகை எச்சக்தி ஆளப்போகிறது?

ꟾꟾ

உதவிய இதழ்கள்:
காலச்சுவடு ஐப்பசி 1994; நாழிகை மார்கழி 1994; புதிய குரல் ஆனி, ஆவணி 1994; புதிய கலாச்சாரம் ஆனி, ஆடி 1994; SUNDAY 26. 06.- 02. 07. 94, 21. 08.- 27. 08. 94; TIME 22. 08. 94; SAVVY november 93; « LAJJA » penguin translation -India.
நன்றி:
தேவையான தகவல்களுக்குரிய தமிழ்நாட்டு இதழ்களையும், லஜ்ஜா நாவலையும் தந்துதவிய நண்பர் ஜமுனா ராஜேந்திரனுக்கு.

## மனித நேயத்தை வலியுறுத்தும் கவிஞன் எட்வேட் ஜே. மௌனிக் ஒரு கேள்விக்கு அளித்த பதில்....

"நீதிக்காக போராட வேண்டும் என்பதை மிக இளம் வயதிலேயே உணர்ந்து கொண்டேன். 'இறப்புக்குப் பிறகு நீதி நிலவும் ஒரு முடி ஆட்சியில் நாம் வாழ்வோம்' என்று விவிலியம் கூறுகிறது. அப்போது இதன் பொருள் எனக்குப் புரியவில்லை; இன்றும் கூட எனக்குத் தெரியவில்லை. நான் பொறுமை இல்லாதவன்; என்னால் காத்திருக்க முடியாது. 'மரணம் எப்போதுமே விரைவாக வந்துவிடுகிறது' என்று நான் எனக்குள் கூறிக்கொள்வேன். வரலாறு நம் முகத்தில் எப்போதுமே ஊதிக்கொண்டு இருக்கிறது. தென் ஆபிரிக்கா இன ஒதுக்கல், இரண்டாம் உலகப் போரின் மரண முகங்கள், ஹிரோஷிமா, வியட்னாம், பியா..ப்ரா, லெபனான், மிக அண்மையில் சரயேவோ, சோமாலியா, அல்ஜீரியா போன்றவை நம் முகத்தில் இடித்துக் காட்டும் வரலாற்றுக் கொடுமைகள்."

□ நன்றி: யுனெஸ்கோ கூரியர், தென் மொழிகள் புத்தக நிறுவனம், 18, மேயர் இராமநாதன் சாலை, சென்னை 600 031, இந்தியா.

□□ தமிழ் உட்பட 36 உலக மொழிகளில் அமைதியாக அறிவுப் புரட்சி ஏற்படுத்தும் இவ்விதழ், "இன- பாலின- மொழி- சமய வேறுபாடற்ற சட்ட நியதி, மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் ஆகியன மதிக்கப்படல் வேண்டும்" என்ற யுனெஸ்கோவின் குறிக்கோளை இலக்கியமாக்குகின்றது.

□□□ பிரான்சில் பெற விரும்புவோர்:- தனிப்பட்டவருக்கான ஆண்டுச் சந்தா 211 பிராங்குகள்; மாணவர்களுக்கான ஆண்டுச் சந்தா 132 பிராங்குகள். காசோலையில் பணம் பெறுபவருக்கான இடத்தில் UNESCO எனக் குறிப்பிட்டு உங்களது பெயர், முகவரியினை தெளிவாக எழுதித் தொடர்பு கொள்க: à l'attention de Solange Belin, Courrier de l'UNESCO, 31, Rue Fraçois Bonvin, 75015 PARIS.




( 'கூட்டம் 15' அமெரிக்க ஓவியர் டயானா ஓங்க் தீட்டிய நீர் வண்ண ஓவியம் 1994 மே இதழின் அட்டை )

-தகவல்: குணா கலைதாஸன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கவிதைக் கலை

கவிதை எழுவதற்குக் காரணங்களாக இரண்டைக் குறிப்பிடுவார் அரிஸ்தோத்தில்:

1. ஒன்றைப்பார்த்துப் பாவனைசெய்யும் இயல்பூகம்

சந்நதங்கொண்டு ஆடகிறவன், சாதாரணமாகத் தான் நடந்துகொள்ளும் விதத்திலிருந்து வேறுவிதமாக– வேறு ஆளாக– நடந்து கொள்ளுகிறான். அந்தநேரத்தில், அவனுடைய பேச்சு வித்தியாசமாகிவிடுகிறது. புதிய–'சாமி'க்கேயுரிய சொற்பிரயோகங்கள், உச்சத்தொனி, மெய்பாடு– எல்லாம் நம்மைப் பிரமிக்க வைக்கின்றன. அவனுடைய பேச்சு கவிதையாகின்றது. எனவே கவிதையை 'Heightened language' என்பர்.

2. எங்கும்– எதிலும்– ஓர் இயைபை– ஒரு லயத்தைக் காணும் இயல்பூகம்

காற்றடிக்கிறது. மின்னல் வெட்டுகிறது. இடி முழங்குகிறது. 'சோ' வென மழை கொட்டுகிறது. பாரதி பார்க்கிறான். அஞ்சு பூதமும் சேர்ந்து ஆடுகிற கூத்தாக, மழைக்காட்சி அவன் கற்பனையில் விரிகிறது:

*« திக்குகள் எட்டும் சிதறி - தக்கத்*
*தீம் தரிகிட தீம் தரிகிட தீம் தரிகிட தீம் தரிகிட*
*தக்கத் ததிங்கிட தித்தோம் - அண்டம்*
*சாயுது சாயுது சாயுது*
*வெட்டி யடிக்குது மின்னல் - கடல்*
*வீரத் திரை கொண்டு விண்ணையிடிக்குது*
*கொட்டி இடிக்குது மேகம் - கூ*
*கூவென்று விண்ணைக் குடையுது காற்று!»*

ஆக, பாரதி இடி, மின்னல், காற்று, மழை, இவற்றிடையே ஒரு லயத்தைக் கண்டுவிடுகிறான்.

கவிதைக்கும், சமயத்திற்கும், மந்திரத்திற்கும் மூலம் ஒன்றுதான். எமக்குக் கிடைக்கும் கவிதைகளுள் மிகப்பழையது சிருஷ்டி பற்றிய– காற்று, மழை, இடி, மின்னல், சூரியன் பற்றிய– புகழ்ப்பாக்களாக உள்ளன. பிரபஞ்சமே ஓர் ஒழுங்கில் இயங்குவதை அவதானித்த ஆதி மனிதன், மந்திர உச்சாடனத்தால், பிரபஞ்ச லயத்தை– இயற்கையை– கட்டுப்படுத்தலாம் என நம்பினான். அவன் செபித்த மந்திரங்களே முதற் கவிதைகளாகும்.

கவிதையைக் குறிக்கும் கிரேக்கச் சொல்லுக்கு செய்வது என்று பொருள். அதாவது கவிஞர்கள் செய்பவர்கள்– படைப்பவர்கள். எதைப் படைப்பவர்கள்? சொல்லோவியங்களை– படிமங்களை.

ஆதி மனிதன் குழுவாக வேட்டையாடப்போவான். அவனிடம் பண்பட்ட ஆயுதங்கள் இருக்கவில்லை. வேட்டையில் ஆபத்து அதிகம். காயம் அடைவதும், அங்கவீனமாவதும் சாதாரணம். அங்கவீனர்கள் வேட்டைக்குப் போகமுடியாது, தங்க நேரிட்டது. முன்போல், ஏதும் செய்ய முடியாத நிலையில் இவர்கள்– தமக்கு ஏற்கனவே பரிட்சியமான சம்பவங்களை–சொல்லால் செய்து காட்டினர். இதுவே கவிதையின் தொடக்கம் என்பது இன்னோர் ஊகம்.

எது எப்படியிருந்தாலும், ஆதிக்கவிதை மந்திரத்தோடு தொடர்புபட்டிருந்தது என்பதை மறுப்பதற்கில்லை. மந்த்ரம் என்ற ஸம்கிருதச் சொல்லுக்கே 'நினைப்பவருக்கு ஆற்றல் தருவது' என்பதே பொருள். மந்திரம் மிகச்சுருக்கமானது; செறிவானது; ஓசையால் கேட்போனுடைய உணர்வுகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. இதே பண்பு கவிதைக்கும் உண்டு.

« *மந்திரம் போல் வேணுமடா வார்த்தை* » என்று பாரதி ஆசைப்படுவதையும் ஒருவாறு புரிந்துகொள்ள முடியும்.

□ தொகுப்பு - *குணா. கலைதாஸ்*

–சோ. பத்மநாதன் ( 'கவிதைக் கலை' என்னும் தொடரிலிருந்து... )



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறப்புச்
சிறுகதை



# வெறி நகரம்

–வென் யுஹோறாங்–

சிறப்புச்
சிறுகதை



நவீன சீன எழுத்தாளர் வென் யுஹோறாங் (Wen yuhang) எழுதியுள்ள இச்சிறுகதையின் ஆங்கில மொழியாக்கம் The Lost Boat Avant - garde fiction from China (Edited by Henry Y.H.Zhao of John Cayley, Wellsweep Press, London: 1944) என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. Index on Censorship, N° 7/2 1994 இதழில் ஜான் கிட்டிங்ஸின் குறிப்புடன் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இச் சிறுகதை, மேற்காணும் சிறுகதைத் தொகுப்பு உலகப் புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளரும் பெண்ணியச் சிந்தனையாளருமான டோரிஸ் லெஸ்ஸிங்கால் (Doris Lessing) மிகவும் பாராட்டப்பட்டுள்ளது. Avant - garde fiction from China என்று இத்தொகுப்பின் தலைப்பு இருந்தாலும், அச் சிறுகதைகளை மேற்கு நாட்டிலக்கியங்களில் காணப்படுவன போன்ற பரிசோதனை இலக்கிய உத்திகளாகவோ அல்லது படைப்புக்களாகவோ காணக்கூடாது என்றும் சமூக யதார்த்தை சித்தாந்தத் திரைபோட்டு மூடாமல், நேர்மையுடன் சித்தரிக்க முயல்கின்றவையாகவே, யதார்த்தவாத இலக்கியமாகவே பார்க்க வேண்டும் என்றும், இவை சித்தாந்தத் தடைகளையும், நிர்ப்பந்தங்களையும் உடைத்துக்கொண்டு வெளியே வருகின்றன என்ற அளவிலேயே Avant-garde என்ற பதத்தை நாம் அவற்றுக்குப் பொருத்தலாம் என்றும் லெஸ்ஸிங் கூறுகிறார். இச்சிறுகதை சீனாவின் 'பண்பாட்டுப்புரட்சி' அனுபவத்தின் அடிப்படையில் எழுதப்பட்டிருக்கக்கூடும். ஆனால் இதில் பயன்படுத்தப்படும் பல்வேறு படிமங்களும் குறியீடுகளும் ஒன்றோடொன்று இணைந்து ஒரு உலகு தழுவிய தன்மையைப் பெற்று உலகின் எந்தவொரு பகுதியிலும் நிகழக்கூடிய வெறித்தனமான அரசியல், அரசியல் காட்டுமிராண்டித்தனம் பற்றிய ஒரு உருவகமாக நம் மனத்தில் பதிந்து விடுகின்றன. இச்சிறுகதை இங்கு தமிழாக்கம் செய்து தரப்படுகிறது. ஜான் கிட்டிங்ஸ் உலகப் புகழ்பெற்ற பிரிட்டிஷ் பத்திரிகையாளர் சேகுவேரா, பிடல் காஸ்ட்ரோ, ழான்பவுல் சாத்தர் போன்ற 20–ஆம் நூற்றாண்டின் மாமனிதர்கள் பலரை அவரே பேட்டி கண்டிருக்கிறார். சீனப் பண்பாட்டுப் புரட்சியின் குறிக்கோள்கள் பற்றி அது தொடங்கப்பட்டவுடனேயே வெளியுலகிற்குத் தெரிவித்த அவர், அப்புரட்சியில் உள்ள ஆக்கபூர்வமான கூறுகளுக்கு அழுத்தம் கொடுத்திருந்தார். பொதுவான இடதுசாரி மனப்பான்மையுள்ளவர் கிட்டிங்ஸ். அவர் இச் சிறுகதை பற்றி *'புனைகதைகளின் பின்னால் உள்ள உண்மை'* என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரை Index on Censor Ship N° 1, 2/94 இதழில் பிரசுரமாகியுள்ளது. அக் கட்டுரையும் சிறுகதையுடன் சேர்த்து தமிழாக்கம் செய்து தரப்பட்டிருக்கின்றது.

*(தமிழாக்கம் : வ.கீதா, எஸ். வி. இராஜதுரை)*

ஒரு மரத்திலிருந்து ஒரு நாய் தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தது. அதன் வயிறு பெரிய குத்துக் காயத்தால் பிளந்திருந்தது. இரண்டு இளைஞர்கள் அதன் வயிற்றிலிருந்து பிதுங்கித் தள்ளிக்கொண்டிருக்கும் வெதுவெதுப்பான குடல்களையும் ஈரல் குலைகளையும் உருவிக்கொண்டிருந்தனர். ஒருவன் ரத்தம் சொட்டும் கத்தியை இறுகப் பற்றியிருந்தான். மற்றொருவனின் கைகளில் ரத்தம் உறைந்திருந்தது. அவர்கள் மிகவும் மும்மரமாக அந்த வேலையைச்செய்து கொண்டிருந்தனர். அது மிகவும் கோரமான காட்சி, வழிப் போக்கர்களுக்கு அதைக் காணச் சகிக்கமுடியவில்லை.

கடந்தசில ஆண்டுகளில் அவர்கள் நானூறுக்கும் மேற்பட்ட நாய்களைக் கொன்றிருக்க வேண்டும். அவர்களது தொழில் நுணுக்கம் நாளுக்குநாள் நுட்பமடைந்து வந்தது. ஒவ்வொரு முறையும் அவர்கள் ஒரு நாயைக் கொல்லும்போது அது அவர்களது மனத்திற்கு இதமாக இருந்தது. அதில் அவர்களுக்கு ஒரு அலாதியான இன்பம். ஒரு உயிருள்ள நாய் அவர்கள் கண்முன்னே தாவிக்குதித்து விளையாடுவதைக் காணும்போது அவர்கள் தங்கள் கண்களையே நம்பாமல் அதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஒரு நாய் எப்படி அந்தமாதிரி மகிழ்ச்சியாக இருக்கலாம்? அவர்கள் கண் எதிரே தலையை அசைத்து வாலை ஆட்ட அதற்கு என்ன தைரியம்? அவர்களது விரல்கள் பரபரக்கும் ஏதோ அந்த நாயை அவர்கள் ஏற்கனவே அறுத்துப் போட்டு அதை அடக்கி விட்டாற்போல், ஏற்கனவே அது தன் சக்தியை இழந்து அதன் பச்சை ரத்தம் சொட்டச் சொட்ட உயிருக்குப் போராடுவதுபோல் அவர்களால் துடிதுடிக்கும் வெதுவெதுப்பான உள்ளவயங்களையும் குடல்களையும் காணமுடிவதுபோல்: தட்டுகள் நிறைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நன்கு வேகவைக்கப்பட்ட நாய்க்கறியைப் பார்க்க முடிவதுபோல்.

அவர்கள் ஒரு தாய்மார்கள் இணை பிரியாதவர்கள் ஒருவருக்கொருவர் முழுமையாக அர்பணித்துக் கொள்பவர்கள். எனக்குத் சரியாகத் தெரியவில்லை. ஆனால் ஏதோ ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில்தான் அவர்கள் நாய் கொலைத் தொழிலைத் தொடங்கியிருக்க வேண்டும். அவர்கள் ஊரின் சந்து பொந்துகளில் அலைந்து நாய்களை வேட்டையாடுவர், கொரிய உணவக உரிமையாளர்கள் ஒவ்வொருவரும் தமக்கு இரண்டு நாய்களை வேட்டையாடிக் கொண்டு வரும்படி அவர்களிடம் கூறுவர். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கூலியோ மிகவும் குறைவுதான். ஒரு தட்டு நிறைய நாய் ரோஸ்ட்டும் சாராயமும்தான். அவர்களோ மொடாக்குடியர்கள், அண்டா அண்டாவாகக் குடித்துத் தள்ளுப்வர்கள். அதிகம் சாப்பிடமாட்டார்கள். ஆனால் குடிப்பதில் அளவே இருக்காது. முகம் சிவந்து தலை கனத்து, நெற்றியிலிருந்து வியர்வை சாப்பாட்டு மேசையின் மீது விழும்வரைக் குடித்துக் கொண்டே இருப்பார்கள்.

அவர்களுக்கு கருநீல உதடுகள். வாயோரங்கள் தடித்திருக்கும். இவருக்கு வாய்நிறைய பெரிய, மஞ்சளேறிய, ஆரோக்கியமான பற்கள். மாட்டிறைச்சி மென்று தின்னக் கடினமானதாக இருந்தால் என்ன? அவர்களது கூரிய பற்கள் அதனை வாயில்போட்டு சுழற்றி அரைத்து முன்பக்கமாகவும் பின்பக்கமாகவும் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் மாற்றி மாற்றி குதப்பி அசுர வேகத்தில் விழுங்கித் தள்ளி விடுவார்கள். குடிக்கத் தொடங்கி விட்டால் நள்ளிரவு கடந்த பிறகும் குடித்துக் கொண்டே இருப்பார்கள். கொரிய உணவக உரிமையாளர் ஒருவருக்குக் கூட அவர்களை வெளியே போகச் சொல்ல தைரியமிருக்காது. அவர்கள் அப்படிக் குடித்தாலும் கூட அவர்களுக்குப் போதையேறி யாரும் பார்த்ததில்லை. அவர்கள் யாரிடமும் பேசுவதில்லை. ஆனால் அவ்வப்போது உணவக உரிமையாளர்களைப் பார்த்துக் காட்டுத்தனமாகக் கத்துவார்கள். தடிப்பான மஞ்சள் நிற விரல்களை சொடுக்கியவாறு. "இந்தாப்பா திங்கிறதுக்கு இன்னம் கொஞ்சம் கொண்டா". அதன் பிறகு வேறு யாருக்கும் புரியாத விஷயங்களை இருவருமாக பேசிக் கொள்வார்கள். அவர்களுக்கே உரிய அருவருக்கத்தக்க வகையில் அட்டகாசமாகச் சிரிப்பார்கள்.

அந்தச் சகோதரர்கள் வருவதைக் கண்டவுடனேயே அவர்களிடமிருந்து வெளிப்படும் கொலைவெறியை நாய்கள் எப்படியோ மோப்பம் பிடித்து விடும். மின்னல் வேகத்தில் ஓட்டம் பிடித்து எவ்வளவு தூரம் செல்ல முடியுமோ அவ்வளவு தூரம் சென்று விடும், தாங்கள் அங்கிருந்த சுவடு எதனையும் விட்டுச் செல்லாமல். மாலை வேளைகளில் அச் சகோதரர்கள் நாய்கள் வளர்க்கப்படும் வீடுகளை கடந்து செல்லும் போது அவை பீதி அடைந்து ஓலமிடத் தொடங்கும் - மறுநாள்வரை- இனி உயிரோடிருக்கப் போவதில்லை என்பதை உணர்ந்தாற்போல். ஆனால் சகோதரர்களோ ஒருவரையொருவர் பார்த்து வெடிச் சிரிப்புச் சிரிப்பர் - தங்களது புகழை நினைத்துப் பூரிப்படைந்து. அவர்கள் ஒவ்வொருவரது இடுப்பிலும் பளபளக்கும் கத்தி எப்போதும் செருகி வைக்கப்பட்டிருக்கும். எனவே போலிசார் கூட அவர்கள் விஷயத்தில் தலையிடத் துணிவதில்லை. சகோதரர்கள் இருவருக்கும் நாய்க்கொலை செய்யும் தொழிலுக்கான அரசாங்க உரிமம் வழங்கப்பட்டிருந்தது.

அவர்கள் பெரிய மோட்டார் சைக்கிள்களில் தலைக் கவசமணிந்து, உச்சிமுதல் உள்ளங்கால் வரை தோலால் செய்த ஆடைகளை அணிந்து பயணம் செய்வர். வீதியில் நம்மைக் கடந்து வேகமாகச் செல்கையில் தமது இடிச்சிரிப்பை அள்ளி வீசுவர்.

சகோதரர்கள் கடைத்தெருவுக்கு வருவதைக் காணும்போதெல்லாம் கடைக்காரர்கள் பரபரப்படைந்து விடுவர். சகோதரர்களை வரவேற்கவும் தங்களிடமுள்ள பொருள்களின் சாம்பிள்களை அவர்களுக்குக் கொடுக்கவும் விழுந்தடித்துக் கொண்டு ஓடுவர்.

நாய் ரத்தத்தைப் பார்க்கும் வெறி சகோதரர்களின் மனத்தை ஆட்கொண்டு விட்டால் பின்னர் அவர்களுக்குத் தூக்கம் வராது. அவர்கள் சிந்தனையில் குடிகொண்டிருந்ததெல்லாம் ஒரு விஷயம்தான். கொலை, மேலும் கொலை. கொல்வதற்கு நாய்கள் கிடைக்காவிட்டால் அவர்கள் பூனைகளை கொல்வார்கள். சிலசமயம் எலிகளை கூட வேட்டையாடுவார்கள். இந்தப் பிராணிகளை மரப்பலகைகளில் கிடத்தி அவற்றின் மீது ஆணிகளை அறைந்து மிகக் குரூரமான வகையில் அவற்றின் வயிறுகளைக் கிளிப்பார்கள். வெறும் கைகளால் இன்னும் துடித்துக்கொண்டிருக்கும் ஈரமான, தொடுவதற்கே அருவருப்பான, பிசுபிசுப்பான உறுப்புகளைப் பிய்த்தெடுப்பார்கள். அந்த நேரத்தில் அவர்கள் மனநிறைவடைந்து உலகையே மறப்பர். பிய்த்தெடுக்கப்பட்ட உள்ளுறுப்புகளை வெகுநேரம் கையில் பிடித்துக்கொண்டிருப்பர். மிக மென்மையாக அவற்றை நசுக்கி, அவற்றின் வழுவழுப்பை மிருதுவாகக் கைகளால் உணர்ந்து ரசிப்பர். அவற்றிலுள்ள வெதுவெதுப்பு மறைந்து, உயிர்த்துடிப்பு நீங்கிய பிறகே அவற்றைத் தூக்கியெறிவர். பிறகு எஞ்சியுள்ள உள்ளுறுபுக்களைப் பிய்த்தெடுக்கத் தொடங்குவர். பேராசையால் அவர்களது வாய்கள் அகலப் பிளந்து அவற்றிலிருந்து அட்டகாசமான சிரிப்பு வெடித்துக் கிளம்பும். அவர்கள் அப்படித்தான் - தரையின்மீது ரத்தம் சொரிந்து கொண்டிருக்கும் ஒரு ஜோடிக் கரங்கள்; அருகே மரப்பலகையில் கிடத்தப்பட்டுள்ள பிராணிகளின் சின்னச் சின்ன சடலங்கள் - குடலுருவப்பட்டுள்ள அவற்றின் வயிறுகள்; தரை, கூரை, சுவர் என்று கன்னாபின்னாவென்று இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிதறிக் கிடக்கும் இருதயங்கள், ஈரல்கள், குடல்கள்-இங்கொரு குடல்குவியல், அங்கு ஒரு பித்த நீர்க்குட்டை; போதாதற்கு அறை முழுவதும் வியாபித்துள்ள அழுகல் நாற்றம். பிறகு அவர்கள் மேசையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமர்ந்து தங்கள் கரங்களையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பர்- அவற்றில் படிந்துள்ள ரத்தம் கறுத்து உறையும் வரை, பலகைகளில் கிடத்தப்பட்டுள்ள பிராணிகளின் உடல்கள் விறைப்படையும் வரை.

அதன்பிறகு அவர்கள் முற்றிலுமாக ஓய்ந்து போவர்- ஏதோ ஓர் வீரமிக்க சண்டையை நடத்தி விட்டது போல் அல்லது தாக்க வரும் எதிரிக் கும்பலை முறையடித்து விட்டது போல் அவர்களது சக்தி முழுவதும் தீர்ந்திருக்கும். சிறிது நேரம் கழித்து, அவர்களது களைப்பு நீங்கிய பிறகு,தங்களது வேட்டைகளின் விளைவுகளைப் பார்த்து ரசித்து ரசித்து சலிப்படைந்த பிறகு, அப்பிராணிகளின் சடலங்களையும் உள்ளுறுப்பு களையும் அள்ளியெடுப்பர். சுவர்களில் தெறித்திருந்த ரத்தத்தையும் பித்தநீரையும் சுரண்டியெடுப்பர். பிறகு அவையனைத்தையும் ஒரு பானையில் போட்டு கொஞ்சம் உப்பையும் சேர்த்து அதற்குமேல் கறுப்பு சோயா சாஸையும் ஊற்றிக் கிளறுவர்.

என் வாழ்நாளிலேயே இது போன்ற ஒரு வினோதமான நகரத்தை நான் பார்த்ததே இல்லை. நான் பல்வேறு இடங்களுக்குப் போயிருக்கிறேன். பல்வேறு வகையான நபர்களுடன் பொழுதைப்

## புனை கதைக்குப் பின்னால் உள்ள உண்மை

ஜான் கிட்டிங்ஸ்

*இது ஒரு விஷமத்தனமான அவதூறு என்று சீன அரசாங்கம் கூறுகிறது. உண்மையில் ஒரு போதும் நிகழாத, ஆதாரமற்ற கற்பனைதான் இது என்று சில மானிடவியலாளர்கள் கூறுகின்றனர். வென் யு ஹோங் எழுதியுள்ள **வெறி நகரம்** என்ற கதை நோயுற்ற ஒரு சமுதாயத்தில் –அது சீன சமுதாயமாகவோ அல்லது நவீன உலகமாகவோ இருக்கலாம் –அடக்கி வைக்கப்பட்டுள்ள வன்முறை பற்றிய ஒரு உருவகம் என்பது தெளிவு. ஆனால், நரமாமிசம் உண்ணப்பட்ட ஒரு நிகழ்ச்சி உண்மையில் நடந்தது என்பதற்கு அண்மைக்கால சீன வரலாற்றில் ஆதாரங்கள் உள்ளன. அந்த நிகழ்ச்சி , சமுதாயத்தைப் பிடித்துள்ள பிணியைப் பற்றிய வென் யு ஹோங்கின் சித்தரிப்புக்கு ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. சீனத்தின் நண்பர்களுக்கு –இவர்களோடு என்னையும் சேர்த்துக்கொள்கிறேன் –இந்த நிகழ்சியை ஏற்றுக்கொள்வது சங்கடம்தான். எனினும் இந்த நிகழ்ச்சிக்கு நேர்மையுடன் முகங்கொடுக்கத்தான் வேண்டும்.*

*பண்பாட்டு புரட்சியின் போது ஏற்பட்ட மிகப்பெரும் அரசியல் கொந்தளிப்பும் சமூக நிலை குலைவும் இருந்த நிலைமைகளில், ஒரு குறுகிய கால கட்டத்தில் சீனப் பிரதேசமொன்றின் சில மாவட்டங்களில் கீழ்க்காணும் விஷயம் நடந்தது. கோஷ்டிச் சண்டைகளின் போது பலியானவர்கள் ஆடுமாடுகளைப் போல் வெட்டப்பட்டதுமின்றி , அவர்களது உடல்கள் அங்கம் அங்கமாகக் கூறுபோடப்பட்டன– ஈரல்கள், இருதயங்கள், சதை போன்ற பாகங்களை உண்பதற்காக. **குவான் ஸி தன்னாட்சி** பிரதேசத்திலுள்ள (Guan xi Autonomous Region ) **வுஸுவான்** மாவட்டத்தில் தான் (Wuxuan County ) பழிவாங்கும் நோக்கத்திற்காக நரமாமிசம் உண்ணுதல் என்ற பழக்கம் மிகப் பயங்கரமாகப் பரவியது. 1968 ஆம் ஆண்டு மே– ஜுலை மாதங்களில் 70 பேர் இவ்வாறு நரபலி கொடுக்கப்பட்டனர். இதற்கான சான்றுகள் **1)** எதிர்ப்பு (dissident) எழுத்தாளரான **ஷெங் யி** (Zhang Yi) 1986,1988 ஆம் ஆண்டுகளில் கண்ட பேட்டிகள். அவை சென்ற ஆண்டு அவர் சீனத்திலிருந்து வெளியேறி வெளிநாட்டில் குடியேறிய பிறகு வெளியிடப்பட்டன. **2)** அவரது கைக்குக்கிடைத்த அதிகார பூர்வமான அறிக்கைகள். அவை 1980களின் தொடக்கத்தில், பண்பாட்டுப் புரட்சியின்போது இழைக்கப்பட்ட குற்றங்கள் பற்றிய ரகசியப் புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டபோது சீன அதிகாரிகளால் எழுதப்பட்டவை. **3)** அந்த குறிப்பிட்ட பகுதியில் நான் சுருக்கமாக பேசிக் கண்டறிந்த விஷயங்கள், அவை ஏற்கனவே என் காதுக்கு எட்டியிருந்த செய்திகளை உறுதிப்படுத்தின.*

*பழிவாங்கும் நோக்கத்திற்காக நரமாமிசம் உண்ணும் பழக்கம் இரண்டாயிரமாண்டுகளுக்கு மேலாகவே சீனத்தில் இருந்துவந்துள்ளது என்பதை சீன வரலாறு பதிவு செய்துள்ளது. இவற்றில் சில நிகழ்ச்சிகள் இலக்கியக் கற்பனைதான் என்பதில் ஐயமில்லை. பிற சமுதாயங்களைப் பார்த்தால் அங்கு நடைபெறும் கோஷ்டிச் சண்டைகளில் வெற்றிபெற்றவர்கள் தோற்கடிக்கப்பட்டவர்கள் மீது தமக்குள்ள ஆத்திரத்தை வேறு வகையில் வெளிப்படுத்துவதைக்காணலாம். அவர்கள் இறந்துபோனவர்களின் சடலங்களை ஆபாசமாகத் தோற்றம் தரும் வகையில் கிடத்துவர் அல்லது அச் சடலங்களைச் சிதைக்கவோ கூறுகூறாக வெட்டிப் போடவோ செய்வர். வியத்நாமில் தலை கொய்யப்பட்டு முண்டங்களாக்கப்பட்ட அமெரிக்கப் படைவீரர்களின் புகைப் படங்களைப் பார்த்திருப்போருக்கு இது புரியும். சீனத்திலோ, சண்டையில் வெற்றி பெற்றவன் தோற்றுப்போன எதிரி மீது தனக்குள்ள அதீதமான வெறுப்பைவெளிக்காட்டும் வகையில் அவ் எதிரியின் உடலின் அவயங்களை உண்ணவும் கூடும்.*

*இத்தகைய பழக்கத்திற்கு உடல்நோயைக் குணப்படுத்தும் ஆற்றலுண்டு என்றும் நம்பப் படுகிறது. ஒருவன் தனது இருதயத்திற்கு ஊட்டம் தர மற்றொருவனின் இருதயத்தை உண்ணும் மரபு அங்கிருந்தது. மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட குற்றவாளியின் ரத்தத்தில் தோய்த்தெடுக்கப்பட்ட ரொட்டி நோயைக் குணப்படுத்தும் மருந்தாகக் கருதப்பட்டது.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போக்கியிருக்கிறேன் -மனோவிகாரங்கள், மனபீதி, காட்டுமிராண்டித்தனமான நரமாமிச உணவுப் பழக்கம் ஆகியவற்றைக் கண்டு உண்மையிலேயே அதிர்ச்சியும் பயமும் அருவருப்பும் அடைந்துள்ளேன். ஆனால் இதைப் போன்றதொரு இடத்தை நான் இதுவரை பார்த்ததில்லை- இவ்வளவு அதிகமான மக்கள் தொகையைக் கொண்டதும் அதே நேரம் மூச்சுத் திணறும் வகையில் எல்லாருமே ஏதோ ஒரு நச்சுமண்டலத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதுமான ஒரு நகரம் இது.

நெளிந்து நெளிந்து ஓடும் ஒரு ஆறு இந்த நகரத்தின் வெளிப்புறத்தை சுற்றி வளைத்துக் கொண்டிருந்தது. ஆற்றில் எந்த நேரத்திலும் வெள்ளம் பெருக்கெடுக்கும் அபாயம் இருந்து வந்தது. நகரத்துக்குள்ளே ஆளமில்லாத, வறண்டு போன ஒரு ஓடை மட்டும் இருந்தது. நான் அந்த ஓடையைப் பார்க்கச் சென்றதுண்டு. அடை மழை பெய்யும் கோடை காலத்தில் கூட அதில் இடுப்பளவு மட்டுமே தண்ணீர் இருக்கும். ஏதோ ஒரு மீட்டர் ஆயும் இருக்கும். ஓடையின் உப்புநீர் வெயிலில் பளபளக்கும், அதன் இரு கரைகளிலும்

## புனை கதைக்குப் பின்னால் உள்ள உண்மை

ஜான் □□□□ கிட்டிங்ஸ்

*இருபதாம் நூற்றாண்டின் புகழ் பெற்ற சீன எழுத்தாளர் லு ஸுன்னின் புகழ் பெற்ற சிறுகதையொன்றின் கருப்பொருளே இதுதான். ஆனால் இது ஏன் பண்பாட்டுப் புரட்சியின்போது மட்டும் நிகழ்ந்தது ? அதுவும் நமக்குத்தெரிந்த வரை குவாங்ஸி பிரதேசத்தில் மட்டும் ஏன் நடந்தது ?*

*சீனத்தின் அளவுகோல்களின் படி குவாங்ஸி பிரதேசம் 1960 களிலும் கூட மிகவும் பின் தங்கிய பகுதியாகவே இருந்தது. பெரும் யாவோ மலைத் தொடர்களுக்கு நடுவில் வாழ்ந்துவந்த வுஸுவான் மாவட்ட மக்களின் வறுமை மிகவும் குறிப்பிட்டுச் சொல்லும்படி இருந்தது. அவர்கள் வன்முறைக்கும் பேர் போனவர்கள். 19-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நடந்த தைப்பிங் கிளர்ச்சி -அது மிகப்பெரிய ஆனால் மூர்க்கத்தனமான கிளர்ச்சி -இந்தப் பகுதில்தான் தொடங்கியது. கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கியிருந்த ஒழுங்கமைக்கப்பட்ட கட்டுப்பாட்டுமுறை , 1966-1968 ஆம் ஆண்டுகளில் மா சேதுங்கின் செங்காவலர்களால் சின்னாபின்னமாக்கப்பட்டது. வர்க்கப் பகைவருக்கு எதிராக முழுமையான போர் தொடுக்கப் பட வேண்டுமென வெகுமக்களுக்குச் சொல்லப்பட்டது. ஆனால் அவர்களை மிக எளிதாக பல்வேறு கோஷ்டித் தலைவர்கள் தமது நோக்கம் நிறைவேறப் பயன்படுத்திக் கொண்டனர். மிகவும் வறிய நிலையில் இருந்த, மிகக் குறைவான அரசியல் உணர்வுபெற்றிருந்த அந்த மக்கள், வாய்ச்சவடால் பேர்வழிகள், சந்தர்ப்பவாதிகள், கொலை வெறி பிடித்தவர்கள் ஆகியோரால் எளிதாக வென்றெடுக்கப்பட்டனர். குறைபாடுகள் உள்ள ஒரு சோசலிச சமுதாயத்தை சரி செய்வதற்காக முன்வைக்கப்பட்ட புதிய புரட்சி என்ற இலட்சியம் வெகு சீக்கிரத்தில் ஒளிமங்கத்தொடங்கியது.*

*இரண்டாண்டுகள் நடந்த குழப்பமான போராட்டத்திற்குப் பிறகு 1968 ஆம் ஆண்டு நடுப் பகுதியில் வுஸுவானில் வன்முறையின் அளவு அதிகரித்தது. முதலில் ஏராளமான கொலைகள் நடந்தன. பிறகு நரமாமிசம் உண்ணும் பழக்கம் தொடங்கியது. முதலில் ஒரு சிலரால் மட்டுமே ரகசியமாக நரமாமிசம் உண்ணப்பட்டது. அல்லது அருவருப்பைக்குறைப்பதற்காக பன்றி மாமிசத்துடன் கலந்து உண்ணப்பட்டது. பிறகு மதுவருந்தும் விருந்துகளில் கூட நரமாமிசம் பரிமாறப்பட்டது. அங்கு தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகள்,வெறி நகரம் என்ற இக்கதையில் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளைப்போலவே சர்ரியல் தன்மை கொண்டவை. கடைசியில், உள்ளூர் கம்யூனிஸ்ட் ஒருவர் சரியான நோக்கில் செய்தியனுப்பி பெய்ஜிங்கில் உள்ள மத்திய அரசாங்கத்தை உஷார்படுத்தியதால் அந்த அரசாங்கம் உடனடியாக ராணுவத்தை வுஸுவானுக்கு அனுப்பியது.*

*இந்தச் சிறுகதை அதீத நிலைமைகளில் மனித இயல்பு எந்த அளவுக்கு தரம் கெட்டுப் போகக் கூடும் என்பதைச் சிந்திக்குமாறு நம்மைத் தூண்டுகிறது. வேறு இடங்களில் வேறு வகைகளில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் மீண்டும் நடக்காது என்பதை யாரால் கூறமுடியும் ?*

நன்றி: **INDEX ON CENSORSHIP (Lon, No 1/2, 1994)** * *தமிழாக்கம்-வ.கீதா & எஸ்.வி.ராஜதுரை*

** கிட்டிங்ஸ் குறிப்பிடும் லு ஸுன்னின் சிறுகதையின் ஆங்கில மொழியாக்கம் THE MEDICINE என்ற தலைப்பில் பிரசுரமாகியுள்ளது. ( Selected Works of LU HSUN, Foreign Languages Press , Peking , 1956 ) இத்தொகுப்பிலுள்ள 'THE MADINAN'S DIARY ' என்ற மற்றொரு புகழ் புகழ் பெற்ற சிறுகதையிலும் கூட நரமாமிசம் உண்ணுதல் பற்றிய சில குறிப்புகள் காணப்படுகின்றன. இவ்விரு சிறுகதைகளும் இலங்கை எழுத்தாளர் கே.கணேஷால் 'அருமருந்து ' 'பைத்தியக்காரனின் குறிப்புகள் ' என்ற தலைப்புகளில் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன.

( 'போர்க் குரல் ' , லு ஸுன் கதைகள் , தமிழாக்கம் — கே. கணேஷ் , பொதுமை வெளியீடு , சென்னை 1981 )



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிறிப்போன மஞ்சள் நிற மணல் குவிந்திருக்கும். உறுதியான குறுக்குப் பாலமொன்று மணல்மீது எழுப்பப்பட்டிருந்தது. நீரோடைக்கு மேலே மிக உயரத்தில் ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு நீட்டப்பட்டிருந்த அப்பாலம் ஆயிரம் மீட்டர் நீளம் கொண்டிருந்தது. கோடை காலத்தில் உள்ளூர் சிறுவர்கள் நீரோடையில் அம்மணமாகக் குளித்து விளையாடுவதுண்டு. செங்குத்தான இரு கரையோரங்களிலும் உன்னிச் செடி அடர்த்தியாக வளர்ந்திருந்தது.

நகரத்தின் பிற்பகுதிகளில் நீரோடைகள் எதுவும் இல்லை. நகரப் பூங்காவில் என்னவோ ஓர் ஏரி இருந்தது உண்மைதான். ஆனால் அதில்தான் குப்பை கூளங்கள், மிதக்கும்- ரொட்டித்துண்டுகள், குச்சி ஐஸ் மீது சுற்றப்பட்டிருந்த காகிதங்கள், புல் பூண்டுகள், மக்கள் தூக்கியெறிந்த பிற பொருட்கள். அந்த ஏரி ஒரு குளத்தளவுதான் இருக்கும். ஆனால் எண்ணற்ற சொகுசுப் படகுகள் நிறைந்திருக்கும். அவை ஒன்றோடொன்று மோதிக்கொண்டும் இடித்துக்கொண்டும் பேரொலி எழுப்பிக்கொண்டும் சில சமயங்களில் வினோதமாகக் கிறீச்சிட்டுக் கொண்டும் இருக்கும். நகரத்துக்கு வெளியே நகரத்தை சுற்றி ஒரு அகழியை அமைக்கும் பணி நடந்து கொண்டிருந்தது. அந்த அகழிக்கும் அந்த ஏரிக்கு நேர்ந்த கதிதான் ஏற்படுமோ என்று நான் நினைத்ததுண்டு- நாற்றம் வீசும் அழுக்கு நீரும், எரிச்சலூட்டும்அளவுக்குக் குப்பைக் காகிதங்களும்.

நகரம் எவ்வளவு வறண்டிருந்தது என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். போதாதற்கு பேய்க்காற்றும் தூசியும் எல்லாருக்கும் எரிச்சலூட்டின. எண்ணற்ற புகைபோக்கிகள் நகரத்தின் மீது அடர்த்தியான புகையைக் கக்கித்தள்ளின. ரசயானத் தொழிற்சாலையிலிருந்து வந்த கந்தக அமில வாடை நகரெங்கும் பரவியது. அந்த நகரம் மிகப்பெரியது- மிகப்பெரிய மக்கள் தொகை அதில் வகை வகையான வினோதமான பைத்தியங்கள்.

நாளாவட்டத்தில் சகோதரர்களின் நடத்தைதான் அந்நகரத்திலுள்ள மற்றவர்கள் பின்பற்றும் முன்மாதிரியாக மாறிவிட்டது. ஒவ்வொரு இளைஞனும் அவர்களது உதாரணத்தை பின்பற்றி அவர்களைப் போலவே செயல்படத் தொடங்கினான். நாய்க்கொலை என்பது அதுவரை அங்கு அனைவரையும் ஆட்டிப்படைக்கும் வெறியாக இருந்ததில்லை. ஆனால் கண்மூடிக்கண் திறப்பதற்குள் அந்த நகரத்தின் மூலை முடக்கிலெல்லாம் அந்த வெறி பரவி விட்டது. தொழில் ரீதியாக நாய்க்கொலை செய்வதற்கான உரிமங்களை எப்படியாவது பெறுவதற்காக ஆயிரக்கணக்கானோர் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அலுவலகங்களை மொய்த்த வண்ணம்இருந்தனர். வரிசை வரிசையாக நெருக்கியடித்துக்கொண்டு அவர்கள் நின்றனர். தொழிற்சாலைகளில் இருந்தும், நிறுவனங்களிலிருந்தும், பள்ளிக்கூடங்களிலிருந்தும் அதுவரை தாங்கள் செய்து வந்த வேலைகளையோ அல்லது படித்து வந்த படிப்புகளையோ உதறித் தள்ளிவிட்டு வெறிபிடித்த நாய்க் கொலைக்காரர்கள் கூட்டத்தில் சேர்ந்து கொள்ள மிடுக்காக வீதிக்கு வந்தனர்.



ஒவ்வொருவனும் விர்ரென்று ஒரு பெரும் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தான். அவர்கள் தமது இடுப்புக்கச்சைகளில் பிச்சுவாக்களை செருகியிருந்தனர். மதுபான விடுதிகளுக்கு கும்பல் கும்பலாகச் சென்று புத்தி மழுங்கும் வரை குடித்தனர். யாருக்கும் புரியாத வினோதமான விஷயங்களை அவர்கள் முணுமுணுப்பர். அவ்வப்போது ஆபாசமாகச் சிரிப்பை அள்ளி வீசுவர். பூனைகளையோ நாய்களையோ வேட்டையாடுவர். அவற்றின் குடல்களையும் உள்ளுறுப்புக்களையும் உருவியெடுத்து கண்டமேனிக்குத் தூக்கியெறிவர். பிறகு அவற்றையெல்லாம் எடுத்து கொதிநீர் பானைகளில் போட்டு அவற்றின் சாறு இறங்கும் வரை நன்கு வேகவைத்து "சூப்" எடுத்துக் குடிப்பர்.

சகோதரர்கள் முதல் நாளில் செய்வதை மறுநாளில் மற்ற எல்லாரும் பின்பற்றுவது ஒரு ஃபாஷனாக இருந்தது. ஒரு நாள் நகரத்தின் மேற்குப் பகுதியிலுள்ள கடைவீதிக்கு அந்த இடத்துக்கு அதிக பழக்கம் இல்லாத ஒரு இளைஞன் வந்தான். அவன் மாட்டிறைச்சி வியாபாரி. சாமர்த்தியமான, திறமையான ஆள் அவன். இரண்டு சகோதரர்களும் நடுப்பகலில் கடைவீதிக்கு வந்தவுடன் எல்லா வியாபாரிகளும் கையிலிருந்த வேலைகளை அப்படியே போட்டுவிட்டு அவர்களை வரவேற்க முண்டியடித்துக் கொண்டு ஓடிவந்தனர். அச் சகோதரர்கள் தமக்கு விருப்பமான பொருட்களைக் கடைகளிலிருந்து எடுத்துக் கொள்ள அந்த வியாபாரிகள் அனுமதித்தனர். ஆனால் அந்த இளம் மாட்டிறைச்சி வியாபாரியோ மாட்டிறைச்சியை வெட்டுவதற்காகத் தான் கொண்டு வந்த மரக்கட்டைக்கருகே பேசாமல் நின்றுகொண்டிருந்தான். அந்த பரபரப்புக்கான காரணம் அவனுக்குப் புரியவில்லை. பூனை, எலி பிடிப்பவர்களின் காலையெல்லாம் ஏன் இப்படி நக்க வேண்டும்? அவனும் சகோதரர்களும் ஒருவரையொருவர் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டனர். அச்சகோதரர்களின் பேராசை பிடித்த வாய்களையும் கொலைவெறி வழியும் ஒட்டிய கன்னங்களையும் பார்த்து அந்த இளைஞனுக்கு நடுக்கம் ஏற்பட்டது.

அன்று பிற்பகல் ஒரு பேய்க்காற்று கிளம்பியது. மணலை வாரியடித்தது. அம்மிக்கல்லை கூடத் தூக்கிக் கொண்டு போய்விடும் போல் இருந்தது. முட்டைக்கோஸ் துண்டுகள், காகிதத் துண்டுகள், அழுகிய காய்கறி இலைகள் அனைத்தும் காற்றில் சுழற்றியடிக்கப்பட்டன. கடைவீதியில் கூடியிருந்தவர்களுக்கு முன்னால் இரு சகோதரர்களும் மரக்கிளைகளில் நாய்களை தொங்கவிடுவது போல கடைவீதியிலுள்ள ஒரு மரத்தின் கிளையில் அந்த இளம் மாட்டிறைச்சி வியாபாரியை தலைகீழாகத் தொங்கவிட்டு அவன் வாயில் பன்றி மலத்தை திணித்தனர். அந்த மரம் அச்சமயத்தில் மொட்டையாக இருந்தது. அதன் அடிப்பகுதியில் பெரிய கன்னங்கரிய துவாரம் இருந்தது. அதில் ஏராளமான பூச்சி புழுக்கள் இருந்தன. சகோதரர்கள் அந்த இளைஞனை அம்மணமாக்கி அவனது ஆடைகளை அந்த மரத்துவாரத்துக்குள் தூக்கியெறிந்தனர். பிறகு கத்தியால் அவன் வயிற்றை ஒரே கிழியாகக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிழித்தனர். அவனது வெளிர்பச்சையான குடல்கள் வெடித்து நழுவிக் கீழே விழுந்தன. கடைவீதியில் கூடியிருந்த கும்பல் இந்தக் காட்சியை மிகவும் ரசித்துப் பார்த்தது. அச்சகோதரர்களின் விசிறிகளான சில இளைஞர்கள் சகோதர்களின் ஒவ்வொரு அங்க அசைவையும் உன்னிப்பாக கவனிக்கத் தவறவில்லை. கண்ணுக்குச் சட்டென்று புலப்படாத சில நுணுக்கமான அசைவுகள் கூட அவர்கள் கண்ணுக்குத் தப்பவில்லை. அவர்களில் சிலர் தாங்கள் கண்ட காட்சியை உடனுக்குடன் நடித்துக் காட்டினர்.



அன்று மாலைக்குள் சகோதரர்களின் சாதனை பற்றிய பரபரப்பான செய்தி நகரமெங்கும் எதிரொலித்தது. ஒவ்வொரு வீட்டிலும் இந்த விஷயம் குஷியாக விவாதிக்கப்பட்டது.

இருண்ட காட்டில் வனவிலங்குகளின் கண்கள் ஒளிர்வதைப்போல ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒவ்வொரு கட்டிடத்திலிருந்தும் பிரகாசித்துக் கொண்டிருந்த ஒளி மங்கலான விளக்குகள் எரியும் தெருக்களைச் சூழ்ந்திருந்த புகைமண்டலத்தை ஊடுருவியது. ஒவ்வொரு ஜன்னலிலிருந்தும் பெரும் சிரிப்பொலிகளும் கூடவே வசைமொழிகளும் வழிந்து கொட்டின. நள்ளிரவு கடந்து கடைசியில் விளக்குகள் அணைக்கப்பட்ட பிறகே அவை ஓய்ந்தன. வெளியே தெருக்கள் அனைத்தும் கும்மிருட்டு. சில்லென்று காற்று வீசிக்கொண்டிருந்தது. சகோதரர்களின் சிரிப்பைப் போன்ற சிரிப்பொலி தூங்கிக் கொண்டிருந்தவர்களின் உதடுகளிலிருந்து வெடித்துக் கிளம்பிய வண்ணமிருந்தது. அது ஜன்னல்களைத் துளைத்து வெளியே வந்து அங்குமிங்கும் மோதி பயங்கரமாக எதிரொலித்தது. தூக்கத்தில் நடப்பவர்கள் தங்கள் படுக்கையிலிருந்து எழுந்து உணவுப் பொருட்களை வெட்டப் பயன்படுத்தும் கத்திகளை எடுத்து முட்டைக்கோஸ் ஊறுகாய் பானைகளின் மீது அவற்றைத் தீட்டிக் கூர்மையாகத் தொடங்கினர்.

கனவு கண்டு கொண்டிருந்தவர்களின் பிதற்றல்கள் இரவு முழுவதும் நகரத்தின் மீது கவிந்திருந்த இருண்ட வானத்தின் மீது போய் விழுந்தன. வார்த்தைகளால் சொல்லமுடியாத பயங்கரங்களை அவர்களது வாய்கள் முணு முணுத்தன. தீட்டப்படும் கத்திகள் எழுப்பும் இடைவிடாத ஆகாசமான ஒலி கேட்டுக் கொண்டிருந்தது. இவை எல்லாம் போதாதென்று ரத்தத்தை உறையச் செய்யும வகையில் ஹேஹ்ஹே வென்ற சிரிப்பு தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தது.

மறுநாள் நகரத்தின் பல்வேறு கடைவீதிகளில் வாடிக்கையாளர்கள் மீது பதினான்கு சரியான தாக்குதல்கள் ஒன்றன்பின் ஒன்றாக உண்மையிலேயே நடந்தன. இந்தத் தாக்குதல்கள் எல்லாமே சகோதரர்கள் நடத்தியதைப் போன்றவைதான். வாடிக்கையாளர்கள் அலாக்காகத் தூக்கப்பட்டு மரக்கிளைகளிலிருந்து தொங்கவிட்ப்பட்டு பின்னர் கொல்லப்பட்டனர்.

அடுத்த சில வாரங்களுக்குள் நகரம் முழுவதிலும் இந்தவெறி தொற்றுநோய் போலப் பரவி விட்டது. இளைஞர்கள் மட்டுமல்லாது வயதில் சற்று மூத்தவர்களும் கூட நாலாபக்கமும் கொலைபுரியத் தொடங்கினர். இரவு நெடுக நகரத்திலிருந்து பயங்கரமான ஓலங்கள் எழுந்து கொண்டிருந்தன. கனவு கண்டு கொண்டி ருந்தவர்கள் தூக்கத்திலேயே பிதற்றியவை மயிர்கூச்செறியும் வகையில் மென்மேலும் பீதிதரக்கூடியவையாக இருந்தன. இரவு நெடுக கத்திகள் தீட்டப்படும் ஓசை மென்மேலும் கொடூரமானதாக, நரம்புகளைத் தளரவைக்க கூடியதாக இருந்தது. நகரம் முழுவதிலுமே பித்துப்பிடித்த ஆட்டமும் பாட்டமும் நிரம்பியிருந்தது போல இருந்தது - பளபளக்கும் நூற்றுக்கணக்கான கொலைக் கத்திகள் வெட்டிக் குத்திக் கிழிக்கும் காட்சியும் ஓசையும்தான் அது.

நகராட்சி நிர்வாகம் சகோதரர்களைப் பிடித்துவர உள்ளூர்ப் போலிஸை அனுப்பிவைத்தது. ஆனால் போலிஸ்காரர்களுக்கு மத்தியிலேயே, வாடிக்கையாளர்களின் கொலைக்கு காரணமாக இருந்த சிலரை ஊர்மக்கள் சிலர் கண்டனர். போலிஸ்காரர்கள் சகோதரர்களின் இருப்பிடத்தில் புகுந்து முன் கதவை எட்டி உதைத்து தாக்குவதற்கு ஆயுதங்களை தயாராக வைத்துக் கொண்டு நின்றனர். ஆனால் அந்த இடம் காலியாக இருந்தது. கூழ்போல வேகவைக்கப்பட்ட எலிமாமிசமும் அதன் உள்ளவயங்களும் கொண்ட ஒரு சட்டி மட்டுமே அங்கிருந்தது. போலிஸார் தமது ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு பக்கத்து கட்டிடத்திலிருந்த பயணிகள் விடுதியின் உரிமையாளரை அழைத்து, தாம் குடிப்பதற்கு ஒரு பானை சாராயம் கொண்டு வரும்படி கத்தினர் பிறகு எலித்தொடைகளை பிய்த்தெடுத்தனர். எலிகளின் ஈரல் குலையின் ஒரு பகுதியினைப் சட்டியிலிருந்து அள்ளினர். பிறகு அவற்றை வாய் நிறைய அடைத்துக்கொண்டு சுவைத்துண்ணத் தொடங்கினர்.

சில நாட்களுக்குப் பிறகு சகோதரர்களை மீண்டும் நகரத்தில் காண முடிந்தது. அவர்களிடம் மாற்றம் ஏதும் இல்லை. எப்போதும் போலவே இடுப்பில் செருகிய கத்திகளுடன் கொலை வெறி கண்ணில் ததும்ப பெரிய மோட்டார் சைக்கிள்களில் அலைந்து திரிந்து கொண்டிருந்தனர்.

நகரத்தை எப்போதுமே ஒரு மஞ்சள் புகைமண்டலம் சூழ்ந்திருந்தது. ஒவ்வொரு கடையின் வாயிலிலும் குறி சொல்பவர்களும் கைரேகை பார்ப்பவர்களும் காணப்பட்டனர். அவர்களில் இளைஞர்களுமுண்டு, வயதானவர்களும் உண்டு. ஆண்களுமுண்டு, பெண்களுமுண்டு. ஒவ்வொருவரும் வண்ணச் சீட்டுக்களை இறுகப் பிடித்திருந்தனர். அவர்கள் அனைவருமே எண்ணெய்ப் பசையும் கறைகளும் தூசியும் படிந்திருந்த மிருதுவான கருப்பு நிறக் கோட்டு அணிந்திருந்தனர். அவர்கள் ஜனக் கூட்டத்தில் நுழைந்து அங்குமிங்கும் சென்று உரக்கக் கூவினர். சாம்பல்நிற வானத்திலிருந்து மழைத்துளி மெதுவாக விழுந்து கொண்டிருந்தது. மஞ்சள் நிற இலைகள் நகரத்தை மூடின. அவை காற்றில் பறந்தன அல்லது சாலைகளில் இருந்த தார் மீது ஒட்டிக்கொண்டன. குண்டும் குழியுமாக இருந்த சாலைகளிலிருந்து பெயர்ந்த கற்கள் உருண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டிருந்தன. ஒவ்வொரு நாளும் மக்கள் கூட்டம் பெரிய பாம்புகளைப்போல வளைந்து வளைந்து வேலைக்குப் போகவும் வீட்டுக்குத் திரும்புவதுமாக இருந்தது. கூட்டமாகச் சேர்வதும் பிறகு கண்ணுக்குப் புலப்படாத மூலை முடுக்குகளுக்குள் மறைந்து விடுவதாகவும் இருந்தது.



திரையரங்குகளுக்கு முன்பும் நாடக அரங்குகளுக்கு முன்பும் சலுப்புத் தட்டியவர்களாக மக்கள் நின்று கொண்டிருப்பதைப் பார்க்க முடிந்தது. காரணம் அவ்வரங்குகள் பல ஆண்டுகளுக்கு முன்பே இழுத்து மூடப்பட்டிருந்தன. திரையரங்குகளில் ஒரே படத்தையே முன்னூற்று அறுபது நாளும் காட்டிக் கொண்டிருந்தனர். உடைந்து போன பழைய புரொஜக்டரில் காட்டப்பட்ட படச்சுருளின் சவுண்ட் டிராக்கோ கீறல்கள் விழுந்து கிறீச்சிட்டுக் கொண்டிருந்தது. திரையரங்குகளுக்குள் ஆட்களை உள்ளே விட நியமிக்கப்பட்டவர்களோ - அவர்களில் இளைஞர்களுமுண்டு, வயதானவர்களுமுண்டு- இருட்டில் தட்டுத்தடுமாறிக் கொண்டு மூன்று சீட்டு ஆடிக் கொண்டிருந்தனர்.

ஆண்டுக்கு இருமுறை விளையாட்டு மைதானத்தில் அலாதியான பரபரப்புக் காணப்படும். தேசிய அல்லது சர்வதேச கால்பந்தாட்டங்கள் நடைபெறும் நாட்கள் அவை. பரபரப்பூட்டும் அந்தப் போட்டியை ஒரு கணமேனும் தரிசிக்க முயற்சி செய்வதற்குக் கூடும் பார்வையாளர்களில் நூற்றுக்கணக்கானவர்கள் கூட்டத்தில் நசுங்கி இறந்து போவர் அல்லது மிதித்துத் துவைக்கப்படுவர். அந்த மைதானத்துக்கு மாதக் கணக்கில் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் இளைஞர்கள் கட்டுக்கடங்காத காட்டுக் குதிரைகளைப் போல இருப்பர். அவர்கள் விரித்த தலை முடியோடு வாயில் நுரை கக்க ஒருவரையொருவர் முட்டி மோதிகொண்டும், உடலை வளைத்துக் கொண்டும், வளைந்து திருப்பிக் கொண்டும் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருப்பர்.

நான் இந்த நகரத்துக்கு முதன்முதலாக வந்தது பேய்க் காற்று வீசும் அந்தப் பருவ காலத்தின் போதுதான். மனிதர்களைக் கொல்லும் இலையுதிர் காலம் என்று அப்பருவகாலத்தை மக்கள் அழைப்பதுண்டு. சுழற்றிச் சுழற்றியடிக்கும் காற்று எல்லா வீடுகளையும் தரை மட்டமாக்கியிருந்தது. நில நடுக்கத்திற்குக்கூடத் தாக்குப் பிடிக்கும் வகையில் கட்டப்பட்டிருந்த ஓட்டல் கட்டிடங்களும் பெரிய பெரிய கட்டிடங்களும் கூட சரிந்து விழுந்திருந்தன. சாலைகளில் சுழற்றியடித்த தூசி, காகிதத்துண்டுகள், மக்கிப்போன மரத்துண்டுகள், பழைய வீடுகளின் கூரைகளிலிருந்த ஓடுகளின் சிதறல்கள் ஆகியவற்றை அடித்துக் கொண்டு சென்றது. பிரமாண்டமான மரங்கள் வேரோடு சாய்ந்து சாலையோரங்களில் அசைவின்றிக் கிடந்தன. மெல்லிய தூங்குமூஞ்சி மரக்கிளைகளில் இலைக்காம்புகள் வளர்ந்து அந்த மூர்க்கத்தனமான காற்றில் கர்வத்தோடு ஆடிக் கொண்டிருந்தன. இதெல்லாம் போதாதென்று இடிபாடுகளிலிருந்து நிதானமாக எழுந்து வந்து கொண்டிருந்த கடுமையான புகையை அப்பேய்க் காற்று நாலாபக்கமும் வாரியடித்துச் சென்றது.

தரைமட்டமாக்கப்பட்ட கட்டிடங்களில் மக்கள் கூட்டம் கூட்டமாக ஒன்றியபடி உட்கார்ந்திருப்பதை நான் பார்த்தேன். எஞ்சியிருந்த மேசைகளின் மீது அவர்கள் தேவைக்கதிகமான பலத்துடன் சீட்டுக்களை வீசியெறிந்து மூன்று சீட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். மேசைகளின் ஓரத்தில் சரிவர அடுக்கி வைக்கப்படாத கரன்சி நோட்டுக்கள் ஏற்கனவே குவிந்து கிடந்தன. அங்கிருந்த மனிதர்கள் நீண்ட கம்பளிக் கோட்டுகள் அணிந்திருந்தனர். சிகரெட் புகையை உறிஞ்சிக் கொண்டிருந்தனர். அவர்களது புருவங்கள் தாழ்ந்திருந்தன. நெற்றியோ சுருங்கியிருந்தது. சீட்டுகளை ஒவ்வொருவரும் உடும்புப் பிடியாய் பிடித்திருந்தனர். கரிய புகை அவர்களது முகங்களை கருப்பும் மஞ்சளுமாக ஆக்கியிருந்தது. கூரைகளின் வழியே ஊளையிட்டுக் கொண்டு வந்த வடகிழக்குக் காற்றோ, விட்டு விட்டு வெப்பத்தை அள்ளி வீசியது. அந்த மனிதக் கூட்டங்களில் அங்குமிங்குமாக சிறு பிள்ளைகள் கண்ணுக்குத் தென்பட்டனர். அவர்களும் கூட பெரிய ஆட்களை போலவே புகைபிடித்துக் கொண்டிருந்தனர். அவர்களது கத்தல்கள் ஊடுருவிச் சென்று நாசமாய்க் காதில் விழுந்தன. அவர்களை சுற்றிலும் மக்கிப்போன மரத்துண்டுகள், நொறுங்கிப்போன செங்கற்கள். அவர்கள் கண் எதிரிலேயே கரப்பான்களும், வேறு பூச்சிகளும் அலையலையாகத் தொடர்ந்து அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தன.

நகரத்தில் காலியாக இருந்த ஒரு பகுதியில் சகோதரர்கள் ஒரு குத்துச் சண்டை மேடையை அமைத்திருந்தனர். குத்துச் சண்டையை பார்க்க யார் வந்தாலும் அவர் பத்து டாலர் கட்டணம் செலுத்த வேண்டும். ஒரு ராட்சத நாய் அந்த மேடைக்கு கொண்டு வரப்படும். அவர்களிருவரும் கோவணம் மட்டுமே அணிந்து கொண்டு கைகளில் கத்திகளை இறுகப்பிடித்த வண்ணம் அந்த நாயுடன் போராடுவர். இவ்வாறு மேடைக்கு கொண்டுவரப்பட்ட நாய்களுக்கு சகோதரர்கள் சிறப்புப் பயிற்சி அளித்திருந்தனர். அவற்றுக்கு ஒவ்வொரு நாளும் உயிருள்ள காட்டுப் பூனை, முயல், எலி ஆகியவற்றை தீனியாகக் கொடுத்து வந்தனர். இதன் காரணமாக அந்த நாய்கள் மிக மூர்க்கத்தனமான விலங்குகளாக மாறியிருந்தன. அவற்றிற்குப் பசி எடுக்கும்போது அவற்றின் கண்கள் நெருப்புப்போல ஒளிரும், கோரைப்பற்கள் வெளியே தெரியும், காதுகள் விறைப்பாக நிற்கும். அவற்றின் அகன்ற செந்நிற வாய்கள் பிளந்து நீண்ட நாக்குகள் தொங்கிக் கொண்டிருக்கும். அவற்றின் ஊளை ரத்தத்தை உறைய வைக்கும். சகோதரர்களை கண்டதும் அவர்கள் மீது பாய்ந்து தமது கூரிய நகங்களால் அவர்களது உடல்களை ரத்தம் வரும்வரை பிறாண்டி அவர்கள் கட்டியிருந்த கோவணங்களை நார் நாராகக் கிழிக்கும். சகோதரர்களும் கூட காட்டு விலங்குகளாக மாறி வாய்களை அகலப் பிளந்து தமது வலுவான மஞ்சள் நிறப் பற்களை காட்டுவர். இந்தப் பக்கமும் அந்தப்பக்கமும் பதுங்கியும், தாவியும் நாயின் தொண்டையில் கத்தியை செருகுவதற்கான தருணத்திறகாகக் காத்திருப்பர். நாயின் நகங்கள் அவர்களது உடல்கள் மீது ஆழமாகப் பதிந்திருக்கும் போதே, "க்ளக் க்ளக்" என்ற சத்தம் கேட்கும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாயின் பிடி மெல்ல மெல்லத் தளரும். பின்னர் உடலை நீட்டி விறைத்துப் போகும்.

பார்வையாளர்களோ கண்கொட்டாமல் அந்தக் காட்சியைப் பார்த்து கொண்டிருப்பர். அந்தச் சகோதரர்கள் மீது நாய் பாய்ந்து விழும்போது, மூச்சுக் கூட விடாமல், ஆடாமல் அசையாமல் வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டிருப்பர்.

அது எந்த நாளாக இருந்தாலும் சரி, பேய்க்காற்று வீசிக்கொண்டிருந்தாலும் சரி, மழை கொட்டா கொட்டென்று கொட்டிக் கொண்டிருந்தாலும் சரி, ஒவ்வொரு நாளும் நண்பகலில் சகோதரர்கள் ஒரு நாயை குத்துசண்டை மேடைக்குக் கொண்டு வந்து விடுவர். இந்த அபூர்வமான, மூர்க்கத்தனமான சண்டை காட்சியைக் கண்டு களிப்பதற்கென மக்கள் நாலாபக்கத்திலிருந்தும் வருவர். ஒரு சிலர் பலநூறு மைல்களுக்கு அப்பால் இருந்து ரயிலேறி வந்தனர். அவர்கள் வீடுகளைப் பேய்க் காற்று அழித்திருந்தாலும் சரி அல்லது அவர்கள் சொட்டச் சொட்ட மழையில் நனைந்தாலும் சரி, அவர்களது கவனம் முழுவதும் ஒரே விஷயத்தின் மீதுதான் பதிந்திருக்கும் - ஊளையிடும் நாயின் அழிவிற்காக அவர்கள் காத்திருப்பர்.

ஒவ்வொரு நாளும் பெண்கள் கூட்மொன்று சகோதரர்களை பின்தொடர்ந்து செல்லும். அப் பெண்கள் உதட்டுக்கு நல்ல சிகப்பான சாயம் பூசியிருப்பார்கள். பவுடர் அப்பிய அவர்களது முகங்கள் வெள்ளைக் காகிதம் போல இருக்கும். மிகவும் மோஸ்தரான ஆடைகளை அவர்கள் அணிந்திருப்பர். நாய்ச் சண்டையை பார்க்க வரும் பார்வையாளர்களைப் பார்த்து அப்பெண்களும் சகோதரர்களும் ஒரவரையொருவர் விஞ்சும் வகையில் மிக ஆபாசமான வார்த்தைகளை அள்ளி வீசுவர். அவ் வார்த்தைகளை கேட்கும் பார்வையாளர்களிடம் இருந்து பலத்த சிரிப்பு எழும்.

சகோதரர்களுடன் நீண்ட காலமாக பெண்ணொருத்தி இருந்தாள். எல்லாப் பருவ காலத்திலும் அவள் ஒரே மாதிரியான கறுப்பு ஆடையைத்தான் அணிந்திருப்பாள். அந்த ஊரிலேயே மிகவும் நன்றாகப் படித்த பெண்களில் அவளும் ஒருத்தி. அவளது பெற்றோர்கள் படித்த பணக்கார இளைஞனொருவனை அவள் திருமணம் செய்து கொள்ள அனுமதித்திருந்ததாக ஒரு பேச்சு அடிபட்டது. இதனால் ஊர் மக்களுக்கு அவள் மீது மிகவும் பொறாமை.

ஆனால் இந்த நகரத்தில் எது சரிவர நடக்கிறது? அந்த இளைஞன் அண்மையில்தான் பல்கலைக் கழகப் பட்டப்படிப்பை முடித்துவிட்டு வந்திருந்தான். "பாருங்கள் அவனை, மிகவும் பெரிய ஆளாகப் போகிறான்" என்று நகர மக்கள் கூறுவதுண்டு. அவன் மதுபான விடுதிகளுக்கும் நடன சாலைகளுக்கும் அடிக்கடி செல்லத் தொடங்கினான். தனது பேச்சாலும் நடத்தையாலும் அனைவரையும் கவர்ந்தான். அவன் மிகவும் கெட்டிக்காரன், திறமைசாலி, ஒருநாள் இல்லாவிட்டாலும் ஒருநாள் அவன் ஒரு உயரதிகாரியாகி விடுவான் என்று எப்போதும் மக்கள் பேசிக்கொண்டனர். ஆனால் ஒருநாள் காலை அவன் தற்கொலை செய்து கொண்டு தனது கட்டிலிலேயே உயிரை விட்டிருந்தது தெரிய வந்தது.



திருமண நாளன்று மாலை அந்தப் பெண் வெளியே ஓடி வந்தாள். மறுநாள் கறுப்பு ஆடை அணிந்தவளாய் நகர சதுக்கத்தில் சகோதரர்களுடன் காணப்பட்டாள். சகோதரர்களைப் போலவே அவளும் இடைவிடாது புகைபிடித்துக் கொண்டிருப்பாள். அதன் காரணமாக அவள் நகங்களில் மஞ்சளோடியிருந்தது. அவளது கண்களில் பச்சை நிற ஒளி ஒளிரத்தொடங்கியது. அவளும் நிறையவே மதுபானம் அருந்துவதுண்டு. வாயிலிருந்து ஆவி கிளம்பி வரும்வரை குடிப்பாள். இனிமேல் குடிக்க முடியாது என்ற நிலை வரும்போதுதான் நிறுத்துவாள்.

ஆனால் அவள் மிகவும் அழகாகவும் நளினம் மிக்கவளாகவும் இருந்தாள். அவளது கண்களிலிருந்த ஒளி பனிக்கால வானத்தில் காணப்படும் ஒளியைப்போல இருந்தது. அது அவளது கண்களை மேலும் கருமையானதாகவும் இரக்கமற்றதாகவும் ஆக்கிக் காட்டியது. அவளைப் பற்றி அடிக்கடி பேசிக்கொண்டு வந்தவர்கள் அந்தக் கண்கள் வினோதமானவை என்று குறிப்பிட்டனர். அவளது பார்வை எதன் மீதும் பதியாதது போலவும் அதே சமயம் எல்லாவற்றையுமே பார்க்க கூடியது போலவும் இருந்தது. சகோதரர்களை அவள் பார்க்கும் போதுகூட அவள் செய்வதறியாது நிற்பதுபோலத் தோன்றும். அவர்களைப் பார்த்தும் அவர்கள் மீது பார்வையைப் பதிக்காதது போலக் காணப்படுவாள். அவள் சிரிக்கவோ, அழவோ, கோபப்படவோ மாட்டாள். அவளது குரலையும் முகபாவத்தையும் கொண்டு அவளைப் பற்றி எதையும் தெரிந்து கொள்ள முடியாது. ஆனால் அவளது குரலைக் கேட்கும் போதும், அவள் முகபாவத்தைப் பார்க்கும் போதும் காணாமல் போன ஒரு ஊசியைத் தேடி கடலுக்கடியில் உள்ள மணலை முடிவில்லாமல் அவள் சலித்துக் கொண்டிருப்பதைப் போன்ற உணர்வு ஏற்படும்.

சகோதரர்களுடன் அவள் மிக நன்றாகவே பழகினாள். அவர்களுக்கு நிறைய யோசனைகளைச் சொல்லி வந்தாள். தனது உடலையும் அவர்களுக்குத் தந்தாள். புத்தாண்டு தினத்துக்கு முந்திய நாள் மாலை ஐநூறு டாலர் மதிப்புள்ள பட்டாசுகளை அவர்கள் வாங்கும்படி செய்து அன்று மாலையே அவையனைத்தையும் ஒரே நேரத்தில் கொழுத்தவும் செய்தாள். மூன்று மணிநேரம் வானம் ஒளிமயமாக இருந்தது. சகோதரர்கள் ஒரு நாயின் இருதயத்தைப் பொட்டலம் கட்டி தனது பழைய காதலன் ஒருவனுக்கு அனுப்பும்படி செய்தாள். அது இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்த -இன்னமும் கொஞ்சம் உயிரொட்டிக் கொண்டிருந்ததால் வெது வெதுப்பாகவும் இருந்த- இதயம். அதைப் பெற்றுக் கொண்டதும் அந்தப் பழைய காதலனுக்கு பயத்தால் அனேகமாக உயிரே போய்விட்டது. அம்புலன்சைக் கொண்டுவருமாறு கத்தினான். பிறகு அவனை மருத்துவமனைக்கு அவசரமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டு போக வேண்டியிருந்தது. சகோதரர்களை முகமூடியணியச் செய்து ஒரு வங்கியை கொள்ளையடிக்க வைத்தாள் அப்பெண். பிறகு நகர சதுக்கத்திற்கு அவர்கள் கொண்டு வந்திருந்த கரன்சிகளைத் தூக்கியெறிந்து காற்றில் பறக்க விட்டாள். அவற்றை எட்டிப் பிடிக்க மக்கள் இரண்டு மாடிக் கட்டிட உயரத்திற்கு எம்பி குதிப்பதையும் அந்த அழகான கரன்ஸி நோட்டுக்களைப் பறிப்பதற்காக ஆயிரமாயிரம் கைகள் உயர எழுவதையும் கண்டு அவள் மிகவும் பரவசமடைந்தாள். அவளும் சகோதரர்களும் எப்போதும் கத்திகள் வைத்திருந்தனர். நிறுத்தி வைக்கப்பட்ட கார்களை கண்டதும் அவற்றின் டயர்களை கத்திகளால் குத்திக் கிழிப்பர். பிறகு இரவில் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிடுவர்.

சகோதரர்களை சுற்றி சுற்றி வந்த பெண்கள் கூட்டத்துடன் அவள் நன்றாகவே பழகினாள். அவர்கள் விஷயத்தில் தலையிடாமல் அமைதியாக ஒரு பக்கமாக இருந்து விடுவாள். அந்தப் பெண்களும் சகோதரர்களும் ஒருவரையொருவர் கேலி செய்து விளையாடுவதையும் கூடிக் குலாவுவதையும் பார்த்துக் கொண்டிருப்பாள். அவள் மேக்-அப் செய்து கொள்ள மாட்டாள். நகை நட்டுகள் அணிந்து கொள்ளவும் மாட்டாள். ஆயினும் மிகவும் ஒயிலாக இருப்பாள். பளபளவென்ற அவளது தலைமுடி இயல்பாகவே பின்பக்கமாக வாரிவிட்டது போல படிந்திருக்கும்.

போதையேறும் வரை குடிப்பது அவளுக்குப் பிடிக்கும். போதை ஏறியவுடன் ஆடையேதுமின்றி வெளியே ஓடி பனிமீது உருண்டு புரளுவாள். கோடைக்காலத்தில் கடுமையான மழையும் காற்றும் அடிக்கும்போது -அப்போது சாலைகளில் விழும் மழைத்துளிகளைக் காற்று சுழற்றியடிக்கும்- குடையோ மழைக்கோட்டோ ஏதும் இல்லாமல் வெளியே சென்று மிக கனத்த மழையிலும்கூட ஓடுவதும் சொட்டச் சொட்ட நனைவதும் அவளுக்குப் பிடிக்கும்.

அந்தக் கூட்டத்திலிருந்த மற்ற பெண்களுக்கு சகோதரர்களிடம் அவளுக்கிருந்த மதிப்பைக் கண்டு பொறாமை. சொல்லப் போனால் நகரவாசிகள் அனைவருமே அவளை வெறுத்தனர். ஆனால் அவர்கள் அவளைக் கொலை செய்ய நினைக்கும் ஒவ்வொரு முறையும், சகோதரர்கள் அவளை எப்படியாவது காப்பாற்றிவிடுவார். சரியான நேரத்தில் கொலைச் சதியைக் கண்டுபிடித்து அதற்கு முற்றுப்புள்ளி வைத்து விடுவர்.

அவளையும் அச்சகோதரர்களையும் போலிஸார் வேட்டையாடத் தொடங்கினர். நகர சதுக்கத்தில் நடைபெற்று வந்த நாய்ச் சண்டைக்கு அவர்கள் முற்றுப்புள்ளி வைத்தனர். போலிஸார் அப்படிச் செய்தது யாருக்கும் பிடிக்கவில்லை. எல்லாரும் முணுமுணுக்கத் தொடங்கினர். நாய்க் கொலை செய்ய சகோதரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த உரிமம் ரத்து செய்யப்பட்டது. கொரிய உணவகம் ஒவ்வொன்றுக்கும் முன்பும் போலிஸ் படையொன்று நிறுத்தப்பட்டது. உணவக உரிமையாளர்கள், நாய்களைக் கொலை செய்வதற்காக சகோதரர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை.

நகரத்தில் நான் தங்கியிருந்த நாட்களில் அதுதான் மிகவும் அமைதியான நாள். சிறிய வீதிகளிலும் சரி, பெரிய வீதிகளிலும் சரி, எங்கு பார்த்தாலும் மஞ்சள் நிற சீருடையணிந்த போலிஸ்காரர்கள். அவர்கள் கைகளில் மின்சார வத்திகள் இருந்தன. இடுப்புக் கச்சைகளில் துப்பாக்கிகள் தொங்கிக்கொண்டிருந்தன. அவர்களது அதட்டல்கள் நாலா பக்கமும் கேட்டன. உணவக உரிமையாளர்கள் போலிஸ்காரர்களுக்கு இடைவிடாமல் பீர் ஊற்றிக் கொடுத்துக் கொண்டிருந்தனர். "ஐயா என் கடைக்கு வாருங்கள், எங்கள் செலவில் ஒரு கோப்பை பீர் அருந்துங்கள்".

இடுப்பில் கத்திகளை செருகி வைத்துக்கொண்டிருந்த இளைஞர்கள் காணாமல் போய்விட்டார்கள் போலும். போலிஸ்காரர்களின் மோட்டார்சைக்கிள்கள் எழுப்பும் பீதியும் உறுமல்களைத் தவிர வேறு ஏதும் காதில் விழவில்லை. திரையரங்குகளுக்கு முன்னால் இருந்த மக்கள் பழையபடியே சலிப்புத் தட்டியவர்களாகவே காணப்பட்டனர். நாடக அரங்குகள் இழுத்து மூடப்பட்டிருந்தன.

இப்போது பனிக்காலம், அடர்த்தியான மஞ்சள் நிறக் கழிவு வாயு நகரத்தின்மீது இப்போதும் பரவிக்கொண்டுதான் இருக்கிறது. கந்தக அமிலம், தூசி, கரிப்புகை ஆகியவற்றிலிருந்து வரும் மூச்சைத் திணறடிக்கும் நாற்றம் முன்னைக் காட்டிலும் அதிகமாக இருந்தது. மூலை முடுக்கு எல்லாவற்றிலும் அது பரவிக் கொண்டிருந்தது. பிரதான சாலைகளின் இருபுறமிருந்த மரங்களும் கன்னங்கரேலென்றாகி சாலையோரமாகக் குவிந்து கிடக்கின்றன. மாசடைந்த பனிகட்டிகள் கூட ஆயிரமாயிரம் ஓட்டைகள் நிறைந்து கருமை பாரித்துக்கிடக்கின்றன. வடதிசையிலிருந்து வீசும் கடுமையான குளிர்க்காற்று மனிதர்களின் உடல்களை ஊடுருவிக் கடந்து செல்கிறது. இரவு வந்ததுமே, வழக்கம்போல் கனவு காண்பவர்கள் நினைவு கூர்ந்து சொல்லும் பயங்கரக்கதைகளும், தீட்டப்படும் கத்திகளின் ஓசையும் நகரமெங்கும் நிறைந்திருந்தன.

நகரம் உண்மையிலேயே ஒரு வழியாக அமைதியாகிவிடும் என்று நினைத்தேன், நகரத்தை விட்டு நான் சென்ற அன்று என்னருகில் நின்றுகொண்டிருந்த ஒரு போலிஸ்காரனிடம் - சகோதரர்களைப் போலவே அவனும் ஒரு இளைஞன் -கேட்டேன், "எல்லோரும் சொல்வதைப்போல, அவர்களை உண்மையிலேயே கொன்று விட்டீர்களா?" அவன் என்னை ஓரக் கண்ணால் பார்த்தபடி குரலைத் தாழ்த்தி அச்சகோதரர்கள் ரகசியமாக போலிஸில் சேர்ந்து வெகு நாளாகிவிட்டன என்று சொன்னான். என் முகத்தில் தெரிந்த வியப்பைக் கண்டதும் இன்னும் பெருமையாகச் சொல்லத் தொடங்கினான், "வசந்த காலம் வந்ததும் சகோதரர்கள்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமது வேலையை மீண்டும் தொடங்குவார்கள். இப்போது அவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களது சாதனைகளை எண்ணிப்பார்த்து எதிர்காலத்துக்குத் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றனர். பூனை இப்போது பதுங்கியிருக்கிறது. ஒவ்வொராண்டும் இப்படித்தான்." எந்தவித எச்சரிக்கையுணர்வும் இல்லாமல் அவன் என்னிடம் பேசினான். "அந்தப்பெண்? அவளுக்கு என்ன ஆயிற்று?" என்று கேட்டேன் நான். "எந்தப் பெண்?" - எரிச்சலில் அவனது நெற்றி சுருங்கியது. "அவளை - எப்போதோ கொன்று விட்டார்கள்." "அவளைக் கொன்று விட்டார்களா? கொன்றது யார்? சகோதரர்களா?" "இல்லையில்லை, அந்தக்கூட்டம்தான் அவளைக் கொன்றது. சகோதரர்கள் கொஞ்சம் கவனக் குறைவாக இருந்தபோது அவர்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அவளைக் கொன்று விட்டார்கள்." எப்படிக் கொன்றார்கள் என்பதை அவன் தனது கழுத்தில் கையை வைத்துக் காட்டினான். "சரியான சனியன் அவள்" என்றான் அவன்.



.38 IQ

நன்றி: *International Herald Tribune*

## ஈர்த்துல்

எங்கோ வெடித்தது
வெடி ஒன்று பலமாய்.

தொட்டிலில் கிடந்த குழந்தை
அழுதது சப்தம் கேட்டு.

புணர்ந்து கொண்டிருந்த
நாய்கள் கலைத்து விலகின
எங்கோ குலைத்தவாறு.

சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள்
ஓடி வந்து வானம் பார்த்தார்கள்
எச்சில் கையுடன்.

சப்தம் குறைய
உலகம் வாழத்திரும்பியது
மெல்ல... மெல்ல...
அவரவர் வேலைகளுக்கு.

மீண்டும்
இன்னொரு
வெடிச் சப்தம் கேட்கும் வரை.

**ஆபுத்திரன்** (தமிழ் நாடு)

## எதையோ...

எதையோ
எதற்கோ
எதிர்பார்க்கிறேன்.
எதை?
ஒரு மழை...
ஒரு இடி...
ஒரு மின்னல்...
ஒரு முத்தம்...

எதையோ தினமும்
எதிர்பார்க்கிறேன்
எல்லோரிடமும்.
ஒரு 'ஆமாம்'
ஒரு 'இல்லை'
ஒரு 'தலையாட்டல்'
ஒரு 'நிராகரிப்பு'

உங்களிடம்
எதை எதிர்பார்த்து
ஏமாந்துபோகிறேன்
தினம்
தினம்?

-**ஆபுத்திரன்** (தமிழ் நாடு)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜீவாவின் பக்கம்

## ஒரு கலைஞனின் மரணம்!

*'ஒருகலைஞனின் மரணம் வெறும் செய்தியாகப் போய்விடக் கூடாது',* அந்தக் கலைஞனின் பங்களிப்பு வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டும். அத்தகைய அற்புதமான கலைஞன் 'நடிகவேள்' லடீஸ் வீரமணி மரணித்துப் போனார். மே மாதம் முதல் வாரம் கலைஞனின் மகத்தான மரணம் நிகழ்ந்து விட்டது.



ஒரு சாதாரண மனிதனின் சவ அடக்கம் போல அவன் கதை முடிந்து விட்டது. நான்கு தசாப்தங்களாக தமிழ் நாடக மேடையில் தனித்துவம் மிக்க கலாபிமானியாகக் காட்சியளித்த நடிகவேள் லடீஸ் வீரமணியின் கலையுலக பங்களிப்பு பதிவு செய்யப்பட வேண்டியதொன்றாகும்.

நாடகத்தை தன் வாழ்வாக, தொழிலாக, தொண்டாக வாழ்ந்த வீரமணி...... தமிழ் நாடக மேடையில் விஸ்வரூப தரிசனம் தந்த கலைஞராவார். நடிகவேள் லடீஸ் வீரமணி நாடகமேடையின் சகல நுட்பங்களையும் அறிந்தவர். நடிப்பு முதல் காட்சியமைப்பு வரை இவருக்குக் கைவந்த கலையாகும். இன்று தலைநகரில் சிறந்த நடிகர்களாகத் திகளும் பலர் இவர் பாசறையில் பயிற்சி பெற்றவர்களே.

தமிழ் நாடக மேடையின் 'மைல் கல்' எனப் பேராசிரியர் கைலாசபதியால் வர்ணிக்கப்பட்ட 'பொம்மலாட்டம்' நாடகத்தின் நாயகன் நடிகவேள் லடீஸ் வீரமணி. இதன் நெறியாளர் சுஹைர் ஹமீட். கவிஞர் அம்பியின் 'வேதாளம் சொன்ன கதை' நாடகத்தில் பிசாசாக நடித்தார். தமிழகத்துப் படைப்பாளி ஜெயகாந்தனின் 'யாருக்காக அழுதான்' அப்பாவி ஜோசப்பாக காட்சியளித்தார். இப்படி எத்தனையோ சொல்லலாம்......

நடிப்புத்துறையில் மாத்திரமின்றி தமிழர்களின் பாரம்பரிய கிராமிய கலைகளான 'வில்லிசை' யில் வீரமணியாக திகழ்ந்தார். மகாகவியின் 'கண்மணியாள் காதை' யை வில்லிசைத்துப் பாடியுள்ளார். இந்த நிகழ்ச்சி இலங்கையின் பல பாகங்களிலும் அரங்கேறியுள்ளது.

வாழ்வில் பலரை நெறிப்படுத்திய இந்த கலைஞனை நெறிப்படுத்தி வழிகாட்டியவர் முற்போக்கு இலக்கிய முன்னோடி அறிஞர் அ. ந. கந்தசாமி. இந்த அறிஞரின் மறைவு நடிகவேள் லடீஸ் வீரமணிக்கு மாத்திரமல்ல..... என் போன்றவர்களுக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.

கலைத்துறையின் ஒருசாதனையாளனாக, மக்களை தன் ஆளுமையில் மகிழ்விக்கும் கலைஞனாகத் திகழ்ந்த வீரமணியின் மறுபக்கம் சோகம் நிறைந்ததாகும். வறுமை அவரை வாட்டியது, சோதனைகள் தொடர்ந்து வந்தது. நோய் அவரைச் சிதைத்தது.

ஆனால் அந்தக் கலைஞன்..... தன் ஆன்ம பலத்தாலும், வித்துவச் செருக்கினாலும்...... என்றும் நடிகவேளாகத் திகழ்ந்தான்.

இன்று அவனில்லை. ஆனால் அவனது பன்முக ஆற்றல் பதிவு செய்யப்படல் வேண்டும். நாளைய தலைமுறைக்கு அவை வரலாற்று ஆவணப் பதிவு செய்து பாதுகாக்கப்பட வேண்டும்.

## ஒரு படைப்பாளியின் பங்களிப்பு

அறுபதுகளில் இலக்கிய உலகில் அதி அற்புதமான படைப்பாளியாக முகிழ்ந்தவர் எழுத்தாளர் செ. யோகநாதன்.

செ. யோகநாதன், செம்பியன் செல்வன், செ. கதிர்காமநாதன், செங்கை ஆழியான், அங்கையன் கைலாசநாதன், பெனடிக் பாலன்...... இப்படி ஒரு இளைய தலைமுறை ஈழத்து இலக்கிய உலகில் பேனா பிடித்து சாதனை புரிந்தது. ......செ. யோகநாதனும், செங்கை ஆழியானும் படைப்பிலக்கியத்துறையில் கணிசமான பங்களிப்பைச் செய்து வருகின்றனர்.

ஆனால் தமிழ்நாட்டில் தஞ்சமாகிவிட்ட செ. யோகநாதன் தமிழகப் படைப்பாளிகள் மத்தியில் பெயர் சொல்லக்கூடிய ஆளாக இருக்கிறார். படைப்பிலக்கியத்திற்காக பல பரிசுகளைப் பெற்றுள்ள இவர் 1994-ம் 'இலக்கிய சிந்தனை' என்ற அமைப்பின் பரிசை 'நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே' என்ற நாவலுக்காகப் பெற்றுள்ளார். இதனை வெறும் நாவல் எனக் கூறிவிட முடியாது. ஒரு வரலாற்று ஆவணம். தமிழில் குறிப்பிடத் தகுந்த வரலாற்று நாவல்.

அது மாத்திரமல்ல... இந்தப் படைப்பிலக்கியவாதி புதிய சாதனை ஒன்றைப் படைத்துள்ளார். ஈழத்துச் சிறுகதைகளை உச்சி மோந்து உவந்து உலக அரங்கிற்குக் கொண்டு வந்துள்ளார்.

"இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள்" என்ற தலைப்பில் இரண்டு தொகுதிகளைக் கொண்டு வந்துள்ளார்.

முதல் தொகுதிக்கு இலங்கையர்க்கோனின் 'வெள்ளிப் பாதசரம்' என்ற தலைப்பைச் சூட்டியுள்ளார். இரண்டாம் தொகுதிக்கு மலையகச் சிறுகதை முன்னோடி என். எஸ். எம். ராமையாவின் 'ஒரு கூடைக் கொழுந்து' என்ற நாமகரணத்தைச் சூட்டியுள்ளார்.

முதல் தொகுதியில் இருபத்தேழு எழுத்தாளர்களின் முப்பத்தேழு சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. இரண்டாம் தொகுதியில் முப்பத்தேழு எழுத்தாளர்களின் ஐம்பத்தேழு கதைகள் இடம் பெற்றுள்ளன.இரண்டு தொகுதிகளையும் முறையே முதலாவது பேராசிரியர் கைலாசபதிக்கும், சி. வி. வேலுப்பிள்ளைக்கும்; இரண்டாவது படைப்பாளி கே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டானியலுக்கும், கவிஞர் சுபத்திரனுக்கும் சமர்ப்பணம் செய்துள்ளார்.
இதைத் தொடர்ந்து படைப்பாளி செ. யோகநாதன் இன்னும் மூன்று தொகுதிகளை வெளியிடவுள்ளார். மூன்றாவதும் ஈழத்துச் சிறுகதைகள்; நான்காவது தொகுதி புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்களின் கதைகள்; ஐந்தாவது தொகுதி ஈழத்து எழுத்தாளர்களின் குறுநாவல்கள்.
"ஈழத்து படைப்பிலக்கிய வளர்ச்சிக்கு உழைத்த அனைவரையும் இந்தத் தொகுதிகளில் இடம் பெறச் செய்யவிரும்புகிறோம்......
"ஈழத்தின் எல்லாத் திசைகளிலிருந்தும் எழுதும் படைப்பாளிகள் இத் தொகுதிகளில் இடம் பெறுகிறார்கள். பிரதேச இலக்கியச் செழுமை நிறைந்த இவர்களின் படைப்புகள் பன்முகப்பட்டவை மட்டுமல்ல, நம்மை பிரமிக்கவும் செய்கின்றவை........" என்கிறார் செ. யோகநாதன். இத்தகைய சிறப்பு மிகுந்த பணிக்காக அவரை வாழ்த்த வேண்டியது நமது கடமை அல்லவா.......
**Mr. S. YOGANATHAN,**
**27, 2nd STREET, KUMARAN COLONY, VADAPALANI.**
**MADRAS 600 026. INDIA.**

## தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு குறுகிய குழு மனப்பான்மை மறக்கப்பட வேண்டும்!

"தமிழ் இலக்கிய வளர்ச்சியை 21-ம் நூற்றாண்டை நோக்கி வளர்த்துச் செல்லும் பணியில் நாங்கள் எங்களுடைய குறுகிய குழு மனப்பான்மையை மறந்து ஐக்கியப்படுதல் வேண்டும்." இவ்வாறு அவுஸ்ரேலியாவிலிருந்து நாடு திரும்பிய பிரபல எழுத்தாளரான திரு எஸ். பொன்னுத்துரை (எஸ். பொ) தெரிவித்தார்.
"அறுபதுகளிலே தமிழ்நாட்டு எழுத்தாளர்களைப் பார்க்கிலும் நாங்கள் எவ்வகையிலும் பின் தங்கிவிடவில்லை என்று ஆக்ரோஷமாகக் குரல் கொடுத்தோம்.
"இருபத்தொராம் நூற்றாண்டில் தமிழ் கலை இலக்கியப் படைப்புகள் உலகளாவியதாக வியாபித்திருக்கும். ஈழத் தமிழர் புலம் பெயர்ந்து வாழும் அவுஸ்ரேலியாவிலும் கனடாவிலும் ஐரோப்பாவின் பல நாடுகளிலும் பற்றார்வம் மிக்க புதிய கலை இலக்கியப் படைப்பாளிகள் தோன்றி வருகிறார்கள்.
"அவர்களது படைப்பில் புதிய சுருதிச் சங்கதிகளும் சொல்லப்படுகின்றன. படைப்பகளுக்கு புதிய கலை இலக்கிய வடிவங்களைத் தேடி அமைக்கிறார்கள்.
"இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் எழுத்தாளர்கள் கனவு கூடக் காண முடியாத புதுமையையும் அவை கொண்டிருக்கின்றன. இத்தமிழர்கள் குடியேறியுள்ள நாடுகளில் தங்கள் இனத்தின் தனித்துவ கலாச்சார அடையாளங்களுக்காக ஒரு வகை ஆவேசமும் வெறியும் இவர்களுடைய படைப்புகளில் ஓங்காரமிடுகின்றன.
"இன்று 21ம் நூற்றாண்டில் தமிழ் கலை இலக்கியப் படைப்புகளில் புதிய வளர்ச்சியைக் கோடிகாட்டுவனவாக அமைந்துள்ளன. இவை இலங்கை மண்ணில் கொண்டுள்ள பற்று என்பதையும் நாம் மறந்து விடலாகாது. அவர்கட்கு ஆதாரமாக விளங்கக் கூடிய நுண்ணியமான படைப்புகள் ஈழத்து படைப்புகளிடமிருந்து தோன்றியதாக வேண்டும்.
"இத்தகைய வளர்ச்சிக்கு புலம் பெயர்ந்த தமிழர்களும் புலம் பெயர்ந்த படைப்பாளிகளும் ஈழத்தமிழ் படைப்பாளிகட்கும் இடையில் இரு வழிப் பாதை கொண்டதான கலை இலக்கியப் பரிவர்தனை நடத்தப்பட வேண்டும்.
"இந்த ஆரோக்கியமான பரிவர்த்தனைக்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதுதான் என் ஈழ விஜயத்திற்கான பிரதான நோக்கமாகும்." என்றார் எஸ். பொ.
தமிழக விஜயம் பற்றிக் கூறுகையில், "ஈழத்து படைப்பாளிகளின் பழகுத் தமிழை விளங்கிக் கொள்வதற்கு தனியே ஒரு அகராதி வேண்டும் என்ற கேலிப் பேச்சுகள் தமிழ் படைப்பாளிகள் மத்தியில் பழங்கதையாய் ஆகிவிட்டது.
"அவுஸ்திரேலியாவிற்கு சென்ற ஆண்டிலும் இந்த ஆண்டிலும் விஜயம் செய்த இந்திரா பார்த்தசாரதி, மாலன் போன்றவர்களும் எழுத்தாளரும் பத்திரிகையாளரும் நாடகக் கலைஞருமான 'பரிக்ஷா' ஞாநி போன்றவர்களும் புலம்பெயர்ந்த நாடுகளில் நிலைத்துள்ள தமிழ் ஆர்வத்தைக் கண்டு வியப்படைந்தார்கள்.
"ஈழத்தமிழர்களுடைய இந்த ஆர்வம் தமிழ் கலை இலக்கியம் சர்வதேச மயமாகிக்கொண்டிருப்பதைக் கண்டிருக்கிறார்கள். நாளைய சந்ததியினருக்கு இருபதாம் நூற்றாண்டின் படைப்பு முதிசமாக எதை விட்டுச் செல்லலாம் என்பது குறித்து இந்திரா பார்தசாரதியும் நானும் பல சந்தர்ப்பங்களில் கலந்து உரையாடினோம்.
"இந்த உரையாடல்களின் விளைவாக இருவரும் முனைந்து ஒரு கதைக் களஞ்சியத்தை உருவாக்கத் தீர்மானித்தோம். இது பல தொகுதிகள் கொண்டதாக அமையும். இவ்வாறே கலை இலக்கியப் படைப்பின் பொதுத் துறைகளைச் சார்ந்த நூல்களை வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.
"தமிழ்நாட்டுப் படைப்பாளிகளின் சாத்தியமான ஒத்துழைப்புடன் தான் இவற்றைத் தொகுத்து தரமான நூல்களாக வெளியிடவேண்டும்.
"இந்த இலக்கிய முயற்சிகளுக்கு தமிழ் நாட்டு கலை இலக்கிய வாதிகளின் ஆதரவுகளைத் திரட்டும் நோக்கமாகவே தமிழகம் செல்கிறேன்.
"சர்வதேசத் தமிழ் கலை இலக்கியப் பரிவர்த்தனைக்கு தமிழ்நாட்டில் ஒரு தலைமையான அமைப்பு மிகவும் உதவியாக இருக்கும். இந்த அமைப்பினைத் தோற்றுவிப்பதற்கும் இத்திட்டத்தைப் பயன்படுத்த எண்ணி உள்ளேன்." இவ்வாறு தெரிவித்தார் எழுத்தாளர் எஸ்.பொ.. ☐

# ஜீவாவின் பக்கம்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எங்கள் பக்கம்



* 'காலச்சுவடு' - மீண்டும் வெளிவருகிறது. வெளிநாட்டுச் சந்தா: ரூ300-
'KALACHCHUVADU', 151, K. P. Road, Nager coil 629001. India.

* PERIYAR ERA - English monthly வெளிநாட்டுச் சந்தா: 200$
19, Murugappa street, Chepauk, MADRAS 600 005. India.
பிரதம ஆசிரியர் வே. ஆனைமுத்து. « ஆறு கோடி மக்கள் மிகவும் மோசமான நிலையிலுள்ளனர். இந்நிலையை அகற்ற புதிய தலைமை அவசியம் » என்று பெரியார் இராவின் ஆசிரியர் தலைப்பு விழிக்கிறது. « வெளிநாட்டுத் தமிழர்கள் நூறு பேர் சந்தா அளித்தால் எம்மால் நிறையவே செய்யலாம் » என்கிறது பெரியார் இரா.

* 'பூவரசு' - இனிய தமிழ் ஏடு என்ற அறிவிப்புடன், தனது 4-வது ஆண்டைத் தாண்டி ஜேர்மனியிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கிறது.
POOVARASU, Sinniah Maheswaran, Otto Brenner allee 56, 28325 BREMEN, Germany.

* 'சுவடுகள்' - 1988-ல் இருந்து வெளிவந்து கொண்டிருக்கிறது.
SUVADUGAL, Herslebs GT 43, 0578 OSLO- Norway.

* 'சிறுவர் அமுதம்' - ஐந்தாண்டுகளாக ஜேர்மனியிலிருந்து சிறுவருக்கான இதழாக வெளிவருகிறது.
SIRUVAR AMUTHAM, Im Winkel-2, 50189 dulsdorf. Germany.

* 'அ ஆ இ' - இலங்கைக் கலாச்சாரக் குழுவின் வெளியீடாக வெளிவருகிறது.
A. AA. IE. Post bus 85326, 3508 AHUTRECHT. Nederland.

* 'மீட்சி' - பத்திரிகையாளர், ஆய்வாளர், பல்துறை அறிஞர், சமூகத் தொண்டர் கொண்ட ஒரு சுயேட்சைக் குழுவின் படைப்பு.
MEEDCHI, Tamil Information Centre, Tamil House, 720 Romford Road, London E12 6BT. U.K.

* 'புலம் பெயர்ந்த தமிழர் நல மாநாடு சிறப்பு மலர்'
1994. டிசம். 18-ல் திருச்சியில் நடைபெற்ற மாநாட்டில் வெளியிடப்பட்டது.
வெளியீடு: நிறப்பிரிகை, அஞ்சல் பெட்டி எண் 192, பாண்டிச்சேரி 605 001.
விடியல் பதிப்பகம், 3 மாரியம்மன் கோயில் வீதி, உப்பிலிப் பாளையம், கோயம்புத்தூர்- 641 015. இந்தியா.

* 'சிற்றிதழ் செய்தி' ஆய்விதழாகத் தன்னை வரையறை செய்து, கைக்கு அடக்கமான அளவில் வெளிவருகிறது. சிற்றிதழ்களைத் தொகுத்து வரலாறு கட்டுவதில் முனைப்பாகவுள்ளது.
ஆசிரியர்: பொள்ளாச்சி நசன். சம்பத் நகர், சூளேஸ்வரன் பட்டி, பொள்ளாச்சி 642 006. இந்தியா

> *« ஜேர்மனியிலிருக்கும் நீங்கள் ஜேர்மன் மொழியையும், இதேபோல் மற்றைய ஐரோப்பிய நாட்டில் வாழும் நம்மவர் குழந்தைகள் அந்தந்த நாட்டு மொழியையும் கற்று வருகின்றனர். இன்று உங்கள் உறவினர்கள் உலக நாடெங்கிலும் பரந்து வாழ்கின்றனர். நீங்கள் ஒன்றாகச் சந்திக்கும் வேளையில் எந்த மொழியில் கதைத்துக் கொள்வீர்கள்? நீங்கள் ஜேர்மன் மொழியிலும், அவர்கள் அவர்களது மொழியிலும் பேசினால் புரிந்து கொள்ள முடியுமா? இதற்காகவாவது ஒரு பொது மொழி வேண்டும். அதற்கு எம் தாய் மொழியை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமானது. »*
>
> 'சிறுவர் அமுதம்' (19. 03. 1995) தலையங்கத்திலிருந்து.......



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* *'சுமைகள்'* வடிவ மாற்றத்துடன் மீண்டும் தன் பயணத்தைத் தொடங்கியுள்ளது.
SUMAIGAL, Post boks 415, 9001 Tromso. Norway.

* ***'25 கவிதைகளும் 500 கமாண்டோக்களும்'***
தொகுப்பு: யமுனா ராஜேந்திரன்.
மொஹமத் தார்வீஷின் 25 கவிதைகள் தமிழில் ஒரு தொகுப்பாக வெளிவந்துள்ளது.
SNEHA, 348 T.T.K. Road, 1st Flour, Rayapettah, Madras 600 014. India.

* **'புலம் பெயர்ந்தோர் கதைகள்'** (10 சிறுகதைகளின் தொகுப்பு)
**'மகாஜனன்'** ஆண்டு மலர் 1995
இரு வெளியீடுகளை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வெளியிட்டுள்ளது.
S. Manoharan, 210 Ave. du 8 Mai 1945, 93150 Le Blanc Mesnil, France.

* **'தீவுகளின் சந்திப்பு'** (புதுவை ரா. ரஜனியின் சிறுகதைகள்)
புதுவை ரா. ரஜனி,
13 திருவள்ளுவர் வீதி, திலகர் நகர், தட்டாஞ்சாவடி அஞ்சல், புதுச்சேரி 605 009. இந்தியா.

* **'கவிதை'** (இளம் கவிஞர்களுக்கான இரு திங்கள் ஏடு)
ஆசிரியர்: அ. யேசுராசா,
இல.1 ஓடைக்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்

* **மௌனம்** - *மீளவும் வெளிவர முனைகிறது. அகதியிருப்பின் புலப் பெயர்வுகளால் பல் வேறு நெருக்கடிகளை அனுபவித்து நீண்ட இடைவெளின் பின் தடை தாண்டுகிறது.*

*வாசகர்கள், எழுத்தாளர்கள், ஆதரவு நல்குவோர்,...... என அடிக்கடி விசாரிப்புகள்.*

*சிறு சஞ்சிகை வரலாற்றில் இது ஒன்றும் பெரிய விடயமில்லை என்கிறீர்களா?*

*ஆயினும், உயிரினத்தின் பேறு காலத்துக்கு ஒரு கால வரையறையுண்டு, அதன் மேலும் தரிக்க நேர்ந்தால்..... சத்திர சிகிச்சை, அதையும் மீறினால் முடிவு சொல்ல முடியாத பரிதவிப்பு நிலைதானே மிஞ்சும்.*

*ஆனால் இந்த 'அகதி வாழ்வின் எழுத்துயிர்' பிறப்புக்கு என்ன கால வரையறையை கொடுத்திட முடியும்?*

*மௌனம்-5 சுமார் 14 மாதங்களாக கணணிக் கருவறைக்குள் தங்கி விட்டது. எழுத்து-வாக்கியங்களுக்கு உயிர் கொடுத்த அனைவரையும் பரிதவிக்க வைத்துவிட்டது. வெளிப்பாட்டின் பிசகினால் ஆக்கங்கள் நொய்ந்து, துடிப்பிழந்து -நீர்த்துப்- போய் விடுமல்லவா? இத்தவறுக்காக மௌனம் மன்னிப்புக் கோருகிறது.*

* *மௌனம் வியாபாரப் பத்திரிகையல்ல. இதன் ஒவ்வொரு பக்கங்களும் பலரது அர்ப்பணிப்புகளால் செதுக்கப்பட்டவை. இந்த முயற்சி பற்றிய கருத்துகளை அறிய ஆவல் கொண்டுள்ளோம்.*

*எங்களுக்கு பல் வேறு இதழ்களை அனுப்பிவரும் சக இதழாளர்களுக்கு எம் நன்றிகள். இனி வரும் இதழ்கள், வெளியீடுகள் பற்றி எங்கள் பக்கத்தில் பதிவிடுவோம். இவ்விதழ் உயிருட்டத்திற்கு உறுதுணை வழங்கிய எழுத்தாளர்கள், நல் நெஞ்சங்கள், மற்றும் இதழ் தொகுப்பிற்கு உதவிய கணணி தட்டெழுத்தாளர்கள், இடம் பெற்றுள்ள படங்களுக்குரியவர்கள், வாசகர்கள் அனைவருக்கும் எம் நன்றிகள்.*
- வெளியீட்டாளர்

கிடைக்கப் பெற்றோம்:
**நடைமுறை பிரஞ்சு** - Le Français courant
ஆக்கியோர்: வசந்தி பிரகலாதன், தேவராஜா பிரகலாதன்

வெளியீடு: Association Socio Culturelle Educative Srilankaise (A.S.C.E.S)
62. Rue du Poteau, 75018 Paris.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நூல் விமர்சனம்

# இந்து - இந்தி - இந்தியா

எஸ். வி. இராஜதுரை – மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 1993


## சமுத்திரன்

1\. எஸ். வி. இராஜதுரையின் இந்து- இந்தி- இந்தியா (இஇஇ) பல காரணங்களால் முக்கியத்துவம் பெறும் நூலாகும். எனது அபிப்பிராயத்தில் இரண்டு காரணங்கள் அதி முக்கியத்துவம் பெறுகின்றன.

**இந்தியாவின் சிக்கல் மிகு தேசிய இனப் பிரச்சனை பற்றிய ஒரு ஆய்வுக் கூடாக நம்மை உப கண்டத்தின் தேசிய வாதங்கள் பற்றிய ஒரு விவாதத் தளத்திற்கு அழைத்துச் செல்கிறது.**

1\) எனக்குத் தெரிந்த வரையில் சம காலத்து இந்திய அரசியலைப் பலமாகப் பற்றியுள்ள இந்து அடிப்படை வாதம் (இந்துத்துவம்), அத்துடன் நெருங்கிய உறவு கொண்டிருக்கும் இந்தியத் தேசிய வாதம், இவற்றின் ஆதிக்கத்தாலும்- நியாயப்பாடு வழங்கும் இந்திய அரசின் அதிகார மையப்படுத்தலாலும் பாதிக்கப்படும் அந்நாட்டில் வாழும் தேசிய இனங்களின், ஆதிவாசிகளின், தலித்துக்களின் உரிமைப் பிரச்சனைகள் போன்றவை பற்றி வரலாற்றுப் பார்வையில் விரிவாக ஆராய்ந்துள்ள முதலாவது தமிழ் நூல்.

2\) எஸ். வி. ஆரின் இந்த நூல் தேசிய இனப் பிரச்சனை பற்றி, தேசியவாதம் எனும் கருத்தமைவு (IDEOLOGY) பற்றி, சமீப காலங்களில் மார்க்சிய வட்டாரங்களில் இடம்பெறும் புதிய விவாதங்கள் பற்றி வாசகர்கள் அறிந்து கொள்ள ஓரளவு உதவலாம். தேசியவாதம் பற்றிய புரிந்துணர்வின் போதாமை, அதைத் தெளிவாக வரலாற்று ரீதியில் கோட்பாட்டு ரீதியில் எதிர் கொள்ளாமை மார்க்சிசத்தின் பெரும் குறைபாடு எனக் கூறலாம். இந்தக் குறைபாடு மார்க்சிசத்தின் வரலாற்று ரீதியான தோல்வி என டொம் நாய்ன் (Tom Nairn) பதினான்கு வருடங்களுக்கு முன் தனது நூலில் குறிப்பிட்டார். ஆயினும் இதற்கு முன்பும், இதைத் தொடர்ந்தும் தேசிய இனப் பிரச்சனை, தேசிய வாதம், சுயநிர்ணயம் பற்றிய விவாதங்கள் மார்க்சிச சமூக விஞ்ஞான வட்டாரங்களிலும், அரசியல் இயக்கங்கள் மத்தியிலும் இடம் பெற்று வந்துள்ளன. இவற்றின் விளைவாக மார்க்ஸ்-ஏங்கல்ஸ் கொண்டிருந்த கருத்துகள் முதல் லெனின், கௌட்ஸ்கி (Kautsky), லக்சம்போக் (Luxemburk) போன்றோரின் கருத்துகள் வரையில் ஆழமான விமர்சனங்கள் வெளி வந்துள்ளன. இது மட்டுமன்றி இன்றைய விவாதங்கள் இதுவரை இடதுசாரிகள் மத்தியில் பிரபல்யம் பெற்றிராத ஆஸ்திரிய (Austrian) மார்க்சிஸ்டான ஒட்டோ பௌர் (Otto Baur) போன்றோரின் அணுகு முறைகள் பற்றியும், பிரபல்யம் பெற்ற இத்தாலிய மார்க்சிச சிந்தனையாளரான கிராம்ஷி (Gramsci) யின் மேலாட்சி (Hegenony) கோட்பாட்டின் பயன்பாடுகள் பற்றியும் அறியத் தருகின்றன.



நடைமுறையில் சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பா, சீனா போன்ற நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் தேசிய இனப் பிரச்சனைகளைக் கையாண்ட விதங்கள் பற்றியும் இன்று நமக்கு முன்னர் மறைக்கப்பட்ட பல உண்மைகள் தெரிய வந்துள்ளன. மொத்தத்தில் சர்வதேச ரீதியில் கொள்கை (Theory) நடைமுறை ஆகிய இரு மட்டங்களின் குறைபாடுகளிலும் தோல்விகளிலும் இருந்து மார்க்சிய வாதிகள் படித்துப் பயன்பெற பல பாடங்கள் உள்ளன. இந்தப் பின்னணியில் நமது சமூகங்களை இன்று ஆட்டிப்படைக்கும் தேசிய இனப் பிரச்சனைகளைப் பற்றிய நமது அனுபவங்களையும் ஆய்வுகளையும் மீள் மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியத்தையும் நாம் உணர்கிறோம்.

இஇஇ இந்தியாவின் சிக்கல் மிகு தேசிய இனப் பிரச்சனை பற்றிய ஒரு ஆய்வுக் கூடாக நம்மை உப கண்டத்தின் தேசிய வாதங்கள் பற்றிய ஒரு விவாதத் தளத்திற்கு அழைத்துச் செல்கிறது. தேசம் (தேசிய இனம்) தேசிய வாதம் என்பனவற்றைக் கோட்பாட்டு ரீதியில் கிரகிக்க எஸ். வி. ஆர் பயன்படுத்தும் அணுகுமுறைக்கு பெனடிக் அண்டர்சன் (Benedict Anderson) என்பார் « Imagined Comunity » எனும் நூலில் முன் வைத்த கருத்துக்கள் பயன்பட்டுள்ளன.

நவீன தேசிய வாதத்தின் உருவாக்கத்தையும்,- பரவலாக்கலையும் பற்றிய அண்டர்சன் முன் வைத்துள்ள விளக்கம் தேசிய உணர்வு, தேச அரசு (NATION. STATE) ஆகியன பற்றி குறிப்பிட்ட வரலாற்று நிலமைகளின் அடிப்படையில் விளங்கிக் கொள்ள உதவுகிறது. மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவத்தின் வரலாற்றுடன் இணைந்த தேசிய உருவாக்கத்திலிருந்து வேறுபட்ட நிலமைகளைக் கொண்ட காலனித்துவ நாடுகளின் தேசிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாதம் பற்றி ஆராயும் போது அங்குள்ள இரு மொழி அறிவாளிகளின் (Bilingual Intellectuals) கருத்தமைவு ரீதியான பங்கு பற்றி அண்டர்சன் விளக்குகிறார். மேற்கத்திய காலனித்துவ ஆட்சி யாளரின் மொழியுடன் தமது தாய் மொழியிலும் பாண்டித்தியம் பெற்ற உயர் வர்க்க அறிவாளிகளே தேசி யத்தின் கருத்து உருவாக்கத்திற் கும் அதை தேசிய உணர்வாக பரவலாக்குவதற்கும் வேண்டிய முயற்சிகளை மேற் கொள்கின்ற னர். ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவினர் தம்மை மற்றைய குழுவி னரிடமிருந்து வேறு பட்டவர்களாய் ஒரு விசேட கூட்டுணர்வின் அடிப்படையில் ஒரு இனமாக அடையாளப்படுத்தும் கற்பிதத்திற்கு (Immagining) ஊடாகவே தேசம் பிறக்கிறது. இந்தக் கற்பிதத்திற்கு அடிப்படையாக அமைவன அவர்களின் பிரதேசம், மொழி. அம்மக்களுக்குரிய வரலாற்று ரீதியான நினைவுகள், அவர்களின் பாரம்பரிய இணைப்பு பற்றிய கர்ண பரம்பரைக் கதைகள், பண்பாட்டு ஒருங்கிணைவும், அதன் அடையாளங் களும், ஒரு பொது எதிரிக்கு எதிராக வளரும் இன உணர்வு போன்றவையாகும். வர்க்கங்களையும், வேறு சில வேறுபாடுகளையும் ஊடறுத்துச் செல்லும் இந்தத் தேசிய உணர்வு பரவவும் வளரவும் நவீன கல்வி, தொடர்பு சாதனங்கள் உதவுகின்றன. இந்த ஊடகங்களின்றி நவீன தேசம் உருவாக முடியாது. தேசிய அறிவாளிகளும், அச்சு முதலாளித்துவமும் (Print Capitalism) தேசங்களின் உருவாக்கத்திற்கு இன்றியமையாதவை என்பதை அண்டர்சனின் நூல் தெளிவாக்குகிறது. தொலைக் காட்சி, சினிமா, மற்றைய கலை இலக்கிய ஊடகங்கள், தேசிய விழாக்கள் போன்றவை ஒரு தேச மக்களை, தாம் எல்லோரும் ஒரு தேசத்தின் அங்கத்தினர் எனக் கற்பனை செய்யவும், அதே கற்பிதத்தைத் தொடர்ச்சியாக மீளுற்பத்தி செய்யவும் உதவுகின்றன.

> ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவினர் தாம் மற்றைய குழுவினரிடமிருந்து வேறுபட்டவர்களாய் தம்மை ஒரு விசேட கூட்டுணர்வின் அடிப்படையில் ஒரு இனமாக அடையாளப் படுத்தும் கற்பிதத்திற்கு (Immagining) ஊடாகவே தேசம் பிறக்கிறது.

சகல காலனித்துவ நாடுகளின் தேசிய வாதங்களின் தோற்றங்களுக்கும் வளர்ச்சிப் போக்குகளுக்கும் உள்ள ஒரு பொதுத் தன்மை என்னவெனில், அவை எல்லாமே காலனித்துவம் எனும் வெளிவாரி அதாவது விதேசியப் பொது எதிரியை எதிர்க்கும் நோக்குடன் எழுந்தவை, இந்தப் பொது எதிரியின் இருப்பு அதனால் நசுக்கப்படும் மக்களிடையே இருக்கும் இன ரீதியான வேறுபாடு களையும் தாண்டிய ஒரு ஒருங்கி ணைப்பிற்கு உதவலாம். அது மட்டுமன்றி காலனித்துவ எதிர்ப்பு பொதுவாக காலனித்துவம் வரைய றுத்த புவியியல் சட்டகத்தின் அடிப்படையிலேயே எழுகிறது. ஆனால் காலனித்துவ எதிர்ப்புப் போராட்டத்தின் தலைமையாய சக்திகளின் வர்க்க, இனத்துவ (இந்தியாவைப் பொறுத்த வரை சாதித்துவ) முரண்பாடுகளைப் பொறுத்தும் காலனித்து வம் தனது நலன்களை பாதுகாக்க கையாளும் வழி முறைகளைப் பொறுத்தும் இந்த ஆரம்ப அடிப்படை மாற்றம் அடையலாம்.

வரலாற்று ரீதியில் நவீன இந்தியாவின் ஆரம்பம் ஒரு பிரிட்டிஷ் காலனித்துவத் திட்டமே. காலனித்துவம் இன்றி நவீன இந்தியாவைக் கற்பனை பண்ண முடியு மென நான் கருதவில்லை. 'இந்தியா' எனும் மையப் படுத்தப்பட்ட காலனித்துவ அரசே 'சுதந்திர இந்தியா' எனும் கோஷத்திற்கு உருவத்தைக் கொடுத்தது. அதுவே இந்தியா எனும் தேசத்தைக் கற்பனை செய்து இந்தியர்கள் எனும் பிரஜைகளை உருவாக்க உதவியது. ஆனால் 'சுதந்திர இந்தியா' எனும் போது காலனித்துவம் வெளியேறிய இந்தியா என்பது பொருள். இந்தச் சுதந்திர இந்தியாவின் தனித்துவம் என்ன? இந்தக் கேள்வியை இந்தியத் தேசியவாதிகள் எப்படிக் கையாண்டனர். அவர்களுக்குப் பின்னிருந்த வர்க்க, இனத்துவ சக்திகள் எப்படிச் செயற்பட்டன? இதற்கு எத்த கைய கருத்தமைவுத் திட்டத்தைப் பயன்படுத்தினர்? இதுவே எஸ். வி. ஆரின் இந்து- இந்தி- இந்தியாவின் பிரதான ஆய்வு நோக்கமாகும்.

---

**2.** எஸ். வி. ஆர் ஆராய்ந்து நிரூபிக்க முற்படும் கருதுகோளைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம் என நம்புகிறேன்.

*'இந்திய தேசம்' (THE INDIAN NATION) ஆங்கில மொழி மூலம் கல்வி கற்ற பார்ப்பனிய, மற்றைய உயர் சாதிகளைச் சேர்ந்த அறிவாளிகளால் கற்பிதம் செய்யப்பட்டு பார்ப்பனிய பனியா கூட்டின் ஆதிக்கத்தால் நடைமுறைப் படுத்தப்பட்டது. இந் தக் கருத்தமைவு- கலாச்சார ரீதியான மேலாட்சித் திட்டம் பிரிட்டிஷ் காலனித்துவம் தந்த அரசியல்- புவியியல் சட்டகத்திற்குள் அமுலாக்கப்பட்டது. இந்திய தேசத்தைக் கற்பிதம் செய்வதில் பிராம ணியம் முக்கிய பங்கினை வகித்தது. உபகண்டம் பூராவும் பல கூறுகளாக- இன, பிரதேச ரீதியில்- பிளவுண்டிருந்த இந்து மதம் சார்ந்த சகல சமூகங் கள் மீதும் மரபு ரீதியான மேலாட்சியைக் கொண் டிருந்த ஒரே ஒரு சாதி பார்ப்பனர்தான். இந்த மரபு ரீதியான செல்வாக்கு பார்ப்பனிய கருத்தமைவிற்கு இந்திய தேசிய வாதத்தின் உருவாக்கத்தில் ஒரு விசேட அந்தஸ்தைக் கொடுத்தது. பார்ப்பனியம் அகில இந்திய ரீதியிலான ஒரு ஒருங்கிணைப் பிற்கு உதவியது. ஆனால் இது பரந்து பட்டிருந்த இந்து சமூகங்களை மட்டுமே உள்ளடக்கியது.*

*இந்தத் தேசிய வாதக் கருத்தமைவின் மைய சக்தியான 'இந்து - இந்தி' இணைவும் அதற்கு உந்து சக்தியாக விளங்கிய (அதே நேரம் தனித்துவமான இயக்கப்பாட்டினையும் கொண்டி ருந்த) இந்து அடிப்படை வாதமும் இந்து- முஸ்லிம் பிரிவினைக்கு வித்திட்டன.*

இந்தக் கருதுகோளை ஆராய்ந்து விளக்க முற்படும் போது இராஜதுரை இன்றைய ஆளும் கட்சியான காங்கிரசின் 'மத சார்பின்மை' போன்ற சுய வர்ணனைகளுக்கு சவால் விடும் அதேவேளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காந்தி, நேரு, திலகர் போன்ற இந்தியத் தேசியத் தலைவர்களின் வர்க்க- இனத்துவச் சார்புகளையும் வெளிப்படுத்துகிறார். இந்திய தலித்துக்களின் ஆபிரகாம் லிங்கன் எனப்படும் அம்பேத்கார் பற்றிய ஒரு மதிப்பீட்டினை முன் வைப்ப தன் மூலம் எஸ். வி. ஆர் இது வரை காந்தியத்திற்கு வழங்கப் பட்டு வந்த புனித அந்தஸ்தையும் ஆழ்ந்த விமர்சனத்திற்கு உள்ளாக் குகிறார். நூலாசிரியரின் பிரச்சனை இந்தியாவிற்கு காலனித்துவம் வகுத்த புவியியல் சட்டகத்தை ஏற்பதா நிராகரிப்பதா என்பதல்ல. பிரதான பிரச்சனை, அந்த சட்டகத்தின் வழிவந்த இந்திய அமைப்பின் அரசியல் பொருளாதார கருத்தமைவு உள்ளடக்கங்கள் என்ன என்பதே.

> இந்திய தலித்துக்களின் ஆபிரகாம் லிங்கன் எனப்படும் அம்பேத்கார் பற்றிய ஒரு மதிப்பீட்டினை முன் வைப்பதன் மூலம் எஸ். வி. ஆர் இது வரை காந்தியத்திற்கு வளங்கப்பட்டு வந்த புனித அந்தஸ்தையும் ஆழ்ந்த விமர்சனத்திற்கு உள்ளாக்குகிறார்.

கடந்த நாற்பத்தாறு ஆண்டுகளாக இந்திய அமைப்பை ஆண்டு வரும் சக்திகள் எத்தகைய ஒரு இந்தியாவை உருவாக்கிக்கொண்டிருக்கின்றன என்பது ஒரு அடிப்படைக் கேள்வியாகும். இஇஇ-ன் அணுகு முறை இந்திய உப கண்டத்து யதார்த்தங்களை மனங்கொண்டு பார்க்கும் போது ஆரோக்கியமான தாகும். 1992 இல் பாபர் மசூதியை இந்துத்துவ வாதிகள் அழித்தனர். இந்தக் காட்டு மிராண்டித் தனத்தை இந்தியப் பொலிசார் பார்த்துக் கொண்டி ருந்தது மட்டுமல்ல அதற்கு உதவியாகவும் இருந்தனர். இந்த வன்செயலின் விளைவாக பாகிஸ் தானிலும், பங்களா தேசத்திலும் இந்துக் குடும்பங்க ளும், இந்துக் கோயில்களும் தாக்கப்பட்டன. இவை எல்லாம் நமக்கு போதிக்கும் அடிப்படைப் பாடம் என்னவெனில் இந்திய- பாகிஸ்தான் பிரிவினை, பாகிஸ்தான்- பங்காளதேஷ் பிரிவினை போன்றவை உப கண்டத்தின் இந்து- முஸ்லிம் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கவில்லை. இந்திய- பாகிஸ்தான் பிரிவினை இந்தியாவின் இந்துத்துவ தேசிய வாத சக்திகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கவில்லை. அதற்கு மாறாக ஆட்சி செய்யும் இந்திய தேசிய வாதத்தில் இந்துத்துவத் தன்மைகள் மேலும் வலுப் பெறவே உதவியுள்ளது எனலாம். இஇஇ-யை வாசித்துக் கொண்டிருந்த போது இந்தச் சிந்தனைகள் என் மனதில் தோன்றின.

உப கண்டத்தின் ஆளும் தேசிய வாதங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பிரிவினை வாதங் களாக அல்லது புதிய பிரிவினை வாதங்களுக்கு வித்திடுபவையாக மாறிப்போகும் பரிணாமப் போக் கினை கண்டு வந்துள்ளோம். அதே நேரம் அதே உப கண்டத்தில் ஒரு மொழி ஒரு மதம் எனும் அடிப்படை யில் ஒரு தேச- அரசு உருவாக்கம் பெறக்கூடிய பரிபூரணமான நிலமைகள் இல்லை என்பதையும் காண்கிறோம். பாகிஸ்தானில் இந்துக்களும் பல மொழிகளைப் பேசுவோரும் உள்ளார்கள். அதே போல் மொழி கலாச்சார அடிப்படையில் பாகிஸ் தானிடமிருந்து பிரிந்த பங்களாதேசத்திலும் இந்துக் களும் ஆதிவாசிகளும் உள்ளனர். இந்தியாவிலோ பல நூற்றுக் கணக்கான மொழிகளைப் பேசுவோரும், பல மதத்தவர்களும் வாழ்கின்றனர்.

ஆனால் நவீன இந்திய தேசிய வாதத்தின் இந்திய தேசிய ஒருங்கிணைப்பிற்கு பயன்பட்ட கருத்தமைவின் இந்துத்தன்மையும் அத்துடன் இணைந்த சாதியம் அது தழுவிக்கொண்ட இந்தி மொழிவாதமும் அந்த நாட்டின் பல இனங்களை சமூகப்பிரிவுகளை (உதாரணமாக தலித்துக்கள்) பாதகமான வழிகளில் பாதித்தன.

எஸ்.வி.ஆரின் பார்வையில் 'இந்து- இந்தி' எனும் இணைப்பு வெறும் மத-மொழி இணைப்பு மட்டுமல்ல இவை இரண்டும் ஒன்றை மற்றையது பலப்படுத் தும் வகையில், இந்தியாவின் தனித்துவ ஆளுமையின் பரி ணாமத்தை நிர்ணயிக்கும் ஆற்ற லைப் பெற்றுள்ளன. இந்துஸ்தா னியே இந்தியாவின் அரச மொழியாக இருக்க வேண்டும் எனக் காந்தி விரும்பினார்.

இந்துஸ்தானி இந்தியும் உருதுவும் கலந்த மொழியாக இருப்பதால் வட இந்தியாவில் வாழும் இந்து-முஸ்லிம் மக்களின் ஒருமைப் பாட்டின் சின்னமாக ஊடகமாக விளங்க முடியும் என காந்தி கருதினார். ஆனால் இந்திய காங்கிரசிற்குள்ளிருந்த இந்து மதத் தேசிய வாதிகள் உருது போன்ற வேற்று மொழிக்கலப்பற்ற இந்தியே ஆட்சி மொழியாக வேண்டும் என விரும்பினர். அதுவும் ஆட்சி மொழியாகும் இந்தி சமஸ்கிருத மயப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் விரும்பினர். இவர்களின் கை ஓங்கியது. காந்தியின் கோரிக்கை படிப்படியாக ஒதுக்கப்பட்டது. இந்தியின் சமஸ்கிருதமயமாக்கல் என்பது அதன் பிராமணிய மயமாக்கல்தான். வேதங்களின் மொழியான சமஸ்கிருதமே இந்து மதத்தின் தேவ மொழி. அந்த மொழியிலேயே பார்ப்பனர், மக்களின் சார்பில் கடவுளுடன் பேசினர். சமஸ்கிருதம் வழக்கிழந்து செத்த மொழியாகிவிட்ட போதும் 'இந்து இந்தி' திட்டத்திற் கூடாக அது முக்கியத்துவம் பெற்றது. இந்தி இணைப்பிற்கு மேலும் புனிதத்துவத்தைக் கொடுக்க சமஸ்கிருத மயமாக்கல் கொள்கை உதவியது போலும்.

'இந்தி இந்து' திட்டம் ஒரு புறம் பல இனத்து மக்களை ஒரு அனைத்து இந்திய ஒருங்கிணைப்புக் குள் கொண்டு வந்தது. மறுபுறம், அது மத, சாதி, மொழி அடிப்படையில் பல சமூகங்களை வெளிவாரிப் படுத்தியது. ஆனால் அந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் ஒரு பரந்துபட்ட அகில இந்திய ஒருங்கி ணைப்பே. இந்தியாவின் பல்லினத் தன்மைகள் இந்த நோக்கத்திற்கு பல எதிர்ப்புகளை உருவாக்கியது. முஸ்லிம்கள், சீக்கியர்கள் மத அடிப்படையில் தமது தனித்துவத்துக்காகப் போராட முற்பட்டனர். அசாம், நாகலாந்து போன்ற பிரதேசத்தவர்கள் தமது பாரம்பரியங்களின் அடிப்படையில் இந்து- இந்தி- இந்தியாவை எதிர்க்க முற்பட்டனர். தமிழர்கள் இந்தித் திணிப்பை எதிர்த்தனர். அதே வேளை வட இந்தியாவிலும், தமிழ் நாடு தவிர்ந்த தென் இந்திய மாநிலங்களிலும் இந்தி மயமாக்கலுக்கு எதிர்ப்பு எழவில்லை. வடக்கில் இந்து- இந்தி இணைவு இந்துக்களின் ஆதரவைப் பரவலாகப் பெற்றது. எஸ். வி. ஆர் எழுதுகிறார்,

> *"இந்தியா பல் தேசிய இன நாடு. இங்கு ஆதிக்கத் தேசிய இனம், ஒடுக்கும் தேசிய இனம்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*என்பது இல்லை தான். அதே போல ஆளும் வர்க்கங்களும் குறிப்பிட்டதொரு தேசிய இனத்தைச் சார்ந்தவை அல்ல என்பதும் உண்மை தான். வட இந்திய- பார்ப்பன- இந்தி- இந்து அடையாளத்தை ஆளும் வர்க்கங்களும் ஆதிக்கச் சக்திகளும் உருவாக்கிக் கொண்டுள்ளன. இந்தி பேசும் பகுதிகளிலுள்ள பரந்துபட்ட மக்களிடையே கூட வட்டார மொழித் தேசிய உணர்வு வளர்வதற்குப் பதிலாக அனைத்திந்திய இந்து- இந்திய தேசிய உணர்வே வளர்ந்திருப்பதைக் காணலாம்."* (பக்கம் 232)

இந்து- இந்தி- இந்தியா எனும் கருத்தமைவு மேலாட்சித் திட்டம் கணிசமான வெற்றியைப் பெற்றுள்ளதை இது காட்டுகிறது. சுதந்திர இந்திய ஒன்றியத்தின் மையப்படுத்தலுக்கு இந்தக் கருத்தமைவு மேலாட்சி இன்றியமையாத பங்கினை வகித்து வருகிறது. அரசின் அதிகார மையப்படுத்தலும் நாட்டின் ஒருங்கிணைப்பும் இந்தியப் பெருமுதலாளி வர்க்கத்தின் நலன்களுக்கு சாதகமாய் இருக்கின்றன. இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாத பெருமுதலாளிகளும் இந்தி ஆட்சி மொழியாவதை தம் வர்க்க நலன் கருதி ஆதரித்தனர். இந்திய அமைப்பின் மையப்படுத்தலுக்கும் உள் நாட்டுச் சந்தையின் ஒருங்கிணைப்பிற்கும் அது உதவும் என்பதைக் கருத்தில் கொண்டே காந்தியின் சாதியான பனியா சாதியைச் சார்ந்த குஜராத்திய பெருமுதலாளிகள் இந்தி ஆட்சி மொழியாவதை ஆதரித்தனர். (இது ஒரு உதாரணம்)

ஆகவே, 'இந்து சமய வண்ணம் பூசப்பட்ட இந்தியத் தேசியமும் இந்தி மொழியும்' இந்திய பெருமுதலாளி வர்க்கத்தின் அனைத்திந்திய சந்தை ஒருங்கிணைப்பின் கருவியானதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அதே நேரம் இந்த இந்து முதலாளிகள் பாகிஸ்தான் பிரிவினை தவிர்க்க முடியாதது என வாதிட்டதிலும் ஆச்சரியமில்லை. அந்தப் பிரிவினை அவர்களின் இந்து- இந்திய ஒருங்கிணைப்புத் திட்டத்தின் விளைவாக இருந்த போதிலும், அது அத்திட்டத்தின் பலப்பாட்டிற்கு உதவியது என அவர்கள் கணித்தனர். இத்தகைய கருத்துக்களைக் கொண்ட இந்து பெருமுதலாளிகளின் பிரதிநிதியே பிர்லா.

---

**3.** வட இந்திய பெருமுதலாளிகளுக்கும் காங்கிரசுக்கும் இடையே நெருக்கமான உறவை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றினார் காந்தி. அதே நேரம் இந்திய தேசிய போராட்டத்தை வெகுஜனமாக்குவதிலும் அவர் வெற்றி கண்டார். சுதந்திரப் போராட்ட காலத்தில் இந்திய பெருமுதலாளிகள், நிலவுடமையாளர்கள் ஆகிய இரு வர்க்கங்களின் நலன்களைக் காக்கவும் பலப்படுத்தவும் உதவியது காந்திய தேசிய வாதம். அதே நேரம் நடுத்தர கீழ் மட்ட வர்க்கங்களையும், சாதிகளையும் அணிதிரட்ட உதவியது. சுதந்திரத்திற்கு முன் முரண்பட்ட நலன்களைக் கொண்ட வர்க்கங்களையும், சாதிகளையும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக ஒன்றிணைக்கும் கருத்தமைவின் பிரதான பிரதிநிதியாக கவர்ச்சியும், மதிப்பும் கொண்ட அடையாளமாக விளங்கிய காந்தியை, சுதந்திரம் உறுதியாக்கப்பட்ட நிலை வந்தபோது இந்தியப் பெருமுதலாளிகள் புறக்கணிக்கத் தொடங்கி விட்டனர். சுதந்திர இந்தியாவில் காந்தியின் செல்வாக்குத் தொடர்வது தமது வர்க்க நலன்களுக்கு குந்தகம் விளைவிக்கும் என்பதை அவர்கள் காணத்தவறவில்லை. உதாரணமாக காந்தியின் அரசியல் கருத்துகள் அரச அதிகாரத்தின் மையப் படுத்தலுக்கு சாதகமானவை அல்ல. அவரது பொருளாதாரக் கருத்துகள் முதலாளித்துவ நவீன மயமாக்கலுடன் முரண்பட்டன. அவரது இந்து- முஸ்லிம் ஒற்றுமை நிலைப்பாடு, பிரிவினைக்கு எதிரான போக்கு இந்துப் பெருமுதலாளிகளின் நலன்களுக்கும் இந்து அடிப்படைவாதிகளுக்கும் ஏற்றதாக இருக்கவில்லை. காந்தியின் கைத்தறி இராட்டினம் இந்திய பெருந் தொழில் உற்பத்தி முதலாளிகளின் நலன்களின், அவர்களின் எதிர்காலக் கனவுகளின் நிராகரணத்தின் அடையாளம் போல் இருந்தது. ஆகவே 1946 -க்குப் பின் காந்தியை ஓரப்படுத்துவதில் பெருமுதலாளிகள் ஈடுபட்டது ஆச்சரியம் தரும் ஒன்றல்ல.

**சுதந்திரப் போராட்ட காலத்தில் இந்திய பெருமுதலாளிகள், நிலவுடமையாளர்கள் ஆகிய இரு வர்க்கங்களின் நலன்களைக் காக்கவும் பலப்படுத்தவும் உதவிய காந்திய தேசிய வாதம், அதே நேரம் நடுத்தர கீழ் மட்ட வர்க்கங்களையும், சாதிகளையும் அணிதிரட்ட உதவியது.**

*இந்து- இந்தி- இந்தியா எனும் வரலாற்றுத் திட்டத்தில் காந்தியின் ஆத்மீக வாதம் என்ன பங்கை வகித்தது என்பது ஆழ ஆராயப்பட வேண்டிய ஒன்றென கருதுகிறேன்.* இடதுசாரிகள் விரும்பத்தகாததாயினும் வியக்கத்தகு முரண்பாடுகள் மிகுந்த பரிணாமப் போக்குகளைக் கொண்ட பார்ப்பனியமெனும் கருத்தமைவின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் ஆத்மீகப் பேச்சாளராக காந்தியைக் கருதலாமா? பிராமணர் மட்டுமன்றி மற்றைய உயர் சாதியினரதும் இசைவுடன் இயங்கி வந்த பார்ப்பனியத்தை (வெளியே இருந்து வந்த) காலனித்துவ ஆட்சிக்கெதிரான வெகுஜனப் போராட்டத்திற்கு உதவும் வகையில் வெளிப்படுத்தியதில், நெறிப்படுத்தியதில் காந்தியின் பங்கு என்ன? இந்தக் கேள்விகள் மேலும் ஆய்வுக்குரியவை. காந்தியின் ஆத்மீக வாதத்துடன் இணைந்த அரசியல் பொருளாதாரக் கருத்துகளை காங்கிரஸ் தலைமை நடைமுறையில் நிராகரித்தது. அதே நேரம் காந்தி சுதந்திர இந்தியாவின் இந்திய தேசத்தின் தந்தையாக புனித மயப்படுத்தப்பட்டுள்ளார். இந்திய பெருமுதலாளிகளாலும் காங்கிரஸ் தலைமையாலும் பயன்படுத்தப்பட்டபின் ஒதுக்கப்பட்ட காந்தி இந்து மத அடிப்படைவாதி ஒருவனால் கொலை செய்யப்பட்ட பின், ஒரு புனித கோபுரத்தில் வைக்கப்பட்டுள்ளார். இந்திய மக்களை இந்தியர்களாக ஒன்றிணைக்க இன்றும் காந்தி பயன்படுகிறார். இன்று அரசோச்சும் இந்து-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தி- இந்தியாவில் காந்தீயம் வெளிப்படையாகத் தென்படவில்லை. ஆனால் அதே இந்தியாவின் அரசியல் ஒருங்கிணைப்பிற்கு காந்தி எனும் இந்து ஆத்மீக வாதியும் இந்திய தேசியப் போராளியும் அவசியம். அப்படியாயின் இன்றைய 'இந்து- இந்தி- இந்தியா' கருத்தமைவில் காந்தியத்தின் பங்கு என்ன? ஒரு தடவை அம்பேத் கார், காந்தி பற்றி கூறியவை இங்கு மனங்கொள்ளல் தகும்.

*'ஒரு மகாத்மா அவர், அரசியலை ஆத்மீக மயப்படுத்த முயற்சிக்கலாம்- இதில் அவர் வெற்றி கண்டுள்ளாரோ என்னவோ நிச்சயமாக அரசியல் அவரை வர்த்தக மயப்படுத்தி விட்டது (Commercialised). ............................ சாதியையும், வண்ணத்தையும் எப்போதுமே ஆதரிப்பதற்கான காரணம் என்னவெனில் அவற்றை எதிர்த்தால் அரசியலில் தனக்கிருக்கும் இடத்தை இழந்து விடலாம் என அவர் பயப்படுவதே.'* (Ambedkar: writings and speches, vol1, 1979)

காந்தியின் வைதீகப் போக்கையும் ஆத்மீக வாதக் காரணங்களையும் குதர்க்கத்தையும் பயன்படுத்தி அவர் சாதி அமைப்பை வண்ணத்துக் கூடாக மறைமுகமாகவும் நேரடியாகவும் நியாயப்படுத்து வதையும் சம காலத்திலேயே ஆழ விமர்சித்தவர் அம்பேத்கார். இஇஇ-ல் காந்தியைப் பற்றிய விமர்சனத்திற்கு அம்பேத்காரின் சிந்தனைகளைப் பயன்படுத்தியுள்ளார் நூலாசிரியர்.

---

**4.** இந்து- இந்தி- இந்தியா -வின் விமர்சனத்திற் கூடாக எஸ். வி. ஆர் முன்வைக்கும் மாற்று வழி விவாதங்களுக்கு உதவலாம்.

*"எனவே அதிகாரப் பரவலும், சோசலிசமும் மக்களின் பல்வேறு தேசிய, மொழி, சமய பண்பாட்டு பிரதேச அடையாளங்களுக்கான பாதுகாப்பும் தன்னுரிமையும் சேர்ந்து நிலவுகிற ஒரு புது வகையான இந்திய சமூகத்தையும் கற்பிதம் செய்து பார்ப்பது இன்றியமையாத தாகிறது. இத்தகையதொரு இந்திய சமுதாயமே ஏகாதிபத்தியத்தையும் உலக பிற்போக்குச் சக்திகளையும் எதிர்த்து நிற்க வல்லது; இன்றைய 'ஒன்று பட்ட' 'ஒருமைப்பாடு' உடைய இந்து- இந்தி- இந்தியா அத்தகையதன்று. இது ஏகாதிபத்தியத்தையும் பார்ப்பனிய- பனியா நலன்களையும் பாதுகாக்கவென எழுப்பப்பட்ட ஒரு கோட்டை."* (பக்கம் 239)

ஒரு மாற்று இந்தியாவைக் கற்பிதம் செய்தல் சுலபமானதல்ல. இந்தப் புதிய இந்தியாவை ஒன்றிணைக்கவல்ல அம்சங்கள் எவை? 'இந்து- இந்தி- இந்தியா' வை விமர்சித்து அதன் உள்ளியக்கப்பாடுகளை விளக்குவதில் குறிப்பிடத்தகுந்த வெற்றியைப் பெற்றுள்ள நூலாசிரியர், 'மாற்று இந்தியா' வின் சாத்தியப்பாடுகள் பற்றிக் குறிப்பிடவில்லை. ஒருங்கிணைப்பு சக்திகளும் பிரிவினை சக்திகளும் பல மட்டங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்து- இந்தி- இந்தியா -வில் ஒரு புதிய இந்தியா பற்றிய கற்பிதத்திற்கு உதவக் கூடிய அம்சங்கள் எவை? எஸ். வி. ஆரின் கட்டுரை இந்தக் கேள்வியை எழுப்புகிறது. ஒரு பல் தேசிய இன மக்கள் ஜனநாயக இந்தியாவைக் கற்பிதம் செய்தல், அத்தகைய இந்தியாவில் சோசலிசத்திற்கான சாத்தியப்பாடுகள் எத்தகையவை? போன்ற விவாதங்கள் தோன்றி வளருதல் இந்திய மக்களுக்கு மாத்திரமன்றி உப கண்டத்தின் மற்றைய மக்களுக்கும் பயன்தரும். இன்றைய இந்தியா மேலும் பிளவுபடலாம் அல்லது தவிர்க்கப்படலாம். இன்றைய உலகில், பெருந்தொகையான நாடுகள் பல்லின நாடுகளே. ஒற்றை இனத் தேச அரசு என்பது ஒரு சர்வலோக விதி அல்ல என்ற உண்மையை மறுக்க முடியாது. தென் ஆசியாவில் பல்தேசிய இன அமைப்புகளின் சாத்தியப்பாடுகள் பற்றிய விவாதங்கள் முதன்மை பெறவேண்டும்.

**ஒரு மாற்று இந்தியாவைக் கற்பிதம் செய்தல் சுலபமானதல்ல. இந்தப் புதிய இந்தியாவை ஒன்றிணைக்கவல்ல அம்சங்கள் எவை?**

**ஒருங்கிணைப்பு சக்திகளும் பிரிவினை சக்திகளும் பல மட்டங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்து— இந்தி— இந்தியா —வில் ஒரு புதிய இந்தியா பற்றிய கற்பிதத்திற்கு உதவக் கூடிய அம்சங்கள் எவை?**

**ஒரு பல் தேசிய மக்கள் ஜனநாயக இந்தியாவைக் கற்பிதம் செய்தல், அத்தகைய இந்தியாவில் சோசலிசத்திற்கான சாத்தியப்பாடுகள் எத்தகையவை?**

---

*சாதிய முறையின் திடப்படலுக்கு அகமண முறை அதன் சாரம்ச இயல்பாக இருந்து உறுதுணை செய்கிறது. இத்தகைய சாதிய முறை படி நிலை அமைப்பாக இருந்து பல்வேறு தரங்களைச் சேர்ந்த குழுக்களின் தொகுப்பாகவுள்ளது. இத்தகைய அமைப்பு முறையை சாஸ்திர ரீதியில் நியாயப்படுத்த பார்ப்பனர்கள் பல நூல்களை எழுதியமையால் பார்ப்பனர்களால் தலைமை தாங்கப்படும் இந்து சமய வாதச் சித்தாந்தமாக சாதிய முறை உள்ளது.* —அம்பேத்கார்

பேராசிரியர் கோ. கேசவன் கட்டுரையிலிருந்து—— தொகுப்பு – அதியமான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'உண்மையே வெல்லும் அதை நிறுத்திவிட முடியாது' -எமிலி ஜோலா

# முளைப்பு

சச்சி – அழகுதுரை




வெண்திரையில் நிலக்கரி சுரங்க வாழ்வைப் பார்த்த கிளர்ச்சியில் அது பற்றி மௌனம் தொகுப்பாளரிடம் கூறியது எத்தனை மடத்தனம்! அவர் பார்த்த படத்தை எழுத்தில் தரும்படி கேட்க, எழுதித்தான் பார்க்கலாமே என்ற உற்சாகத்தில் எழுதத் தொடங்கியபோது தான் சிக்கல் புரியத் தொடங்கியது. 'தனக்குத் தெரியா சிங்களம் தன் பிரடிக்குச் சேதம்' என்பார்களே! அதை விடவும் மூஞ்சிக்கே சேதத்தைத் தரக்கூடியதான பிரஞ்சு மொழியில் அப்படம், அதுவும் யதார்த்தவாத இலக்கியத்தின் உதாரணர் எனப் புகழப்படும் உலகப்புகழ் பெற்ற எமிலி ஜோலாவின் நாவலைத் தழுவியபடம். நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னால் பிரான்சின் நிலக்கரிச் சுரங்கத் தொழிலைக் களமாகக் கொண்டு அதன் வாழ்வை 'முளைப்பு' (**GERMINAL**) என எமிலி ஜோலா அவர்கள் எழுத்தால் படம் பிடித்திருந்தார். தற்போது அதனை நவீன விஞ்ஞான தொழில் நுட்பக் கருவிகளின் துணையுடன் படச் சுருளில் மீள்படைப்பாக்கம் செய்துள்ளார்கள். படம் பார்த்துக்கொண்டிருந்த வேளையில், நான் பார்த்த - அறிந்த மலையகத் தொழிலாளர்களின் வாழ்வு இப்படத்தில் பதிவாகியுள்ளது போன்ற பிரமையை ஏற்படுத்தி, நான் என் தேசத்தின் தேயிலைத் தோட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தேன். பிரஞ்சு மொழி கற்பிக்கும் ஆசிரியர்தான் இப்படம் பார்க்க அழைத்துச் சென்றார். எழுதத் தொடங்கியதும் அவர் அளித்த விளக்கமும் சொற்பமானது எனப் புரிந்தது. இருந்தும் 'முளைப்பு' பற்றி எழுதும் முனைப்பின் தேடலில் ஆர்வம் கொண்டேன்.

முதலாளித்துவ வளர்ச்சியில் சுரங்கத் தொழில், பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை, இயந்திரப் பெரு ஆலைகள் என உற்பத்தியும், உற்பத்தி உறவும், உற்பத்தி முறைமையும் எங்கெல்லாம் மாற்றமுற்றதோ அதன் 'மாதிரி'யாகவே எமிலி ஜோலாவின் நூல் அமைந்தது என்பர் விமர்சகர்.

எலியன் லாந்தியர் (E'lienne Lantier) எனும் இளைஞன் வேலை தேடி நிலக்கரிச் சுரங்கம் ஒன்றிற்கு வந்து கொண்டிருக்கும் காட்சியுடன் படம் தொடங்குகிறது. இத்தொழிலாளியை மையம் கொண்டே கதை சித்தரிக்கப்பட்டுள்ளது. இவ்விளம் தொழிலாளியின் பாத்திரமேற்று றெனோ (Renaud) என்னும் பாடகர் நடித்துள்ளார். பிரான்சில் பாடகர்கள் நடிகர்களாகவும்; நடிகர்கள் பாடகர்களாகவும் இருப்பது சாதாரணம். இப்படத்தின் இன்னொரு முக்கிய பாத்திரமான மகோ (Maheu) ஆக பிரான்சின் முன்னணி நடிகரான ஜெறார் டுப்பார்டியு (Gerard Depardiu) நடித்திருக்கிறார். இவரை 'பிரான்சின் சிவாஜி' எனக் கருதிக் கொள்ளலாம். இவர் பல்வேறு வரலாற்றுப் பாத்திரமேற்று நடித்து புகழ் பெற்றவர்; இப்படத்திற்கு முன்னர் கிறிஸ்தோப்பர் கொலம்பஸாக நடித்திருக்கிறார்.

## எமிலி ஜோலா

*உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் வரிசையில் எமிலி ஜோலாவும் இடம் பெறுகிறார். இவர் எழுத்தின் வன்மைக்கும் புகழுக்கும் 'நான் குற்றம் சாட்டுகிறேன்' (J'accuse) என்னும் கட்டுரை சிறந்த சாட்சியமாகும். 1894 இல் இராணுவத்தின் உயரதிகாரியாகக் கடமையாற்றிய டிறை ஃபூஸ் (Drey Fus) என்பவருக்கு எதிரான வழக்கில் அவ்வதிகாரி மீதான குற்றச்சாட்டும் தண்டனையும் நியாயமற்றது- அநீதியானது என எமிலி ஜோலா இராணுவத்திற்கும், நீதிமன்றத்திற்கும் எதிராகக் குரல் கொடுத்தார். அக்காலகட்டத்தில் இது மிகப் பெரிய அரசியல் பிரச்சனையாக பிரான்சில் உருவெடுத்தது. இராணுவத் தளபதி கேர்ணல் கென்றி (Colonel Henry) நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டார். மீள் விசாரணை நடத்தப்பட்ட போது டிறை ஃபூஸ் குற்றமற்றவரென தீர்ப்பாகி விடுதலையானார். ஆனால், அதற்கு முன்னதாக பிரான்சின் நீதி மன்றையும், நீதியையும் கண்டித்து எழுதியதற்காக ஒரு வருட சிறையும், மூவாயிரம் பிராங்குகள் அபராதமும் எமிலி ஜோலாவுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதனால் இவர் இலண்டனுக்குத் தப்பிச் சென்று தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டார். டிறை ஃபூஸ் வழக்கின் மீள் விசாரணையின் பின் இவரது தண்டனையும் இரத்துச் செய்யப்பட்டது.*

*1840-ல் பாரிஸில் பிறந்த எமிலி ஜோலா வெளிநாட்டவராகவே கருதப்பட்டார். இவரது 22-வது வயதிலேயே பிரான்சின் குடிமகனாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். ஏனெனில் இவரது தந்தை இத்தாலி நாட்டவர்.*

*« Chez - Hachette » என்னும் புத்தக வெளியீட்டு நிறுவனத்தில் வேலை செய்யத் தொடங்கிய போதிலிருந்து இவரது எழுத்து வாழ்க்கை ஆரம்பமாகியது. மேலும் இந்த நிறுவனத்தில் பணிபுரிந்தமையால் இவருக்கு பிரான்சின் முக்கிய எழுத்தாளர்களின் பழக்கமும் தொடர்பும் கிட்டி, இவரது எழுத்தாற்றலை வளர்த்தது. லாமாற்றின் (Lamartine), கியூகோ (Hugo), மூசே (Musset), போன்ற புகழ்வாய்ந்த எழுத்தாளர்களின் படைப்புகளும், கருத்துகளும் அவரைப் பெரிதும் பாதித்திருந்தது. எமிலி ஜோலாவின் எழுத்துகளில் இவற்றின் பிரதிபலிப்புகளைக் காணலாம். இவரது படைப்புகளில் லஸ்ஸமுவார் (l'assomoir), நானா (Nana), ஓபொனோர் தெ டாம் (Aubonheur des dames), ஜேர்மினல் (Germinal) என்பவை புகழ் பெற்ற நாவல்களாகும்.*

*புத்தக நிறுவனத்தில் வேலை செய்த முப்பது ஆண்டுகளில் எமிலி ஜோலா இருபது நாவல்களை வெளியிட்டிருந்தார். இவரது படைப்புகளில் ஒடுக்குமுறை, சுரண்டல் என்பவற்றிற்கு எதிராக - அவற்றின் கொடுமை பற்றிய சித்தரிப்புகள் விரவிக்கிடப்பதைக் காணலாம்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழில் எமிலி ஜோலா -சிறு குறிப்பு

**வல்லிக்கண்ணன்**

தமிழ் நாட்டில், ஸி என். அண்ணாத்துரை, எமிலி ஜோலாவுக்கு ஓரளவு கவனிப்பு உண்டாக்கினார் என்று சொல்ல வேண்டும். 1940-களில் 'ஏழைப் பங்காளன் எமிலி ஜோலா' என்று ஜோலாவின் நீதிக்காகப் போராடும் பண்பு பற்றி நீண்ட கட்டுரை எழுதினார். டிரைபஸ் வழக்கில் ஜோலா காட்டிய ஆர்வத்தையும் பெற்ற வெற்றியையும் பற்றி 'திராவிட நாடு' இதழில் நீண்ட கட்டுரையாக வெளிவந்தது. பின்னர் அதுவே சிறு பிரசுரமாக வெளியிடப்பட்டது. ஸி. என். அண்ணாத்துரையைப் பின்பற்றி சி. பி. சிற்றரசு ஜோலா பற்றி எழுதினார். இலக்கிய ரீதியில் ஜோலா தமிழ் நாட்டில் போதிய கவனிப்பைப் பெற்றாரில்லை. தொ. மு. சி. ரகுநாதன் கூட டிரைபஸ் வழக்கில் போராட முன்வந்த- போராடி வெற்றி பெற்ற நியாய உணர்வையையே சிலாகித்து கட்டுரை எழுதினார். மேடைகளில் பேசினார். சமீப வருடங்களில் கூட இதை 'வாழ்வும் இலக்கியமும்' பற்றிப் பேசுகையில் விரிவாகக் குறிப்பிட்டு அது அச்சிலும் வந்திருக்கிறது(1992).

ஜோலாவின் நாவல்கள் சில அவற்றின் செக்ஸ் விவரிப்புகளுக்காகவே இங்கு கவனிப்புக்குக் கொண்டு வரப்பட்டன. 'நாநா' சுமாரான மொழி பெயர்ப்பில் (முழுமையாகக் கூட இல்லை) தமிழில் வந்தது. 'நாநாவின் தாய்' என்றொரு நாவலை கவிஞர் குயிலன் மொழி பெயர்த்து வெளியிட்டார். abridged version. 'Germinl' சுரங்கம் என தமிழில் வரப்போவதாக விளம்பரப்படுத்தப்பட்டது. வந்ததாகத் தெரியவில்லை. வந்திருந்தால், அது என் பார்வையில் படவில்லை. 'Earth' நாவலின் சுருக்கம் ஒன்றை நான் 'சரஸ்வதி' மாத இதழில் எழுதினேன். எல்லாம் 1950-களில் தான். அப்புறம் எமிலி ஜோலா படைப்புகளில் இங்கு யாரும் அக்கறை கொள்ளவில்லை.

முளைப்பு முக்கியமான நான்கு பாத்திரங்களையே சுற்றிப் பின்னப்பட்டுள்ளது. மகோ, அவரது மனைவி, அவர்களது ஏழு குழந்தைகளில் மூத்த பெண், சுரங்கத்திற்கு வேலை தேடி வரும் எலியன் லாந்தியர் என்ற இளைஞன்.


மகோ

இந்த இளைஞன் சோசலிசக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டவன். இவனது தந்தையின் நண்பரொருவர் இச் சுரங்கம் அமைந்துள்ள இடத்தில் தேநீர் சாலை ஒன்றை நடாத்தி வருகிறார். இவர்தான் எலியன் லாந்தியருக்கு மகோவூடாக இவ் வேலையைப் பெற்றுக் கொடுத்தவர்.

சனங்களின் கஷ்டநிலையையும், 8வயதானதும் பாடசாலைக்குச் செல்லாமல் ஆலைக்குச் செல்லும் சிறுவர்களையும், வாழ்க்கையில் எவ்வித முன்னேற்றமோ மாற்றமோ இன்றி சகல தேவைகளுக்கும் நிர்வாகத்தையே நம்பிவாழும் தொழிலாளக் குடும்பங்களின் அவல நிலையையும் காணும் எலியன் லாந்தியர் இவற்றை மாற்றும் வழிமுறைகளைப் பிரச்சாரம் செய்யத் தொடங்குகின்றான். இவனது முயற்சியை ஏற்கும் மகோவும், அவரது குடும்பத்தினரும் அவனது செயற்பாடுகளுக்கு உதவுகின்றனர்.


லாந்தியர்

வேலை நிறுத்தம் ஒன்றினை ஒழுங்கு செய்கின்றனர். வேலைக்கு எவருமே வருகைதராததால் நிர்வாகம் ஆலையை இழுத்து மூடுகின்றது. தொழிலாளர் மத்தியில் உணவுப் பஞ்சம் ஏற்படுகின்றது. கடையை நடாத்துபவன் கடன் கொடுக்க மறுக்கின்றான். மகோவின் குழந்தை ஒன்று போசாக்கின்மையால் மரணிக்கின்றது. அமைதியான வேலை நிறுத்தம் பயனளிக்காதது கண்டு மக்கள் கொதித்து எழுகின்றனர். ஒன்று திரண்ட மக்கள் வெள்ளத்தால் கடன் கொடுக்க மறுத்த கடை, ஆலை, ஆலை இயந்திரங்கள் அழித்தொழிக்கப்படுகின்றன. தங்கள் பட்டினிக்காக படுக்கைக்கு அழைத்திருந்த கடை முதலாளியின் ஆணுறுப்பு கோபம் கொண்ட பெண்களால் வெட்டி எறியப்படுகிறது. ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்டு, இராணுவம் அழைக்கப்படுகின்றது. தங்களின் சில கையாட்களைக் கொண்டு ஆலையில் வேலையைத் தொடங்குகின்றது நிர்வாகம். வேலைக்குச் செல்லும் கையாட்களை வேலை நிறுத்தக் காரர்கள் தடுத்து நிறுத்த முற்படுகையில், மகோவுடன் பதினான்கு தொழிலாளிகள் இறந்து போகின்றனர். ஊரடங்குச் சட்டமும், பட்டினியும், தொழிலாளிகளின் இறப்பும் வேலை நிறுத்தத்தில் தொய்வை ஏற்படுத்து கின்றது. இதனால் குறைந்த பட்ச உடன்பாட்டிற்கு வந்து வேலைக்குச் செல்கின்றனர் தொழிலாளிகள். ஆனால் புரட்சிகர எண்ணங்கொண்ட சில தொழிலாளிகள் இந்தக் குறைந்த பட்ச உடன்பாட்டை ஏற்காமல் தொடர்ந்தும் வேலை நிறுத்தம் செய்கின்றனர். இவர்கள் சுரங்கத்திற்குள் நுழைந்து அடைக்கப்பட்டிருக்கும் நீரூற்றுக்களைத் திறந்து விட்டுத் தப்பிவிடுகின்றனர். இதனால் பல தொழிலாளிகள் சுரங்கத்திற்குள் சிக்குண்டு இறக்கின் றனர். இந்தச் சுரங்கத்திற்குள் எலியன் லாந்தியரும், மகோவின் மகளும் சிக்குண்டு தவிக்கிறார்கள். மீட்புப் பணி நடக்கிறது. இந்த மீட்புப் பணியில் ஆலையின் கையாளான மகோவின் மகளது முன்னாள் கணவனும் ஈடுபடுகிறான். இவனால் தன் முன்னாள் மனைவி எலியன் லாந்தியருடன் இருப்பதைக் காண சகிக்க முடியவில்லை. அவளை வன்முறைக்கு உட்படுத்துகின்றான். இதனால் எலியன் லாந்தியர் தலையிட நேரிடுகிறது. இருவருக்குமான கைகலப்பில் எலியன் லாந்தியரால் அவன் கொல்லப்படுகிறான். மகோவின் மகளும் இறக்கிறாள். எலியன் லாந்தியர் மட்டும் சுரங்கத்திலிருந்து மீண்டு வருகிறான்.

மகளது பிரேதத்தைக் கண்ட மகோவின் மனைவி அதிர்ச்சியடைகிறாள். முன்னர் தன் கைக் குழந்தையையும், பின் தன் கணவனையும், தற்போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனது மூத்த மகளையும் பறிகொடுத்த ஆவேசத்தால் எலியன் லாந்தியர் மீது பழி சுமத்துகின்றாள். மற்றவர்களும் அவனையே குறை கூறுகின்றனர். அவன் ஊரை விட்டு வெளியேறுகிறான். சுரங்கத்திலிருந்து செல்லும் நெடிய மண் சாலை அடிவானத்தைத் தொட்டு நிற்கிறது. சாலையின் இரு புறமும் குதிரையின் உதவியுடன் வயலில் உழவு நடைபெறுகிறது. சூரியன் மெல்ல எழுந்து கொண்டிருக்கின்றான்.

படம் முடிந்துவிட்டது. அவன் விதைத்த கருக்கள் முளைத்தெழும் குறியீடாகக் காட்சி உணர்த்துகின்றது.

இன்றைய தொழிற் பாதுகாப்பு, தொழிலாளர் நலன் பற்றிய சட்டங்கள் ஏதுமற்ற அந்தக்காலத்து வாழ்வைத் திரையில் காண்கையில் மார்க்சியம் ஏன் ஐரோப்பாவில் தோற்றம் பெற்றதென்பது கொஞ்சம் புரிகிறது. சுரண்டல், அடக்குமுறை, அப்பாவி மக்களது எதிர்பார்ப்பு என்பன உலகெங்குமே ஒன்றாகவே இருக்கின்றன. □□



தோன்றுவதை எழுதி அனுப்புங்கள்

நன்றி- ஒளிப்படம்: சிமோன்

# கருந்துயர்

*இழிவாக நான் சாக வேண்டும் எனத்தெரிகிறது.*
*குளிரில், பசியில் அல்லது பேன்களால்,*
*தீ மூட்டப்படாத அடுப்பின் மீது உறைந்து செத்துப்போன*
*பிச்சைக்காரக் கிழவியைப் போல எனது நாட்களை*
*முடிப்பேன்.*

*ஒரு வீரனாகச் சாக வேண்டுமென ஒரு காலத்தில்*
*கனவு கண்டேன்,*
*என்னைச் சுற்றி நெருப்பு மூள, துப்பாக்கி உறும,*
*ஆனால் இல்லை, அணைய இருக்கும் ஒரு எண்ணை*
*விளக்கைப் போல*
*நான் நடுங்கிக் கொண்டிருக்கிறேன்,*
*விரைவில் நான் இல்லாமல் போவேன்.*

*எனது நம்பிக்கைகள் நிறைவேறுவதைப் பார்க்கவும்,*
*வெற்றி நாளை வரவேற்கவும், நான் வாழ்ந்திருக்கப்*
*போவதில்லை.*
*'சிரித்துக் கொண்டே சாவேன்' -தவறாக இந்த*
*வார்த்தைகளை எழுதிவிட்டேன்*
*இல்லை, இல்லை, என் நண்பர்களே, இறந்துபோக நான்*
*விரும்பவில்லை.*

*மிகக் குறைவாகவே என் காலத்தில் சாதித்தேன்.*
*இந்தப் பூமியில் எனது வாழுவும் அற்பமாகவே*
*இருக்கிறது.*
*இன்னும் கொஞ்சம் என்னால் வாழ முடிந்தால்*
*தகுதிவாய்ந்த பலவற்றைச் சாதிக்க முடியும்.*

*நான் ஒருபோதும் நினைக்கவில்லை, யூகிக்கவில்லை*
*ஒருவரின் முழுமை ஒருவரின் ஆத்மா இப்படிக்*
*கிழிபடுமென்று.*
*இத்தகைய அன்பும் காதலும் இதயத்தை நிரப்ப*
*என் வாழ்நாளில் ஒரு போதும் துன்பமடையவில்லை.*

*இப்போதுதான் நான் உண்மையை உணர்கிறேன்*
*என் இதயம் கடும் தீயில் எரியுமென்பதை,*
*என் தாய் நாட்டிற்கு அதை நான் பலியிட முடியாது.*
*நினைப்பதற்கு எவ்வளவு கசப்பானது.*

*இறக்க விரும்புகிறேன் என் நாட்டிற்குப் பணி செய்து,*
*என் இதயத்தின் கடைசித் துடிப்பு வரை.*
*இறப்பின் போது நான் சரியாகச் சொல்வேன்-*
'நான் சாகிறேன் என் நாட்டிற்காக'

1942 -செப்டம்பர். -- -முசா ஜலில்

தமிழில் - கனிவண்ணன்
தமிழ் நாடு

### *முசா ஜலில்*

*1906 இல் ரஷ்ய நாட்டில் முஸ்டாபா என்ற கிராமத்தில் முசா ஜலில் பிறந்தார். மாஸ்கோ மாநிலப் பல்கலைக் கழக பட்டதாரியாகி, 'இளந்தோழன்' 'அக்டோபர் குழந்தை' ஆகிய சிறுவர் ஏடுகளின் ஆசிரியராகத் திகழ்ந்தார். தாய் நாடு காக்கும் போர் (PATRIOTIC WAR 1941-1945) தொடங்கியவுடன் படையில் சேர்ந்தார். 1942 ஜூனில் போரில் காயமுற்று கைதியாகப் பிடித்துச் செல்லப்பட்டார். நாஜிக்களின் கான்சன்ட்ரேசன் கேம்பில் தீவிர தலைமறைவு வேலைகளைச் செய்தமையால் மோஆபிட் சிறையில் அடைக்கப்பட்டார். ஆறு மாத கால விசாரணைக்குப் பின்னர் 1944இறுதியில் சுட்டுக் கொல்லப்பட்டார். சிறையில் அவர் எழுதிய மூன்று குறிப்புப் புத்தகங்களை அவரின் நண்பர்கள் வைத்திருந்தார்கள். 1946 இல் அறுபது கவிதைகள் அடங்கிய ஒரு புத்தகமும், 1947 இல் ஐம்பது கவிதைகள் அடங்கிய இரண்டாவது புத்தகமும் பின்னர் மூன்றாவது புத்தகமும் வெளிச்சத்திற்கு வந்தன. போரில் தீரச் செயல்களுக்காக, 'சோவியத் ஒன்றிய வீரர்' பட்டமும், இலக்கியப் படைப்புகளுக்காக லெனின் விருதும் இவருக்குப் பின்னாளில் வழங்கப்பெற்றன.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நவீன உலக சினிமாவில் பெண்களின் எதிர்ப்புணர்வு

– யமுனா ராஜேந்திரன் –

- *தலைப்பு இன்றைய சூழலில் உலகெங்கும் பெண்களின் பார்வையில் வாழ்க்கை என்றோ; எதிர்ப்புணர்வு பெண்கள் சினிமா என்றோதான் சொல்லப்பட்டிருக்க வேண்டும்.*
- *துரதிஷ்டம் தமிழில், இந்தியாவின் தென் மாநிலங்களில் பெண்கள் சினிமா என்று ஒன்று இல்லை. பெண்களின் கலைமொழி பற்றிய பிரக்ஞை இப்போதுதான் தமிழ்ச்சூழலில் சூடு பிடித்திருக்கிறது. 'புதிய குரல்' போன்ற தமிழ்ப் பெண்நிலைவாதப் பத்திரிகைகள் சாட்சி. ஈழம் பற்றி என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை.*
- *இந்தியாவின் வடமாநிலங்களில், பெண்கள் சினிமா என்று குறிப்பிடத்தக்க வகையில் சில ஆளுமையுள்ள பெண் இயக்குனர்கள் உண்டு. அபர்ணா சென், சாயி பரஞ்சேப், விஜய் மேத்தா, அருணா ராஜி, நினா சிவ்தஸானி, மஞ்சிரா தத்தா, மீரா திவான் போன்றவர்களைக் குறிப்பிடலாம். கர்னாடகத்திலிருந்து ஒரேயொரு தீவிர சினிமாக்காரராக பிரேமா கராந்தைக் குறிப்பிடலாம். ருபாலி படம் கொடுத்த இயக்குனரும் இதைச் சேர்ந்தவர்.*
- *அதுவன்றி இந்தியாவிற்கு வெளியில் இந்தியர்களின் பிரச்சனைகளைப் பெண்நிலை நோக்கில் பேசும் இந்திய வம்சாவழி இயக்குனர்கள் மீரா நாயர், குரீந்தர் சத்தா, மீரா ஸயால் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.*
- *சில ஆண்களும் பெண்கள் பிரச்சனை தொடர்பான சில சக்திமிக்க படங்களைத் தந்திருக்கிறார்கள். குமார் ஸஹானியின் 'தராய்', கோவிந் நிஹாலானியின் 'திருஷவ்', ஷ்யாம் பெனகலின் 'பூமிகா', கிருஷ் கர்னாட் 'செலுவி', பரதனின் 'வைசாலி', தோப்பில் பாஸியின் 'துலாபாரம்', பாலு மகேந்திராவின் 'வீடு', மகேந்திரனின் 'மெட்டி', ருத்ரைய்யாவின் 'அவள் அப்படித்தான்', பாலச்சந்தரின் 'அவள் ஒரு தொடர்கதை' போன்றவற்றைக் குறிப்பிடலாம்.*
- *இந்தக் குறிப்பிடுதலின் தீவிரத்தன்மையில் சமச்சீரற்ற தன்மை இருப்பினும் இவை குறிப்பிடத்தக்க படங்கள் தான்.*
- *ஸத்யஜித்ராயின் 'பதேர் பாஞ்சாலி' 'சாருலதா' போன்றவையும், மிருனாள் சென்னின் 'ஜெனஸிஸ்' உம் பெண்களின் பிரச்சினையை தீவிரமாக அணுகிப் பேசிய படங்கள்.*
- *எமக்குத் தெரிந்த இந்தச் சூழலை உடைத்துக் கொண்டு வெளியுலகைத் தரிசிப்பதும், அந்தப் புதிய தரிசனங்களுடன் மறுபடி எமது சொந்தப் பரப்பில் கால் பதிப்பதுவும் தான் எனது நோக்கம்.*

நான் மேலே குறிப்பிட்ட படங்களும் சரி இயக்குனர்களும் சரி பெண்கள் பற்றிய பிரச்சினைகளை 'பிரக்ஞையுடன்' பேசியவை. இந்தப் 'பிரக்ஞை' மிகவும் முக்கியமானது. பல்லாயிரம் ஆண்டுகளாக மனுக்குலத்தின் பாதியாக வாழ்ந்து வந்திருந்தாலும் ஸ்வரணையற்ற பிரக்ஞையற்ற ஜீவிகளாகவே பெண்கள் இருந்திருக்கிறார்கள்.

பெண்கள் பற்றிய இந்தப் பிரக்ஞைக்காக விடுதலை பற்றிப் பேசிய மார்க்ஸிசம் கூட தீவிரமான பிரக்ஞைபூர்வமான பங்குவகிக்கவில்லை. அதற்கு ரோஸா லக்ஸம் பர்க்கும், ஸைமன தீபோவாவும், ஜுலியம் மிச்சலும், ஸீலா ரோபோத்தமும் சத்தம் போட்டுப் பேசவேண்டியிருந்தது. மார்க்ஸ் பற்றின ஒரு பாதி வரலாற்று உண்மைகள் கூட மறுபாதி நிறைவுடன் மார்க்ஸின் குடும்பத்தின் வேலைக்காரப் பெண்ணான ஹெலன் டாதே பற்றிய உண்மைகளுடன் வெளியிடப்பட்டது.

இந்தப் புதிய பிரக்ஞையுடன் உலக அளவில் வந்த சில படங்களைப் பற்றியதும், அந்தப் படங்கள் பேசும் விசயங்கள் பற்றியதுமே இக்கட்டுரை.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் (1990 பிப்ரவரி முதல் ஏப்ரல் வரை) லண்டன் சேனல் 4 தொலைக் காட்சியில் உலகப் பெண்கள் சினிமா வரிசைத் திரைப்படங்கள் என 50 படங்கள் திரையிடப்பட்டன. இந்த 50 திரைப்படங்களும் பெண்கள் எடுத்தவை. தமது அனுபவங்கள் சார்ந்த கலை மொழியினூடே வெளியான படங்கள். படங்கள் ஐரோப்பா, அமெரிக்கா, மூன்றாம் உலக நாடுகளென அனைத்தும் தழுவியவை.

நவீன யுகத்தின் விடுதலை வரலாறு அக்டோபர் புரட்சியிலிருந்து தொடங்குவதைப் போலவே நவீன பெண்கள் சினிமாவின் தோற்றமும் அங்கிருந்தே தொடங்குகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இக் கட்டுரை இந்தச் சினிமாக்களின் அக்கறை உள்ளவர்களுக்குத் தரப்படுவதால் படங்கள் பற்றிய விவரங்களைத் தருவது முக்கியமானது. அவ்வகையில் படங்களின் பெயர், நாடு, வெளியான ஆண்டு,இயக்குனர் பற்றிய பட்டியலை முதலில் தருகிறேன். முக்கியமான படங்களை மட்டுமே.

1. சோவித் ரஷ்யா

1. « மார்த்தி » (MARITE) 1947 கறுப்பு-வெள்ளை இய: வெரா ஸ்ரோஜேவா
2. « விபச்சாரி » (PROSTITUTE) 1927 கறுப்பு-வெள்ளை இய: எஸ்தர் ஸப்
3. « அதிகாலை ஞாயிறு » (EARLY SUNDAY MORNING) 1987 வண்ணம் இய: மூரத் மெம்தார்

2. அமெரிக்கா, ஐரோப்பியா

1. « உடைந்த கண்ணாடிகள் » (BROKEN MIRRORS) நெதர்லாந்து 1984 வண்ணம் இய: மார்லீன் கோர்ஸ்
2. « எமிலியின் எதிர்காலம் » (THE FUTURE OF EMILY) பிரான்ஸ் 1984 வண்ணம் இய: ஹெல்மா ஸான்யஸ் பிரேம்ஸ்
3. « காதல் கடிதங்கள் » (LOVE LETTRES) அமெரிக்கா 1983 இய: அழி ஜோன்ஸ்
4. « ஜெர்மன் சகோதரிகள் » (GERMAN SISTERS) ஜெர்மனி இய: மார்கரத்தா வான் டிரோப்பா
5. « வேலை செய்யும் பெண்கள் » (WORKING GIRLS) அமெரிக்கா 1986 இய: லிஸி போர்டனீ
6. « துடைப்பாளர் » (SCRUBBERS) பிரித்தானியா 1982 இய: மாய் ஜேப்பர்லிங்
7. « பாலை இதயங்கள் » (DESERT HEARTS) அமெரிக்கா 1985 இய: போன்னா டீட்ஜ்



3. மூன்றாம் உலகப் படங்கள்

1. « BLACK ANGUSTIALS » மெக்ஸிக்கோ 1949 இய: மடில்பா லென் டட்பா
2. « ஒழுக்கம் » (MORALS) பிலிபைன்ஸ் 1981 இய: மரிலாவ் தியாஸ அபயா
3. « THE RAZORS BOGE » லெபனான் 1987 இய: Jogeyle Saab
4. « LAOY IN SHINING ARMOUR » பிரேஸில் 1987 இய: அனா கரோலினா
5. « சதி »(SATI) இந்தியா 1989 இய: அபர்ணா ஸென்
6. « WHAT HAS HAPPEND TO THIS CITY » (ஆந்திர மதக் கலவரம் பற்றிய விபரணப்படம்) இந்தியா இய: தீபா தன்ராஜ்

இப் படங்களே இன்றைய அளவும் பெண்கள் சினிமா பற்றிப் பேசப்படுகிற படங்கள். பன்முகத் தன்மையுள்ள பெண்களின் மனவுலகு பற்றிப் பேசிய படங்கள்.

இதுவன்றி ஜெர்மன் இயக்குனரான வாம் வான்டாஸின் படங்கள், பிரஞ்சு இயக்குனரான கோபார்டின் படங்கள், இத்தாலியரான பெலின்னியின் படங்கள், அமெரிக்கரான எலான் பால்ஸியின் படங்கள், பிரிட்டீஸ்காரரான கொன்ஸ்லோச்சின் படங்கள் பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு ஐரோப்பியச் சூழல் சார்ந்த பிரச்சனைகளைப் பற்றி பேசுகின்றன. எலின் பால்ஸி தவிர்ந்த பிறர் அனைவரும் ஆண்கள்.

சோவித் ரஷ்யாவில் பிறந்து 20 ஆண்டுகளாக லண்டனில் வாழும் தமாரா கோல்பல் (TAMARA HOLBOLL) தனது அகதி நிலையும் சமீபத்தில் ஏற்பட்ட விவாகரத்தும் தனது விடுதலையை இன்னும் விரித்திருக்கிறது என்கிறார். இவர் ரஷ்ய ஆய்வாளர். இவர் ஸ்ராலின் காலத்திலும், தொடர்ந்து பிரஷ்னேவ் காலத்திலும் தடை செய்யப்பட்டு வெளியிடப்படாத படங்களான WOMAN OF RAYAZAN (இய: W.R. GARPIN) மற்றும் BRIEF ENCOUNTERS, LONG FAREWELL (இய: MURATORA) பற்றிச் சொல்லும் போது இப் படங்கள் மூன்றும் யுத்தத்திற்காக தனது மகன் வீட்டை விட்டுச் சென்றுவிட மருமகளைப் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கிய மாமனாரின் கொடுமனத்தையும் மருமகளின் வாழ்வைப்பற்றியும் சொல்லியது. கணவனற்ற அல்லது ஆணற்ற தனிக் குடும்பத்தாய்க்கும் (Single mother) மகனுக்கும் உள்ள உறவைப் பற்றிப் பேசியது.

Single mother எனும் சொற்றொடர் இங்கு விவாகரத்தான அல்லது கல்யாண பந்தத்திற்குள் போகாத தாய்மையடைந்த பெண்களைக் குறிக்கக் கையாளும் சொற்பிரயோகமாகும்.



'சொந்தப் பிரச்சிரனைகள் பற்றி ஏழு நேர்முகங்கள்' ரஷ்யப் படத்தில்......

சோவியத் படங்களில் பெண் பாத்திரங்கள் திரும்பத் திரும்பச் சொல்வதெல்லாம் தாங்கள் ஏற்கனவே விடுதலை பெற்றுவிட்ட சக்தி வாய்ந்த பெண்கள், தாங்கள் ஆண்களுக் கெதிராக விடுதலைக்குப் போராட வேண்டிய நிலையில் இல்லை என்றே சொல்வார்கள். ஆனால் சினிமாவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'பாலை இதயங்கள்' படத்தில்....

இருந்து வாழ்வனுபவம் முற்றிலும் வித்தியாசமானது.

பெரொஸ்த்ரோய்க்கா காலகட்டத்தில், ஸ்டாலின்-பிரஸ்னேவ் காலகட்டத்தில் தடைசெய்யப்பட்ட பெண்நிலைவாதம் சார்ந்த திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டன. இதற்கு முன்பாக ரஷ்யாவில் காண்பிக்கப்பட்ட பெண் பற்றிய சினிமாச் சித்திரங்கள் அவளை தாய்நாட்டுக்காகப் போராடும் பலம்வாய்ந்த ஆளுமையுள்ள போராளியாக, தொழிலாளியாக, விமான ஓட்டியாகச் சித்தரித்தது. ஆயினும் அவளது மற்றப் பரிமாணங்களான பாலியல் இருத்தல், ஆண்-பெண் உறவுநிலை, குழந்தைக்கும் அவளுக்குமான உறவு, பாலியல் அதிகாரம் செயல்படும் தளம் போன்றன பற்றிய சித்தரிப்புகள், அவளது தனித்துவ அடையாளங்கள் பற்றிய சித்தரிப்புகள் இருக்கவில்லை.

இச்சித்தரிப்புகளுக்கு எவ்வகையிலும் வித்தியாசமானவையல்ல மேற்கத்திய சித்தரிப்புகளும், இந்திய தமிழ் சித்தரிப்புகளும். திரையில் பெண்ணை பலம்வாய்ந்தவளாக- தெய்வமாகச் சித்தரிப்பது; வாழ்வில் கீழ் நிலையில் வைப்பது; திரையில் உன்னதப் படுத்துவது; ஆண்களின் வாழ்வின் விருப்புக்கேற்ப உலகை உருவாக்கிக் கொள்வது......

ஐரோப்பிய பெண்கள் தமது சினிமா முயற்சிகளுக்காக பல்வேறு தடைகளை மீற வேண்டியுள்ளது. உலக சினிமா தயாரிப்பு- இயக்கம் சார்ந்த ஆதாரங்கள் 98 வீதம் ஆண்களின் கையிலுள்ளது. 2 வீதம் மட்டுமே சினிமாவில் பெண்களின் செயல்படும் தளமாகவுள்ளது.

சினிமாவின் பொருளாதாரக் கட்டமைப்பு, சினிமா உலகில் மனித செயல்பாட்டில் ஆண்களின் ஆதிக்கம், வெளியிடும் கதை நிகழ்வில் ஆண் உலகு- ஆண் பாத்திரங்களின் இறுக்கம், வெளியீட்டுத் திரையரங்குகளின் உரிமையில்- அதை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வெகுஜன ஊடகங்களின் ஆண் நோக்கு போன்றவை புதியது விழையும் பெண் சினிமா இயக்குநருக்கு எதிரிலுள்ள உடனடித் தடைகள்.

இச்சூழலில் பெண்களின் உலகை பெண்களின் நோக்கில் வெளியிடுவது மிகமிகச் சிரமமானது. விஸ்தாரமான புணர்ச்சிக் காட்சிகளை பெண் உடம்பு பிம்பத்தை ஆண்-பெண் உறவு நிலையாகச் சித்தரித்து இறுகிப்போனது மேற்கின் சினிமா மொழி. வன்முறைசார் நடவடிக்கைகளை பவ்யமான மாதிரிப் பெண்களைச் சித்தரிப்பதில் நூறாண்டு சரித்திரம் கொண்டது ஹாலிவூட்- மேற்குலக சினிமா உலகு. BASIC INSTINCT, PRETTY WOMAN, FATAL ATTRACTION, RAMBO, TERMINATOR போன்ற படங்களை ஞாபகப்படுத்திப் கொள்ளுங்கள்.

ஐரோப்பிய முதலாளித்துவ- இயந்திர நாகரீக- நவீனத்துவ பின் நவீனத்துவ சமூகம் பெண்களின் பிரக்ஞைக்குள் வைத்த உலகம் இதுதான்.

குடும்ப உடைவு, தனிக்குடும்பம், பாலியல் பலாத்காரம், நிறவெறி ஆதிக்கம், குழந்தை வளர்ப்பு, குழந்தைப் பராமரிப்பு, வேலைத்தளத்தில் படிப்பிடத்தில் பாரபட்சம், சுரண்டலுக்கெதிரான போராட்டம், குழந்தைத் தொழிலாளர் பிரச்சினைகள், பாலியல் வியாபாரம், பெண்மை சரக்காகினவை போன்றவற்றின் முன் அவள் தூக்கி வீசப்படுகிறாள்.

தன்னைச் சுற்றிலுமுள்ள சகலவற்றையும் விமர்சனத்துக்கு உட்படுத்த வேண்டிய நிலைக்கு ஆளானால் அவள். கலை இலக்கிய சினிமா முயற்சிகள் இதை அடிப்படையாகக் கொண்டு வந்தன. WOMAN TREES ,VIRAGO, WOMANS ONLY, SERPENT TAIL, SHEBA FEMINIST PUBLISHERS வெளியிட்ட படைப்புகளில் இவ்வுலகை நாம் தரிசிக்க முடியும்.

நான் இங்கே குறிப்பிட்ட ஐரோப்பியப் படங்களான BROKEN MIRRORS, THE FUTURE OF EMILY, LOVE LETTERS, GERMAN SISTERS, WORKING GIRLS, SCRUBBERS, DESERT HEARTS போன்ற படங்களில் விபச்சாரம், பாலியல் வன்முறை, பெண் குழந்தைகளின் உணர்வுலகு, சமப்பாலுறவு, பெண்கள் இயக்கத்தில் ஒன்றுபட வேண்டியதன் அவசியம் போன்ற விசயங்களைப் பேசுகிறது. இப் படங்களில் விஸ்தாரமான பாலுறவுக் காட்சிகள் இருந்தன. ஆண்களால் கட்டமைக்கப்பட்ட சினிமா பொருளாதாரக் கட்டமைப்பில் இவை தவிர்க்க முடியாத சமரசமாகிவிட்டிருந்தது.

இந்தச் சமரசத்தைத் தூக்கியெறிந்து தீவிர சினிமாவை இந்த சினிமாக்களின் இயக்குனர்களே மிகுந்த சிரமத்தின் பின் வெளிக்கொண்டு வந்தார்கள். எலான் பால்ஸி (ELAN PAALCY) யின் RUE CASES NEGRES, DRY WHITE SEASON போன்ற படங்கள் அத்தகையவை. ஆபிரிக்கப் பெண்கள் பற்றிய படங்கள் அவை.

அமெரிக்க ஹாலிவூட் சினிமா வன்முறை- பொழுது போக்கு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது. ஐரோப்பிய சினிமா தனிநபர் சினிமா (personnel cinema) வகையைச் சார்ந்தது. மூன்றாம் உலகச் சினிமா சமூகப் பொருளாதார தனிநபர் விடுதலை சார்ந்த பிரச்சனைகள் அனைத்தையும் ஒன்றிணைத்தது.

1972 இல் வெளியான SAMBIZANGA எனும் அங்கோல நாட்டுப் படத்தை ஸாரா மல்டோரா இயக்கியிருந்தார். அது காலனியாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் தன் கணவன் கைது



« DRY WRITE SEASON » இயக்குனர் ELAN PANKY
சேனல் 4 புத்தக முகப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்யப்பட்டபோது, அவன் விடுதலைக்காக முயன்ற அவள் மெல்ல மெல்ல விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவதைச் சொல்கிறது.

இலத்தீன் அமெரிக்கப் பெண் இயக்குனர்கள் ஆர்ஜன்டைனாவின் மரியா லூயிஸ் பாம்பர்க், கொலம்பியாவின் மார்த்தா ரோட்ரிக்ஸ், சிலியின் வலேரியா சாமியன்டோ,பிரேஸிலின் டுஸகா யமாஸாகி, வெனிசுலாவின் பினா டோரஸ், கியூபாவின் எஸ்டல்லா பிரேவோ போன்றவர்கள் முக்கியமானவர்கள்.



'சதி' படத்தில் ஸ்ப்னா ஆஷ்மி

இவர்களது படங்கள் தெருக் குழந்தைகள், காணாமல் போனவர்களின் அன்னையர்கள், அரசியலில் ஈடுபட்ட பெண் கெரில்லாக்கள், காணாமல் போனவர்களின் மனைவிமார்கள், ராணுவ சர்வாதிகாரத்திற்கு எதிரான போராட்டம், கெரில்லாக்களின் போராட்டம், மாணவர்-மக்கள் எழுச்சி போன்றவற்றைப் பற்றி அவர்களின் சொந்த வாழ்வில் ஏற்படும் நெருக்கடிகள் பற்றி மரணவுலகம் பற்றி இரத்தமும் சதையுமாகப் பேசியது.

பிலிப்பைன்ஸைச் சேர்ந்த மரிலோவ் டியாஸ், அபயா போன்ற பெண்கள் அரசியல் பிரக்ஞையுள்ள இயக்குனர்கள். நிலவும் உணர்ச்சி சார் மரபு சினிமாவினூடே தீவிரமான பிரச்சனைகளை இவர்கள் சொன்னார்கள். மார்க்கோஸு க்குஎதிரான மக்கள்- பெண்கள் எழுச்சிகளை இவர்களது படங்கள் சித்தரித்தாலும் இவர்களது படங்களிலும் விஸ்தாரமான பாலுறவுக் காட்சிகள் இடம் பெற்றிருந்தன.

பாலஸ்தீன பெண் இயக்குனர் மாய் மாஸ்ரியின் WOMANS OF SOUTH LEBENON படம் உள்நாட்டுச் சண்டையில் அகப்பட்ட பெண்களின் பிரச்சனைகள் பற்றிப் பேசுகிறது. அராபியப் பெண்ணான ஹானி ஸ்ரூரின் LEILA AND THE VOLVES மற்றும் NEIJA BEN MABROK இன் LA TRACE படங்கள் மலையகப் பெண்கள் சுரண்டப்படுதலைக் காண்பிக்கிறது.

மூன்றாம் உலகப் படங்களாகக் குறிப்பிட்டவற்றில் இரண்டு இந்தியப் படங்களைத் தவிர மற்ற நான்கு படங்களும் ஒழுக்க மரபு, பாலியல் சுதந்திரம், அரசியல் ஈடுபாடு, அரசியல் பெண்களின் குடும்ப அமைப்பில் ஏற்படுத்தும் மாறுதல், ஆண் உடம்பு சம்பந்தமாக பெண்ணின் கனவு நிலை, பாலுறவில் தான் பெறும் உடல் சார் அனுபவம் போன்றவற்றைப் பேசுகிறது. அபர்ணா ஸென்னின் 'சதி' படம் பெண் உடன்கட்டை ஏறும் வழக்கம் பற்றியும்; தீபா தன்ராஜின் படம் ஹைதராபாத் நகரில் நடந்த இந்து-முஸ்லீம் கலவரத்தை பெண்களின் நேர் முகங்களின் வழி சொல்கிறது.

மூன்றாம் உலகப் பெண் படைப்பாளிகள் தமது காலனியாதிக்க எதிர்ப்புணர்வு, நிறவெறி எதிர்ப்புணர்வு போன்ற அரசியல் பிரக்ஞையுடன்; தமது சொந்த நாடுகளின் முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு பிரக்ஞையுடன்; தமது சொந்த வாழ்வுக்கான விடுதலைப் பிரக்ஞையான மதம்- குடும்பம்- ஆணாதிக்கம் சார்ந்த ஒடுக்குதலுக்கு எதிரான நிலைப்பாட்டையும் அனுபவம் கொள்ளுகிறார்கள்

கறுப்பு எழுத்தாளர்கள் அலிஸ் வாக்கரின் THE COLOUR PEOPLE, மாயா ஆஞ்சேலாவின் I KNOW WHY THE CAGED BIRD SIGNS, யோனி மோரிஸனின் THE BELOVED போன்றவை. இலத்தீன் அமெரிக்க எழுத்தாளர் இஸபெல் அலண்டேவின் THE HOUSE OF THE SPIRIT போன்றவை அத்தகைய படைப்புகள். தமிழிலும் சிவகாமி, காவேரி, போன்றவர் படைப்புகள்; வ.கீதா போன்றோரின் விமர்சனங்கள் இதே தரத்தவையான தீவிரமான எழுத்துக்கள்.


பெண்களின் தனித்துவமான பிரக்ஞையென்பது அவர்களது சுயேட்சையான சிந்தனை நடவடிக்கை மூலம் மட்டுமே முன்னெடுக்கக் கூடியது.

அக, புக, ஆன்மீக வாழ்வு தழுவிய கலை ஊடகமாக எழுந்திருக்கும் சினிமா பற்றிச் சிந்திப்பதும் செயல்படுவதும் இன்றைக்கு பெண்நிலைவாத இயக்கங்கள், பெண்நிலைவாதிகள் முன் எழுந்திருக்கும் இன்னொரு தேவை.

இந்தியாவில்-தமிழகத்தில் சினிமா இன்னும் பெண்களைப் பொறுத்த வரையில் மேல்தட்டு வர்க்கத்தின் பிரச்சினையாகத்தான் இருக்கிறது. சாவித்திரி, ஸ்ரீப்பிரியா, சுஹாசினி போன்றவர்கள் ஏற்கனவே படங்கள் இயக்கியிருக்கிறார்கள். ரேவதி போன்றவர்கள் இனி இயக்கப் போவதாகச் செய்திகள் சொல்கின்றன.

ஆண்களின் மூளையுடன் சிந்திக்கின்ற எந்தப் பெண்ணினாலும் தனது தனிமொழியுடன் தன் உலகத்தை, தனது குழந்தைகளின் உலகத்தை, தனது முகத்தின்- பூமியின்- ஆகாயத்தின் உலகத்தைச் சொல்லமுடியாது.

நான் இவ்வாறுதான் இறுதியாகச் சொல்வதாக இருக்கும்: பெண்நிலைவாத சினிமா விமர்சன நோக்கு எழுதவேண்டும். பெண்நிலைவாத சினிமாச் சங்கங்கள் தோன்றவேண்டும். தேவை நீண்ட வலிமிக்க பிரக்ஞைபூர்வமான தொடர்ந்த உரையாடல்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலம் பெயரும் சினிமா

# பாரிஸில் தமிழ் 'பயாஸ்க்கோப்'




- புத்திரன்.

அண்மைக் காலமாக பாரீஸ் தமிழர்களை 'திரைப்படப் பைத்தியம்' போட்டு உலுக்கோ உலுக்கென்று உலுக்கி வருகின்றது. மிகவும் சக்திவாய்ந்த திரைப்படத் துறையானது பாரீஸ் கலைஞர்களையும் ஆக்கிரமித்து இருப்பதில் வியப்பில்லைத்தான்.

சென்ற ஆண்டு மட்டும், 'சத்திய கீதை', 'நீயொரு தெய்வம்', 'முகத்தார் வீடு' ஆகிய படங்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் 'மோகம்', 'ராஜாவின் ராகங்கள்', 'நித்திய நெருப்பு' ஆகிய படங்கள் பூஜை போடப்பட்டிருக்கின்றன.

எண்பதுகளின் ஆரம்பத்தில் முளைவிடத் தொடங்கிய இம்முயற்சிகள் ஈழப் போராட்டக் காற்றோடு அள்ளுண்டு போனது. பின் சற்றுத் தேங்கி இப்போது அலையாய் அடிக்கிறது. ஆரம்பத்தில் சாதாரண வீடியோ-கமராக்கள் மூலம் தயாரிக்கப்பட்ட இப்படங்கள் தற்போது தொழில் முறைக் கமராக்களின் உதவியை நாடும் அளவிற்கு வளர்ந்திருக்கிறது. இவை புறொஜெக்டர்களின் உதவியோடு திரையரங்குகளில் திரையிடப்பட்டும் வருகின்றன.

1982ல் திரு. ஞானம் பீரிஸ் அவர்களின் வீடியோக் கமரா முதன்முதலாக இம் முயற்சிக்காக முடுக்கி விடப்பட்டது. இவர் தயாரித்து அளித்த 'தனிப் புறா' படத்தை அடுத்து திரு. பிரியாலயம் துரைஸ் அவர்கள் 'நீதியின் சோதனை' என்ற படத்தைத் தயாரித்தார். இரண்டு படங்களிலும் திரு. சாம்சன் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்திருந்தார். படங்களில் புதிய பாடல்கள், சண்டைக் காட்சிகள், இரட்டை வேடக்காட்சிகள் என்பனவும் அடங்கியிருந்தன.

1986ல் திரு. கலாமோகன் அவர்களால் 'வேர்' குறுந் திரைப்படம் தயாரிக்கப்-பட்டது. இப் படம் பூர்த்தி அடைந்திருந்தும் தொழில் நுட்பம் செம்மையாக அமையாததால் வெளியிடப்-படவில்லை. செய்நேர்த்தி இன்றி ஒரு கலைப்படைப்பை கொண்டுவரத் தயங்கிய திரு. கலாமோகனை இவ்-விடத்தில் பாராட்டுதல் தகும்.

1992ல் திரு. ஞானம் பீரிஸ் அவர்களால் மீண்டும் புதுப்பிக்கப்பட்ட முயற்சியானது இப்போது களை கட்டிக் கொண்டிருக்கிறது. இவர் தாயாரித்து அளித்த 'விடுதலைப் பாதையில்' படம் தொழில் நுட்ப ரீதியில் சற்று முன்னேறிய படம் என அவதானிக்கப்பட்டது.

மிகுந்த பொருட் செலவுடன் எடுக்கப்படும் இம் முயற்சிகள் பற்றி நண்பர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், "சில நாடுகளில் கறுப்புப் பணங்களை வெள்ளைகளாக்க எடுக்கப்படும் முயற்சி போலவே இதுவும்......" என்றார். ஆனால் "நாலு வட்டி பரவாயில்லை" என்று வட்டிக்குப் பணமெடுத்து படமெடுக்கும் நண்பர்களையும் எனக்குத் தெரியும்.

இவர்களது முயற்சிகளை கபடத்தனம் கொண்டவையாக நோக்கத் தேவை இல்லை. இயல்பான ஒரு தாகம். அதுவும் தென் இந்தியத் திரைப்படங்களின் தாக்கம் கொஞ்சம் வசதிகள் வரும் போது கனவுகள் நனவுகள் ஆக்கப்பட முயற்சிக்கப்படுகின்றன.

பாரிஸ் 'லாச்சப்பல்' வீதியில் தடக்குப்பட்டால் ஒரு கலைஞருக்கு மேலேயே விழுந்தெழும்ப வேண்டிய நிலை. அந்தளவுக்கு பாரிஸில் நடிகர்களும் கலை ஆர்வம் கொண்டவர்களும் முட்டிப்போய் இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் அகதி வாழ்வில் தொலைத்து விட்ட தங்கள் 'ஆத்மாக்களை' தேடும்

சினிமாவின் பால் ஈர்க்கப்பட்ட மனிதனையும் அவன் கனவுலக சஞ்சாரியாக மிதக்க ஹாலிவூட்டும், பொலிவூட்டும் வழங்கும் அசுர உற்பத்திகளையும் உலகம் அறியும்.

□

தொலைகாட்சியின் வரவின் பின்... வீடியோ, விசேட அலைவரிசைகள், சாட்டிலைட் இணைப்பு, கம்பியூட்டர் மயமாக்கல் என உலகம் தொலைக் காட்சியின் திரையில்! மனிதன் தொலைக் காட்சிப் பெட்டியின் முன் நேரத்தைக் கழிக்கப் பழக்கப்படுத்தப் பட்டு விட்டான். இச் சுழலில் புலம் பெயர் அகதியான நம்மவர்கள் விதிவிலக்கா? ஆனால், நம்மவர் விரும்பும் பழகிப்போன அந்தக் கனவுலகம்?

இலாபத்திற்காக எதையும் செய்யும் இந்த வியாபார உலகில் போட்டி போட்டுக் கொண்டு இறக்குமதி ஆகின்றன. நம்மவர்களுக்கு சென்னை மையத்தளமாகி விட்டது. தற்போது இங்கேயே உற்பத்தி செய்யும் முயற்சிக்கும் அடிகோலி விட்டுள்ளது.

□

ஆயிரம் கனவுப் படங்களுக் கிடையில் அத்தி பூத்தாப்போல் வரும் நிஜ சினிமா பற்றிய ஏக்கம் நியாயமானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முயற்சியில் தங்களை அறியாமலேயே கலை வாழ்வுடன் சங்கமிக்கின்றனர்.

தற்போது நுரை தள்ளிக் கொண்டிருக்கும் அரசியல் கோஷமான, *'தென்னிந்தியப் படங்களை நிராகரிப்போம்; நம் நாட்டுக் கலைஞர்களை ஊக்கு-விப்போம்!'* என்பது இங்கு வாய்ப்பாகப் போய் விட்டது.

எடுக்கப்படும் படங்களின் தர நிர்ணயம் பற்றி பார்வையாளர்கள் அதிகம் கவலை கொள்வதில்லை போலும். 'நம் நாட்டுக் கலைஞர்களை ஊக்குவிக்க' திரையரங்குகளை இடித்துத் தள்ளிக் கொண்டு வரவேற்-கிறார்கள். ஆனாலும் தமிழகத்துப் படங்களைப் பார்த்துச் சலித்து, புதிதாக ஒன்றை எதிர்பார்த்து அவாவுறும் ரசிகர்களின் மனங்களை அவதானிக்க முடிகிறது.

*'சத்திய கீதை'*: திரு. கீழ்க்கரவை பொன்னையன் அவர்களின் கதை, திரைக்கதை, வசனம், இயக்கம், நடிப்பு (இரட்டை வேடம்) உடன் உருவான படம். திரு. பொன்னையன் அவர்கள் சிறந்த மேடைப் பேச்சாளர், எழுத்தாளர், விமர்சகர் ஆக நன்கு அறியப்பட்டவர். கதை இலங்கை- பிரான்சைத் தளமாகக் கொண்டிருந்தது. நிறையவே செப்பனிடப்படவேண்டிய கதை இது. கதை- இயக்கம்-நடிப்பு என இவர் பல்வேறு பணிகளில் தன் முதலாவது படத்திலேயே கால் பதித்தமை. படத்தைப் பார்த்து முடிக்கும் போது ஓர் அவசர முடிவாகவே பட்டது.

*'நீயொரு தெய்வம்'*: திரு. ஞானம் பீரிஸ் அவர்களின் மூன்றாவது படம். இவர் கலைத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். கதை. திரைக் கதை, பாடல்கள் என பொறுப்புகளை ஏற்றிருந்தார். இலங்கையைத் தளமாகக் கொண்ட கதை. தமிழகத்தின் பேச்சுத் தமிழில் இந்தியப் பாணியில் எடுக்கப்பட்ட படம். இலங்கை நடிகர்களைக் கொண்டு தமிழகப் பேச்சுத் தமிழ் கையாளப்பட்டிருந்தமை ஒரு விஷப் பரீட்சையே.

*'முகத்தார் வீடு'*: சில ஆண்டுகளுக்கு முன் இலங்கை வானொலியில் 'முகத்தார் வீடு' நாடகம் பாரிஸ் ஆர். ரீ. எம். பிறதேர்ஸ் ஸ்தாபனத்தாரால் படமாக்கப்பட்டிருந்தது. 'நிர்மலா', 'தெய்வம் தந்த வீடு' போன்ற ஈழத்துப் படங்களைத் தந்த திரு. ரகுநாதன் இதனை இயக்கியிருந்தார். 'முகத்தார்' ஜேசுரட்ணம் அவர்களே இதிலும் அதே பாத்திரத்தில் நடித்திருந்தார். இத்திரைப் படமே முதன் முறையாக பாரிஸில் தொழில் முறைக் கமரா (கீயு மெற்றிக்) பாவித்து எடுக்கப்பட்டது.

ஒட்டு மொத்தமாகப் படங்களைப் பார்க்கும் போது குறைகளே மேலோங்கி நிற்கின்றன. நம் நாட்டுத் திரைப்படங்கள் நாடக மேடையை விட்டு இன்னும் வெளியே வரவில்லை என்ற இந்தியத் திரைப்பட விமர்சகளது கருத்து எமது திரைப்படங்களைப் பார்க்கும் போது இன்னும் அழுத்தமாகின்றது.

புகழ் பெற்ற மேலைத்தேயப் படங்களில் கதைத் தேர்வுக்காக மட்டும் நாட்கணக்கில் நடாத்தப்படும் விவாதங்களும், படத் தயாரிப்புச் செலவில் கிட்டத்தட்ட காற்பங்கு செலவுகள் கதைத் தேர்வுக்காக மட்டும் செலவிடப்படுவதும் எம் கண்முன்னான நிகழ்வுகள். ஆனால் எமது படங்களில் சீரான கதை அமைப்பையோ ஒழுங்கான பாத்திர வார்ப்புக்களையோ காணமுடிவதில்லை. சரி கதையை ஒரு புறம் விட்டாலும் தொழில் நுட்பம்? கலை இலக்கியத்தில் உச்சங்களைத் தொட்டு நிற்கும் பிரான்சில் படிப்பதற்கு எவ்வளவோ விஷயங்கள் உண்டு. திறமைசாலிகள் நம்மிடையே இருக்கிறார்கள். இத்துறையில் ஈடுபாடு கொண்டோர் இவர்களை ஏன் வளர்த்து எடுக்கக் கூடாது? சுத்திச் சுத்தி தங்களைப் பற்றியே பெருமை அடித்துக் கொள்வதில் பயன் ஏது?



'ராஜாவின் ராகங்கள்' படத்தில்....

ஒரு கலைஞனின்- படைப்பாளியின் ஆரம்ப முயற்சிகளில் அதிகளவு எதிர்பார்த்து விமர்சனங்களை அள்ளி வீசுதல் முறையற்றதாகப் படினும், தொழில் நுட்ப ரீதியில் வளர்ச்சி அடைந்த நாடொன்றில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம்மவர்களால் எடுக்கப்படும் திரைப்படங்கள் ஓரளவிற்காவது செம்மையாக இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது தவறாகாது. மின்சார வசதிகள் துண்டிக்கப்பட்டு, நவீன தொழில் நுட்ப வசதிகள் அற்று, யுத்த நெருக்கடிக்குள் கந்தகக் காற்றை சுவாசித்துக் கொண்டு வெளிவரும் இன்றைய ஈழத்து குறுந்திரைப் படங்களின் கமராக் கோணங்களையும் கலை நேர்த்திகளையும் பாரிஸிலிருந்து வெளிவரும் படங்களோடு ஒப்பிட்டால் பெருமூச்சே மிஞ்சும்.

மூலைக்கு மூலை குறைகளை மட்டும் கூறி சோம்பிக்கிடக்கும் புத்திஜீவிகளை விட, கலைமீதான நேசிப்போடு தம்மால் முடிந்தளவில் முயற்சிகளை மேற்கொள்ளும் இந்த செயல் வீரர்கள் கவனத்திற்கு உரியவர்களே. இந்த நெருக்கடியான அகதி வாழ்வினுள்ளும் இரண்டு கிழமைக்குள் ஒரு நாடகத்தை மேடை ஏற்றக் கூடிய வல்லமை இவர்களுக்குண்டு. மாதமொரு கலை நிகழ்ச்சி, வீடியோ மலர், திரைப்பட முயற்சிகள் என சுறு சுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் இவர்களது உழைப்பு பயனுள்ள வகையில் ஒழுங்கு அமைக்கப்படுமாயின் காலம் காலமாகப் பேணிப் பேசப்படும் பதிவுகளில் இடம் பெறுமல்லவா?

போதிய தேடலற்ற தன்மையும், விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளாமையும் நம்மவர் வளர்ச்சிக்கான தடைகளாகவுள்ளன. வெற்றுப் புகழ்களை மட்டும் நாடாமல், சமூக நலன்- தரம் வேண்டி நம்மவர்கள் அடியெடுத்து வைக்க வேண்டும்.

கலைப் பயணம் என்பது ஒரு கூட்டு முயற்சி. தனித்து நின்று சாதனை புரிதலென்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. கலைத்துறை வளர்முக ஆர்வத்துடனான கூட்டு முயற்சி பாரிஸ் கலைஞர் களுக்கு இன்றைய தேவை. காலம் காத்துக் கிடக்கிறது வரவேற்க.

❋❋❋

***மார்கழி 1994***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அகதி வாழ்வைக் கூறும் துருக்கிய – சுவீடியத் திரைப் படம்

# தப்பித்தல் (ESCAPE)

-யமுனா ராஜேந்திரன்-

துருக்கியின் கிராமப்புறம். ஆடுகளை மேய்த்து வாழ்க்கை நடத்தும் நாடோடி வாழ்க்கை. நிலம் விளைவதற்கான சாரத்தை இழந்து விட்டது. வரண்ட வாழ்க்கை.

மிகப் பெரியதொரு கூட்டுக் குடும்பத்தையும், அந்தக் குடும்பம் சிதறுண்டு போவதையும் இப்படம் சொல்கிறது.

சுவிட்சலாந்துக்குப் போனால், பொருளாதார ரீதியில் தம் துன்பங்களிலிருந்து மீளலாம் என்று நினைக்கிறான் ஆட்டிடையன்.

அவன், அவன் மனைவி, அவனின் குழந்தைகள், அவனது மூப்பெய்திய தாய் தந்தையர்.

தனது கால்நடைகளையும், நிலங்களையும் விற்றுவிட்டு; தனது தாய் தந்தையருக்கு கொஞ்சம் பணம் கொடுத்துவிட்டு, தானும் தனது மனைவியும் மட்டுமே சுவிட்சலாந்துக்குப் போவது அவன் திட்டம். பிற்பாடு அவர்களை அழைத்துக் கொள்வது அவன் நோக்கம். அந்தக் குடும்பத்தின் மூத்தவர் சொல்கிறார். "குழந்தைகளை இழப்பது -விட்டு விட்டுப்போவது- எமது கலாச்சாரத்தின் வேர்களை இழப்பது -விட்டு விட்டுப் போவது- மாதிரி. ஏதேனும் ஒரு குழந்தையையேனும் அழைத்துப் போங்கள். எம் குழந்தைகள் எம் வாழ்வின் வேர்கள்."

அதன்படி, ஓர் ஆண் குழந்தையுடன் (3-4 வயது) அவர்களது பயணம் தொடங்குகிறது.

கொண்டு வந்த பணம் போதாது என்கிறார் ஏஜென்ட். விமானத்தில் போக முடியாதென்று திருட்டுத்தனமாக சரக்கு ரயிலில் ஏற்றி விடுகிறார்கள்.

ஏஜென்டுகள் களவாணிகள். இரு வகைக் களவாணிகள். துருக்கியக் களவாணிகள். சுவீடியக் களவாணிகள். சொந்த மக்களைக் கொள்ளையடிப்பவன் ஒரு புறம். மக்களின் அறியாமையைக் கொள்ளையடிக்கும் அந்நியன் மறு புறம்.

இந்த ஏஜென்டுகள் சொல்லிக் கொடுக்கிறார்கள், "நீங்கள் பொலிஸ்காரர்களிடமோ குடியேற்ற அதிகாரிகளிடமோ அகப்பட்டுக் கொண்டால், உடனே இரண்டு கைகளையும் தலைக்கு மேல் தூக்கி 'அரசியல் அடைக்கலம் கோரும் அகதி' என்று சொல்லுங்கள்."

ஒரு மலைச் சரிவுக்குக் கூட்டி வரப்படும் துரக்கிய மக்களின் கூட்டம். இவர்களின் பயணம் ரயில் மூலம், பஸ் மூலம், வழியில் கிடைத்த சரக்கு வாகனம் மூலம் என மிகச் சிரமம் வாய்ந்தது.

மலைச் சரிவுக்குக் கூட்டி வந்த சுவீடிய ஏஜென்டின் துருக்கிய கையாள், அவர்களுக்கு சுவிட்சலார்ந்து போகும் வழியை விளக்குகிறான்:

"இந்த மலை உச்சியைக் கடந்து இறங்கி, அடுத்த பக்கம் போய் விடுவீர்களானால் அதுதான் சுவிட்சலார்ந்து. அங்கு போனவுடன் வேலை கிடைக்கும். லட்சம் லட்சமாகச் சம்பாதிக்கலாம்.

"நீங்கள் எல்லோரும் ஒன்றாகப் போகக் கூடாது. தனித் தனிக் குழுவாக, சிறுசிறு கூட்டமாகப் போகவேண்டும். பெண்கள் தனிக் கூட்டமாகவும், ஆண்கள் தனிக்கூட்டமாகவும் போக வேண்டும்."

நகரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அவர்களைச் சந்திப்பதாக அவன் சொல்கிறான். ஒரு வழிகாட்டியையும் ஏற்பாடு செய்கிறான். காற்று பனியை வாரி வீசி வீசியடிக்கிறது. 'ஹோ' வென்று சத்தம். காற்றை எதிர்த்து நிற்க முடியாமல் மக்கள் வீழ்கிறார்கள்.

வழிகாட்டி இன்று போக முடியாது என்று மறுக்கிறான். ஏஜென்டின் கையாள் கட்டாயம் இன்று போகவேண்டும்; நாளை மற்றொரு குழு வருகிறது என்கிறான். வழிகாட்டி தீவிரமாக மறுக்க, ஏஜென்டின் கையாள் அவனைப் பலமாகத் தாக்கி, மலைப் பாதையில் உருட்டி, அடித்துக் கொன்று விடுகிறான். அம்மக்கள் கூட்டத்திடம் பயணத்தைத் தொடரும் படி சொல்கிறான்.

பயணம் தொடருகிறது. இருட்டி விடுகிறது. இருண்டு கண்ணுக்கு எட்டிய வரை பனிப் பள்ளத்தாக்குகள். மலைகளில் பிரதிபலிக்கும் வெள்ளை நிறம். கால்கள் புதையப் புதைய நடக்கும் மனிதக் கூட்டம். விறைத்து விழும் பிணங்கள். அதை அவ்வாறே விட்டு விட்டு மேலும் தொடரும் மனிதக் கூட்டத்தின் பயணம்.

பெண்கள் கூட்டம் மிகுந்த துன்பங்களுக்கிடையில் ஓர் ஒய்வு விடுதியை அடைகிறது. பூட்டிய கண்ணாடி அறைகளுக்கு வெளியில் நின்று அரற்றுகிறது. பனியிலும் குளிரிலும் விறைத்த தமது கால்களையும் உடம்பையும் சொல்லி உதவி செய்ய, பசியாற்றக் கெஞ்சுகிறது.

குடியேற்ற அதிகாரிகள் வருகிறார்கள்.

மனைவியைப் பிரிந்த ஆட்டிடையன், இருளில் தனது கூட்ட நண்பர்களையும் பிரிகிறான். இடுப்புவரை பெய்து நிற்கின்ற பனி. குழந்தையால் நடக்க முடியவில்லை. குழந்தையின் உடல் விறைத்து விட்டது. அவன் தோளில் மீது துவண்டு விட்டது.

அவன் அரற்றுகிறான். மனம் போனபடி சுற்றுகிறான். அழுகிறான். அங்கும் இங்கும் ஓடுகிறான்.

பனியில் அகப்பட்டுக் கொண்டவர்கள் பற்றி அதிகாரிகளுக்குச் செய்தி போகிறது. பனி அகற்றும் வாகனங்களோடு விரைகிறார்கள் அதிகாரிகள்.

இருண்ட குன்றுகளுக்கிடையில் மாறி மாறி வீசிப் போகும் கண்ணைக் கூசும் வெளிச்சம். சுவீடிய மொழியில் ஒலிபெருக்கியில் அடிக்கடி அழைக்கும் சப்தம்! குன்றுகளுக்கிடையே பனிக்காற்றின் பேரோசையும் புரியா மொழியும். இவை, எவற்றையும் ஆட்டிடையனுக்கு எட்டும்படி வைக்கவில்லை.

இருட்டு. மாறிமாறி வரும் தட்டான ஒளி. குன்று. பனி. கதறல். தீனக் குரல்.

விழிகிறது. பனி வாரும் இயந்திரங்கள் பாறைகளில் பனியை வாருகிறது. அவன் பிரதான சாலைக்கு வருகிறான். அவன் தோளில் குழந்தை. சுரணையற்ற சாய்ந்த தொய்ந்த வாழையிலை போன்ற பிஞ்சு உடல். குழந்தை உயிரோடு இருக்கிறது என்றே அவன் நம்புகிறான்; நாமும் குழந்தை உயிரோடு இருக்க வேண்டும் என்றே விரும்புகிறோம். நம் மனம் அலை மோதுகிறது. மறுகுகிறது.

தூரத்தில் அவன் நண்பர்கள் வருகிறார்கள். அவர்கள் அருகே இவன் போகும் முன்பே, வழியில் வந்த வாகனத்தில் ஏறிப்போகின்றார்கள்.

சிவந்த கண்களில் கண்ணீர்த் துளிகளோடு வழி பார்க்கிறான். வரும் வாகனமொன்றில் ஒரு முதியவர் அவனையும், குழந்தையையும் ஏற்றிக் கொண்டு மருத்துவ மனைக்குக் கொண்டு விடுகிறார்.

குழந்தை மருத்துவ மனைக்கும், அவன் குடியேற்ற அதிகாரிகளிடமும் கொண்டு போகப்படுகிறார்கள். குடியேற்ற அதிகாரிகளின் விசாரணைக்குப் பின், தன் மகனைப் பார்க்க அழைத்து வரப்படுகிறான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிசப்தம். நீண்ட மௌனம். சவ மௌனம். வரட்சி.

குழந்தை இறந்து விட்டான்.

தனது குழந்தையைக் கொன்றுவிட்டதாக அழுது குமுறி, அவன் மார்பின் மீது கையால் மாறிமாறி அடித்து, அவனைப் பிடித்து உலுக்குகிறாள் மனைவி.

குழந்தையைக் கொலை செய்த குற்றத்திற்காக சிறையில் அடைக்கப்படுகின்றான்.

இறுதிக் காட்சி: சிறைக் கம்பிகளுக்கிடையில் திரை முழுக்க ஆட்டிடையனின் முகம். அவன் முகத்தில் மொய்க்கும் ஈக்கள். நிச்சலனம்.

அவனையும் குழந்தையையும் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்ற சுவீடிய முதியவர் வருகிறார். குழந்தையின் இறுதிக் கிரியைகளைத் தான் பொறுப்பேற்பதாகச் சொல்கிறார். அவனிடம் "இறுதியாகச் சொல்ல ஏதேனும் இருக்கிறதா?" என்று கேட்கிறார். ஆம். அவனுக்குச் சொல்ல இருக்கிறது!

« என் செல்ல மகனின் இறுதிக் கிரியை, என் சொந்தக் கிராமத்தில் நடக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். »

அவன் முகம் திரையில் முழு வடிவத்துடன் உறைகிறது.

(நன்றி- மீட்சி)

□□□□□□

# உணர்வு பற்றிய கதை

அவுஸ்ரேலியா மூலம் : **BILL NEJDJLE**

தமிழ்த் தழுவல் : க. ஆதவன்

கேளுங்கள் கவனமாய்-
கேளுங்கள்.
உங்கள் உணர்வில் 'அ' வந்தது.
உங்களால் உணரப்பட்ட 'அ' வந்தது.
உங்களால் உணரவேண்டிய 'அ' வந்தது.
எல்லாராலுமே உணரக்கூடிய 'அ' வந்தது.
நான் அதை உணர்ந்தேன்.
என்னுடல் உன்போல இருந்தது.
இதை-நான் ஏன் உனக்குச்
சொல்கிறேன் எனில்-
இந்த நிலம் எங்களுக்கானது.
'வட்டம்' 'சதுரம்' இவை மாறுவதில்லை.
அதுபோல 'இடமும்' 'நிலமும்' 'நிலவும்'
மாறுவதில்லை.
நட்சத்திரம், மரம், மிருகம், பிராணி.....
பிராணி என்கையில் அது
பறவை அல்லது பாம்பாயிருக்கலாம்
அது எதுவாயிருந்தால் என்ன?
எல்லாம் என்னையும் உன்னையும் போலவே
சிநேகம் கொண்டுள்ளன.
இந்தக் கதையை 'அ'கட்டாயம்
கவனமாய்க் கேட்க வேண்டும்
நீ எப்படி உணர்ந்தாயோ
அதுபோல 'அ' வும் உணரவேண்டும்.
உனது உடல் பூராவும்
காலிலிருந்து தலைவரை....
உனது விரல் நகத்தில்....
உனது இரத்தத்தில்....
உனது இதயத்தில்.... ஆத்மாவில்
'அ' பரவவேண்டும்.
'அ' வை நீ உணர்.
இப்பொழுதே 'அ' வை நீ நுகர்.
'அ' இக்கணத்திலேயே உன்னுள்! -
சில பொழுதுகளில்-
நீ, நிலவையும், நீரையும், சூறாவளியையும்,
மரத்தையும், காற்றையும்....
கனவுகாணலாம்.

'அ' கனவு காணக்கூடியது.
'அ' அங்கும் வரலாம்.
'அ' சாத்தியமானது.
'அ' உனது எல்லாவற்றிலும் கலக்கக்கூடியது.
'அ' தூங்குகிறது என்று வைத்துக்கொள்.
'அ' வினால் பகல் கனவு கூடச் சாத்தியமாகும்.
இப்பொழுது-
நான் கேட்ட கதை சொல்கிறேன்.
நீ கவனமாய்க் கேள்.
காற்று என்கிற 'அ'
பலமாய் வீசுகிறது.
மரம் என்கிற 'அ'
அசைய ஆரம்பிக்கிறது.
நாங்கள்....
எங்களுக்கு இந்தக் கதை விருப்பமானது.
ஏனெனில்-
கதை என்பது எங்கும் செல்லக்கூடியது.
உடலும் உள்ளமும் தழுவிய
கதைகேட்டே
தூங்கிப் போகலாம்.

« கடவுளே இந்தக் கதையை
நான் கேட்க வேண்டும்
அதன் திருப்பங்களூடாக
நான் தூங்கிப் போக வேணும்
'அ' பற்றிய கதையை....
'அ' பற்றிய உணர்வை....
'அ' மேல் எல்லாவற்றையும்....
அருளும் இறைவா
ஆமென்! »

* 'அ' – 1. சுதந்திரம்
2. அவன்
3. அவள்
4. அது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூவானம்

## 1. தமிழ் நாட்டில் இருந்து ஒரு மடல்:

புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களின் இலக்கியம் தனி வகையானதா? சிறப்புடையதா? அதற்கு வரலாற்றில் இடமுண்டா? என்ற கேள்விகள் நியாயமானவையே. கேள்விகள் இல்லாவிட்டாலும் எழுப்பிக் கொள்ளத்தான் வேண்டும். உலகின் பல்வேறு பகுதிகளில் சிதறிக்கிடக்கும் அவர்களால் வெளியிடப்படும் இதழ்களைப் படித்த பிறகு இவை தவிர்க்க முடியாதவை ஆகிவிட்டன. ஓர் இனத்தின் பெரும் பகுதி சொந்த மண்ணில் கலாச்சார மீட்சிக்காகப் போராடிக் கொண்டிருக்கும் போது சிலர் அதன் வீச்சை எதிர் கொள்ள இயலாமல் பலவீனப்பட்டு ஒதுங்க் கொண்டு பத்திரம் தேடி வாழ்தல் என்பது நீதியல்ல. இவர்கள் அனுதாபம் தேடுவதும் இயற்கையாக இல்லை. இவர்களும் துன்பப்படுகிறார்கள் என்ற பிம்பத்தை உருவாக்குவதில் திருத்தல்வாதிகளான சில தமிழகப் படைப்பாளிகள் திடீரென்று முனைந்திருக்கிறார்கள். எப்போதும் உள்ளதுதான்.

மனிதருக்கு எங்கேயும் பிரச்சினைதாம். சொந்த மண்ணில் ஒரு வகையானது; இன்னொரு மண்ணில் வேறுவகையானது. ஆனால் சொந்த மண்ணில் அடிமையாக இருப்பதென்பது மிகக் கொடியதுதான். அதில் மீட்சிக்கான சிந்தனைகள் வடிவம் கொள்ளும். வேறு மண்ணில் இருந்து கொண்டு என் பண்பாட்டை இழந்து நிற்கிறேன் என்று புலம்புவது பிசிறு தட்டத்தான் செய்கிறது. ஒரு விடுதலைப் போராட்டத்தில் நூறு சதவீத மக்களும் கலந்து கொள்வதென்பது எதிர் பார்க்கக் கூடியதல்ல. ஆனால் அருகில் இருந்து கொண்டே அது குறித்த ஒரு தீர்மானமான விமரிசனத்தை வைக்க அவர்கள் தவறுவதில்லை. அது கூட போராட்டத்தின் தன்மையை- அதன் போக்கை விமரிசிப்பதாக இருக்குமேயன்றி அதன் நோக்கத்தையல்ல. ஏனெனில் ஒரு கட்டத்திற்குப் பின் அதன் பலன்களை அனுபவிக்கப் போகின்றவர்கள் நாமும்தான் என்ற சிந்தனை இருப்பதால்தான். வரலாற்றுப் பிரக்ஞை உள்ளவர்கள் இப்படித்தான் யோசிக்க வேண்டும்.

இந்திய சுதந்திரப் போரில் ஈடுபாடு கொண்ட அனைவருமே காந்தியை ஏற்றுக் கொண்டவர்களல்ல. ஆனால் போராட்ட நோக்கத்தைப் பற்றிய மாறுபாடு ஏதுமில்லை. போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியதும் இல்லை. எனவேதான் பல்வேறு முகப்பட்டதாக இருந்தாலும் அதற்கு ஒரு தொடர்ச்சி இருந்தது. மக்களை உள்ளடக்கியதாக இருந்தது.

தொடக்க காலத்திலிருந்தே இலங்கையை எடுத்துக் கொண்டால் அதாவது சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்தே அது தலைமையைத் தாண்டி வந்ததில்லை. தம் சொந்த நலன்களுக்கு ஊறு நேரும் போது வெறும் காகித ஒப்பந்தங்களிலும், சமரசங்களிலும் பங்குபோட்டுக் கொள்ளும் தலைமையாக இருந்தது. மக்களோடு விலகி இருந்தது. பதி, பசு, பாசம் சம்பந்தப்பட்டவைகளோடு தொடர்புடையதாக இருந்தது. சிங்கள முற்போக்குச் சக்திகளும், இடதுசாரிகளும் கூட அரசியல் இனவாதம் பேசினால்தான் பிழைக்க முடியும் என்ற நிலமை கூட ஏற்பட்டிருந்தது. ஆயுதம் தாங்கிப் போராடும் ஒரு கருத்தாக்கம் கூட இல்லாதிருந்தது. உலக நாடுகளையும், அதன் விடுதலை இயக்கங்களையும் கண்ட தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவேண்டிய நியாயத்திற்குத் தள்ளப்பட்டனர். அவர்களிடம் ஒருமித்த கருத்தை எதிர்பார்ப்பது சரியாகாது. வரலாறு அப்படி இருந்ததில்லை.

ஒரு நெருக்கடியான கட்டத்தில் வேரையும் வேரடி மண்ணையும் சேர்த்துப் பிடுங்கிக் கொண்டு கரை தாண்டிப் போன பிறகு ஏக்கத்தோடு சொந்த மண்ணை நினைவு கூர்வது அந்நியமானதே. கவிதை எழுதுவது, கதை எழுதுவது போன்ற இலக்கிய சம்பந்தப்பட்டவைகளில் தாய் மண்ணில் நடக்கும் ஒரு போராட்டத்திற்கு பயனுள்ளதாக மாற்றவேண்டிய அவசியத்தை உணராமல் தனிமனித ஏக்கங்களையும் மன உளைச்சல்களையும் முன்னிருத்தி அனுதாபம் தேட முயல்வது பிழையானது. சாதாரண மக்கள் வெளிப்படையாகவே உயிருக்குப் பயந்து அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் புலம் பெயர்ந்து அண்டை நாடான இந்தியா வந்து, அரைக் காலனி ஆதிக்க நாடுகளில் இருக்கும் அத்தனை அவலங்களையும் சந்தித்து அவதிப்படுகிறார்கள். முகமிழந்து நிற்கிறார்கள். அவர்களின் கவனமெல்லாம் சொந்த மண்ணில் நடைபெறும் ஒரு போராட்டத்தின் போக்கை அவதானித்துக் கொண்டு வீடு திரும்பும் காலத்தை எதிர் நோக்குவதில்தான் இருக்கிறது. ஐரோப்பிய நாடுகளில் புலம் பெயர்ந்த ஈழ இலக்கியவாதிகளுக்கும், அறிவியலாளர்களுக்கும் மெத்தப் படித்தவர்களுக்கும்தான் இதே சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.

சொந்த மண்ணை நேசித்து அதன் நெருக்கடிகளில் தம் பங்கையும், பணியையும் செலுத்துபவர்களுக்கே தம் கலாச்சாரம், மொழி, இனம் பற்றிப் பேச உரிமை இருக்கிறது என்பதே சரியானதாகத் தோன்றுகிறது.

**நா. விச்வநாதன். அரசூர், அம்மன்பேட்டை, தஞ்சாவூர் 613205. இந்தியா**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூவானம்

## 2. ஈழத்திலிருந்து ஒரு மடல்:

*மௌனம் நன்று*
*மௌனமாய் இருந்தால் நன்று*
*நீண்ட நாள் வாழ மௌனமாய் இருத்தல் வேண்டும்*
*எங்கள் வாசல் கதவுகளை, சாளரங்களை நாம் என்றோ அடைத்து விட்டோம்*

கைலாசநாதனின் கோடுகள்தான் இன்றைய யாழ்ப்பாணம். காலையில், மாலையில் சாப்பிடக் கூட நேரமின்றி தனியார் கல்லூரிகளில் வகுப்புகள். வகுப்பொன்றில் 70- 80 பிள்ளைகள் பட்டிகளாய் அடைந்து 'பேப்பர் கிளஸ்'. 99வீதம் கற்றவர்களெனப் பெருமைபடும் யாழ்ப்பாணத்தில்தான் தமிழே எழுதத் தெரியாத மாணவர் தொகை பெருக்கமடைகிறது. பனை ஓலைகளின் சரசரப்பை அண்ணாந்து பார்க்கும் வேளையில், காலுக்குள் மிதிபடும் கம்பளிப் பூச்சிகள் பற்றி யாருக்கென்ன அக்கறை?

பல்கலைக்கழகத்தையே எடுத்துக் கொண்டால், 'பெரிய ரியூட்டரி' என்று அழைப்பது உண்மையாகுவது போல் நிறையவே சம்பவங்கள். கடிவாளம் கட்டிய குதிரைகளாய் நிரம்பி வழியும் மாணவர் கூட்டமோ? ஒரு நாள், இரு மாணவிகள் என்னிடம் புத்தகம் கேட்டு வந்திருந்தார்கள். ஏதோ மூன்றாம், நான்காம் வகுப்பு படிக்கும் மாணவிகளல்ல. பல்கலைக் கழகத்தில் மூன்றாம் ஆண்டு படிக்கும் சிறப்புப் பட்ட மேற்படிப்பாளர்கள். அவர்கள் என்னிடம் இலக்கியப் புத்தகம் வேண்டும் என்றார்கள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன புத்தகமென்று கேட்டேன். அவர்களிருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள்! பேராசிரியர் சொன்ன புத்தகத்தின் பெயரை மறந்துபோய் விட்டனர். 'சமுதாய நோக்கில் தமிழ் நாவல் இலக்கியம்' என்ற புத்தகத்தைக் கொடுத்த போது, இது இல்லை- இலக்கியம் படிக்கும் புத்தகம் என்றார்கள். சற்று யோசனையின் பின், பேராசிரியரிடம் கேட்டு வாருங்கள் என்று அனுப்பி வைத்தேன்.

மறுநாள் வந்த அவர்கள், 'இலக்கியப் பஞ்சாங்ககம்' வேண்டும் என்றார்கள். எனக்கு இப்போதுதான் புரிந்தது, அவர்களது விருப்பம். கலாநிதி க. பஞ்சாங்கம் எழுதிய "இலக்கியத் திறனாய்வு வரலாறு' என்ற புத்தகத்தை எடுத்துக் கொடுத்தேன். இப்புத்தகம் 'இலக்கியப் பஞ்சாங்கம்' ஆகியதையிட்டு வேதனைப்பட மட்டுமே என்னால் முடிந்தது.

ஒருவாறு கோமலின் ஈழத்து இலக்கியப் பயணச் சலசலப்பும் ஓய்ந்து விட்டது. ஈழத்து முதிய எழுத்தாளர் அ. சா. முருகானந்தன் கொழும்புத்துறையில் இயங்கும் முதியவர் இல்லத்தில் 'ஒரு வேட்டி, துவாய்' கேட்டு பரிதவிக்கும் நிலை பற்றி யாருமே கவலைப்படவில்லை.

மௌனமாய் இருத்தல் நல்லதென்று கூறி மௌனத்தைத் தொலைத்து விட்டேன் போல்......

**அ. கு. சிங்கம், பருத்தித் துறை. இலங்கை.**

## 3. பாரிஸிலிருந்து ஒரு மடல்:

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு ஒருவிதமாக முடிந்தேறியபின், நான் பாரிசுக்குத் திரும்பி விட்டேன். தமிழ் அறிஞர்கள் சிலரை மதியாது நாட்டை விட்டே திருப்பி அனுப்பியது ஒரு மாபெரும் தவறு. அதனால் தமிழ் நாட்டிற்கு வருகை தந்திருந்த வெளிநாட்டு அறிஞர்களுக்கு ஒருவித மனக்கலக்கம் - அவமானமும் கூட.

ஒரு சில ஆய்வுகள் மட்டுமே சிறப்பாக இருந்தது. பலர் மேடைப் பேச்சையும், ஆய்வுக் கட்டுரைகளையும் சமமாக நினைத்து விட்டதால் இப்பரிதாப நிலை ஏற்பட்டுவிட்டது. கலை நிகழ்ச்சிகள் மிகவும் திருப்தியாக இருந்தன.

தமிழ் இதழ்களின் கண்காட்சி அருமையாக இருந்தது. 'மௌனத்தை'க் கண்டேன் களிப்படைந்தேன்.

**அ. முடியப்பநாதன். பாரிஸ். பிரான்சு.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சில படங்கள் துணுக்குகள் கவிதைகள்

## அறிவியலில் சீனா

விரைந்து அறிவை வளர்க்கும் அருஞ்சாதனங்களான காகிதமும், பாள அச்சு முறையும், அச்சு மையும், எழுதுவதற்கான மசியும் சீனாவில்தான் முதன்முதலில் கண்டறியப்பட்டிருந்தன. உடலில் உண்டாகும் நோய்களின் தன்மையும், அவற்றைப் போக்குவதற்கான மூலிகை மருந்து வகைகளும் அந்நாட்டில்தான் அதிமதிகம் உருவாக்கப்பட்டிருந்தன. 'அக்குப்பஞ்சர்' எனும் ஊசிக்குத்தல் உடல் பகுதிகளை மரத்துப் போகச் செய்யும் அறுவை சிகிச்சை முறையும் அன்று அங்குதான் உருவாக்கப்பட்டிருந்தது. பட்டுப் பூச்சியிலிருந்து சுரக்கும் திரவத்திலிருந்து உருவாக்கும் பட்டு நூலைக் கொண்டு அழகிய ஆடை நெய்யும் நெசவு முறையும் அங்கேயே கண்டறிப்பட்டு வளமாக்கப்பட்டிருந்தது.

-மணவை முஸ்தாபா

நன்றி: தினமணி-

தொகுப்பு: பயஸ்

## தேயிலை

தரம் ஏ1.
வெள்ளையன் கடையில்
வடிசரையில்
வாசம் நுகர்ந்து
ஆகா
நறுமணமென உணர்ந்து
குரோணர்கள் கொடுத்து
வாங்கியது.


மின்னடுப்பில் சுடவைத்த
துருவமலைக் கண்ணீரில்
தோய்த்தெடுத்து
என்
கோப்பை நிறைந்திருந்தது.

இரத்தம்.
இரத்த நிறமாய் மிதந்தது
என் கோப்பையில்.

குளிர் பறக்க
பருகத் துடித்தேன்

இரத்தம் பருகும் இலங்கையனே!
என்னைத் தெரிகிறதா உனக்கு?

திகைத்தேன்.



நீ வந்த நிலத்திலிருந்தே
யானும் வந்தேன்.
நீ முகவரியற்று வந்தாய்,
நான்
அச்சடித்த முகவரியோடு வந்து
முகவரி மாறியுள்ளேன்.
I AM COMMING FROM
LONDON.

நான் லண்டனிலிருந்து வந்த
இலங்கை ரத்தம்.

புரியும்படி சொல்.
புரியாதவனா நீ?
என்னைக் கடித்த அட்டையிலும்
கொடிய அட்டையன் நீ.
உனது கோப்பையில்
இரத்தமாய் மிதக்கும்
என்னை
நன்றாய் நுகர்ந்துபார் புரியும்.

மலையகத் தாயின், சகோதரியின்
சகோதரனின், தந்தையின்
இரத்தவெடில்
எனது நாசியைத் துளைத்தது.

எனது கோப்பை
சிதைந்தது நிலத்தில் வீழ்ந்து.
துருவத்தான் ஒருவனின்
மரப்பலகை வீட்டை
வியாபித்து நனைத்தது இரத்தம்

குருதியின் நடுவில்
குற்றவாளியாய் நான்

-தமயந்தி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராம் தாரி சின்ஹா-

## வீடு நோக்கி..

எனது ரத்தத்தில் புதிய மது கலந்திருக்கின்றது.
இரவின் தனிமையில்,
வெறிச்சிட்ட வீதியில்,
காற்றில், மலரில், மேகத்தில், நிலவொளியில்,
புதிய மகிழ்ச்சியைக் காண்கிறேன்.
புல்தரையில் படுத்தபடி நட்சத்திரங்களை எண்ணிக்
கொண்டிருக்கிறேன்.
காலம் தேங்கி நின்று விட்டதாகத் தெரிகிறது.
புகழின் ஆரவாரத்தை விலக்கிக் கொள்ளத்
துவங்கும் போது, எனக்குத் தெரிகிறது.
நான் அந்நிய மண்ணில் அலைந்து அலைந்து
திரிந்து, நீண்ட காலத்திற்குப் பின்பே வீடு தெரிந்து
திரும்பி வரும், யாத்ரீகனாகி விடுகிறேன்.
கடற்காற்று வியர்வையைத் துடைக்கிறது.....
பாழடைந்த கிணறு இப்பொழுது இனிய நீரைத்
தருகிறது.
பழம் நினைவுகள் கலந்த இந்த நீர் என் தாகத்தைத்
தணிக்கிறது....

ராஜவீதியை விட்டுவிட்டு எனது எளிய
இல்லத்திற்குத் திரும்பிச் செல்கிறேன்.
கூட்டங்களின் பரபரப்பிற்கப்பால்,
பேச்சு, அச்சு யந்திரம், கார்கள் இவற்றின்
இரைச்சலுக்கு வெகுதொலைவில்,
தனிமை ஆளும் மனோ சாம்ரஜ்யம் நோக்கிச்
செல்கிறேன்.
அங்கே வாழ்வின் நீர்ச்சுழிப்பு இருக்கவே
செய்கிறது.
இருந்தும்-
மௌனமே உன்னதமாகி நிற்கிறது.

**நன்றி : ஜுன் 1973 , "கண்ணதாசன்"**

* இந்திக் கவிஞர் ராம்தாரி சின்ஹா டிங்கர் 1972 ம் ஆண்டுக்கான பாரதீய ஞானபீடப்பரிசு பெற்றவர்.

உறக்கம்





## அறிவியலில் அரபுலகம்

கணிதம், வானியல் உட்பட இந்திய அறிவியல் கூறுகளும், எகிப்தின் கட்டடக்கலை நுட்பங்களும், கிரேக்க தத்துவச் சிந்தனைகளும் அரபு நாட்டை அடைந்து வளமடையலாயின. பிற நாட்டு அறிவுச் செல்வங்களை மொழி பெயர்ப்பதற்கென்றே பாக்தாக் நகரில் 'மொழி பெயர்ப்புக் கல்லூரி-உருவாக்கப்பட்டிருந்தது.

எட்டாம் நூற்றாண்டிலிருந்து பதினாறாம் நூற்றாண்டு வரை அறிவியல் துறையின் 56 பிரிவுகள் செழுமையாக வளர்க்கப்பட்டன. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மருத்துவ மேதை அவிருசன்னாவும் அறிவியல் வித்தகர் அல் புருனியும் உலகின் இரு பெரும் மேதைகளாகத் திகழ்ந்தனர். அல் புருனி பல முறை இந்தியா வந்து சென்றவர். மேலை உலகிற்கு முறையாக அறிமுகப்படுத்தியதே இவர்தான்.

இத்தகு வளர்ச்சிக்கான அடித்தளத்தை ஆழமாகவும், அழுத்தமாகவும் அமைத்தவர் நபிகள் நாயகம் என்பதை அறிவியல் வரலாற்று வல்லுனர் சார்ட்டன், உலகப் புகழ் பெற்ற பிரான்ஸ் நாட்டு மருத்துவ மேதை புகைல், இங்கிலாந்தைச் சேர்ந்த காலிங்ஸ், அமெரிக்க அறிஞர் மைக்கேல்ஹெப் ஹார்ட் போன்றவர்கள் பட்டியலிட்டுக் காட்டியுள்ளனர். அரபியர்களின் கண்டுபிடிப்புகளே பதினேழாம் நூற்றாணடுகளில் ஸ்பெயின் மூலம் ஐரோப்பிய நாடுகளுக்கு எட்டி, தொழிற் புரட்சிக்கு வழியமைத்தன என்பதையும் இன்றைய அறிவியல் வரலாற்றறிஞர்கள் ஆதார பூர்வமாகக் கூறி விளக்குகின்றனர்.

-மணவை முஸ்தாபா

நன்றி: தினமணி

தொகுப்பு: கமலேந்திரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**ஆபிரிக்காவின் வேண்டுதல்**

### ஆபிரிக்காவின் வேண்டுதல்

*வடக்கிலிருந்து ஊழிக்காற்று பெரும் அச்சுறுத்தலாக*
*வழிந்தோடும் என் கண்ணீர் சமுத்திரமாக–*
*என் இசைக்கருவி பிசிறல்களாக......*
*ஆனாலும் என் முன்னேற்றத்திற்கான பிரேயத்தனம்*
*சாணேற முழம் சறுக்கும் கதையாய்*

*ஓ! கடவுளே!*
*'என்னைச் சூழும் மரண அழுத்தத்திலிருந்து*
*தற்காத்துக் கொள்ள வழிவகுப்பீராக!'*

- பிரஞ்சு மொழிமூலம்: எமிரிக் டேவிஸ் (Emerie Davies)
- மொழிபெயர்ப்பு : வரன்

---

**எமிரிக் டேவிஸ் (45)**
ஆபிரிக்காவில் *'சிராலியோன்'* (Sierra Leone) என்ற நாட்டைச் சேர்ந்தவர். ஒரு திறமையான கேலிச் சித்திரக்காரர் (Caricaturiste). தற்போது பாரிசில் வசிக்கின்றார். இவர் பிரஞ்சு மொழிப் பேராசிரியராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தகுந்தது.
நன்றி : Jeune Afrique



பாரிஸில் அந்த மருத்துவ விடுதி வழக்கம்போல் அமைதியாக இருந்தது. ஆனாலும் பார்வையாளர் நேரம் வந்துவிட்டால் கொஞ்சம் களைகட்டத் தொடங்கிவிடும். இன்று பிரசவ விடுதி நம்மவர் முகங்களால் களைகட்டியிருந்தது. மஞ்சுவின் தலைப்பிரசவம். பன்னிரண்டு மணிப் போராட்டத்தின் பின் சத்திர சிகிச்சை மூலம் ஆண் குழந்தை வெளி உலக தரிசனத்திற்கு வந்திருந்தது. எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி அலை. தொலைபேசி அடிக்கடி அரற்றியது.

திரவியநாதன் கற்கண்டு தட்டுடன் மகிழ்ச்சி பொங்க வலம் வந்து கொண்டிருந்தான். நீண்ட நாட்களாக கனவுகளில் அருவமாக மனதைக் கௌவியிருந்த வாரிசின் உருவத்தை பர்த்த மகிழ்ச்சி அப்பட்டமாகத் தெரிந்தது.

அறைகளுக்கு நாளாந்தம் ஒரு பார்வையார் வருவதே அருமையாக, கணவன் கூட தொலைபேசியில் குசலம் விசாரிக்கும் இக்காலத்தில், மஞ்சுவிருக்கும் அறையின் பரபரப்பு கண்டு மருத்துவ விடுதி அதிசயித்ததில் ஆழ்ந்திருந்தது.

"பிள்ளைக்கென்ன ஒரு கண் சின்னன் போல"

"நிறம் அப்பா மாதிரித்தான்"

"சரி......இப்பென்ன...... ஆம்பிளப்பிள்ளைதானே!"

"ஆம்பிளப்பிள்ளை அப்பா மாதிரியெண்டால் அடாததெண்டல்லே சொல்லுறவ?"

"நிறை குறைவோ?"

"ஓமெண்டுறன்! நிறை குறைவெண்டால் கண்ணாடிப் பெட்டிக்குள்ளேயல்லா வைக்கிறவை! ஏன் உன்ர பிள்ளையை வைக்கேயில்லை?"

மஞ்சு வெடித்து வரும் அழுகையை அடக்கிக் கொண்டாள். ஏனோ சத்திர சிகிச்சையின் வலி மறந்து போய்விட்டிருந்தது.

தூங்கிக் கொண்டிருந்த குழந்தை வீரிட்டு அழத்தொடங்கியது. மஞ்சுவினால் எழுந்திருக்க முடியவில்லை. ஆபிரேசன் முடிந்தபின் கொடுக்கத் தொடங்கிய குழாய் வழி ஊட்டப்பொருள் செலுத்தல் இன்னும் அகற்றப்படவில்லை. ஆனாலும் குழந்தையின் அழுகை பாலுக்கானது என்பதை அந்த பிஞ்சுத் தாயுள்ளம் உணர்ந்து துடித்தது. இந்தச் சனக் கூட்டத்துக்குள் அவளால் என்னதான் செய்யமுடியும்? திரவியநாதன் குழந்தையைத் தூக்கி ஓராட்டினார். கூடியிருந்தவர்களும் ஓராட்டத் தொடங்கினர்...... ஓ!...ரரரர..ரராரார குழந்தை வீரிட்டுக்கத்தி அழத் தொடங்கியது. சத்தம் கேட்டு ஓடி வந்த மருத்துவத் தாதி குழந்தையைத் தூக்கிக் கொண்டு விரைந்தாள்.அவளின் முகச் சுழிப்பை அவதானிக்க அங்கு யாருமே இல்லை

மஞ்சு விக்கி விக்கி அழத்தொடங்கினாள். கூட்டம் அதிசயத்துடன் வேடிக்கை பார்க்கத் தொடங்கியது.

-புவனன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என் மரத்தில் விரியும் அவள்!



-சோலைக்கிளி-

அவள் இன்று
என் ரோஜாவில் பூத்திருந்தாள்.
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதம் இவள்!
நேற்று மல்லிகையாய் விரிந்து சிரித்தாள்.
இன்று இப்படி.

என் கன்னிப் பெண்ணை முகராதே பூ வண்டே!
தென்றலே தொடாதே!
நீங்கள் உரசக் கூடிய மலரல்ல அது.
அது– பெண்
என் கன்னி.


காலையில் கல்லூரிக்குப் போகும் மாணவி!
அந்த ரோஜாப் பூ.
என்னைக் கண்டால்
கொஞ்சம் சிவந்து
நடை உசும்பும் தேர்.

தொடாதே–
நிலவே, உன் ஒளிகொண்டு என் ரோஜாவின்
இதழை!
இது பெண்.
என் கன்னி.

இன்று கல்லூரியில் என்ன படித்தாய் என் ரோஜாப்
பூவே!
என் முகத்தையா? இல்லை–
முப்பத்திரெண்டு பற்களையா?

13. 03. 1993 இலங்கை

# நண்பனுக்கு..



நண்ப!
சுதந்தரத்துக் கானது
உனது இருப்பு என்கிறாய்.
நன்று.
சுதந்தரம் இனிது
நிறைவு தருவது.

உனக்கு ஒவ்வா தோருடன்
நட்பு நான் கொள்கையில்
என்ன நிகழ்கிறது உனக்குள்.

ரோஜாவில் ஆசை கொள்ளை
முட்களில் அல்ல என்றால்
ரோஜாவை முட்களுடன்
ஏற்றிடச் சொல்கிறாய்.

அமைதியான கடலின்
மெல்லலையில் படரும்
நிலவின் கவிரில்
மலர்வேன் என்றால்
கடலோடு புயலையும்
ரசித்துக்கொள் என்கிறாய்.

நானெவ்விதம் இதை
ஏற்றிடல் கூடும்
புயல் தவிர்ந்த கடலும்
முள் நீங்கிய மலருமே
எனக்குத் தேவை.

இப்போ தெல்லாம்
குலுக்குமுன் கரத்தில்
வன்மம் புரிகிறது.
எதிர் முனை ஒன்றில்
பொருத்திப் பார்க்கிறாய்.

நண்ப!
அவரவர் கருத்துடன்
புரிதலுடன்
வாழப் பழகுதலே
இனிதும் நிறைவும்.

-மு. புஷ்பராஜன்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இயக்கமுறும் பூகோளத்தில்




# அல்ஜீரியா

## — ஒரு பார்வை —

–வரன் –

*அல்ஜீரியா என்றதுமே புலம் பெயர்ந்த எம்மவருக்கு, வழிப் பறி செய்பவர்களும்; அடிதடி அடாவடித்தனம் செய்பவர்களும் தான் ஞாபகத்தில் வரும். இங்கே எம்மவருக்கு அல்ஜீரியன் என்பவன் வேண்டத்தகாதவனாக பட்டதேன் என்ற ஆராட்சியில் நான் ஈடுபடப்போவதில்லை.*

*கடந்து போன ஆண்டிறுதியில், நிகழ்ந்த பிரஞ்சு விமானக் கடத்தல் நாடகத்தின் நேரடி ஒளிபரப்பலின் மூலம் சகல தொடர்புச் சாதனங்களும் அல்ஜீரியாவை உலக அரங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தது. மிக நீண்ட இடைவேளையின் பின் நடந்த 'விமானப் பணயமாதலால்' சகலரும் கிளைமாக்ஸ் காட்சியை பார்த்திடத்துடித்தனர். தொலைக் காட்சியின் திரையை ஆசை பொங்க அளவெடுத்துக் கொண்டிருக்கும் நவீன மனிதனுக்கு சலிப்புத் தட்டாமலிருக்க அவ்வப்போது ஏதாவது நிஜ நாடகத் தரிசனங்கள் கிடைத்து விடுவது வழக்கம்! அந்த வகையில் இச்சம்பவத்தின் மூலம் அல்ஜீரியா பல்வேறு வகைகளில் அலசப்பட்டது.*

*இச்சம்பவம் **அடையார்-0** என எம்மவர்களால் செல்லமாக அழைக்கப்படும் இந்த மக்கள் பற்றிய அறிதலுக்கு பலரைத் தூண்டியதில் வியப்பில்லை. இந்தப் புலம் பெயர் வாழ்வில் நாம் விரும்பியோ விரும்பாமலோ பலரை, பல்வேறு சம்பவங்களை சந்திக்கிறோம். இவற்றின் தூண்டுதலால் எழும் வினாக்களுக்கு விடைதான் ஏது? இதனடிப்படையில் என் நீண்ட தேடலின் விளைவாக எழுந்ததே இக்கட்டுரை.*

*இன்று ஜனநாயக மறுப்பாளர்கள்; பயங்கரவாதிகள்; இஸ்லாமிய அடிப்படைவாதிகள்; ஜியா போராளிகள் எனப் பலவாறு அழைக்கப்படும் இவர்களின் பாதச் சுவட்டினைக் கொண்ட மண்ணின் வரலாற்றினை -ஒரு பார்வையாக- முன்வைக்கிறேன். இது நிகழ்காலப் பிரச்சனைகளைப் பரிசீலிக்க ஒரு அகண்ட பார்வைக்கு வழி வகுக்குமல்லவா?*

வட ஆபிரிக்கா மாக்கிறேப்-1 (Maghreb), மாஸ்றெக்-2 (Machrek) என இரு வேறு மொழி அடித்தளத்தைக் கொண்டது. மாக்கிறேப் 5-ம் நூற்றாண்டு வரையில் கார்த்தினுவா (Carthiniois), றோமன் (Romain), புறூசியன் (Prussien) -பழைய ஜெர்மனியர்கள்- படையெடுப்புகளினால் அடிமைப்பட்டு இருந்தது. இம்மக்களை மீட்க அரேபியர் மதம் பரப்புவதை அடிப்படையாகக் கொண்ட இரகசியப் படைப்பிரிவின் மூலம் 6-ம் நூற்றாண்டுப் பகுதியில் ஊடுருவினர். இஸ்லாம் மதம் புரிந்துணர்வு கொண்டதாகவும், பிளவுண்டிருந்த இனங்களுக்கு இடையிலான வேறுபாடினைத் தவிர்த்து ஒற்றுமையை வளர்ப்பதாகவும் அமைந்ததால், இவர்களின் விடுதலைச் சின்னமாகப் பற்றிக் கொண்டது. இருந்தும் பெரும்பாலான மக்கிறேபியர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டாலும், அரேபியரது நுழைவினை விரும்பவில்லை. 7-ம் நூற்றாடில் மதத்தின் ஊடுருவல் அளித்த வெற்றி அரேபியரை தம் அதிகாரக் கோலோச்சலுக்கு அடிகோலியது. ஆனால் இதை விரும்பாத மக்கிறேபியர்கள் மதத்தையும், மொழியையும் பரப்ப வந்த மாஸ்றெக் அரேபியரை எதிர்த்து கிளர்ச்சி செய்தனர். இதேவேளை இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அக்காலகட்டத்தில் அரேபியர்கள் ஸ்பெயின் ஊடாக இன்றைய பிரான்சின் ஒரு பகுதியான புவாத்தேர் (Poiters) வரையில் தம் அதிகார எல்லையை நிறுவ எத்தனித்தனர். இக்காலத்தில், அரேபியரின் விலை மதிப்புமிக்க உலோகப் பொருட்களின் பண்டைமாற்று இந்த மக்கிறேப் நாடுகள் ஊடாகவே நடைபெற்றன.

---

0. **அடையார் -** : அல்ஜீரியர்களை நம்மவர்கள் அழைத்திடும் பெயர். இவர்கள் தம் கடைகளை அடையாமல் நடுநிசி வரையில் (நம்மூரில் உள்ள கடைகள் போல்) திறந்து வைத்திருப்பர். திடீரென பொருட்களை வாங்க வேண்டுமென நினைப்பவர்களுக்கு இவர்களது கடைகள் தான் கைகொடுக்கும். கடையை அடையாதிருப்பதாலோ என்னவோ 'அடையார்' என நம்மவர்களால் அழைக்கப்படுகின்றனர் போலும்.

1. மாக்கிறேப் (Maghreb) : மொறிதான், மொறோக், அல்ஜீரியா, தூனிசியா, லிபியா ஆகிய வட ஆபிரிக்க நாடுகள். இங்கு வாழ்ந்த பூர்வீகக்குடிகள் பேர்பெர் (Berbèr) மொழி பேசும் பல்வேறு இனக்குழுக்களாக இருந்தனர்.

2. மாஸ்றெக் (Machrek) : எகிப்து, சூடான், யேமன், ஓமான், சிரியா, ஜோர்தான், ஈராக், குவைத், பா்ரேன், கட்தார், ஐக்கிய அரபுக் குடியரசு ஆகிய நாடுகள். இவர்களது மொழி அரபு.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதனால் அரேபியர்கள் மக்கிறேபியருடன் சமாதானத்தையே பேணிவந்தனர். 9-ம் நூற்றாண்டில் அரேபியர்கள் தமது வாணிபப் பாதையை மாற்றிக் கொண்டார்கள். இம் மாற்றம் மக்கிறேப்பியருக்கு மிகுந்த பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவித்தது. இந்த இக்கட்டான நிலையைச் சமாளிக்க எகிப்திய அரேபியர் இவர்களுடன் ஒரு உடன்பாட்டிற்கு வந்திருந்தனர்.

இதே காலகட்டத்தில்தான் ஐரோப்பியர் கத்தோலிக்க மத விஸ்தீரணத்திற்கான சிலுவைப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். கி. பி. 1096 - 1270 வரையிலான கால இடைவெளியில் ஐரோப்பியர் மக்கிறேபியரின் பகுதிக்கு 8தடவைகள் படையெடுத்திருந்தனர். இது மக்கிறேபியரை அரேபியரின் ஆதிக்கத்திற்கு தவிர்க்க முடியாதவாறு வழிகோலியது.



ஒபெக் நாடுகளில் முதன்மை உற்பத்தியும், 4-வது ஏற்றுமதியும் கொண்டது அல்ஜீரியா.

அரேபியரின் அதிகாரப் பரவலாக்கமும், மத- மொழி- இனக்கலப்பு வளர்ச்சியும் நடந்தேறியது. ஆனால், 14-ம் நூற்றாண்டுப் பகுதியில் சூடானுக் கூடாக நடைபெற்று வந்த இவர்களின் பண்டமாற்று வர்த்தகம் கத்தோலிக்க மதத்தை தழுவிய நூபி (Nubie) இனக்குழுவினரால் தடை செய்யப்பட்டது. இந்நிலை போத்துக்கல், ஸ்பெயின் நாடுகளுக்குத் தேவையான உலோகக் கனிமப் பொருட்களின் பற்றாக் குறையைத் தோற்றுவித்தது. இதை நிவர்த்தி செய்யும் பொருட்டு இவர்கள் வாணிப நோக்குடன் 15-ம் நூற்றாண்டு வாக்கில் கடல் பயணத்தை மேற்கொள்ளத் தொடங்கினர். கடலைத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வருமுகமாக மக்கிறேப் நாடுகளில் தமக்கான முகாம்களை நிறுவிக்கொண்டனர்.

இதை விரும்பாத மக்கிறேபியர் கடல் வழியைத் தம் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரவும், தம் பாதுகாப்பிற்குமாக பார்பறூஸ் (BARBEROUSSE) என அழைக்கப்பட்ட கடல் கொள்ளைக்காரச் சகோதரரின் உதவியை நாடினர். இவர்களின் வருகை ஓட்டமான் அரசாட்சிக்கு (EMPIRE-OTTOMEN) வழி வகுத்தது. 18-ம் நூற்றாண்டு வரையில் லிபியா, தூனிசியா, அல்ஜீரியா என்பன அடிமையாகிப் போயின. துருக்கியருக்கு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்யும் பொருட்டு மேற்கூறப்பட்ட நாடுகளிடமிருந்து அதிக வரி வசூலிக்க முனைந்தனர். 1825-இல் மக்கள் இவர்களை எதிர்த்து கிளர்ச்சி செய்தனர். இதை அரசு அடக்கி ஒடுக்கியது. இந்த நிலையை அவதானித்த பிரான்சு இராணுவம் இவர்களைத் துருக்கியரிடம் இருந்து காப்பாற்றுவதாகக் கூறி அன்று வலிமை இழந்து பரிதவித்துக் கொண்டிருந்த துருக்கியப் படையினரைத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தன. இவ்வாறாக அரச- அதிகார வெற்றிடத்தை நிரப்பிக் கொண்டன.

➢◗

## அல்ஜீரியாவில் ஐரோப்பியரின் காலனித்துவம்:

ஐரோப்பியரின் நிரந்தரமான வருகையும் காலனித்துவமும் 18-ம் நூற்றாண்டு பிற்பகுதியிலேயே நடந்தேறியது. இக்காலனித்துவ ஆட்சியில் பிரான்சின் சட்டத்தரணியும், அரசியல்வாதியுமான கிறேமியூ (Crémieux) என்பவர் இங்கு வாழ்ந்து வந்த யூதர்களுக்கு அரசியல் அடிப்படை உரிமைகளை வழங்கியும்; பூர்வீகக் குடிகளுக்கு இவ்வுரிமையை மறுத்தும் ஒரு சட்டத்தை அமுலாக்கினார். இச்சட்டத்தின் ஆதிக்க நிலை 1946 வரையில் நீடித்திருந்தது.

இக்காலப் பகுதியில் அரேபியரின் நிலங்களைப் பறிமுதல் செய்து ஐரோப்பியக் குடியேற்றத்திற்கு அரசு வகை செய்தது. காலனித்துவ நுகர்வுப் பண்புகளுக்கு அமைய, நாட்டின் அபிவிருத்தியை குடியேற்றவாசிகளே அனுபவித்தார்கள்; பூர்வீகக் குடிகள் புறந்தள்ளப்பட்டனர். இது பூர்வீகக் குடிகளின் புத்திஜீவிகள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

ஆனாலும் நடந்து முடிந்த இரண்டு உலகப் போர்களிலும் எதுவித அடிப்படை உரிமையும் அற்றிருந்த இந்தப் பூர்வீகக் குடிகள் பிரான்சின் விடுதலைக்காக தம் உயிரை மாய்த்துக் கொண்டனர். இதன் பின்னாவது காலனித்துவ அரசு தமது சமூக அரசியல் உரிமைகளை சமத்துவ அடிப்படையில் வழங்குமென எதிர்பார்த்தார்கள். ஆனால் மக்கிறேபியரின் தேசியவாதம் தலை தூக்கியிருந்த நிலையில், இரண்டாம் உலகப் போருக்கு ஆள் பலம் போதாமல் தவித்த பிரஞ்சு இராணுவத் தலைவர்களில் ஒருவரான டு கால் (De Galle) 1943 டிசெம்பரில், மக்கிறேப்பியரின் அடிப்படை உரிமைகளை வழங்குவதாக வாக்குறுதி அளித்திருந்தார். உலகப் போரின் முடிவில் வல்லரசுகள் உலகைப் பங்கு போட்டுக்கொண்டன. காலனிய ஆட்சியிலிருந்து பல நாடுகள் தங்களை விடுவித்துக் கொண்ட நேரத்தில், தமக்குக் கொடுத்திருந்த வாக்குறுதி நிறைவேறாத நிலையில் 1945 மே-யில் நாடு பூராகவும் தம் உரிமைகோரி ஊர்வலம் நடத்தினார்கள். இது நசுக்கப்பட்டது. சுமார் 1000 பேர் வரையில் உயிரை இழந்தனர்.

டு கால் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற பிரஞ்சு நிர்வாகம் தயங்கியது. இதற்கு குறிப்பாக, 1.) இங்கு குடியேறி வாழ்ந்த ஒரு மில்லியனுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிகமான *'கறுப்பு பாதக்காரர்'*-3 « Pieds- Noirss » என அழைக்கப்பட்ட குடியேற்றவாசிகள் அல்ஜீரியத் தேசிய விடுதலையை விரும்பவில்லை. 2.) உருவாக்கிய எண்ணைக் கிணறுகளின் அவசியமும்; அணுக்குண்டு சோதனைக்காக சகாரா (SAHAR) பாலைவனத்தின் அவசியமும். 3.) கறுப்புப் பாதக்காரர்களின் வாழ்க்கைத் தரமானது பிரான்சில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தோடு ஒப்பிடும் போது மிகக் குறைந்த நிலையில் இருந்தது. இவர்கள் பிரான்சில் மீளவும் குடியேறினால் இங்கு கம்யூனிஸ்ட் கட்சியைப் பலப்படுத்தலாமென்ற அச்சம். 4.) இராணுவம் *கறுப்புப் பாதக்காரருடன்* இணைந்து அல்ஜீரியத் தேசிய விடுதலையை நிராகரித்திருந்தது. 5.) அல்ஜீரியாவில் வாழ்ந்த இரு சமூகங்களுக் கிடையிலான பிரிவினை வலுவுற்றிருந்த வேளையில் எந்த அரசியல் தீர்வுமற்ற நிலையில், தேசிய எழுச்சியை அடக்கும் முடிவிற்கே நிர்வாகம் வந்தது.

இதனால் சினங்கொண்ட அல்ஜீரியத் தேசியவாதிகள், *'தேசிய விடுதலை முன்னணி'* (F.L.N)-4 யின் இராணுவ அமைப்பாக *'தேசிய விடுதலை இராணுவத்தை'* (A.L.N)-5 வெளிப்படையாகவே நிறுவிக்கொண்டனர். இது அக்-நவம் 1954 இல் காலனிய அரச இயந்திரத்தை நிலை குலைக்கும் வண்ணம் பரவலான குண்டுத் தாக்குதலை நடாத்தியது. இந்த அசாதாரண எழுச்சியைக் கட்டுப்படுத்த மேலதிக இராணுவத்தை அனுப்பி வைத்தார் அன்றைய உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சராக இருந்த பிரான்சுவா மித்ரோன் (**François Mitterrand**). -கடந்த 14 ஆண்டுகளாக பிரஞ்சு அதிபராக இருந்து தற்போது ஓய்வு பெற்றவர். இந்த அடக்குமுறையால் மக்கள் A.L.N-உடனான நெருங்கிய உறவை விரும்பியதுடன், தாமும் பங்கு கொள்ள விளைந்தனர்.

3.) *'கறுப்பு பாதக்காரர்'* « **Pieds- Noirss** » இங்கு குடியேறிய ஐரோப்பியர். கறுப்புச் சப்பாத்து அணிபவர்கள்.

**4.) F.L.N = Le Front de Libération Nationale 5.) A.L.N = Armée de Libération Nationale**

## தேசிய விடுதலைக்கான அரசியல் வெற்றி:

தேசிய விடுதலை முன்னணியின் அரசியல் பிரிவின் முக்கிய உறுப்பினர்களான அஹ்மட் பென் பெலா, ஹோசின் ஏய்ற் அஹ்மட், முஹமட் காதர், முஸ்தா.'.பா லாஸறவ் பயணம் செய்த 'றோயல் மொறோக்கியன்' விமானம் 22. 09. 1956-இல் பிரஞ்சு விமானப் படையினரால் கடத்தப்பட்டது. இவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். தொடர்ந்து, 1958 மே 9-ல் 3 இராணுவத்தினரை போராளிகள் கொல்ல, மே 13-ல் இராணுவம் நாட்டு நிர்வாகத்தை தனதாக்கிக் கொண்டது. பின், செப். 18-ல் பிரஞ்சுக் குடியரசு சமாதானத்தை ஏற்படுத்த தே. வி. முன்னணியினரை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. இதை நிராகரித்த போராளிகள் செப். 19-ல் எகிப்தில் இடைக்கால அல்ஜீரியக் குடியரசை பிரகடனப்படுத்தினார்கள்.

ஆத்திரம் கொண்ட பிரஞ்சு இராணுவம் அல்ஜீரியாவுக்குள் தலைமறைவுப் போராட்டம் நடாத்தி வரும் போராளிகளைத் தனிமைப்படுத்தி ஒடுக்க மொறோக்கிய, துனூசிய எல்லைகளை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இராணுவ வெற்றியை நோக்கிய பிரஞ்சுக் குடியரசுத் தலைவர் 1960 ஜுன் 10-ல் தளத்திலிருந்து போராடிய இரு தலைவர்களுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துக் கொண்டார். இதன் நோக்கம், தளத்திலிருந்த தே. வி. மு. -இனரின் அரசியல் தலைவர்களை தீர்வுத் திட்டத்துக்குள் திணிப்பதும்; தே. வி. மு. -இனரின் அரசியல் தலைவர்களுக்கும், எல்லையில் தரித்து நிற்கும் இராணுவ அமைப்பின் (A. L. N) போராளிகளுக்கும் இடையே அதிகாரப் போட்டியை ஏற்படுத்தி பிளவுபடுத்துவதுமே என்பது வெளிப்படையானது.

பிரஞ்சுக் குடியரசுத் தலைவர் அல்ஜீரிய மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து உரை ஆற்றினார். எதிரொலியாக இங்கு குடியேறி வாழ்ந்து வரும் 'கறுப்பு பாதக்காரர்' மக்கள் பிரஞ்சு அரசு தமக்கெதிராக எடுத்த துரோகத்தனமான செயலென கண்டித்து பெரும் ஊர்வலத்தை நடாத்தினர். இதைக் கண்டு துணுக்குற்ற அல்ஜீரிய மக்கள் தமது தேசிய இறைமையை நிலைநாட்ட 5 நாட்கள் மாபெரும் ஊர்வலத்தை நிகழ்த்தி தமது விருப்பத்தைப் பிரகடனப்படுத்தினர்.

இதையடுத்து பிரஞ்சு அரசு இடைக்கால அல்ஜீரிய குடியரசுப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது. இந்நிலையை விரும்பாத பிரஞ்சு இராணுவம் O. A. S. என்ற இரகசிய இராணுவ அமைப்பை உருவாக்கியது. இப்பிரிவு 1961 பெப்பிரவரியில் பயங்கரவாதிகளைத் தேடுவதாகக் கூறி மக்களைக் கொன்று குவித்தது. இந்த இராணுவ நடவடிக்கைக்கு 'நில எரிப்பு' (Terre Brûlée) எனப் பெயரிட்டிருந்தனர். தொடர்ச்சியாக 1961 ஏப்பிரல் 21-ல் O. A. S. இராணுவச் சதி மூலம் நாட்டின் அதிகாரத்தை தனதாக்கிக் கொண்டது. ஆனாலும் பேச்சுவார்த்தை தொடர்ந்த வண்ணமே இருந்தது. 1961 மே 20-ல் பிரஞ்சு அரசும் F. L. N. அமைப்பும் யுத்த முடிவுக்கு இணங்கிக் கொண்டார்கள்.

இதே வேளையில் O. A. S. இராணுவத்தின் சித்திரவதைகளும், கொலைகளும் கணக்கின்றித் தொடர்ந்த வண்ணமே இருந்தன. இதைக் கண்டித்து 1961. 10. 17-ல் பாரிஸில் வாழ்ந்து வந்த 10 ஆயிரத்துக்கும் அதிகமான அல்ஜீரிய மக்களால் மாபெரும் ஊர்வலம் நடாத்தப்பட்டது. ஆனால் பாரிஸ் பொலீஸ் மா அதிபரினால் மிருகத்தனமாக இந்த ஊர்வலம் ஒடுக்கப்பட்டது. இதில் 1000 பேர் சிறைவைக்கப்பட்டதாகவும்; 68 சடலங்களை செயின் நதியிலிருந்து மீட்டதாகவும்- சுமார் 300 பேருக்கும் அதிகமானவர்கள் இறந்திருக்கலாம் எனவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருதப்படுகிறது. 1962. 02. 08-ல் O. A. S. நடத்தையைக் கண்டித்து பாரிஸில் மேற் கொள்ளப்பட்ட வேறொரு ஊர்வலமும் பொலிஸாரினால் ஒடுக்கப்பட்டது. இதில் 8 பேர் உயிரிழந்தனர்.

1962. 03. 19-ல் இருபகுதினரும் போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து, F. L. N. அமைப்பும் O. A. S. இராணுவக்குழுவும் 1962. 06. 17-ல் ஓர் இணக்கத்திற்கு வந்தார்கள். இந்நிலையில் அல்ஜீரிய தேசிய விடுதலைக்கு எதிராக் O. A. S. இராணுவக்குழுவுடன் சேர்ந்து ஒத்துழைத்த ஹார்க்கீஸ்-6 (HARKIS)களும், கறுப்பு பாதக்காரர் களுமாக ஒரு மில்லியனுக்கு மேலானவர்கள் அவசர அவசரமாக O. A. S உடன் சேர்ந்து பிரான்சுக்கு கப்பல் ஏறினார்கள்.




சரித்திர முக்கியத்தும் வாய்ந்த காலனிய ஆட்சிக்கெதிரான அல்ஜீரியரின் போராட்டம் 7 ஆண்டுகள் வரை நீடித்தது. சுதந்திரக் காற்றை நுகர்வதற்கு அல்ஜீரியர்கள் கொடுத்த உயிர், உடமை இழப்புகளுடன் அனுபவித்த சித்திரவதைகள் கணக்கிலடங்கா. இதில் உயிர் இழந்தவர்களின் தொகை 1.5 மில்லியன் என F. L. N. அரசு கூறுகிறது.

இந்த யுத்தம் தொடர்பாக பிரஞ்சு அரசு வெளிப்படையாக கதைக்க தயாரற்று நீண்ட மௌனம் சாதிக்கிறது. புத்திஜீவிகளின் மட்டத்தில் கூட தவறு பற்றிய ஆய்வுகளோ, விவாதங்களோ நடைபெறவில்லை. இப் போராட்டத்தின் விளைவுகளால் பிரஞ்சுக் குடியரசின் அரசியல் யாப்பில் 5 தடவையாக பல மாற்றங்கள் உருவாகினதாகக் கூறுகின்றனர்.

ஒருவாறாக அல்ஜீரிய இடைக் கால ஆட்சி அதிகாரத்தை பெற்றுக் கொண்ட தலைவர் எல்லைப் புறத்தில் தரித்திருந்த போராளிகளின் இராணுவத் தளபதியான HOUARI-BOUMEDIENE பதவியை இரத்துச் செய்தார்.

1962. 07. 03-ல் F. L. N. முதலாவது அல்ஜீரியக் குடியரசின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. தலைவரின் போக்கை சிறையிலிருந்து நாடு திரும்பிய அரசியல் குழுப் பிரதிநிதிகள் ஏற்க மறுத்தனர். ஆக, பென்பெலா, காதர், பூமெதியன் போன்றோர் தலைமையில் புதிய அரசியலமைப்பு உருவாகியது. இதேவேளை எல்லையில் தரித்திருந்த போராளிகளுக்கும் தலைவரின் விசுவாசிகளுக்கும் இடையில் கடுமையான மோதல் வெடித்தது. இளம் குடியரசு ஆரம்பத்திலேயே இவ்வாறாக தன்னகத்தே பல்வேறு முரண்பாடுகளைக் கொண்டதாக அமைந்தது. அரசியலமைப்பின் முக்கிய அங்கத்தவர்கள் ஒதுங்கிக் கொண்டார்கள். அல்ஜீரியாவின் பூர்வ குடிகளான பேர்பெர் (Berbére) மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களது எதிகாலம் குறித்து F. L. N. வேறுபட்ட கருத்தைக் கொண்டிருந்தமையால் இதன் பிரதிநிதியான ஏய்த்-அஹமட் வெளியேறி Front des Forces Socialiste (F. F. S) கட்சியைத் தோற்றுவித்தார். இதனால் இவர் சிறைப்படுத்தப்பட்டு, நாட்டை விட்டு தப்பி ஓடினார்.

63 செப்டெம்பரில் சுதந்திர அல்ஜீரியாவின் முதல் தலைவராக அஹமட்- பென்பெலா தெரிவு செய்யப்பட்டார். ஆனாலும் A. L. N. இராணுவப் பிரிவில் உட்கொலைகள் தொடர்ந்த வண்ணமே இருந்தது. அஹமட்- பென்பெலா சமவுடமைக் கருத்தையுடைவர். போராட்ட காலத்தில் மக்கள் சமவுடமைக் கருத்தை ஏற்றிருந்தமையும், பென்பெலா சோசலிச முகாம்களுடன் நட்பை வளர்த்தமையும் முதலாளிய முகாம்களுக்கு கிலியேற்படுத்தியது. இத்தகைய பின்னணியில் பென்பெலாவின் இராணுவ அமைச்சராக இருந்த பூமெதியன் 1965. 06. 19-ல் இராணுவச் சதி மூலம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினார். இவரது ஆட்சி இவர் இறக்கும் (1978. 12. 27) வரையில் நடந்தேறியது. இதற்குத் தேவையான சகல ஒத்துழைப்புகளையும் முதலாளிய முகாம் வழங்கியது. குறிப்பாக பிரான்சு தன் எண்ணைக்கிணறு, நிலவாயு (Gas) மூலதனத்தில் 51 வீத சந்தையை அல்ஜீரியாவுக்குக் கொடுத்தது. மக்களால் தெரிவான பென்பெலா 1965- 80 வரையில் சிறையில் அடைக்கப்பட்டார்.

இத்தகைய இராணுவச்சதி மற்றும் உட்கொலைகள் போன்றவற்றிலிருந்து மக்களைத் திசை திருப்பிவிடவும்; சுதந்திரத்தின் மூலம் மக்கள் எதிர்பார்த்திருந்த அடிப்படை வசதிகள் கிட்டாமையால் (வீடு, மருத்துவ, பாடசாலை, வேலை வாய்ப்பு, ஏற்றத்தாழ்வற்ற புதிய வாழ்வு பற்றிய கனா) கிளர்ச்சி மேற்கொள்ளாதுவிடவும், குறிப்பாக சோசலிச முகாமுக்குள் செல்லாதுவிடவும் அரசு மதவாதக் கருத்துகளை விதைக்கத் தொடங்கியது. இவ்வாறாக அரசு மத அடிப்படைவாதத்தை திட்டமிட்டு செயல்படுத்தியது.

பூமெதியனின் அரசு 70களின் ஆரம்பத்தில் அரபு மொழியை நிர்வாக மொழியாகவும்; அரபும், இஸ்லாமும் கட்டாயக் கல்வியாகவும் கொண்டு தனது அரசியல் யாப்பில் முக்கிய திருத்தங்களைக் கொண்டு வந்தது. இங்கு வேடிக்கை என்னவென்றால் சட்டத்தை இயற்றிய F. L. N.-க்கோ, அரச நிர்வாக இயந்திரத்தை நடாத்தியவர்களுக்கோ போதிய அரபு மொழி அறிவோ, இஸ்லாத்தின் மீதான பற்றோ இன்றி இருந்தனர். இஸ்லாத்துக் முரணாக இவர்கள் மது அருந்திக் கொண்டும், அரச செல்வங்களைச் சூறையாடிக்கொண்டும், கொலைகள் செய்து கொண்டும்- பிரான்சுடனான உறவையும் கலாச்சாரத்தையும் பேணினார்கள். ஆனால் அல்ஜீரிய மக்கள் அரபு மயமாக்கலில் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

பூமெதியனின் இராணுவ ஆட்சியில் அரச நிர்வாகத்தில் இருந்தவர்கள் மட்டும் 26 கோடி US$

6.) **ஹார்க்கீஸ் (HARKIS)** : O. A. S. இராணுவக் குழுவுடன் சேர்ந்து ஒத்துழைத்த அல்ஜீரியர்கள். இவர்களை 'ஹார்க்கீஸ்' என பிரஞ்சுக்காரர் செல்லமாக அழைபார்கள். இன்று பிரான்சில் குடியேறிய இந்த ஹார்க்கீஸ்களும் அவர்களது வாரிசுகளும் அரசியல் அடிப்படை (வாக்குரிமை) உரிமையற்றவர்களாய் சேரிப்புற வாழ்வில் பரிதவிக்கின்றனர். பிரான்சின் இராணுவத்துக்காக உயிரைக் கொடுத்த இவர்களுக்காக இங்குள்ள பல்வேறு கட்சிகளும் வாக்குறுதி கொடுத்தனவே தவிர எதையும் நிறைவேற்றி வில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பணத்தைப் பங்கிட்டு கொண்டார்கள். மக்கள் தாம் போராடிப் பெற்ற சுதந்திரத்தை ஒருசிலர் மட்டும் பங்கு போட்டுக் கொண்டுள்ளதை எண்ணிக் குமுறினர். இதைத் திசை திருப்பிட அரபிய-இஸ்ரேல் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தினர். இரானிய இஸ்லாம் விடுதலையை, அவ்கானிஸ்தானில் ரஷ்சிய ஆக்கிரமிப்பு இஸ்லாத்திற்கு எதிரான படையெடுப்பு எனக் கூறி பள்ளிவாசல்களில் ஆட்சேகரிப்பு செய்து அனுப்பி வைத்தார்கள். இவர்களின் இந்த பங்களிப்பை வல்லரசுகள் மறந்து போய்விட்டன போலும்! அல்ஜீரியர்களுக்கு இஸ்லாத்தைப் போதிக்க எகிப்திலிருந்து இமாம்கள் வரவழைக்கப்பட்டனர்.

குறிப்பாக காலனிய ஆட்சியில் தமது தேசிய சுயஅடையாளத்தை இழந்திருந்த மக்களுக்கு மத போதனைகளும், அரேபிய மயமாக்கலும் ஒரு புத்துணர்வைக் கொடுத்தது. பள்ளிவாசல்கள் மக்களை ஒன்று கூட்டியது. இங்கு சமூகத் தேவைகளும், நிர்வாகப் பிரச்சனைகளும் அலசப்பட்டன. பூமெதியனின் இராணுவ ஆட்சியில் ஒடுக்கப்பட்டிருந்த மக்கள் விழிப்புணர்வைப் பெற இஸ்லாம் வழிவகுத்தது. இதை அரசு எதிர்பார்க்கவில்லை.

பூமெதியன் இறப்பின் பின் F. L. N அமைப்புக்குள் இரு வேறுபட்ட கருத்துகள் முதன்மைப்பட்டன. 1)பூமெதியன் சார்பான குழு:- திறந்த பொருளாதார திட்டம், தனியார்துறை ஊக்குவிப்பு. 2)இடதுசாரி எண்ணம் கொண்ட குழு:- சமவுடமை பொருளாதாரத் திட்டத்தை ஓரளவிற்காவது நடைமுறைப்படுத்துவது, சுதந்திரத்தின் பலன்களை மக்கள் அனுபவிக்க வகை செய்வது. இந்த இழுபறியைச் சாதகமாக்கிக் கொண்டு இராணுவம் கேணல் ஷாதி பென்ஜேதித் (Colonel Chadhi Bendjedid) யை குடியரசுத் தலைவராக நியமித்துக் கொண்டது. இவர் தன் பதவியேற்பு உரையில், « மக்களின் எதிர்கால வாழ்வு மேம்பாடடைய பாடுபடுவேன் » என வாக்குறுதி அளித்தார். வாக்குறுதியின் படி பழைய பொருளாதார அமைப்பை 'ஷாதிலியனின் பெரஸ்தோரிக்கா' (Perestroika Chadlienne) என்ற முறையில் மாற்றத்திற்கு உட்படுத்தினார். ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு மக்கள் முகம் கொடுக்க முடியாமல் தவித்தனர். சிறு கிளர்ச்சிகளை மேற்கொண்டார்கள். தனியார் துறையை அரச மேல்மட்டத்தவர்கள் (நிர்வாக-இராணுவ அதிகாரிகள், F. L. N அமைப்பு உறுப்பினர்கள்) தமதாக்கிக் கொண்டனர். இதனால் கறுப்புச் சந்தை வேகமாக வளர வழியாயிற்று. அரச அதிபர் ஷாதி தனது உரையில் (20. 09. 88) இவர்களை மறைமுகமாகச் சாடினார்.

மக்கள் குமுறினர். 'அல்ஜீரியத் தொழிலாளிகள் பொதுச் சம்மேளனம்', « சமவுடமைப் புரட்சியின் மூலம் பெற்ற உரிமைகளை தனிநபர் அரசியல்-பொருளாதார இலாபத்திற் அனுமதிக்க முடியாது » எனக் கூறி வேலை நிறுத்தம் செய்தது. அரச ஊழியர்களும் இவர்களுடன் இணைந்து கொண்டார்கள். நாடு செயலிழந்தது. பின் 03. 10. 88-ல் பல்லாயிரக்கணக்கான மாணவ இளைஞர்கள் அரச நிர்வாகத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர். 6 நாட்களாக ஆர்பாட்டம் தொடர்ந்தது. இதை விரும்பாத இராணுவம் ஷாதியின் அனுமதியின்றியே அவசர காலச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. இராணுவத்தைக் கொண்டு மாணவர் எழுச்சியை அடக்க முற்பட்டது. 600-ற்கும் மேற்பட்டவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மக்கள் இராணுவம் எனச் சொல்லிய அமைப்பு இப்படியாக நடந்ததை யாருமே எதிர்பார்க்கவில்லை. மக்கள் F. L. N இனையும், இராணுத்தையும் வெறுக்க ஆரம்பித்தார்கள்.

சூழ்நிலையின் தாக்கத்தை உணர்ந்து கொண்ட F. L. N, மக்களின் நம்பிக்கையைப் மீளப்பெற ஒரு கட்சி ஆட்சியை அரசியல் யாப்பிலிருந்து அகற்றி, பல கட்சி அரசியலில் பங்கேற்க 23. 02. 1989-ல் வழிவகுத்தது. அல்ஜீரியாவில் ஜனநாயக முறையில் பல கட்சிகள் தம்மைப் பதிவு செய்து கொண்டன. F. I. S. (Le Front Islamique du Salut - இஸ்லாமிய பாதுகாப்பு முன்னணி) என்ற புதிய கட்சி 12. 06. 1990-ல் நடந்த மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டியது. தன் கொள்கைப்படி மாற்றங்களை துரித கதியில் மேற்கொள்ள ஆரம்பித்தது. இதற்கு F. L. N முட்டுக்கட்டையாக இருந்தது. கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக F. I. S. இன் இரு தலைவர்கள் சிறைவைக்கப்பட்டனர்.

இது இவ்வாறிருக்க 26. 12. 1991-ல் அல்ஜீரியாவில் முதல் முறையாக நடந்த ஜனநாயகத் தேர்தலில், முதலாவது கட்டத்தில் போட்டியிட்ட F. I. S. அமைப்பு 188 இடங்களையும், F. F. S. கட்சி 25 இடங்களையும், சுயேட்சை 1 இடத்தையும் பெற F. L. N க்குக் கிடைத்ததுவோ 15 இடங்கள் மட்டுமே. மக்களது அபிலாசை உலகிற்கு வெட்டவெளிச்சமானது. இந்நிலை இராணுவத்துக்கு பெரும் சங்கடத்தைக் கொடுத்தது.

F. L. N அமைப்பை உருவாக்கியவர்களில் ஒருவரும் 1963 -லிருந்து அமைப்பின் போக்கிலிருந்த

---

**அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய சில திருத்தங்கள்:**

1. மதுபானத் தடை; வெள்ளிக் கிழமை மத வழிபாட்டிற்கான விடுதலை நாள்.
2. 1976 ஜூன் மாதம் அரசியல் யாப்பில் இஸ்லாம் அடிப்படை அம்சமாக ஏற்கப்பட்டது.
   1. இஸ்லாம் அரச மதம் (Artcle 2)
   2. குடியரசுத் தலைவர் கட்டாயமாக இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் (Art 107)
   3. இஸ்லாம் மதத்தை வளர்க்கவும், பேணவும் வழிவகை- ஒரு அமைச்சகமும், மதகுரு (IMAMS)வின் அத்தியாவசியத் தேவைகளை வழங்கல். (Art 110)
   4. எத்தகைய அரசியல் திருத்த சட்டங்களும் அரச மதத்தை எவ்வித மாற்றத்திற்கும் உட்படாதவாறு-அரசியல் யாப்பில் ஏற்றுக்கொள்ளப்படாதவாறு சட்டங்கள் (Art 145)

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இது வரை நடந்த விமானக் கடத்தல்கள்

| இல: | காலம் | விமானம் | கடத்தியவர்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 00 | 1956. 10. 22 | மொரோக் (AIR MORC) | பிரஞ்சு விமானப் படை | அல்ஜீரியாவிலிருந்து புறப்பட்ட இந்த விமானத்தில் 6 எவ். எல். என். அரசியல் பிரிவு உறுப்பினர்கள் இருந்தார்கள். 1) HOCINE AIT- AHMED, 2) AHMED BEN BELLA, 3.) MOHAMMED BOUDIAF, 4.) MOHAMMED KHIDER, 5.) MOSTEPHA LACHE அனைவரும் 18. 03. 1962 வரை சிறையில் இருந்தனர். |
| 01 | 1970. செப். | 1.) அமெரிக்கன் 2.) சுவிஸ் 3.) பிரித்தானியா | எவ். பி. எல். பி. பாலஸ்தீனப் போராளிகள் | மூன்று விமானங்களும் ஜோர்டானியப் பாலைவனத்தில் பலாத்காரமாக இறக்கப்பட்டது. 24 நாட்களின் பின் பயணிகள் விடுவிக்கப்பட்டனர். |
| 02. | 1972. மே | சபீனா (SABENA) | 4 fedayin பாலஸ்தீனப் போராளிகள் | ரெல்- அவிவ் இல் இறக்கப்பட்டது. அதிரடிப் படையினரால் முறியடிக்கப்பட்டது. 2 fedayin இறந்தனர், 3 பயணிகள் காயமடைந்தனர். |
| 03. | 1976. யூலை | பிரான்சு | 7 பி. எல். ஓ. போராளிகள் | 100 பயணிகளுடன் உகண்டாவில் இறக்கப்பட்டது. இஸ்ரேல் அதிரடிப் படையினரால் முறியடிக்கப்பட்டது. 7 பி. எல். ஓ. போராளிகளும், 3 பயணிகளும், 20 உகண்டா இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். |
| 04. | 1977. அக்டோபர் | லுவ்தான்ஸா | 3 பாலஸ்தீனப் போராளிகள் | 87 பயணிகளுடன் சோமாலியாவில் இறக்கப்பட்டது. ஜெர்மனியின் R. F. A. அதிரடிப் படையால் முறியடிக்கப்பட்டது. 3 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். |
| 05. | 1978. பெப். | எகிப்து | fedayin பாலஸ்தீனப் போராளிகள் | 15 பயணிகளுடன் சைபிரஸில் இறக்கப்பட்டது. ஆள்மாறாட்டம் காரணமாக எகிப்திய, சைபிரஸியப் படை மோதலால் 15 எகிப்திய ராணுவத்தினர் கொல்லப்பட்டனர். |
| 06. | 1984. ஆகஸ்ட் | பிரான்சு | ஈரானியப் போராளிகள் | 64 பயணிகளுடன் தெஹறானில் இறக்கப்பட்டது. 3 நாட்களின் பின் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. |
| 07. | 1984. டிசம்பர் | குவைத் | ஈரானிய இராணுவம் | தெஹறானில் விமானம் தாக்குதலுக்கு உள்ளாகியதால் 2 பயணிகள் காயமடைந்தனர். |
| 08 | 1985. யூன் | T. W. A.. | Chiites லெபனானியர்கள் | பெய்றூத்தில் 39 பயணிகளுடன் இறக்கப்பட்டது. 17 நாட்களின் பின் பயணிகள் விடுவிக்கப்பட்டனர். இதில் ஒரு பயணி இறந்துபோனார். |
| 09. | 1985. நவம்பர் | எகிப்து | அபு- நிதால் D`Abou Nidal | 97 பயணிகளுடன் மால்ராவில் (ஆயடவந) இறக்கப்பட்டது. எகிப்திய ராணுவப் படையினரால் முறியடிக்கப்பட்ட போதிலும் 61 பயணிகள் கொல்லப்பட்டனர். |
| 10. | 1986. செப். | பான்- அமெரிக்கன் | பி. எல். ஓ. போராளிகள் | கராச்சியில் பாகிஸ்தானிய இராணுவத்தின் முறியடிப்புக்குள்ளாகியது. 22 பயணிகள் கொல்லப்பட்டனர். |
| 11. | 1986. டிசம்பர் | ஈராக் | 2 ஈரானியர்கள் | ஆகாயத்தில் நடந்த தாக்குதலால் 59 பயணிகளுடன் சவூதி- அரேபியாவில் விமானம் விழுந்து நொருங்கியது. |
| 12 | 1988. ஏப்பிரில் | குவைத் | Chiites லெபனானியர்கள் | அல்ஜீரியாவில் பயணிகளுடன் இறக்கப்பட்டது. மீட்பு வேலைகளின்போது 2பயணிகள் கொல்லப்பட்டனர். |
| 13. | 1994. டிசம்பர் | பிரான்சு | 4 G. I. A. போராளிகள் | பிரான்சில் ஒரு நகரமான மார்செய் -இல் தரையிறக்கப்பட்டது. பிரஞ்சு அதிரடிப் படையான G. I. G. N. யினால் மீட்கப்பட்டது. 4 G. I. A போராளிகளும் கொல்லப்பட்டனர். |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிருப்தியால் விலகி மொறோக்கில் அரசியல் அடைக்கலம் பெற்றிருந்தவருமான மொஹமட் பூதியாவ் (Mohammed Boudiaf) அணுகி நாட்டிற்கு அழைத்தது இராணுவம். 1992 ஜனவரியில் ஷாதியை வலுக்கட்டாயமாக பதவியிலிருந்து இராஜினாமா செய்ய வைத்து, நாட்டுப் பொறுப்பை புதிதாக உருவாக்கப்பட்ட 'உயர் அரச நிர்வாக சபையிடம்' (Haut Comite d'Etat) கொடுக்கப்பட்டது. இந்த சபையின் தலைவராக பூதியாவ் நியமிக்கப்பட்டார். பூதியாவ் இராணுவத்துடன் ஏற்பட்ட ஒப்பந்தப்படி இரண்டாம் கட்ட வாக்கெடுப்பு நடைபெறாது தேர்தலை ரத்துச் செய்தார். பூதியாவ் மீது மக்களுக்கிருந்த நன்மதிப்பால் இச் செய்கை தவறாகப்படவில்லை. ஆனாலும் பூதியாவ் மனச்சாட்சியின் படி கருமங்களை ஆற்ற விழைந்தார். மக்களின் விருப்பப்படி இராணுவத்தினதும், கட்சியனிதும் ஊழல்களை சீர்படுத்தி நாட்டை மேம்படுத்த முயற்சித்தார். விளைவு 1992. 06. 29-ல் இராணுவத்தால் கொலையுண்டார்.

# இன்றைய நிலை





இந்தப் பின்னணியிலேயே அல்ஜீரியாவின் இன்றைய நிலையை அவதானிக்க முடியும். 1962-ல் ஒரு கோடியாக இருந்த மக்கள் தொகை, இன்று இரண்டரைக் கோடியாக வளர்ந்துள்ளது. 25 வீதமானோர் வேலையின்றித் தவிக்கின்றனர். ஒவ்வொரு வருட முடிவிலும் 3 இலட்சம் இளைஞர்கள் வேலை செய்யும் தகமையடைந்தும் தகுந்த செயல் திட்டமின்மையால் பரிதவிக்கின்றனர்.

பிரஞ்சு மொழியில் கல்வி கற்றோருக்கும், அரபு மொழியில் கல்வி கற்றோருக்கும் இடையில் ஏற்பட்ட கலாச்சார பற்றும்- வேறுபாடுகளும் வர்க்க ரீதியில் வெளிப்பட்டன. அரபு மொழியில் கல்வி கற்றோர் வேலையின்றி பரிதவிக்க ஆளும் மேல் தட்டு வர்க்கத்தினர் இஸ்லாமியப் பற்றில்லாதவர்களாக, மதக் கட்டுப்பாடுகளை உதாசீனம் செய்பவர்களாக இருந்தமை மக்களை உறுத்திற்று. மக்கள் இக்கொடுமைகளில் இருந்து விடுபட இஸ்லாமிய பாதுகாப்பு முன்னணிக்கு ஆதரவளிக்கத் தொடங்கினர்.



இ. பா. முன்னணியும் ஏனைய கட்சிகளும் தேர்தல் இரத்து நிகழ்வை காரசாரமாகக் கண்டித்தன. மக்களை எழுச்சி செய்யத் தூண்டிய குற்றச்சாட்டில் இ. பா. மு. தலைவரும், முக்கிய பிரமுகர்களும் கைது செய்யப்பட்டனர். 1992. 02. 09-ல் நாடு தழுவிய அவசாகாலச் சட்டத்தை இராணுவம் அமுலாக்கியது. இ. பா. மு. அமைப்பைத் தடை செய்தது. இது வரை காலமும் தலைமறைவாகச் செயல்பட்டு வந்த ஜியா-5 (G. I. A. - Groupe Islamique Armé) F. L. N. அரசையும், இராணுவத்தையும் நம்ப மறுத்து - ஜனநாயகத் தீர்வை ஏற்க மறுத்து வந்தது. இ. பா. மு. மீதான தடை உத்தரவு வெளிப்பட்டதும் வெளிப்படையாகவே ஆயுதம் ஏந்தி அரசு சார்பான புத்திஜீவிகளையும், அரசு சார்பற்ற சேவையிலிருப்போரையும் எதிரியாகப் பிரகடனப்படுத்தியது. இதைத் தொடர்ந்து இரு சாராரும் ஒருவரை மற்றவர் கொன்றொழிக்கத் தொடங்கினர்.

மூன்று வருடங்களுக்கு மேலாகத் தொடரும் அல்ஜீரிய உள்நாட்டு மோதல்கள் பற்றி பாப்பாண்டவர் « மக்கள் அனைவரும் பணயக் கைதிகளாகியுள்ளனர் » என்று கருத்து வெளியிட்டுள்ளார். பிரஞ்சு பாதுகாப்பு அமைச்சரின் கருத்து, 'வாராவாரம் 1000 பேர் கொல்லப்படுகின்றனர்; கடந்த மூன்று வருடங்களில் மட்டும் 35- 40 ஆயிரம் பேர் மாண்டு அல்லது காணாமல் போயிருக்கலாம்' என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விழப்புகள் பற்றி அல்ஜீரிய சுதந்திரப் போராட்ட இழப்புகளுடன் ஒப்பிட்டு கருத்து வெளியிடுகிறது பிரஞ்சு புலனாய்வுத் துறை.



இதே வேளை பிரான்சு அல்ஜீரிய F. L. N. இராணுவத்தின் செயலை ஆதரித்து, உலக வங்கியிடம் இருந்து 40 மில்லியன் பிராங்க் கடனாகப் பெற்றுக் கொடுத்து உதவியது. தவிர நவீன ஆயுதங்களையும் (ஹெலிகப்டர்கள், இரவில் தெளிவாகப் பார்க்க உதவும் 'அதிகீழ் செந்நிறக் கதிர்' கருவிகள்) வழங்கியது.

பொதுவாக அல்ஜீரியர்கள் இரு வேறுபட்ட சமூக நடத்தைகளை தம்மிடத்தே கொண்டுள்ளனர். 1.பழமைவாத- சம்பிரதாய நடத்தைகள். 2. நவ நாகரீக வாழ்க்கை நடத்தைகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இராணுவத்துக்கு எதிராக முன்னிற்கும் இஸ்லாமிய பாதுகாப்பு முன்னணியின் இரு தலைவர்கள் - சிறுகுறிப்பு: (1990-91 தேர்தலில் இ. பா. மு. வின் வெற்றியின் பின் இவர்களிருவரும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.)**

அபாஸி மாதானி (ABASSI MADANI)



பிறப்பு: 1931; கல்வி: தத்துவவியல் கலாநிதி (இங்கிலாந்து): சீமைப்பெண் வாழ்க்கைத் துணைவி. 6 வாரிசுகள். காலனிய எதிர்ப்புப் போராட்டத்தில் 7 வருட சிறைத் தண்டனை அனுபவித்தவர். பின் இங்கிலாந்தில் வாழ்க்கை. ஊர் திரும்பியதும் பல்கலைக்கழக விரிவுரையாளரானார். 1982-ல் இஸ்லாமிய தீவிரவாதக் கருத்துடையவர் என்ற குற்றத்திற்காக 2 வருட சிறைவாசம். பாமர மக்களுக்கு தனியார் அமைப்புகளை நிறுவி உதவி வழங்கி வருகின்றார்.

அலி பென்ஹாஜ் (ALI BENHADJ)



பிறப்பு: 1956 (காலனிய எதிர்ப்புப் போராட்டத்தில் தந்தையை இழந்து தூனிஸில் அகதியாக இருந்த வேளை) பதவி: ஆசிரியர். அரசின் அநீதிகளுக்கு எதிராகக் கிளர்ந்து ஆயுதம் தரித்த குற்றத்திற்காக 1983-ல் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் மதக் கல்வியைத் தொடர்ந்து இமாம் ஆகி: 1987-ல் விடுதலை ஆனதும் பாமர மக்கள் மத்தியில் தனது பொதுவாழ்வை அமைத்துக் கொண்டார்.

1. *பழமைவாதிகள்:*

   அரபு- இஸ்லாம் கல்வியை ஏற்று அதன் மூலமாக தம் கலை, கலாச்சார, பண்பாட்டு அடையாளங்களைத் தெரிபவர்கள். இவர்கள் மாஸ்றெக் அரேபியர்களின் ஊடுருவல்களை ஆதரிப்பவராகவும், ஐரோப்பிய கலாச்சார, பிரஞ்சு மொழி எதிர்ப்பாளராகவும் இருக்கின்றனர். பெரும்பாலும் பாமரர்கள். இவர்களின் பிரஞ்சு அறிவின்மையால் அரச நிர்வாக சேவைத் தகுதி அற்றவரென, விஞ்ஞான வளர்ச்சியைப் புரிய முடியாதவரென மேல் தட்டு வர்க்கத்தினரால் மூன்றாம் உலக நாடுகளை ஒத்தவர் என ஓரங்கட்டப்பட்டனர்.

2. *நவ நாகரீகவாதிகள்:*

   இவர்கள் அரபு- இஸ்லாம் கல்வி முறையை வெறுத்து தம் கல்வியை ஐரோப்பிய நாடுகளில் பெற்றவர்கள். இவர்கள் மேட்டுக் குடியினர் (F. L. N. அரசியல் அங்கத்தவர்கள்; நிர்வாகப் பொறுப்பாளர்கள்; இராணுவத்தினர்கள்; பணக்கார வர்க்கத்தினர்கள் - இவர்களின் வாரிசுகளுமாவர்). இவர்கள் காலனியத்திற்கு எதிராகப் போரிட்டு இருந்தாலும் காலனியவாதிகளின் நடத்தைகளில் மூழ்கியவர்களாக இருந்தனர்.

அல்ஜீரியர்களின் ஆட்சி அதிகாரம் இந்த நவ நாகரீகவாதிகளான மேட்டுக் குடியினர் வசமே இருப்பதைக் கண்டோம். அத்தகைய மேட்டுப் பண்புக்கேற்ப, மக்களுக்கு அரபு- இஸ்லாம் கல்வியை கட்டாய பாடமாக நடைமுறைப்படுத்தி நடுத்தெருவில் நிறுத்திவிட்டு, தம் வாரிசுகளுக்கு பிரஞ்சு மொழிக் கல்வியுடன் ஐரோப்பிய கலாச்சாரத்தையும் வழங்கி எதிர்கால ஆட்சி அதிகாரங்களும் தம் வாரிசுகளுக்கே கிடைக்க வழி செய்தார்கள்.

இவர்கள் 10-ம் நூற்றாண்டு வாக்கில் மாஸிறேக் அரபிய ஊடுருவல்களை எதிர்த்தவர்களென முன்னர் பார்த்தோம். இன்று பூர்வீகக் குடிகளின் மொழியான பார்பெர் மொழியைப் பேண மாஸிறெக் கலாச்சாரத்தை எதிர்ப்பதாகவும், தம் சுயநிர்ணய உரிமை கேட்டு இ. பா. மு. குரல் எழுப்பியதும் பிரஞ்சு மொழி, கலை, கலாச்சாரத்தை ஆதரிப்பதாகவும் காட்டிக் கொள்கின்றனர். இந்நிலை ஏன்?

கடந்து வந்த கரடு முரடான வரலாற்றுப் பயணத்தால் இன்று அல்ஜீரியர்களது பேச்சு மொழி அரபு, பார்பெர், பிரஞ்சு கலந்த புதிய வார்ப்பு மொழியாகவுள்ளது. எனவே இவ்வேறுபாடுகளாலா அல்லது தம் சுய அடையாளம் தேடியா இப்போராட்டம் நடக்கிறது? எனக் கேள்வி எழுகிறது.

ஒருவேளை, ஐரோப்பிய கலாச்சார சார்பாளருக்கும், சார்பற்றவருக்குமானதா?

அல்லது மத முலாம் பூச்சில் அடியுண்டு கிடக்கும் வர்க்க பிளவுகளினாலதா?

வினாக்கள் எல்லோருக்குமானது.

---

5. **ஜியா** (G. I. A. - Groupe Islamique Armé): பாகிஸ்தானின் உதவி பெற்று பாகிஸ்தானிலும், அப்கானிஸ்தானிலும் ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள். இன்று பாகிஸ்தானில் அமைந்துள்ள 'சர்வதேச இஸ்லாமிய மீட்பு அமைப்பு' (International Islamic Relief Organization) உதவி செய்வதாகவும் கூறப்படுகிறது.

கட்டுரைக்கான தகவல்கள்:
(நன்றி)


1. Le Grande L'Etat MAGHREB '90;
2. Dossiers et Document LE MONDE 02.'95;
3. Le Monde Diplomatique No: 482;
4. LE MAGHREB FACE A LA CONTESTATION ISLAMISTE Nov. '94.
5. L' EXPRESS 29.12.'94.
6. SPECIAL ALGERIE - Le Nouvel Observateur 25.01.'95




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வராது போன...

கி.பி.அரவிந்தன்.

1994- கோடை.
பேஸியர்- பிரான்சு

ஒரு பிறை நிலவு,
ஒரு துண்டு வானம்,
ஒரு பிய்ந்த இதழ்,
ஒரு நசிந்த கிண்ணம்,
ஒரு கிழிசல் தாள்...
இப்படிப் பற்பலதும்,
கறள் கட்டியும்
உருக்குலைந்தும்,
இறைபடும் வேற்றிடை
துருத்தியபடி..

ஆட்காட்டிக் குருவிகளும்
அறியாமல்
என்புகளும் நசிந்த
ஆதங்க சிணுக்கத்தின் போது
முகில் மூடு முன்
ஒளியிழந்ததே
அந்த பிறை நிலவு.

பனங் கூடலின்
தடித்த இருட்டொதுக்கில்
உன் மென்னிதழ்கள்
என்னில் பதிந்த போது
பனையோலை நீக்கல்களில்
வெள்ளிகள் உலர்த்தி
கிடந்ததே
அதிலொரு துண்டு வானம்.

கொடிப் பந்தலிட்ட
முற்றத்தில்
ஊர் அடங்கிய
சாமத்தில்
நாம்
அணைந்து எரிந்த
தாபத் தீயின் போது
மணம் சிந்த மறந்து
பிய்ந்து உதிர்ந்ததே
அந்த மல்லிகையின்
இதழொன்று.

மற்றவர் கண்கட்டி
விரல் முகர்ந்து
தவித்து
விழியுள் பிணைந்த
இளஞ் சூட்டில்
உன் தேனீரை
பருகிய போது
சீனிக் கரைசலிடை
படிந்த
தேயிலைத் துகள்களுடன்
நசிந்திருந்ததே
அந்த அலுமினியக் கிண்ணம்.

வராத நாளில்
வந்து சேரும் கடிதங்களில்
மையாய்க் கசிந்து நீ
நெகிழ்த்தும் போது
என் முத்த எச்சிலால்
ஈரம் படிந்ததே
அந்தக் காதல் தாளின்
கிழிசலொன்று.

இதையெல்லாம்
பொறுக்கி எடுக்கவும்
அடையாளம் காணவும்,
அசைபோடவும்,
வாய்க்கையில்
வராது போயிற்று காண்
புள்ளியாய் நெருடிய
உந்தன் முகம்.
புள்ளிகள் தேடி
அவிந்து போன
நீ...

❄ ❄ ❄



# பறவையும் பாடலுமாய்...

1.
புதுக் கவியாளர்
தமிழில் எடுத்தியம்பும்
பீனிக்ஸ் பறவையுமல்ல,
பாலையும் நீரையும்
பிரிக்குமாமென
பழந்தமிழ் கூறிடும்
அன்னப் பறவையுமல்ல
இது.

2.
வசந்தத்தை எதிர்பார்க்கையில்
கூவெனக் கூவி குயிலாகி,
மழை மேகம் காண்கையில்
தோகை விரித்தாடி மயிலாகி,
துணைக்கு இணை தேடுகையில்
இரங்கி குரல் கேவி செம்பகமாகி,
ஒன்றாய்க் கூடும் அவசியமாகையில்
காவெனக் கரைந்து காகமாகி,
எடுத்துரைக்க நேருகையில்
சொல்லியதைச் சொல்லி கிளியாகி,
உறவற்று தொலைவுறுகையில்
தூது காவிச் செல்லும் புறாவாகி,
உறு மீனுக்காய்க் காத்திருக்கையில்
ஒற்றைக் கால் தவத்தினில் கொக்காகி,
நீல வான் பெருவெளியில்
தடம்பதிக்கும் பாடலுடன்
சிறகு முளைத்த போதினிலே
கட்டறுத்த பறவை
இது.

3.
பறந்து சென்ற தடங்களில்
விண்கற்களும் இடறின
உதிராது முறிந்த சிறகுகள்
அமிலச் சேற்றுள்ளும் புதைந்தன
பருவம் மாறி இழைத்த கூட்டில்
கோட்டான்களும் குடியேறின
அடைகாக்க இட்ட முட்டைகளை
பாம்புகளும் கவர்ந்து சென்றன
எஞ்சியவையும் கூழ் முட்டை
அதனெதிரும் பாழ்வெட்டை
குரல் வற்றியும் போயிற்று
நீர் தருவாரும் எவருமிலர்
செட்டையையும் ஒடித்து விட்டார்
பாடல் மறந்த மண்டூகங்கள்
இருந்தும்தான் களைக்காதாம்
இது

4
வண்ணங்கள் வடிவங்களை
வாரி இறைக்கும் ஐம்பூதங்கள்
வாழ்வுப் பெருஞ்சுழிப்பிலும்
நுரைத்துக் குமிழும் அன்புகள்
கோடை மழைச் சிதறலில்
தோன்றிச் சுடரும் வானவில்
தேக்கத்திலும், இயக்கத்திலும்
தரமாற்றம் நிகழ்கின்றது
உருமாற்றம் கொள்கின்றது
அது பறந்த தடங்களில்
புயற் பறவையின் பாடலாய்
சேறு கலக்கி
கிணறு இறைக்க, இறைக்க
திறக்கின்றது
ஊற்றுக்கண்

• •

கி.பி.அரவிந்தன்
1994 – கோடை . பிரான்சு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறந்த இலக்கியப்படைப்பு எதற்கும் பிரதானமான அடிக்கருத்தொன்று இருக்கும். அந்த அடிக்கருத்தை நேரடியாக எடுத்துக்கூறி, உதாரணங்கள் தந்து விளக்கி, அதற்குச் சான்றுகள் தந்து நிறுவினால் அது விஞ்ஞான முறையான சமூகவியல் ஆராய்ச்சியாக மாறிவிடும். அப்படிச்செய்யாமல், கலைஞன் தன் உள்ளுணர்வினாலேயே கண்ட அடிக்கருத்தை, வாழ்க்கை அநுபவங்கள் அல்லது நிகழ்ச்சிகளிலே மறுபடியும் கரைத்துக்கொடுக்கும்போது இலக்கியம் பிறக்கிறது. ஆகவே இலக்கியம் என்பது '***அநுபவத்தேறலின் நிகழ்ச்சிக்கரைசல்***' என்று கூறலாம்.

ஆனால், விஞ்ஞானத் துறையிலோ, தனிப்பட்ட விஞ்ஞானி ஒருவனின் உள்ளுணர்வாலே கிட்டிய அபிப்பிராயங்களுக்கு இடமில்லை ; தனியாள் விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லை : கோபதாபங்களும் இன்பதுன்பங்களும் ஆகிய மன எழுச்சிகள் விஞ்ஞானியின் முடிபுகளைப்பாதித்தல் கூடாது. அகவயமான எண்ணங்களையும் சிந்தனைகளையும் முற்றாக விலக்கி நீக்கிய நிலையே விஞ்ஞானியின் நிலை.

இலக்கியப் படைப்பாளியின் நிலை அவ்வளவு புறவயமானது அன்று. இலக்கியப்படைப்பாளியின் தனிப்பட்ட அபிப்பிராயங்களுக்கும் இலக்கியத்தில் இடமுண்டு. உண்மையாகச்சொல்லப்போனால், அப்படைப்பாளியின் தனிச்சிறப்பான ஆளமையை விளங்கிக்கொள்வதற்கு வாசகன் தயாராக இருக்கிறான். ஏன், ஆவலாகவும் இருக்கிறான். அந்த ஆளுமையின் பண்புகள் சிலவற்றைப் பகிர்ந்துகொள்ளும் ஆர்வமும் வாசகனுக்குண்டு.

— *இ.முருகையன்*



**எதை விரட்டுகின்றாய்? (முன்னொரு பொழுது யாழில்)** **நன்றி- ஒளிப்படம்: தமயந்தி**

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரண்டாம் வீர நாய்க்கர் நாட்குறிப்பு

(1778 - 1792)

ஒர்சே.மா.கோபாலகிஷ்ணன்

*தமிழில் நாட்குறிப்பு இலக்கியமென 'ஆனந்தரங்கப் பிள்ளை தினசரிதையை' (1736 - 1761) குறிப்பிடுவர்.*

*பாண்டிச்சேரி என வழங்கப்படும் புதுவைமாநிலத்தின் வரலாற்று ஆவணமாக இது கொள்ளப்படுகின்றது.*

*'ஆனந்தரங்கப் பிள்ளை தினசரிதை' யின் தொடர்ச்சி போன்றே அமைந்துள்ள இரண்டாம் வீரநாயக்கர் நாட்குறிப்பும், புதுவை, தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்தியாவின் வரலாற்றை கூறுகின்றது. இந்நாட்குறிப்பின் பதிப்பாசிரியரான மா.கோபாலகிஷ்ணன்...*

*இவர் புதுச்சேரியில் 1940 ம் ஆண்டு பிறந்தார். பிரான்சில் 1963 ம் ஆண்டு பௌதீகம், பொறியியலில் பட்டம் பெற்றபின் தென்வியட்நாமில் பேராசிரியராக வேலையேற்றார். தென்கிழக்காசியாவின் பல பாகங்களில் பிரயாணம் செய்தது முதல் தமிழ்நாட்டு வரலாற்றிலும் தமிழ் பண்பாட்டிலும் ஈடுபாடு கொண்டு பல துறைகளில் ஆராய்ச்சி செய்து வருகின்றார்.*

*தற்சமயம் பாரிசில் பணிபுரிந்துவரும் இவர் பட்டினப்பாலையைப் பிரெஞ்சில் மொழிபெயர்த்திருப்பதும் கோலாலம்பூர், மொரீசியசு, தைப்பே, பாரிசு போன்றவிடங்களில் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியிருப்பதும் குறிப்பிடத் தக்கனவாகும்.*

வாஸ்கோ தெ காமா 1498ல் கள்ளிக்கோட்டையில் இறங்கியமுதல் காலத்திற்குப் பின் போர்த்துக்கீசர்கள் வடபுலம்சென்று தக்கான சுல்தான்களுக்கும், இந்து இராசாக்களுக்கும் இடையே உள்ள கோவாவில் நிலை பெற்றுத் தங்கள் வியாபாரத்தைப் பெருக்கி வந்தனர். அவர்களைத் தொடர்ந்து ஒல்லாந்துக்காரார்களும், டெனிஸ்காரார்களும், ஆங்கிலேயர்களும் வாணிபம் செய்யும் பொருட்டு தென்னிந்தியாவில் பலவிடங்களில் தத்தம் வியாபாரத் தலங்களை அமைத்துக் கொண்டனர்.

14-ம் லூயி மகாராசா ஐரோப்பாவில் பலவிடங்களில் வெற்றிபெற்று வந்தாலும், அவருடைய கப்பற்படை போதுமான பலமுள்ளதாக இல்லாததால், வெளிநாடுகளுடன் கடல்மார்க்கமான வாணிபம் சிறந்த முறையில் நடந்தேறவில்லை. எனவே 'கொல்பேர் கும்பனி' கலைக்கப்பட்டு, வேறொரு பிரெஞ்சிந்தியக் கும்பனி அமைக்கப் பட்டது. இம் மூன்றாம் கும்பனியே பலசிறப்புத் தனியுரிமையுடன் 1769 வரை இந்தியாவுடன் வியாபாரம் செய்து வந்தது.

பிரெஞ்சு நாட்டில் 1604 ம் ஆண்டிலேயே 4-ம் கென்றி( HENRI IV) மகாராசா கிழக்கிந்தியக் கும்பனி ஒன்றை அமைத்தாரென்றாலும், இக் கும்பனியின் வியாபாரம் சரியானபடி பெருகவில்லை. அதன் பிறகு 1664 இல் ஒல்லாந்து, ஆங்கிலேயக் கும்பனிகளுக்கு சமமாகப் போதுமான பொருள்வசதியும் மற்றவசதிகளும் கொடுத்து 14-ம் லூயி (LOUIS XIV) மன்னரின் அமைச்சரான கொல்பேர் (COLBERT) புதிய கிழக்கிந்தியக் கும்பனியை நிறுவினார். இதையே பிற்காலத்தில் கொல்பேர் கும்பனி என்றழைக்கும் பழக்கம் ஏற்பட்டது.

வடஇந்தியாவில் 1526 இல் பாபர் கொண்ட வெற்றிக்குப் பின் மொகலாய சாம்ராச்சியம் உருப்பெற்று, பிறகு அக்பர், ஜெஹாங்கீர் காலத்தில் விரிவடைந்து 17-ம் நூற்றாண்டு நடுவில் சிறப்புடன் விளங்கிற்று. எனவே ஐரோப்பியநாடுகள் அனைத்தும் முதலில் டாமன், பரோக், சூரத் போன்றவிடங்களில் தத்தம் தலங்களை அமைத்தன. கொள்ளை நோயும், பஞ்சமும் ஏற்பட்டதன் காரணமாக சூரத்தின் வளம்குன்றத் தொடங்கியதால் ஐரோப்பியர்கள் அவ்வூரைவிட்டு தெற்குநோக்கிச் சென்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


முதன்முறையாக 1553-ம் ஆண்டில் வெளியான போர்த்துக்கீசரின் தரைப்படத்தில் தான் புதுச்சேரி குறிப்பிடப் பட்டிருக்கின்றது. 1618 - 1620 ஆண்டுகளில் அங்கு டச்சுக்காரர் என்று சொல்லப்படும் ஒல்லாந்துக்காரர் வியாபாரக்கூடம் ஒன்று வைத்திருந்தனர். அவர்களுக்குப் பின் சிலவருடங்கள் டெனிஸ்காரர்கள் அங்கு தங்கி வியாபாரம் செய்தனர்.

17-ம் நூற்றாண்டின் இரண்டாவது பகுதியில் தென்னிந்தியாவில் அடிக்கடி பலபோர்கள் நிகழ்ந்து "அலங்கோலங்களும்", மக்களுக்குச் சொல்லொணக் கஷ்டங்களும் ஏற்பட்டன. தக்காணத்தின் கிழக்குப் பக்கம் கொல்கொண்டா இராச்சியம், தெற்கில் பாலாறு வரை பரந்திருந்தது. மேற்குப் பக்கத்தில் இருந்த பிஜப்பூர் இராச்சியமோ தென்கிழக்கில் தஞ்சாவூர் இராச்சியம் வரை வியாபித்திருந்தது. இவ்விரண்டு அரசுக்களுக்கும் இடையே இருந்த புதுச்சேரி பலசமயங்களில் வன்முறைக்குட்பட்டு கொள்ளையடிக்கப்பட்டது.

கடைசியில், பிஜப்பூர் இராச்சியத்துடன் இணைக்கப்பட்டபோது அப்பகுதியில் ஆளுனராக இருந்த ஷேர் கான் லோதி புதுச்சேரியை 1662 இல் ஒல்லாந்துக்காரரு கொடுத்து, அவர்கள் அங்கு தங்கி வாணிபம் செ சம்மதமளித்தார். ஆனால் 1673 இல் பிரெஞ்சுக்கா தூரத்தைவிட்டு தெற்கில் சோழமண்டலக் கரையில் பு தலமொன்று ஆரம்பிக்கவிரும்பி ஓரிடம்தேடி கொண் ருக்கும் சமயம் ஷேர் கான் லொதிக்கு ஒல்லாந்துக்கா மீது வெறுப்பு ஏற்பட்டிருந்ததால் புதுவையில் இரு சிறிய கோட்டையை பிரெஞ்சுக்காரருக்கு அளித்த அடுத்தவருடம் பிரான்சுவா மார்த்தேன் (FRANCC MARTIN) அவ்விடம் வந்து ஊரைவிரிவுபடுத்தி தமிழு பிரெஞ்சுக்காரரும் தத்தம் வியாபாரத்தை பெருக்குவ கான சூழ்நிலையை ஏற்படுத்தத் தொடங்கினார்.

1693-ம் ஆண்டு ஐரோப்பாவில் ஏற்பட்ட சண்டையி தொடர்பாக ஒல்லாந்துக்காரர் புதுச்சேரியில் சண்ட செய்து அவ்வூரை கைப்பற்றிக் கொண்டு பிரான்சுவ மார்த்தேனை யாவா தீவிலிருக்கும் பத்தாவியா (BATA IA) க்கு நாடு கடத்தினார்கள். புதுச்சேரி தங்கள் வச ருந்த போதுதான் வில்வ நல்லூர், பாகூர் ஆகிய இடங்க வாங்கப்பட்டு புதுவைநகருடன் சேர்க்கப்பட்டன. 16 இல் ரிச்விக் (RIJSWICK) ஒப்பந்தம் ஏற்பட்டபொழு

# இலங்கை SRILANKA 1767 - 1796




இந்தியாவை அடக்கியாளுவதற்காக எழுந்த ஆங்கில-பிரான்சியப் போராட்டம் ஸ்ரீலங்காவிற்கு ஒரு நீண்டகாலக் கெடுதியை அறிவிப்பதாக இருந்தது. பிரான்சில் ஏற்பட்ட ஏழுவருட யுத்தத்தின் இழப்புகள் வெளிநாட்டரசுகளை திரும்பவும் அடையும் ஆசைக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை. கிட்டத்தட்ட 1771 இலிருந்து இந்தியாவின் மேல் படையெடுக்கும் திட்டங்களுக்கு பிரான்சு ஊக்கமளித்தது. இதன் பெறுபேறாக இந்திய தீபகற்பத்தில் ஆதிபத்தியம் செலுத்தவிருந்த இரு போட்டியாளருக்கும் திருகோணமலைத் துறைமுகம் ஒரு அக்கறையுள்ள இடமாயிற்று. இவ்விரு பகுதியினரிலும் பார்க்க ஆங்கிலேயர் இதன்மேல் விசேட அக்கறை கொண்டனர்.

கடற்படையினரின் தேவைகளை இருவகைளில் திருப்திகரமாகச் செய்து முடிக்கக்கூடிய இடமாக இருந்தபடியால் திருகோணமலைத் துறைமுகம் முக்கியமாயிற்று. இந்தியாவைக் காக்கவிருந்த சண்டைக் கப்பற்கூட்டம் பருவக்காற்றுகளுக்கேற்ப துணைக்கண்டத்தில் தரித்திருக்க வேண்டியிருந்தது. அக்டோபர் மாத இடைப்பருவ புயல்காற்றினால் ஏற்பட்ட உக்கிரமான காலநிலையிலும், சிறிது வேகம் குறைந்த ஏப்ரல்மாதக் காற்றுக்கும் பாதுகாப்பான துறைமுகம் தேவைப்பட்டது. எனவே, திருகோணமலைத் துறைமுகம் மட்டும் இத்தேவைகளைப் போதுமானளவு திருப்தி செய்ததோடு இந்திய மலபார், கொறோமென்டல் கரைகளை மேற்பார்வை செய்யக்கூடியதாகவும் இருந்தது. 1746 க்கும் 1795 க்குமிடையில் ஆங்கில கீழைத்தேச கப்பற்படை இந்துசமுத்திரத்தில் வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்றை நாற்பது முறைகள் எதிர் நோக்கியது. இவற்றில் பதினைந்து முறைகள் பிரிட்டிஷ் கடற்படை திருகோணமலைத் துறைமுகத்தை பாவித்தது. அதில் பதினொருமுறை கப்பற்படையின் தேவை தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காலமாகிய சித்திரை மாதத்தில் ஏற்பட்டது. இதைவிடப் பலமுறை கப்பலில் ஏற்பட்ட திருத்த வேலைகளுக்கும், மரம், நீர் எடுப்பதற்கும் அடிக்கடி திருகோணமலைக்குப் போகவேண்டியிருந்தது. இத் தகவல்களின்படி திருகோணமலை யுத்தகாலங்களில் வசதிகள் கொண்ட முக்கிய இடமாகக் கணிக்கப்பட்டது. ஒஸ்ரிய யுத்தம் வெற்றியுடன் முடிவடையும் நிலையில் டச்சுக்காரரும், ஆங்கிலேயரும் இணைந்திருந்தபடியால் ஆங்கிலேயர் தடையின்றி துறைமுகத்தைப் பாவித்தனர். பிரஞ்சுக்காரருடன் போர் ஆரம்பிக்கமுன்பும் இவர்கள் இத்துறைமுகத்தைப் பாவித்தனர். ஏழுவருட இப்போரின் போது [ஏழாண்டுயுத்தம் (1756-1763) பிரான்ஸ், ஒஸ்ரியா, சுவீடன், ஸ்பெயின் போன்றநாடுகள் ஒரு அணியிலும், பெரிய பிரித்தானியா, புருசியா; (ஜேர்மனியில் ஒருபகுதி) ஹனொவர் ஆகியநாடுகள் ஒரு அணியிலுமாக நடைபெற்ற ஓர் உலகளாவிய யுத்தம் ஐரோப்பா, வட அமெரிக்கா, இந்தியா ஆகிய இடங்களில் நடைபெற்றது. இதில் இருபெரும் காலனித்துவ எதிர்நாடுகளான பிரித்தானியாவும், பிரான்சும் வடஅமெரிக்காவிலும், இந்தியாவிலும் சண்டையிட்டுக் கொண்டன] டச்சுக்காரர் நடுநிலைமை வகித்தனர். அதனால் ஆங்கிலேய கப்பற்படையினர் தொடர்ந்தும் திருகோணமலைக்குச் சென்று பலவசதிகளையும் பெற்றனர்.

**ஆனால், எதிர்காலத்தில் இதன்நிலை என்ன? திருகோணமலை தொடர்ந்தும் நடுநிலை வகிக்கும் துறைமுகமாக இருந்து ஆங்கிலேயரின் சமாதான யுத்த நேரங்களில் தடையில்லாமல் செல்லக்கூடியதாக முன்பிருந்தது போலத்தொடர்ந்தும் இருக்குமா? 1770 களின் பிற்பகுதியிலும், ஸ்ரீலங்கா வி.ஓ.சி ஆங்கில-பிரான்சியப் போராட்டதில் ஈடுபட்டிருந்தால் ஏற்பட்ட நிகழ்ச்சிகள், இவ்வினாவிற்குரிய விடை 'ஆம்' என்று சொல்வது இலகுவானதல்ல என்பதை வெளிப்படுத்துகின்றது.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்கள் புதுவைநகரையும், அதைச்சார்ந்த கிராமங்களையும் பிரெஞ்சுக்காரரிடம் ஒப்படைத்தனர். பிரான்சுவா மார்த்தேன் பிரஞ்சிந்தியக் கும்பனியின் தலைமையிடத்தை 1701-ம் ஆண்டில் சூரத்திலிருந்து புதுச்சேரிக்கு மாற்றி இவ்வூர் கோட்டையைப் பெரியதாக்கி வலுப்படுத்தியதின் விளைவாக வாணிபம் பெருகி தமிழரும், பிரெஞ்சுக்காரரும் அங்கு அமைதியுடன் வாழத்தொடங்கினர். 1706 இல் அவர் இறந்த போது தென்னிந்தியாவிலேயே புதுச்சேரி மிக அழகிய அரண் அமைத்த ஊராகவும், வியாபாரச் செல்வம் கொழிக்கும் ஊராகவும் விளங்கிற்று. அக்காலத்தில் பிரெஞ்சு மகாராசாவாக இருந்த 14-ம் லூயி பற்பல வெற்றிகள் கண்டு தன் இராச்சியத்தை விரிவுபடுத்தினார். ஆனால் மேலே கூறியதுபோல் அவருக்கும் போதுமான பலமுள்ள கப்பற்படை இல்லாத காரணத்தால் கடற்பகுதியில் ஆங்கிலேயருக்கு எதிராக போட்டசண்டையில் தோல்வியே கண்டார். 17-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து ஆங்கிலேயருடைய கப்பற்படையே முதற்படையாக விளங்கிற்று. ஒல்லாந்துக்காரர் சிறிதுசிறிதாக இந்தியத் துறைமுகங்களை கைவிட்டு மலாக்கா, யாவா பகுதியில் முழுமுயற்சியுடன் தங்கள் வியாபாரத்தலங்களை அமைத்துக் கொண்டதால் அது முதல் இந்தியாவின் வடக்கு- தெற்குப்பாகங்களில் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்குமே பலத்த போட்டி ஏற்பட்டது.

இங்கு ஆசியாக்கண்டத்தின் தென்மேற்குப் பகுதியிலும் இந்திய மாகடலில் இருக்கும் தீவுகளிலும் அக்காலத்தில் நிலவிய சூழ்நிலையைச் சற்றுத்தெரிந்து கொள்ளுதல் பயனுள்ளதாகவிருக்கும்.

1638 இல் ஒல்லாந்துக்காரர் மொரிசியஸ் தீவில் இறங்கித் தங்கினார்கள். அதே காலத்தில் பிரெஞ்சுக்காரர் அதற்கு பக்கத்தில் உள்ள புர்போம் (BOURBON) இன்றைய ரீயூனியன் தீவு, ரொதிரிக் தீவு மற்றும் மடகாஸ்காரில் சில இடங்களையும் தமதாக்கிக் கொண்டனர்.

1711 இல் புர்போம் தீவில் சுமார் 1000 குடிகள் வாழ்ந்து வந்தனர். ஏறக்குறைய அதேகாலத்தில் மொரிசியசில் தங்கி வாழமுடியாத காரணத்தால் அனைத்து ஒல்லாந்துக்காரரும் அத்தீவை விட்டுக்கிளம்பி தூரகிழக்கில் சுமத்திரா யாவாவில் தங்கள் வியாபாரத்தலங்களை அமைத்தனர் எனவே அச்சமயம் பிரெஞ்சுக்காரர் ஒரு குடியு

## 1767 - 1796 : ஸ்ரீலங்கா

முற்றுகையிடப்பட்ட அமெரிக்கரின் சுதந்திரப் போராட்டத்தின் போது அவர்கள் பக்கம் சார்ந்த பிரெஞ்சுத் தலையீடு வெளிநாடுகளிலுள்ள பிரித்தானிய அரசுகளின் மேல் தாக்குதல் மேற்கொள்ளப்படும் நிலையாகவே இருந்தது. இந்தியாவிலுள்ள பிரித்தானியருக்குச் சொந்தமான இடங்களைத் தரைப்படை, கடற்படை கொண்டு தாக்குவது இவர்களின் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. அமெரிக்காவில் பிரிட்டிஷாரின் தோல்வி இதற்கு சந்தர்ப்பமளித்தது. இக்காலப் பகுதியில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட டச்சுகுடியரசுக்கும், பிரித்தானியாவுக்கும் இடையில் இருந்த வர்த்தகப் போட்டியும், டச்சுக்காரரின் அக்கறைகளுக்கு பிரித்தானியரின் உணர்ச்சியற்ற தன்மையும், டச்சுக்காரரை பிரான்சியரின் செல்வாக்கின் கீழ் கொண்டுவந்ததோடு 1778 இல் பிரித்தானியருக்கு எதிராக ஆயுதங்கள் பாவிப்பதில் நடுநிலமை வகிக்கவும், பின்பு 1780 இல் யுத்தப்பிரகடத்திற்கும் தள்ளியது. இம் முன்னேற்றங்கள், பிரித்தானியாவின் அமெரிக்க சாம்ராச்சியத்தின் இழப்புடனும், இந்தியாவின் மேல் பிரான்ஸ் படையெடுக்க ஆயத்தங்கள் செய்த காலத்திலும் நிகழ்ந்ததால், பிரித்தானியா தனக்குச் சொந்தமான கீழைத்தேச நாடுகளின் பாதுகாப்பை அவசரமாக எதிர்கொள்ள வேண்டியிருந்தது. 1781 இல் ஆங்கிலேயருக்கும், டச்சுக்காரருக்கும் போர் ஆரம்பமானதும், டச்சுக்காரருக்குச் சொந்தமான வெளிநாடுகளிலுள்ள இடங்கள், அதாவது திருகோணமலை, நன்நம்பிக்கைமுனை (CAPE OF GOOD HOPE) போன்ற பகுதிகள் பிரான்சியரின் முக்கிய தளங்களாயின. இத் தளங்கள் ஆசியாவிலுள்ள பிரித்தானியருக்குச் சொந்தமான இடங்களுக்கு எதிர்மாறான திட்டங்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு உதவியாக அமைந்தன.

1781 இல் திருகோணமலை ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தோடு நோக்குமிடத்து நுட்பமான மாற்றத்தை அடைந்தது. நடுநிலைமை வகித்துக் கொண்டிருந்த துறைமுகம் பிரிட்டிஷார் பாவிக்கக் கூடியதாக இருந்து பின் ஒரே இரவில் இந்தியாவைத் தாக்கக்கூடிய ஒரு திறமான தளமாக மாறியது. 1781 இல் டச்சுக்காரர், பிரிட்டிஷார் திருகோணமலையைப் பாவிப்பதைத் தடைசெய்ததால், இந்தியாவின் கிழக்குப் பக்கத்தில் பிரிட்டிஷார் தளம் அமைப்பது அவசியமாயிற்று. பிரித்தானிய ஆட்சியிலிருந்த இந்தியா மீது படையெடுக்கும் திட்டம் பிரான்சியருக்கு இருந்தமையால் திருகோணமலைத் துறைமுகத்தைப் பாவிப்பதைத் தடைசெய்து கைப்பற்றும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆரம்பத்தில் டச்சுக்காரரின் கொறோமெண்டல் கரையையும் கைப்பற்றும் திட்டத்தை வகுத்தனர். பின்பு 1781 இல் இலங்கையிலுள்ள எல்லா டச்சுக்காரரின் குடியேற்றங்களையும் கைப்பற்றுவதாக திட்டத்தை விஸ்தரித்தனர். திருகோணமலையே முக்கிய இடமாக இருந்தபடியால் 1782-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஆங்கிலேயர் இதைக் கைப்பற்றினர். தொடர்ந்து கடற்படை அதிகாரி சவ்றன் தலைமையில் 1782-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பிரான்சியரினால் திருகோணமலை தோற்கடிக்கப்பட்டமை ஆங்கிலேய கௌரவத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் பின்பு பிரிட்டிஷார் சென்னையை இழந்தனர். ஆசிய நாடுகளிலுள்ள ஏனைய இடங்களையும் இழக்கும் அறிகுறிகள் தென்பட்டன. புசியின் (BUSSY'S) படையெடுப்புத் தோல்வியும், சவ்றனின் (SUFFREN) தாக்குதலை கடற்படை அதிகாரி சேர் எட்வாட் கியூயெஸ் (Sir EDWARD HUGHES) எதிர்த்து நின்றமையும் ஆங்கிலேயரைப் பாதுகாத்ததோடு பிரான்சியரைத் தாங்கள் அழிந்துகொண்டிருக்கும் இந்திய செல்வங்களைத் திரும்ப அடைய வழிவகுத்தது. திருகோணமலை, 1783 இல் போர் முடியும்வரை பிரான்சியரின் ஆதிக்கத்தில் இருந்தது.

தமிழில்: திருமதி.ப.பாலசிங்கம்

- A History of Srilanka by K.M.de Silva (pages: 178 - 180)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மில்லா இத்தீவில் தமது கொடியை நாட்டி "பிரான்சுத் தீவு" என்ற இரண்டாவது பெயரைச்சூட்டினர்.

இங்கு கோப்பி பயிர்தொடங்கி சிறிதுசிறிதாக இத்தீவு வழம் பெற்றுவந்ததால், 1735-ம் ஆண்டு இத்தீவின் சனத்தொகை சுமார் 4000மாக பெருகியிருந்தது. அவ்வருடம் அங்கு புதிய ஆளுனராக வந்த மாயே தெ லபுர்தொனே (MAHE DE LABOURDONNAIS)வின் ஆட்சியில் (1735 - 1746) பிரெஞ்சு மகாராசாவின் பெயர் சூட்டப்பட்ட போர் லூயி (PORT LOUIS) பட்டணம் ஆழ்கடல் துறையாக விரிவாக்கப்பட்டதன் விளைவாக இத்தீவுக்கு புதிய செல்வநிலை ஏற்பட்டு, இதன் சனத்தொகை பெருகத்தொடங்கியது. 1778 இல் அமெரிக்காக் காலனிகளின் சுயாட்சிப்போர் மூண்டபோது பிரான்சுத்தீவு-யீலு தெ பிரான்சு-பூர்போம் தீவு-யீலு தெ புர்போம் ஆகிய ஒவ்வொன்றிலும் ஏறக்குறைய 45 000 மக்கள் வாழ்ந்து வந்தனர். துய்பிளேக்சு காலத்தில் இருந்த சிறப்பையும் மக்கள் தொகையையும் இழந்து, புதுச்சேரி 1778 இல் சற்று சாதாரண நிலைக்கு வந்துவிட்டிருந்தாலும் அவ்வூரிலும், அவ்வூரைச்சார்ந்த பிரெஞ்சுப் பகுதிகளிலும் 80 000 மக்கள் வாழ்ந்ததுடன் அவ்வூருக்கு வெகு தூரத்திலிருந்து பலவகையான வாணிபப் பொருள்கள் நிலையாகவும், பெருத்த அளவிலும் கிடைத்து வந்ததை நோக்குமிடத்து அக்காலத்து புதுவையின் முக்கியத்துவத்தை உணர முடிகின்றது. பிரான்சு நாட்டிலிருந்து "சந்தை என்று சொல்லப்பட்ட இந்தியாவுக்குப் போகும் கடல் வழியிலே மேற்சொன்ன இரண்டு தீவுகளும் நல்ல உபயோகமாக இருந்து வந்தன. இத்தீவுகள் உட்பட இந்து மாகடலில் இருந்த ஏனைய பிரெஞ்சுத்தலங்களுக்கு தலைமை இடமாக புதுச்சேரி விளங்கி வந்தது.

இதேபோல் ஆங்கிலேயர் தென்ஆபிரிக்காவைச் சுற்றிச் செல்ல கடல்மார்க்கத்தை உபயோகித்தனர் என்றாலும், தங்களுக்கு மாற்றுவழியாகத் தரைவழியொன்றும் அமைத்து எகிப்து, பெர்சியா போன்ற நாடுகளுடன் நல்லுறவு கொண்டிருந்தனர். லண்டன் சீமையிலிருந்து இந்திய நாட்டுக்கு விரைவில் முக்கியமான செய்திகளையும், ஆணைகளையும் அனுப்ப இவ்விரண்டாம் வழி அவர்களுக்கு மிக்க உதவியாக இருந்தது.

ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் இந்தியாவிலும், இந்தியப்பக்கத்திலும், கடலிலும் பன்முறை சண்டை போட்டுக் கொண்டது ஐரோப்பாவில் ஏற்பட்ட பல போர்களின் பிரதிபலிப்புக்களே ஆகும். 1740 - 1748 இல் ஆஸ்திரியா வாரிசுரிமைப் போரின் போது புதுவை



ஆளுனராக இருந்த துய்பிளெக்சு லபுர்தொனேயின் துணை கொண்டு சென்னைப் பட்டணத்தை முற்றுகையிட்டனர். அச்சமயம் ஆங்கிலேயரின் தலைமையகம் கூடலூரில் உள்ள சென் டேவிட் கோட்டைக்கு மாற்றப்பட்டு, ஏக்சுலா சாப்பேல் (AIX LA CHAPELLE) உடன்படிக்கைக்கு பிறகு 1749 இல் மறுபடியும் சென்னைக்கு வந்தது.

இந்தியாவில் அப்போது நிலவிய சீர்கேடான நிலைமையை உபயோகித்துக்கொண்டு துய்பிளேக்சு தன்னுடைய ஆதிக்கத்தை தென்னிந்தியாவில் பலபாகங்களில் அமைக்கத் தொடங்கினார். ஜெனரல் புய்சியின் வெற்றி ஐதராப்பாத் பகுதியை பிரெஞ்சுக்காரரின் அதிகார வசம் கொண்டுவந்ததுடன், 1750-ம் ஆண்டு வாக்கில் புதுவை நகரமே தென்னிந்தியாவில் அரசியல் நோக்கிலும், வாணிப, செல்வ நோக்கிலும் முதலிடம் பெற்றுவிளங்கியது. ஆனால் துய்பிளேக்சின் அரசியல் நுண்ணறிவைப் புரிந்து கொள்ளாமல் வெர்சாயிலிருந்து ஆட்சி செய்த அதிகாரிகள் அவருடைய எதிரிகளின் பேச்சுக்கு செவிமடுத்து அவரை பதவிநீக்கம் செய்து கோதெஹோ என்ற புதிய ஆளுனரை நியமனம் செய்தனர். அக்காலத்தில் புதுவையில் வாழ்ந்த ஆனந்தரங்கப்பிள்ளையின் நாட்குறிப்பில் ( 1736 - 1761) கடைசிவருடங்களில் ஏற்பட்ட துர்பாக்கியங்கள் பற்றி மிகவும் மனக்கஷ்டத்துடன் எழுதப்பட்டிருக்கின்றது.

1756 - 1763 இல் ஐரோப்பாவில் ஏற்பட்ட எழு ஆண்டுப் போர் தொடங்கியபின் 1757 இல் வாங்காளத்தில் உள்ள பிளாசியில் கொண்ட வெற்றியைத் தொடர்ந்து ஆங்கிலேயர்கள் தங்களுடைய முழுப்பலத்தை தெற்கே கொண்டுவந்து புதுவைக் கோட்டையைத் தாக்கினர். 1761 இல் அவர்கள் புதுச்சேரியை கைப்பற்றியது, அக்கணத்தில் ஏற்பட்டிருந்த பிரெஞ்சு ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்ததோடு, அக்காலம் வரை இந்தியாவில் பிரெஞ்சுக்காரருக்கு இருந்துவந்த செல்வாக்கும் சிறிதுசிறிதாக குறையத்தொடங்கியது. 1746 இல் பிரெஞ்சுக்காரர் சென்னைக்கோட்டையை அழித்ததை சாக்காக வைத்து 1761 இல் ஆங்கிலேயர் புதுவைக் கோட்டையை தரைமட்டமாக்கி அவ்வூரையும் அழித்தனர். ஏழாண்டுப்போர் ஐரோப்பாவில் முடிவுபெற்றாலும் ஆங்கிலேயர் கங்கைச் சமவெளியினூடே மேற்குநோக்கிச் சென்று ஆட்டம் கண்டு விட்டிருந்த மொகலாய சாம்ராச்சியத்தின் பலபாகங்களைத் தாக்கினர். பிற்காலத்தில் வீரா நாயக்கரின் நாட்குறிப்பில் சொல்லப்படுகின்ற புதுவையில் சந்திக்கப் போகும் "மண்றோ" 1764 இல் பக்சாரில் வெற்றிபெற்று, மேலும் பெரிய பகுதியை ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார்.

பாழடைந்த புதுவை 1763 இல் ஏற்பட்ட பாரிசு உடன்படிக்கைப்படி பிரெஞ்சு ஆட்சிக்கு திரும்பி வந்தாலும் பலவருடங்கள் லாசுவின் ஆட்சியில் மிகவும் சீரழிந்த நிலையிலேயே சுனங்கியிருந்தது. எதிர்மாறாக வங்காளத்திலும், பீகார் பகுதியிலும் மக்கள் மீது பெருத்தவரிகள் சுமத்தி செல்வம் சேர்த்த ஆங்கிலேயக் கும்பனியால் மேலும்படைகளைப் பலப்படுத்தவும் பீரங்கிகள், குண்டுகள் வாங்கவும் இந்தியச் சிப்பாய்களை பெருவாரியாக சேர்க்கவும் முடிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

15-ம் லூயி மகாராசா காலத்தில் சுவாசேல் (CHOISEUL) அமைச்சராக இருந்தபொழுது நடந்த சீரான நிர்வாக அவருக்குப்பின் தொடரவில்லை. ஐரோப்பாவில் புதிதாக பிரஷ்யா என்ற இராச்சியம் வலுப்பெறவும் பிரெஞ்சு இராச்சியத்தின் வலிமை குன்றவும் தொடங்கியது.

இங்கிலாந்திலோ இரண்டாம் ஜோர்ஜ் (GEORGE II) அரசின் போது (1727 - 1760) மிகச்சிறந்த அமைச்சரான வில்லியம் பிற் (WILLIAM PITT) இங்கிலாந்தின் எதிர்காலம், அதன் வர்த்தக வளர்ச்சி அனைத்தும் கப்பற்படைப் பலத்தைச் சார்ந்திருப்பதை நல்ல சமயோசித உணர்வுடன் அறிந்து அதற்குத் தக்கபடி நிர்வாகம் செய்யததன் பயனாக அக்காலத்தில் கனடா, கரீபியன் தீவுகள், இந்தியாவின் கிழக்குப் பகுதி முதலியவை ஆங்கிலேயர் வசமாகின.

அவருக்குப் பின் மூன்றாம் ஜோர்ஜ் (GEORGE III) 1760 இல் சிம்மாசனம் ஏறியபோது இவருடைய அரசாட்சிக் காலம் ஆங்கிலேய வரலாற்றிலேயே இவ்வளவு சிறந்த காலமாக திகழும் என்று எவரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். இவர் 1820 இல் இறந்த போது, பிரெஞ்சு நாட்டில் 15- ம் லூயிகாலம், 16-ம் லூயிகாலம், பிரெஞ்சுப்புரட்சிக்கால அலங்கோலங்கள், நெப்போலியனின் ஏற்றம், பிறகு 1815 இல் அழிவு, அதன்பின் மீண்டும் பூர்போம் மரபுமுடியாட்சி ஆகியவற்றையெல்லாம் பார்த்துவிட்டு மறைந்தார். இவர் காலத்தில் மேற்சொன்ன வில்லியம் பிற் முதலமைச்சர், வேறு இதர அமைச்சர்களுக்குப்பின், இளைய வில்லியம் பிற் (WILLIAM PITT THE YOUNG) என்பவரைப் பதவியில் அமர்த்தியதன் விளைவாக இங்கிலாந்தில் பொருளாதார முன்னேற்றமும் சிறப்பான வாழ்வும் ஏற்பட்டன.

அக்காலத்தில் பிரெஞ்சு நாட்டின் மக்கள் தொகை இரண்டரைக்கோடியாகவும், இங்கிலாந்தின் மக்கள் தொகை ஒன்டரைக்கோடியாகவும் இருந்ததை எண்ணிப் பார்க்கும் போது இச்சிறப்பின் மகிமை மேலும் அதிகமாகின்றது.

இப்படியிருக்க தம்மீது போடப்பட்ட புதியவரிகளை எதிர்த்து அமெரிக்க குடியேற்றமக்கள் ஆங்கிலேய ஆட்சியிலிருந்து மீளவிரும்பி 1776-ம் ஆண்டு யூலை 4 இல் சுயாட்சிப்பிரகடனம் செய்தனர். முதலில் பிரெஞ்சு நாட்டிலிருந்து பல பிரெஞ்சுக்காரர்கள் லஃபயத் (LAFAYETTE) போன்றோர் சொந்த விருப்பத்திலும் அபிமானத்திலும் அமெரிக்கா சென்று அக்குடிகளுக்கு துணையாக ஆங்கிலேயரை எதிர்த்தனர். பிறகு 1778 இல் அதிகாரபூர்வமாக ஸ்பெயினும், பிரான்சும் சட்டமுறையில் போரில் இறங்குவதை அறிவித்தபின் உலக முழுவதிலும் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் மோதல்கள் ஏற்பட்டன.

அக்காலங்களில் இரண்டுபக்கத்திலும் இருந்த சேனைத் தலைவர், கப்பற்படைத்தலைவர், உலகின் பற்பல பாகங்களில் எதிர்த்துப் போராடும் சூழ்நிலைகள் ஏற்பட்டன. இதன்படியே முதலில் கனடாவில் ஏழாண்டுப்போரின் போது எதிர்எதிர் நின்று சண்டை செய்த பெலுக்கோம்பும் மண்றோவும் பிறகு 1778 இல் புதுச்சேரி முற்றுகையின் போது எதிர்த்து மோதிக்கொண்டனர். பெரிய கப்பற்படையின் பக்கபலம் காரணமாக வெகுசீக்கரமே தங்களுடைய ஆதிக்க நாடுகளை விரிவுபடுத்திய ஆங்கிலேய அரசின் கீழ்பல படைத்தலைவர்கள் வட அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பா முதலிய பாகங்களில் இடம்மாறிமாறிச் சண்டைசெய்து வெற்றியும் புகழும் அடைந்தனர்.

அக்காலத்தில் தென்னிந்தியாவின் கீழ்ப்பகுதியில் மூன்றுவல்லரசுகள் ஆட்சி செய்துவந்தன. மராட்டியர், ஐதராப்பாத் நிசாம், மைசூர் ராஜா ஐதர் அலி ஆகிய இம் மூன்று அரசுகளின் இடையே உள்ள பகையுறவை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு, சமயத்துக்கு தக்கமாதிரி மாறி மாறி ஒவ்வொருவருடனும் உதவி ஒப்பந்தம் செய்து கொண்டு சிறிதுசிறிதாக பெருநிலப்பகுதிகளை ஆங்கிலேயர் தம்வசமாக்கிக் கொண்டுவந்தனர். இருப்பினும் ஆங்கிலேயரிடம் நல்லுறவு வைத்துக்கொண்டிருந்த ஆற்காட்டு நவாபு முகமது அலிக்குப் பலவிதங்களில் ஆட்டங்காட்டி 1769 இல் சென்னைக்கு மிக அருகில் வந்து ஆங்கிலேயப்படைகளை நடுங்கச் செய்தபின் தன்னுடன் ஒப்பந்தம் செய்யவைத்தவர் ஐதர் அலி என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த உடன்படிக்கையை ஆங்கிலேயர் பிறகு சரியான முறையில் அமுல்படுத்தாதது கண்டு வெகுண்ட ஐதர் அலி அதுமுதல் அவர்களை அறவே வெறுத்து பிரெஞ்சுக்காரருடன் சிநேகம் கொண்டு இவர்களுடைய கப்பற்படையுடன் தன்னுடைய தரைப்படைப் பலத்தைக்கூட்டி ஆங்கிலேயரின் ஆதிக்கப் பெருக்கத்தை நிறுத்துவதே முதல்குறிக்கோளாக கொண்டிருந்தார். இக்கால தென்னிந்தியச் சம்பவங்கள் பற்றியும் ஐதர் அலி, திப்புசுல்தானுடன் பிரெஞ்சுக்காரர்கள் வைத்திருந்த உறவுபற்றியும் இந்நாட்குறிப்பில் நிறையவிபரங்கள் புதைந்துள்ளன.

*இந்த நாட்குறிப்பில் 74, 75, 76, 80, 80,81,85 106, 108, 119, 120, 124, 142, 157, 159, 160, 161, 174 ம் பக்கங்களில் திருகோணமலை பற்றிய குறிப்புகள் வருகின்றன. உதாரணத்திற்கு 1783 மே மாதம் 29 ம் திகதி (வைகாசி-19) 'இந்தநாள் திருகோணமலையிலிருந்து கூடலூருக்கு கப்பல்வந்து சேர்வதிலிருந்து மருந்து, குண்டுகள் மற்றும் சாமான்கள் மிகுதியாக இறக்கினார்கள். மேற்படி கப்பல்கள் ஐந்தில் பிரஞ்சுக்காரருடைய கப்பல்கள் மூன்று. மேற்சொன்னவிடத்திலிருந்து. (திருகோணமலை) மேற்படி சாமான்களை ஏற்றிக்கொண்டு வருகையில் வழியிலே ஆங்கிலேயருடைய கப்பல்களிரண்டு வந்தபடியாலே இந்த மூன்று கப்பல்க்காறரும் இவ்விரண்டையும் பிடித்துக் கொண்டுவந்தார்களென்று கேள்வியாச்சு'. இப்படியே திருகோணமலை பற்றிய குறிப்புகளின் போது ஆயுதங்கள் அங்கிருந்து கொண்டுவந்து இறக்கியதாக நாட்குறிப்பு கூறுகின்றது.*

*ஆனால் பிரஞ்சு ஆட்சியின் கீழ் இலங்கை இருந்தாகவும், இலங்கையை பிரான்சு கைப்பற்றியதாகவும் நம்வரலாறு கூறவில்லை அப்படியாயின்.....*

*1767-1796 வரையிலான காலப்பகுதியில் இலங்கையின் நிலை பற்றி- வரலாற்றாசிரியர் கே.எம்.டி.சில்வா- A HISTORY OF SRILANKA நூலில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சிறுகதை**

மலையாள மூலம் - தகழி சிவசங்கரபிள்ளை



# மனசில் மாற்றங்கள்

தமிழில் - பானுபுத்திரன்

மனிதர்களுக்கு இடையே ஏற்படும் உறவுகளில் சாதாரணமாகவே பெரியமாற்றங்களை உணரமுடியும். இதை ஒரு குற்றமென்று சொல்ல முடியாது. இந்த மாற்றங்கள் உண்டாகிற விதத்தில் மனதில் வருத்தத்தை ஏற்படுத்தினாலும், அதை ஒரு குற்றமாகக் கருதமுடியாது.

அதெல்லாம் அப்படி நடந்து விடுகிறது. யாரையும் குற்றம் கூறிப்பயனில்லை. இந்த விஷயத்தில் எல்லோரும் குற்றவாளிகள்தான்.

நாற்பத்திஐந்து வருடங்களுக்கு முன்புதான் இதன் ஆரம்பம். வீடு கட்டத் தொடங்கிய போது வேலைக்கு வந்தார் ஒருவர். பூமியிலிருந்து (சுக்கான் பாறைகளிலிருந்து) கல்வெட்டுகிற பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஒரு மேஸ்திரிதான் அவரை அழைத்துக் கொண்டுவந்தது.

சும்மா சொல்லக்கூடாது; கெட்டிக்காரன் மட்டுமல்ல, மனிதர்களுடன் எப்படிப் பழகுவது என்பதையும் தெரிந்து வைத்த ஒரு மனிதர். வேலைக்கு வந்த கொஞ்சநாளிலேயே, அந்தக் குடும்பத்தில் ஒருவராகிப் போனார்.

வீட்டிலிருந்த குழந்தைகளுக்கு அந்த மனிதரில் கொள்ளைப்பிரியம். அதனால் அந்த வீட்டுக்கார அம்மாவுக்கும் அவரைப் பிடித்துப் போனது. கட்டிட வேலைக்கு இடையூறு இல்லாமல் வீட்டுக்குத் தேவையான வேலைகளையும் செய்வார். நடுவே குழந்தைகளின் ஆசைகளையும் பூர்த்தி செய்வார். இவ்வளவும் அவரது தொழிலுக்கு இடைஞ்சல் இல்லாமல் தொடர்ந்தது.

கட்டிடவேலை நடந்து கொண்டிருப்பதற்கு நடுவில் வீட்டுக்கு கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துக் கொடுப்பார். தேங்காய் உரித்துக் கொடுப்பார். சின்னச் சின்னவேலைகளையும் செய்வார். கட்டிட வேலை முடிந்த பிறகு தலையில் பானை சுமந்து செடிகளை நனைப்பார். நல்ல நிலவு காய்கிற இரவுகளில், மண்ணை வெட்டிக் கிளறி விடுவார்.

வீட்டிலுள்ளவர்கள் எழுந்து கொள்வதற்கு முன்னால், அவர் வீட்டுக்குத் தேவையான வேலைகளைச் செய்து இருப்பார். அதிகமாகச் சொல்ல என்ன இருக்கிறது. அந்த வீட்டிலேயே அவர் வசிக்கவும் தொடங்கினார்.

வீட்டின் கட்டுமான வேலைகள் முடிந்த பிறகும் அவர்மட்டும் போகவில்லை. யாரும் போகச் சொல்லவும் இல்லை. வீட்டு வேலை, தோட்ட வேலை மட்டுமில்லாமல் வயலிலும் இறங்கி வேலை செய்ய ஆரம்பித்தார்.

அப்படி ஒரு வேலைக்காரராகவும், வேலைவாங்குபவராகவும் அவர் மாறினார்.

அந்த வீட்டுக்காரரோ சாதாரணமாக ஒரு வேலைக்காரனுக்குக் கொடுக்கும் கூலியுடன், மேற்பார்வை செய்பவர் என்கிற நிலையிலும் கணிசமான ஒரு தொகையையும் தருவார். கணக்குப் பார்த்ததே இல்லை. ஒரு தடவைகூட ஒரு சின்னத்தகராறு ஏற்பட்டதில்லை. அவரது கருத்துக்களோடு, வீட்டுக்காரரும் மோதவேண்டியநிலை ஏற்பட்டதில்லை.

அவர் செய்வது, செய்யவைத்தது எல்லாமே அவசியமாக வேலை. அதை கவனமாகச் செய்தார். அவரைக் குற்றம் சுமத்த வேண்டிய சந்தர்ப்பம் ஒருபோதும் நேரவில்லை. அதெல்லாம் அவரது விருப்பப்படியே நடந்தது.

குழந்தைகள் வளர்ந்தார்கள். அவர்களுக்கு அவர் பிரியமான நபர்; அவருக்கும் அவர்கள் அப்படியே. அப்படி அந்த வீட்டில் அவரும் ஒருவரானார்.

அப்படிப்பட்ட நேரத்தில்தான் அவருக்கு இயற்கையான ஒரு ஆசைபிறந்தது. அதாவது ஒரு கல்யாணம் செய்ய வேண்டுமென்று. அது வேண்டியதும்கூட. வீட்டுக்காரர் உட்பட எல்லோரும் இந்த விஷயத்தில் அவரை அங்கீகரித்தார்கள்.

பெண்பார்த்தார்கள்; கல்யாணம் நிச்சயமானது. அப்பொழுதுதான் திடீரென்று ஒரு பிரச்சனை முளைத்தது. கல்யாணம் முடிந்தால், பெண்ணின் வீட்டிலேயே அவரைத்தங்க வைக்க வேண்டும்.

வீட்டுக்குழந்தைகளின் கருத்துக்களோடு அவர்களது அப்பா, அம்மாவுக்கு உடன்பாடு இல்லை. அப்படியெல்லாம் விட்டு விடக்கூடாது. கடைசியாக வீட்டுக்குழந்தைகளே அதற்கும் ஒருவழி சொன்னார்கள்.

முப்பது சென்ட்நிலத்தையும், ஒரு சிறிய வீட்டையும் அவருக்குக் கொடுக்க வேண்டும். அதையும் கல்யாணத்திற்கு முன்னாலேயே கொடுத்துவிட வேண்டும்.

அப்படியே அவரது கல்யாணத்திற்கு முன்னாலேயே நிலத்தையும், வீட்டையும் சுயவிருப்பத்திலேயே எழுதிக் கொடுக்கவும் செய்தார் அந்த வீட்டுக்காரர். அதனால் கல்யாணம் முடிந்த கையுடனே அவரும் மனைவி சகிதம் சொந்த வீட்டிற்கு குடிபோனார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டு மூன்று வருடங்கள் கழிந்தன.

எப்படி என்று தெரியாமலே, இதற்கு நடுவில் அபிப்பிராய வித்தியாசங்கள் வேர்விடத் தொடங்கின.

சின்னச்சின்ன விஷயங்கள்தான். இன்னும் சொல்வதானால் அபிப்பிராய வித்தியாசங்களுக்கே இடமில்லாத, வலுவில்லாத விஷயங்கள், வாக்குவாதங்கள் உண்டானது.

இதையெல்லாம் யாரும் திட்டமிட்டு மனப்பூர்வமாகச் செய்யவில்லைதான். அப்படியெல்லாம் நடந்துவிட்டது. கடைசியில் இந்தச் சின்னச் சின்னவிஷயங்கள் அந்த உறவை, விரோதத்தில் கொண்டு போய் நிறுத்தியது.

வந்தவருக்கு அவரது புதிய மனைவியை விட்டுப்பிரிய வேண்டும். அவளுடன் குடும்பம் நடத்தினால் தமக்கு விடிவுகாலமே இல்லையென்று அவரே நினைத்துக் கொண்டது ஒருவேளை காரணமாக இருக்கலாம்.

அந்த வீட்டுக்காரரைப் பொறுத்தவரை இன்னும் ஒரு குடும்பப்பாரம் அதிகமானதாக உணரவில்லை. ஆனால் வந்தவரை நம்பமுடியுமா என்கிற சந்தேகம் வலுக்கத் தொடங்கியது.

பிரிந்துவிட வேண்டுமென்று வந்தவரும் வாய்திறந்து சொல்லவில்லை. பிரித்துவிடலாம் என்று வீட்டுக்காரருக்கு மனசில் ஒரு ஆசை இருந்தாலும் நேரிட்டுச் சொல்ல தைரியமும் வரவில்லை.

இப்படி இருக்கும் போதுதான் ஒரு நாள் என்னென்னமோ பேசிப்பேசி வார்த்தைகள் எல்லை கடந்தது. அதுவும் எதேச்சையாக அப்படி நடந்துவிட்டது தான். மனப்பூர்வமாக என்றும் சொல்லமுடியாது. வீட்டுக்காரருக்குத் தாங்கமுடியாமற் போனபோது, கோபத்தில் இப்படிச் சொன்னார்:

' முதல்ல நீ வீட்டைவிட்டு வெளியில போ. இனிமேல் இங்க வராத!'

வந்தவர் வீட்டைவிட்டு இறங்கினார். அதற்குப் பிறகு அந்தவீட்டில் அவர் கால் வைக்கவே இல்லை.

ஒரு வாரம் கடந்திருக்கும்.

ஒருநாள் விவசாயிகள் சங்கக் காரியதரிசியுடன் நாலைந்துபேர் அந்த வீட்டிற்கு வந்தனர். வந்தவரின் பிரச்சனையை தீர்ப்பதற்குத் தான்.

வந்தவரை வெளியேற்றியதால், அவருடைய நாற்பது வருஷகால உழைப்புக்கான ஈட்டத்தொகை, மற்றும் சட்டப்படியான சலுகைகள், எல்லாவற்றையும் ஒரு கோரிக்கையாக்கி வந்திருந்தனர். வீட்டுக்காரர் அரண்டே போனார்.

'ஐயோ... முப்பது சென்ட் நிலத்தையும், ஒரு வீட்டையும் மூணு வருஷத்துக்கு முன்னாடி குடுத்திருக்கிறேனே'.

அதைக்கேட்டு அர்த்தபுஷ்டியான சின்னச்சிரிப்போடு காரியதரிசி கேட்டார். 'அது நீங்களாக இஷ்டப்பட்டு குடுத்தது தானே!'

பலநாட்கள் கூடிக்கூடி யோசித்ததற்குப் பிறகு, ஊரிலுள்ள பலரும் தலையிட்டு கடைசியாக மூன்று வருஷம் வேலை செய்ததற்கு மட்டும் ஒருதொகை கொடுத்தால் போதும் என்று தீர்மானித்தார்கள். அத் நேரத்திலும் பலவித கணக்குகள் மேலெழும்பின. அதெல்லாம் ஒரு தடையாகவே இருந்தாலும் ஒருவகையாகத் தீர்ந்து போனது.

நெடுங்காலத்து களங்கமற்ற, பரஸ்பர நட்பு அல்லது உறவு இப்படிக் கோபத்தில் கலைந்திருக்க வேண்டுமா? பிரிய வேண்டும் என்று மனதில் தோன்றிய போதே, சண்டை போடாமலே பிரிந்து போக வழி இருந்ததே!


என்னமோ இன்றைய காலகட்டத்தில் அப்படியெல்லாம் முடிவதில்லை. அதே மாதிரி வீட்டுக்காரரும் சண்டை போட்டுப்பிரிய வேண்டியிருந்தது. சண்டை போட்டுக் கொள்ளாமலேயே அவரைச் சொல்லி அனுப்பியிருக்கலாம். மனித உறவுகள் நிலைத்துநிற்க கொடுக்கல்- வாங்கல் விஷயங்களில் சரியான கணக்குத் தீர்த்தல் மனிதர்களுக்கு இயல வேண்டும் இல்லையா?

இந்தக் காலத்தில் அப்படியெல்லாம் நம்மால் சரிசெய்ய முடிவதில்லை. இதெல்லாம் நம்மைச்சுற்றியும், ஏன் நாடு முழுக்க நடந்து கொண்டிருக்கிற கதைகள் தானே!

முதல் கதை - 'தங்கம்'

தங்கம் என்ற சிறுகதை எனது முதல் சிறுகதை. எல்லோரும் பொதுவாக இராஜாக்களையும், திவான்களைப் பற்றியுமே எழுதிக்கொண்டிருந்த காலகட்டத்தில் (சுமார் 35 வருடங்களின்முன்) ஒரு பிச்சைக்காரனை மையமாக வைத்து நான் எழுதிய கதைக்கு நல்ல வரவேற்பு இருக்க முட்டுக்கட்டைகளைப் பொருட்படுத்தாது தொடர்ந்து எழுதமுற்பட்டேன்.

- வைக்கம் முகம்மது பஷீர் -
(புகழ்பெற்ற மலையாள எழுத்தாளர்)





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஆகா ஷாகித் அலி**
*(Agha Shahid Ali)*

# டாக்கா மஸ்லின்

……மிகவும் அழகான வேலைப்பாடுடைய
டாக்கா மஸ்லினைச் சேகரிக்க அவன்
ஓராண்டு முழுக்க முற்பட்டான்.
- ஆஸ்கார் ஒயில்ட்
(டோரியன் கிரேவின் சித்திரம்)

ஒளியூடுருவிச் செல்லும்
அந்த டாக்கா மஸ்லினுக்கு
நெய்யப்பட்ட காற்று, ஓடும் நீர்,
மாலை நேரப் பனித்துளி என்றெல்லாம் பெயர்;

அந்தக்கலை இப்போது மடிந்துவிட்டது.
மடிந்து நூறாண்டுகளுக்கு மேலாகிவிட்டது.

என் பாட்டி சொல்கிறாள்:
"அதை உடுத்துவதும் தொட்டுப் பார்ப்பதும்
என்னவென்றே இப்போது யாருக்கும் தெரியாது"
அவள் ஒருமுறை அதை உடுத்தியிருக்கிறாளாம்
அது அவள் அம்மா தந்த சீதனம்
தலைமுறை தலைமுறையாய்
உடுத்தப்பட்டுவந்த ஒருசேலை
ஒரு மோதிரத்திற்குள் நுழைந்து இழுக்கப்பட்ட
ஆறு கஜ சேலை,
உண்மையான டாக்கா மஸ்லின் தான்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு
அது நைந்து கிழிந்துவிட்ட போது
தங்கநிற நூலால் செய்த பூவேலைகள் நிறைந்த
கைக்குட்டைகளாய் அது சென்றடைந்தது
மருமகள்களிடம்
அவையுமே இப்போது இல்லை.

வரலாற்றுப் பாடத்தில் படித்தோம்.
நெசவாளிகளின் கைகள் துண்டிக்கப்பட்டது பற்றி
வங்காளத்தின் தறிகள் மௌனமாக்கப்பட்டது பற்றி
ஆங்கிலேயர்கள் இங்கிலாந்திற்குக் கப்பலில்
கச்சாப் பருத்தியை அனுப்பியது பற்றி
இந்தவரலாற்றால் பாட்டிக்கும் பயனேதும் இல்லை

அவள் சொல்வதெல்லாம் இது தான்
இக்காலத்து மஸ்லின் சொரசொரப்பானது.
இலையுதிர் காலத்து விடியற் காலையில்
தொழுகைநடத்தக் கண்விழிக்கும் போது மட்டுமே
அதே மாதிரியான நெசவைத் தொட்டுணரமுடியும்.

அவள் சொல்கிறாள்:
ஒரு நாள் காலை காற்றில் பனிபடர்ந்திருந்தது
ஏதோ ஞாபகத்தில் அக்காற்றைத்
தன் மோதிரத்திற்குள் நுழைத்து இழுத்தாளாம்.

- தமிழில்: வ. கீதா, எஸ்.வி.ராஜதுரை

ஆகா ஷாகித் அலி காஷ்மீரில் பிறந்தவர். அங்கும் டெல்லியிலும் பல்கலைக் கழகப் படிப்பை முடித்துவிட்டு அமெரிக்கா சென்று அங்கு பென்சில் வேனியா அரசுப் பல்கலைக்கழகத்தில் முனைவர்பட்டமும் அரிசோனாப் பல்கலைக்கழகத்தில் M.F.A. பட்டமும் பெற்றார். ஆங்கிலத்தில் மிகச்சிறந்த கவிதைகள் எழுதும் அவரது படைப்புகள் மிகமுக்கியமான கவிதைப்பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன; பல தொகுப்புகளாக நூல்வடிவில் வெளிவந்துள்ளன. அவர் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளரும்கூட. உலகப்புகழ்பெற்ற பாகிஸ்தானிய உருதுக் கவிஞர் ஃபெய்ஸ் அஹமத் ஃபெய்ஸின் கவிதைகள் அவரால் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டு The Rebel's Silhoutte என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டுள்ளன. தற்போது அவர் நியூயார்க்கிலுள்ள ஹாமில்ட்டன் கல்லூரியில் ஆங்கிலம் பயிற்றுவித்து வருகிறார். இக்கவிதைக் கீழ்க்காணும் நூலிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது: *Agha Shahid Ali*, **The Beloved Witness** (Selected Poems), Viking, New Delhi, 1992

**வாசகர்கள் அனைவருக்கும்,**

**1994 - புதுவருட, பொங்கல் வாழ்த்துக்கள்!**

மௌனம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்